ஆயிஷா இரா. நடராஜன்
அறிவியலே வெல்லும்
– புதியத் தொடர்

2229 3442 109

புதிய ஆகஸ்ட், 2020 ரூ.20

மலர் 18
இதழ்: 06

புத்தகம் பேசுது

மார்க்சியம் கற்றுவிட்டால் மற்ற துறைகளைப் புரிந்துவிடலாம்



நேர்காணல்

தமிழவன்

சந்திப்பு: ப்ரதிபா ஜெயசந்திரன்

செயல்படும். தங்களுக்குத் தேவையான நூல்களை அஞ்சல் அல்லது கொரியர் வழியாக அனுப்பி வைக்க இயலும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நூல் பட்டியல் தேவைக்கு வாட்சப்பில் தொடர்பு கொள்ளலாம் எண்: 9443066449

இணையத்தில் பார்க்க thamizhbooks.com

தொலைபேசி எண்: 044 24332424, 24356935
E-Mail: bharathiputhakalayam@gmail.com

YouTube: Bharathi Tv | Website: bookday.co.in

புதிய
புத்தகம் பேசுது

2020 ஆகஸ்ட், மலர்:18 இதழ்:06

வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:
க.நாகராஜன்

முதன்மை ஆசிரியர் : **இரா. நடராசன்**

ஆசிரியர் குழு: *ச.தமிழ்ச்செல்வன், கமலாலயன், யூமா.வாசுகி, ப.கு.ராஜன், இரா.தெ. முத்து, அமிதா, மதுசுதன், எஸ்.வி.வேணுகோபாலன், ப்ரதிபா ஜெயசந்திரன், ராம்கோபால், மருதன், களப்பிரன்*
நிர்வாகப் பிரிவு: சிராஜுதீன் (மேலாளர்)
உத்திரகுமார் (விளம்பர மேலாளர்)
இதழ் வடிவமைப்பு: ஜே.ஜெஸின்
அட்டை வடிவமைப்பு: ஆர்.காளத்தி

ஆண்டு சந்தா : ரூ. 240
வெளிநாடு : 25 US$
மாணவர்களுக்கு : ரூ. 200
தனி இதழ் : ரூ. 20

முகவரி: 7, இளங்கோ சாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 600018
போன்: 044 - 243 324 24, 243 329 24
whatsapp: 8778073949
email:thamizhbooks@gmail.com
www.thamizhbooks.com
www.bookday.co.in

Bharathi Tv

கிளைகள்

திருவல்லிக்கேணி: *48, தேரடி தெரு*
வடபழனி: *பேருந்து நிலையம் எதிரில் அடையார் ஆனந்தபவன் மாடியில்*
பெரம்பூர்: *52, கூக்ஸ் ரோடு*
ஈரோடு: *39, ஸ்டேட் பாங்க் சாலை*
திண்டுக்கல்: *பேருந்து நிலையம்*
நாகை: *1, ஆரியபத்திரபிள்ளை தெரு*
திருப்பூர்: *447, அவினாசி சாலை*
திருவாரூர்: *35, நேதாஜி சாலை*
சேலம்: *பாலம் 35, அத்வைத ஆஸ்ரமம் சாலை,*
சேலம்: *15, வித்யாலயா சாலை*
அருப்புக்கோட்டை: *31, அகமுடையார் மகால்*
மதுரை: *37A, பெரியார் பேருந்து நிலையம்*
மதுரை: *110 சர்வோதயா மெயின்ரோடு,*
குன்னூர்: *N.K.N வணிகவளாகம் பெட்போர்ட்*
செங்கற்பட்டு: *1 டி., ஜி.எஸ்.டி சாலை*
விழுப்புரம்: *26/1, பவானி தெரு*
திருநெல்வேலி: *25A, ராஜேந்திரநகர்*
விருதுநகர்: *131, கச்சேரி சாலை*
கும்பகோணம்: *ரயில் நிலையம் அருகில்*
வேலூர்: *S.P. Plaza 264, பேஸ் II, சத்துவாச்சாரி*
நெய்வேலி: *சி.ஐ.டி.யு அலுவலகம், பேருந்துநிலையம்அருகில்,*
தஞ்சாவூர்: *காந்திஜி வணிக வளாகம் காந்திஜி சாலை*
தேனி: *12,பி, மீனாட்சி அம்மாள் சந்து, இடமால் தெரு*
கோவை: *77, மசக்காளிபாளையம் ரோடு, பீளமேடு*
திருச்சி: *வெண்மணி இல்லம், கரூர் புறவழிச்சாலை*
திருவண்ணாமலை: *முத்தம்மாள் நகர்,*
விருதாசலம்: *511கி, ஆலடி ரோடு*
நாகர்கோவில்: *கேவ் தெரு, டோத்தி பள்ளி ஜங்ஷன்*
பழனி: *பேருந்து நிலையம்*
சிதம்பரம்: *22A/ 188 தேரடி கடைத் தெரு, கீழவீதி அருகில்*
மன்னார்குடி: *12, மாரியம்மன் கோவில் நடுத்தெரு*
காரைக்குடி : *12, 2 வது தெரு, கம்பன் மணிமண்டபம் பின்புறம்.*

தலையங்கம்

பேரழிவு சட்டத்தை எதிர்ப்போம்!

சூழலியல் தாக்க மதிப்பீட்டு வரைவு 2020எனும் சட்ட முன் வடிவை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. மத்திய ஆளும் பா.ஜ.க. அரசு தொடர்ந்து இதற்கு முன் இருந்த இருக்கும் எல்லாப் பொதுச்சட்டங்களின் மீதும் கொடுந்தாக்குதல் நடத்தி புதிய - இந்துத்துவ கார்பரேட்-முன் வடிவுகளை அடுத்தடுத்து கொண்டு வந்து உடனடியாக அவசரச் சட்டம் போல அமல்படுத்தி வருகிறது. கல்விக் கொள்கை, சி.ஏ.ஏ., ராணுவ தலைமை மாற்றல் சட்டம், தேசிய பாதுகாப்பு கவுன்சில் அமைப்பு இப்படியான வரிசை பொருளாதார, தனியார் மய கொள்கை வெளியீடு வரை சென்றது. இப்போது ஒட்டுமொத்த இந்திய சுற்று சூழலையும் பேரழிவுக்கு உட்படுத்தப் போகும் சூழலியல் தாக்க மதிப்பீட்டு வரைவை வெளியிட்டு ஆகஸ்டு பதினோராம் தேதிக்குள் பொது மக்கள் கருத்து சொல்லலாம் (ஆன் லைனில் மட்டுமே) என காலம் நிர்ணயித்துள்ளது. இதன் மூலம் மத்திய அரசு ஒரே சட்டத்தின் மூலம் தேசத்தின் ஒட்டு மொத்த வளங்களையும் பெரிய முதலாளிகள் சர்வதேச கார்பரேட்டுகளுக்கு அடகு வைக்கப் போவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இந்த கொரோனா பெருந்தொற்று காலத்தில் கொள்கை ரீதியிலான பெரும் சட்டங்களை கொண்டுவரக் கூடாது என்று ஐ.நா. சபையில் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் கேட்டுக் கொண்டுள்ளன. அப்படி இருந்தும் ரயில்வே-உட்பட இந்திய மக்களின் வரிப் பணத்தில் உருவான அரசு நிருவனங்களை தனியாருக்கு தாரை வார்ப்பது உட்பட பல கொள்கை முரண் சட்டங்களை பாராளுமன்ற ஒப்புதல் கூட பெறாமல் மய்ய அரசு அமலாக்கி வருகிறது. இந்த சூழலியல் வரைவு அந்த வரிசையில் அடுத்த சான்று ஒரு கார்பரேட் நிருவனம் மீத்தேன் வாயு எடுக்கவோ, தெர்மல் மின்சாரம் தொழிற்சாலை அமைக்கவோ விண்ணப்பித்தால் 2006 ஆம் வருட சூழலியல் பாதுகாப்பு சட்டப்படி, அத்தகைய ஒரு தொழில் நிலையம் அந்தப் பகுதி சுற்றுச்சூழலின் மீது ஏற்படுத்தப் போகும் தாக்கங்கள் குறித்த அறிக்கையை பாதுகாப்புத் துறை தயாரித்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பும் ஆட்சித் தலைவர்கள் மக்கள் கருத்துக்கள் கேட்க கூட்டம் நடத்தி ஒரு மாதம் கால அவகாசம் கொடுத்து விவாதித்து அறிக்கை அனுப்புவார்கள். பிறகு அதற்காக ஒப்புதல் பெறப்படும். ஆனால் இந்த வரைவு அறிகையின்படி அப்படி எதுவுமே தேவை இல்லை. ஏனெனில் இந்த வரைவு அறிக்கை நமது விவசாய நிலங்கள் உட்பட நிலத்தடி நீரில் இருந்து மீத்தேன் வரை எல்லா வளங்களையும் மக்களின் தலையீடோ சுற்றுசூழலிய துறையின் சான்றிதழோ இல்லாமலே கார்ப்பரேட் தொழில் நிறுவனங்களுக்கு மத்திய அரசு நேரடியாக விற்றுவிட வகை செய்கிறது. இது அந்த வரைவு அறிக்கையின் பல கொடுமைகளில் ஒன்று மட்டுமே.

நாம் என்ன செய்யப் போகிறோம். இந்த சூழலிய சட்டத்தால் பாதிக்கப்பட இருக்கும் லட்சோப லட்சம் மக்களிடம் இதை வாசிக்க ஆன்-லைன் வசதியோ எதிர்வினையாற்ற கருத்துக்கூற நேரமோ இல்லை. நோய் பேரிடரில் வேலை இன்றி உணவின்றி தவிக்கும் நிலையில் அவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் பேரழிவு சட்டத்தை திரும்பப் பெற மய்ய அரசுக்கு நெருக்கடி தருவதும் தவிர வேறு வழியே இல்லை. EIAவை எதிர்ப்போம். தேச நலம் காப்போம்.

-ஆசிரியர் குழு

சங்க இலக்கிய பதிப்புத் தொடர் - 3

இதுவரை அச்சில் வராத தொல்காப்பியம் : இளம்பூரணர் எழுத்ததிகார உரை விளக்கத்துடன் கூடிய கையெழுத்துப் பிரதி

பொ.வேல்சாமி

தமிழ் இலக்கிய வரலாற்றில் 18 ம் நூற்றாண்டின் முடிவுவரை ஆசிரிய - மாணவ பரம்பரையைச் சேர்ந்தவர்கள் பலராலும் படிக்கப்பட்டும் பயிற்றுவிக்கப்பட்டும் தொடர்ந்து வந்தகொண்டிருந்த நூல் 'தொல்காப்பியம்'. அக்காலத்தில் வாழ்ந்த பெரும்தமிழறிஞர் 'சிவஞான முனிவர்' தொல்காப்பிய சூத்திரவிருத்தியும் பாயிரவிருத்தியும் என்ற மிகச்சிறப்பான ஆய்வு நூலை 18 ம் நூற்றாண்டின் இறுதியில் எழுதினார்.(1) ஆனால் 19 ம் நூற்றாண்டில் (சிவஞான முனிவர் மறைந்து 30 அல்லது 40 வருடங்களில்) தொல்காப்பியம் தமிழ்ப் புலவர்கள் பலரும் அறியாத நூலாக மாறிவிட்டது. 1885 இல் தொல்காப்பிய பொருளதிகாரத்தை நச்சினார்க்கினியர் (பேராசிரியர்) உரையுடன் முதல்முதலாக அச்சில் கொண்டுவந்த சி.வை. தாமோதரம்பிள்ளை(2) அந்த நூலுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரையில் குறிப்பிடுவதை கவனிக்க வேண்டும்.

'சென்னப்பட்டணத்தில் இற்றைக்கு ஐம்பதறுபது வருஷத்தின் முன்னிருந்த வரதப்ப முதலியாரின் பின் எழுத்துஞ் சொல்லுமே யன்றித் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை உரையுதாரணங்களோடு பாடங்கேட்டவர்கள் மிக அருமை. முற்றாய் இல்லையென்றே சொல்லலாம் வரதப்ப முதலியார் காலத்திலுந் தொல்காப்பியங் கற்றவர்கள் அருமையென்பது அவர் தந்தையார் வேங்கடாசல முதலியார் அதனைப் பாடங்கேட்கும் விருப்பமுடையரானபோது

பிறையூரிற் திருவாரூர் வடுகநாத தேசிகர் ஒருவரே தொல்காப்பியம் அறிந்தவர் இருக்கிறாரென்று கேள்வியுற்றுத் தமது ஊரைவிட்டு அதிக திரவியச் செலவோடு அவ்விடம்போய் இரண்டு வருஷமிருந்து பாடங்கேட்டு வந்தமையானும், வரதப்பமுதலியார் ஒருவரே பின்பு அதனைத் தந்தைபாற் கேட்டறிந்தவரென்பதனாலும் அது காரணமாக அவருக்குத் 'தொல்காப்பியம் வரதப்ப முதலி' யாரென்று பெயர்வந்தமை யானும், பின்பு அவர்காலத்திருந்த வித்துவான்கள் தமக்கு யாதாயினும் இலக்கண சமுசயம் நிகழ்ந்துழி அவரையே வினவி நிவாரணஞ் செய்தமையானும் நிச்சயிக்கலாம்





"தமிழ்நாடு அனைத்திலும் உள்ள தொல்காப்பிய பொருளதிகாரப் பிரதியில் இப்போது 20, 25 - ற்கு மேற்படா. அவையும் மிக்க ஈனஸ்திதி (சிதைந்துள்ளது) அடைந்திருப்பதால் இன்னும் சில வருஷத்துள் இறந்துவிடும் என்று அஞ்சியே அதனை உலோகோபகாரமாக (உலகுக்கு உதவும்படி) அச்சிடலானேன் என்று குறிப்பிடுகின்றார். இதுபோன்று சங்கநூல்களும் தமிழ்மக்களால் புறக்கணிக்கப்படுவதைக் கண்டு மனம் கலங்கி சி.வை.தா எழுதுகிறார்.

"சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்!! தமிழ்மாது நுந் தாயல்லவா! இவள் அழிய நமக்கென்னென்று வாளா இருக்கின்றீர்களா! தேசாபிமானம் மதாபிமானம்

பாஷாபிமானனென்று இவையில்லாதார் பெருமையும் பெருமையா! இதனைத் தயைகூர்ந்து சிந்திப்பீர்களாக.

(இப்படி சங்க இலக்கியங்களும் தொல்காப்பியமும் காப்பியங்களும் தமிழ் கல்வி உலகம் மறந்துவிட்டதற்கான காரணத்தை 'வரலாறு என்ற கற்பிதம்' என்ற எனது நூலில் உள்ள ஒரு கட்டுரையில் விளக்கியுள்ளேன்.)

இதே காலகட்டத்தில் ஆங்கிலேய அரசும் கிறிஸ்துவ பாதிரியார்களும் அந்தப் பாதிரியார்களுடன் தொடர்பு கொண்டிருந்த தமிழ்ப் புலவர்கள் சிலரும் தொல்காப்பியத்தைப் பற்றியும் சங்க இலக்கியங்களைப் பற்றியும் காப்பியங்களைப் பற்றியும் தெளிவாகவே அறிந்து கொண்டவர்களாக இருந்தனர். *1833* இல் ராட்லர் என்ற மேனாட்டு அறிஞரால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்ட தமிழ் ஆங்கில அகராதியில்(3) தொல்காப்பியத்தைப் பற்றிய தெளிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

எல்லீசால் தொடங்கப்பட்ட 'சென்னை கல்விச் சங்கத்தைச்' சேர்ந்த புலவர்களும் தொல்காப்பியத்தை நன்கு அறிந்திருந்தனர். அந்தச் சங்கத்தில் அங்கம் வகித்த மழவை மகாலிங்க அய்யர் முதல்முதலாக தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் உரையை *1847* இல் அச்சில் கொண்டு வருகிறார். இதே காலக்கட்டத்தில் நன்னூலுக்குச் சிறந்த காண்டிகையுரை எழுதிய இராமானுஜ கவிராயர் தன்னுடைய உரையில் சுமார் *100* இடங்களுக்குக் குறையாமல் தொல்காப்பியத்தை மேற்கோள் காட்டி விளக்கம் அளிக்கின்றார். *1856* இல் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணத்தை வெளியிட்ட கால்டுவெல், தன் நூலின் முகவுரையில், பழந்தமிழ் நூல்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் திருக்குறளுடன் தொல்காப்பியத்தைப் பற்றிய குறிப்புகளையும் தருகின்றார்.*1858* இல் தொல்காப்பிய நூலின் மூலம் முழுவதையும் நன்னூல் உடன் ஒப்பிட்டு முதல்முதலாக வெளியிட்டவர் சாமுவேல் பிள்ளை. அவர் அந்நூலின் முதல் பக்கத்தில் இந்த நூலை வெளியிடுவதற்கு முழுமையாகப் பொருள் உதவி செய்தவர் வால்டர் ஜாய்ஸ் என்ற ஆங்கிலேயர் என்றும் இந்நூல் தமிழ்மக்கள் நவீனகாலத்திற்குப் பொருத்தும்படியாகத் தங்களுடைய மொழியையும் அறிவையும் வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஆங்கிலேய அரசாங்கம் இதனை வெளியிடுவதாகவும் குறிப்பிடுகின்றார்.(4) *1859* இல் தமிழ்ப் புலவர் வரலாற்றை முதல்முதலாக ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட சைமன்காசிசெட்டியும்(5) தொல்காப்பியரைத் தமிழ்ப் புலவராகக் குறிப்பிட்டுள்ளார். அந்நூலின் உரையாசிரியராக நச்சினார்க்கினியர், சேனாவரையர், இளம்பூரணர் ஆகியமூவரையும் குறிப்பிட்டுள்ளார். *1865* இல் அதுவரையில் அச்சில் வந்த தமிழ் நூல்களையெல்லாம் தொகுத்து வகைப்படுத்தி வெளியிட்ட ஜான்முர்டாக் தொல்காப்பியரைப் பற்றிப் பல இடங்களில் குறிப்பிடுகின்றார்.

அதே நேரத்தில் *1860* இல் ஆறுமுகநாவலர், தான் வெளியிட்ட திருக்கோவையார் நூலின் இறுதியில் கொடுத்துள்ள விளம்பரத்தில்(6) தொல்காப்பியம் இளம்பூரணர் உரையையும்


ராட்லர் அகராதி 1833 - 35


தொல்காப்பிய நன்னூல்


THE TAMIL PLUTARCH.
CONTAINING
A SUMMARY ACCOUNT
OF
THE LIVES OF THE POETS AND POETESSES
OF SOUTHERN INDIA AND CEYLON.
FROM THE EARLIEST TO THE PRESENT TIMES, WITH SELECT SPECIMENS OF THEIR COMPOSITIONS.
BY
SIMON CASIE CHITTY, ESQUIRE.
AUTHOR OF THE CEYLON GAZETTEER.
Jaffna:
RIPLEY & STRONG—PRINTERS.
1859.

தொல்காப்பியம் நச்சினார்கினியர் உரையையும் சங்க இலக்கியங்களையும் காப்பியங்களையும் அடுத்து வெளியிடவிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அந்நூல்களை தமிழரான அவர் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1868 இல் சுப்பராயச் செட்டியார் தொல்காப்பிய இளம்பூரணர் உரையை வெளியிடுகின்றார். அதே வருடத்தில் தாமோதரம் பிள்ளையாலும் கோமளபுரம் இராஜகோபாலப் பிள்ளையாலும் தொல்காப்பிய சேனாவரையர் உரையும் வெளியிடப்படுகின்றது. 1900 -த்தை அடுத்து வந்த காலங்களில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் வித்துவான் வகுப்புக்களின் வழியாகத் தமிழ் ஆசிரியர்களை உருவாக்கும் பணியைத் தொடங்கினர். இதே காலத்தில் ஆங்கில அரசாங்கம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்ட வகுப்புக்களுக்குத் தொல்காப்பியத்தைப் பாடமாக வைக்க ஆரம்பித்தனர். இதே காலக்கட்டத்தில் கனகசபை பிள்ளையின் '1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்' என்ற ஆங்கில நூல் வெளிவந்து தமிழர்கள் மத்தியில் தமிழ்நாட்டின் பழைய சிறப்புக்களைப் பற்றியும் மற்ற உலக நாடுகளைப் போல தமிழர்களுக்கும் ஒரு வரலாறு இருக்கின்றது என்ற உணர்ச்சியையும் உருவாக்கியது. இதன் விளைவாக தமிழர்களுக்கான ஒரு அடையாளத்தை தொல்காப்பியம் திருக்குறள் சங்க இலக்கியங்கள் காப்பியங்கள் போன்ற நூல்கள் உருவாக்கித் தரும் என்ற கருத்து பரவலாக ஏற்பட்டது. இந்தச் சூழல் தொல்காப்பியம் சங்க இலக்கியங்கள் போன்றவற்றை அறிந்து கொள்வது என்பது தங்கள் அடையாளத்தை மீட்டெடுப்பதாகும் என்ற உணர்ச்சியை உண்டாக்கியது. இந்த உணர்வுகளின் வெளிப்பாடாக தொல்காப்பிய உரைப்பதிப்புகளையும் தொல்காப்பியத்தை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கான விளக்கங்களையும் தமிழ் ஆர்வலர்கள் எதிர்பார்த்தனர். அதனைச் செய்து முடிப்பதற்காகப் பல தமிழ் அறிஞர்கள் முயற்சி எடுத்தனர். அத்தகைய முயற்சிகளில் முதல் முயற்சி என்பது 'தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி' (7) (1922) என்ற மு.ராகவையங்காரின் நூல் வெளிவந்ததைக் குறிப்பிட வேண்டும். இந்நூலின் முன்னுரையின் வழியாக, தொல்காப்பியத்தையும் அதன் உரைகளையும் புரிந்துகொள்வதில் பெரும் தடுமாற்றம் நிகழ்ந்துள்ளது என்பதையும் அத்தகைய தடுமாற்றத்தை இந்நூல் போக்கியதில் பெரும் பங்கு வகித்ததை இந்நூலுக்கு அளிக்கப்பட்ட பரிசும் பாராட்டும் நமக்கு நன்கு தெளிவுபடுத்துகின்றது. இந்தக் காலக்கட்டத்தில் இருந்து 1938 வரை தொல்காப்பிய மூலமும் தொல்காப்பிய உரைகளும் பலராலும் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. இந்தக் காலக்கட்டத்தில் வித்துவான் வகுப்புகளையும் பி.ஏ., எம்.ஏ., தமிழ் வகுப்புகளையும் சென்னைப் பல்கலைக் கழகம் தொடங்கியது. இந்த வகுப்புகளில் தொல்காப்பியப் பாடம் ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்தது. இதனால் மாணவர்களுக்குத் தொல்காப்பியத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும்படிப் பாடம் நடத்த வேண்டியகட்டாயம் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாகத் தொல்காப்பிய உரைகளுக்கு விளக்கங்களுடன் கூடிய வெளியீடுகள் ஒன்றிரண்டாக வர ஆரம்பித்தன. முதன்முதலாக அத்தகைய உரை எழுதியவர் பி.சா. சுப்ரமணிய சாஸ்திரி.(8) 1930 இல் அவர் எழுதிய

A 324

தொல்காப்பியப்
பொருளதிகார ஆராய்ச்சி.

மு. இராகவையங்கார்


தொல்காப்பியச்
சொல்லதிகாரக் குறிப்பு.

P. S. சுப்ரமணிய சாஸ்திரி, M.A., Ph.D.

தொல்காப்பிய சொல்லதிகார ஆராய்ச்சி வெளிவந்தது; 1937 இல் எழுத்ததிகார ஆராய்ச்சி வெளியிடுகின்றார். இவற்றில் தொல்காப்பிய எழுத்து சொல்லுக்கு உரையாசிரியர்கள் பலரும் எழுதிய உரைகளின் பொருத்தப்பாடுகளையும் பொருத்தம் இன்மைகளையும் தன்னுடைய கருத்துக்களாகத் தனியே எழுதுகின்றார். கூடவே தொல்காப்பியத்திற்கும் வடமொழி இலக்கண நூல்களுக்கும் உள்ள ஒப்புமைப் பகுதிகள் என்று அவர் கருதியவற்றையும் விளக்கங்களாகக் கொடுக்கின்றார்.

1954 இல் தொல்காப்பிய சொல்லதிகாரம் சேனாவரையம் உரைக்கு ஆ.பூவராகம்பிள்ளை எழுதிய விளக்க உரையுடன் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஒரு நூலை வெளியிடுகின்றது. சிறந்த விளக்கவுரையாக அமைந்த இந்நூலுக்கு பின் பேராசிரியர் கு.சுந்தரமூர்த்தி அவர்கள் 1960 க்கு பின்னர் இளம்பூரணர் நச்சினார்கினியர் சேனாவரையர் கல்லாடனார் தெய்வச்சிலையார் பேராசிரியர் ஆகிய அனைவருடைய உரைகளுக்கும் விளக்கங்கள் எழுதினார். கழகத்தின் வழியாகவும் சில நூல்களை அவரே தனியாகவும் வெளியிட்டார்.

இந்த விளக்கவுரைகள் உரையாசிரியர்களின் கருத்துக்களை மாணவர்களுக்கு எளிமையாக விளங்க வைப்பதற்காக எழுதப்பட்டவைகளாக உள்ளன. இத்தகைய நூல்களுள் 1969 இல் பேராசிரியர் அடிகளாசிரியரால்(9) வெளியிடப்பட்ட தொல்காப்பியம் இளம்பூரணர் எழுத்ததிகாரம் நூலைத் தவிர மற்றவற்றை தொல்காப்பியத்தின் சிறந்த பதிப்பு நூல்களாகக் கருத முடியாது. தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் விளக்கவுரை (???) சிறப்பாக இருப்பதுடன், இளம்பூரணர் உரையின் நுட்பமான பகுதிகளை தெளிவாக விளக்கியும், தொல்காப்பிய இளம்பூரணர் உரையில் உள்ள பாட வேறுபாடுகளைச் சீர்தூக்கிப் பார்த்துச் சரியான பாடங்கள் என்று தெளிவானவைக்களுக்கு உரிய விளக்கங்களும் பொருத்தமில்லாத பாடங்களுக்குத் தகவான மறுப்புரைகளும் கொடுக்கப்பட்டுள்ளதுடன் தொல்காப்பிய நூற்பாக்களின் அமைப்பு முறையையும் இயல்களுக்கு இடையே உள்ள பொருத்தப்பாடுகளையும் விளக்கியிருப்பதுடன் இத்தகைய விளக்கங்களுக்கு மற்ற இலக்கண நூல்களில் இருந்து மேற்கோள்கள் காட்டியும் சிவஞான முனிவர் பேன்ற இடைக்கால உரையாசிரியர்களின் கருத்துக்களை இணைத்தும் வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் எழுதிய தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி (10) (1945) என்ற நூலைப் பார்வையிடச் சொல்லியும் இந்த விளக்கவுரை செல்கின்றது.







இவ்விளக்கவுரையில் பல நுட்பமான செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. அவற்றில் ஒருசிலவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

1. 'மலைநிலம் பூவே துலாக்கோல்(11) என்று இன்னர் உலைவில் உணர்வுடையார்' என்ற வரிகள் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பற்றியது என்பது தமிழ் மாணவர்கள் யாவரும் அறிந்ததே. ஆனால் துலாக்கோல் என்பது ஆகுபெயர். இது எப்படியென்றால் துலாம் என்பது 100 பலம் (கிராம், கிலோ போன்றது) அளவுள்ளது. அவ்வளவு எடையை அளந்து காட்டும் கருவிக்கு துலாக்கோல் என்று பெயர். எனவே இது ஆகுபெயர் என்று விளக்குகின்றார்.



2. கோடன்மரபு: ஆசிரியர்களிடம் மாணவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைச் சொல்லும் நூற்பா ஒன்று பெரும்பாலான இலக்கண நூல்களின் பொதுப்பாயிரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். அது 'கொள்வோன் முறைமை. முன்னும் பின்னும் இரவினும் பகலினும் அகலானாகி அன்பொடு புணர்ந்தான்' என்ற வரிகளுக்கு விளக்கம் கூறுகையில் பழங்காலத்து மாணவர்கள் இரவில்(12) ஆசிரியர் உடன் செல்லும் போது ஆசிரியருக்கு முன்பாகச் செல்லவேண்டும். ஆனால் பகலில் அவருடன் செல்ல நேர்ந்தால் அவருக்குப் பின்பாகச் செல்லவேண்டும். அத்துடன் கூடவே அவரை விட்டு வெகுதூரம் சென்றுவிடாமல் அண்மையிலேயே சென்று கொண்டிருக்க வேண்டும் என்று விளக்குகிறார்.



3. 'புணரியியல் நிலையிடை குறுகலும் உரித்தே.....' (நூற்பா. 35) என்ற நூற்பாவின் 'குறுகுதல்'(13) என்பது வருதல் என்று பொருள்படும். மாத்திரை குறுகுதல் என்னும் பொருளை உடையதன்று என்று கூறுவார்.

4. 'எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும்' (நூற்பா. 192) என்ற நூற்பாவில் வருகின்ற தம் நும் என்ற சொற்களைப் பற்றித் தம் நம் நும் என்பவனவற்றை, நன்னூலார் 'அன் ஆன் இன் அல் (நன்னூல் 244) என்னும் நூற்பாவில் சாரியையினை இடைச்சொல்லாகக் கூறியது போன்று, தொல்காப்பியனார் சாரிய இடைச்சொற்களைக் கூறுமிடத்து (புணரியல் 17) இவற்றை அவற்றுடன் சேர்த்துக் கூறாமையின், தம் நம் நும் என்பன, தாம் நாம் நீம் என்ற சொற்கள் விகாரப்பட்டு வந்த பெயர்ச்சொற்களே என்றும், பிற்காலத்தார் இவற்றைச் சாரியை இடைச்சொற்களாக வழங்கினர் என்றும் கூறுவர்; திரு V.V.ரெட்டியார் அவர்கள் தொல்.எழுத்து. ஆராய்ச்சி. காண்க. என்று எழுதுகின்றார்.

5. சூத்திரம் 203 இல் இளம்பூரணர் குறிப்பிடுகின்ற பொருட்புணர்ச்சி என்ற சொல்லை விளக்க வருபவர் 'பொருட் புணர்ச்சியாவது - உருபுகள் இடையில் மறைந்து நிற்க, அவ்வுருபின் பொருள்பட, நிறுத்தசொல்லும் குறித்து வருகிளவியுமாகப் புணரும் புணர்ச்சி.' என்று கூறுகிறார்.

6. நூற்பா.212 இல் சேயென்கிளவி என்றதனான் அம்முடிவு இவ்'வாழிய' என்பதற்கு 'ஏவல் கண்ணாத நிலையது என்பது விளக்கிய நின்றது', என்று இளம்பூரணர் எழுதுவதை மாணவர்களுக்கு விளங்கும்படியாகக் கூறுகின்றார். 'ஈண்டு இளம்பூரணவடிகள் கூறும் உரைநயம் கூர்ந்து நோக்கற்பாலது. ஒருவர் ஒரு பொருளைநோக்கி ஒன்று கூறின் கூறிய அக்காரியம்

நிறைவேறினால் அதனை ஏவல் கண்ணியது என்றும், அக்காரியம் நிறைவேறாவிடின் அதனை ஏவல் கண்ணாதது என்றும் கூறுவர். இம்முறையில், உயர்திணைப் பொருளை நோக்கி ஒன்றுகூறின், அவ்வுயர்திணைப் பொருள் அதனை அறிந்து அக்காரியம் நிறைவேறும்படி அதனை முடித்தலின் அவ்வேவலை (அந்த ஏவலை) ஏவல் கண்ணியது என்றும், அஃறிணைப் பொருளை நோக்கி அவ்வாறு கூறின், அவ்வஃறிணைப் பொருள் அதனை அறிந்து அக்காரியம் நிறைவேறும்படி அதனை இயற்றாமையின் (செய்யாமல் இருப்பது) அவ்வேவலை ஏவல் கண்ணாதது என்றும் கொண்டனர்.

7. 215 வது நூற்பாவிற்கு விளக்கம் எழுதுகின்ற இளம்பூரணர் "ஞாபகத்தால் அகரம் கெடும் என்றானாகக் கொள்க என்று எழுதுவதை விளக்க வரும் பதிப்பாசிரியர் ஞாபகம்" என்பது இடனறிந்து சொற்குப் பொருள் உரைக்கும் வகைகளில் ஒன்று என்பர் இலக்கணக் கொத்து ஆசிரியர். ஞப்தி என்றால் ஞானம் என்பது பொருள். அந்த ஞானத்தை உண்டாக்குவது எதுவோ அது ஞாபகம் என்று கூறப்படும். இங்கு "ஒற்று" என்றது ஞாபகம். இது எந்த ஞானத்தை உண்டாக்குகிறது எனின் ஒரு மெய்யே மற்றொரு மெய்யாகத் திரிதற்குரியது. ஆதலின், லகரம் ஒற்றாக இருத்தல் வேண்டும் என்ற ஞானத்தை உண்டாக்குகிறது. (இங்கு லகரம் உயிர்மெய்யாக இருத்தல் அறியத்தக்கது) லகரம் ஒற்றாக இருத்தல் வேண்டுமெனின், அதன்மேலுள்ள அகரம் கெடுதல் வேண்டுமன்றோ? ஆதலின் ஒற்று என்ற ஞாபகத்தால் அகரம் கெடும் என்றானாகக் கொள்க என்றனர்.

8. நூற்பா. 235 இல் "குறியதன் இறுதிச் சினைகெட உகரம்" என்ற வரியில் சினைகெட என்பதற்கு இளம்பூரணர் குறியதன் இறுதிக்கண் நின்ற ஆகாரத்தினது சினையாகிய அகரம் மாத்திரை கெட, ஆண்டு உகரம் அறியவருதல் செய்யுளிடத்து உரித்து என்று எழுதுவதை விளக்க வந்த பதிப்பாசிரியர் இச்சூத்திரத்தில் "இறுதிச்சினை" என்பது ஈற்றெழுத்தாகிய நெட்டெழுத்தின் ஒரு கூற்றை, இரண்டு குற்றெழுத்து ஒரு நெட்டெழுத்தாதலின், நெட்டெழுத்திற்கு குற்றெழுத்து சினையாயிற்று. நெட்டெழுத்து குற்றெழுத்தாதலைச் சினைகெட என்றாற் போல குற்றெழுத்து நெட்டெழுத்தாதலைச் சினை நீண்டது என்பர். "சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழி" என்பது காண்க.

9. நூற்பா. 272 "ஆடுஉ, மகடுஉ ஆயிரு பெயர்க்கும் இன்னிடைவரினும் மானமில்லை" இந்த சூத்திரம் தொல்காப்பியர் கருத்துக்கு மாறுபாடானது. எனவே இதில் பாடவேறுபாடு உண்டு என்பதைக் கூறி விளக்க வருகின்ற பதிப்பாசிரியர் "இவ்வியல் (உயிர்மயங்கியல்) 65 வது சூத்திரத்தில் "நிற்றல் வேண்டும்"என்ற இலேசு. "ஆடு, மகடு என்பவற்றை ஆசிரியர் ஊகார ஈற்றில் கூறுதலின், அவை, ஊகார ஈற்றுச் சொற்களே என்பது போதரும். அதனால் பதிப்புகளில் ஆடுஉ, மகடுஉ என்று பதிப்பித்திருப்பது ஆசிரியர் கருத்தன்று என்பர்." இவருடைய இந்தக் கருத்துதான் சரியானது என்பது 1996 இல் "தொல்காப்பிய மூலம் பாட வேறுபாடுகள் - ஆழ்நோக்காய்வு" என்ற நூலின் அடிக்குறிப்புகளும் அண்மையில் மறைந்த தமிழறிஞர்கள் தி.வே.கோபாலய்யரும் அவடைய தம்பி கங்காதரன் அவர்களும் பதிப்பித்த செம்மையான தொல்காப்பிய பதிப்பில் ஆடு, மகடு என்ற பாடத்தையே ஏற்றுக் கொண்டதும் நமக்கு விளக்குகின்றது.

இவ்வாறு பல்வேறு நிலைகளில் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தையும் அதற்கான இளம்பூரணர் உரையையும் வேறுஎவரும் அணுகாத முறையில் 162 பக்கங்களில் மிகச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. இந்த நூல் விரைவில் அச்சில் வெளியிடப்படும்.

நோய் காலங்களில்தான் அறிவியலின் அருமை தெரிகிறது

- ஜான் வாக்கர்

நோபல் பரிசுபெற்ற வேதியியல் அறிஞர்

ஆசிரியர் ஆயிஷா இரா. நடராஜன்

சர் ஜான் ஏர்னஸ்ட் வாக்கர்: பிரிட்டனை சேர்ந்தவர். கேம்பிரிட்ஜ் பல்கலைகழகப் பேராசிரியர். தற்போது மக்கள் அறிவியல் எனும் கட்டற்ற சித்தாந்தத்தின் விமர்சன பூர்வ இணைய அமைப்பை நடத்துகிறார். 1997இல் வேதியியல் நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. மரபணு வேதியியல் எனும் தனித்துறையையே ஏற்படுத்திய முன்னோடிகளில் ஒருவர். The Triple Helix எனும் இணைய அறிவியல் இதழுக்கு அவர் அளித்த நேர்காணல் இது.

கேள்வி: நீங்கள் நோபல் பரிசு பெற காரணமாக இருந்த கண்டுபிடிப்பு குறித்து சொல்ல முடியுமா?

ஜான் வாக்கர்: நான் 1971 முதல் 1974 வரை விஸ்கான் சிங் பல்கலைகழகத்தில் பிரான்சில் உள்ள மாடிசனில் பணிபுரிந்தேன். அங்கிருந்து 1974இல் ஒரு பயிற்சிக்காக கேம்பிரிட்ஜ் வந்தடைந்தேன். அந்தப் பயிற்சியின் போது நான் பிரெட் சாஸ்கரை சந்தித்தேன். மூலக்கூறு உயிரியல் ஆய்வகத்தில் நாங்கள் இணைந்து பணிபுரிய முடிவெடுத்தோம். அதே ஆய்வகத்தில்தான் டி.என்.ஏ.வின் கட்டமைப்பை உலகிற்கு அறிவித்த பிரான்சிஸ் கிரிக்கும் இருந்தார். நான் முதலில் புரதங்கள் குறித்த நுண் ஆய்வில் ஈடுபட்டேன். மைட்டோ கான்ட்ரியாக்களின் மரபியல் சமிக்கைகளை கட்டுடைத்தேன். இவையே செல்களின் ஆற்றல் மையங்கள் நான் இந்தஆற்றல் மாற்றங்களின் மேல் கவனம் செலுத்தினேன். ஒரு உயிரினத்தை உட்கொள்ளும் உணவு ஆற்றலாக மாற்றப்பட்டு அது மைட்டோகான்ட்ரியாக்களில் உள்ள ஏ.டி.பி எனப்படும் ஆற்றல் சுமக்கும் மூலக்கூறுகளால் செல்களில் உள்ள உறுப்புகளுக்கு கடத்தப்படுகிறது. நான் ஏ.டி.பி. மூலக்கூறின் வடிவமைப்பை கட்டுடைத்து உலகிற்கு அளித்தேன்.

மாடிசன் வளாகமே புரட்சிகர சிந்தனைகளால் பொங்கியது. படிப்பை தொடர வேண்டும் எனும் வெறி அவர்களிடம் இருந்தது. பட்டப் படிப்பில் அவர்கள் தொடர்ந்ததாலேயே பலர் கட்டாய ராணுவ ஆளெடுப்பிலிருந்து தப்பினார்கள். பெரும்பாலானவர்கள் வியட்நாம் தாக்குதலை கடுமையாக எதிர்த்தார்கள். கம்போடிய தாக்குதல் அங்கே மாணவர் போராட்டத்தை விதைத்திருந்தது. காவல்துறைக்கும் மாணவர்களுக்கும் இடையே ஒரு கலவரமே நடந்தது. நாங்கள் பேராசிரியர்கள் சிலரும் போராட்ட மாணவர்களுக்கு ஆதரவாக இருந்ததால் அந்த தாக்குதலில் காயமடைந்தோம். ஒரு ஆகஸ்ட் ஞாயிறு மாலை ராணுவம் கணித ஆய்வக கட்டிடத்தில் குண்டு வெடித்தது. அது நான் பணி புரிந்த ஆய்வகத்திற்கு வெகு அருகில் இருந்தது. எங்கள் நுண் உயிரியல் ஆய்வகத்தின் சன்னல்கள் பலவும் நொறுங்கின. குண்டு வைத்தது ராணுவமா... மாணவர்களா என விவாதித்தார்கள். மாணவர்களிடம் அவ்வளவு சக்தி வாய்ந்த குண்டு எப்படி இருக்க முடியும். நாங்கள் மாணவர்கள் பக்கம் தெளிவாக நின்றோம். கல்வி, அறிவியல், அரசியல் என்பதெல்லாம் ஒன்றுக்கு ஒன்று பிரிக்க முடியாத விஷயம்.

கேள்வி: மதமும் அறிவியலும் சமாதானமாக நம் கல்வியில் உய்த்திருக்க முடியாதா?

ஜான் வாக்கர்: மன்னிக்கவும் நான் முரண்படுகிறேன். பள்ளிக்கூடத்தில் நாம் நம் குழந்தைகளுக்கு காலம் என்பது எவ்வளவு அகண்ட பரப்பு கொண்டது என்பதை சொல்லிக் கொடுக்க வேண்டும். பைபிள் அல்லது வேறு புனித நூல்படியான குறுகிய கால அளவை போதனா முறையில் திணிப்பதை நிறுத்திவிட வேண்டும். மதத்திற்கும் அறிவியலுக்குமான

பாடங்களின் அடிப்படையிலான மோதலும் முரணும் ஒரு பதின் பருவ சிறுமிக்கோ சிறுவனுக்கோ மிகுந்த மன உளைச்சலை தரக்கூடிய ஒன்று. இன்றும் பரிணாமவியலை ஏதோ புதிய அனுமானம் என்பதுபோல நடத்துவது வெட்க கேடான விஷயம். அது ஒரு இயல்பான உலக நடப்பாக இயற்கையின் உண்மை தன்மையாக நிரூபணமாகி நூறாண்டு ஓடிவிட்டது. உதாரணமாக நான் கல்வி கற்ற நாட்களில் என் குடும்பம் கிருத்துவ மத அடிப்படை வாதத்தை ஏதோ பெரிய மாற்ற முடியாத அறிவியல் போல என் மூளையில் திணித்தது. பிறகு அறிவியலுக்குள் நுழைந்தபோது அதன் அடிப்படை சித்தாந்தங்களை மத நம்பிக்கை வாதத்தோடு இணைத்து புரிந்து கொள்வது பெரிய சிக்கலாக இருந்தது. பரிணாமவியலை மதங்கள் ஏற்கும் காலம் கூட இப்போது வந்துவிட்டது. நாம் அந்த அறிவியலை பள்ளி சிறார்களுக்கு சரியாகவும் தெளிவாகவும் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதை நாம் தனிப் பாட பிரிவாக்க வேண்டும். பத்து வயதில் பரிணாமவியல் என்பது தனி பாடமாகி ஐந்தாண்டுகள் படிப்படியாக நடத்த வேண்டுமம். கற்றலாக இருக்க வேண்டும். மத அடிப்படைவாத பாடத்தோடு போதிக்கக்கூடியதாக இருக்கக்கூடாது. ஒவ்வொரு குழந்தையையும் நாம் இயற்கை விஞ்ஞானி ஆக்க வேண்டும்.

கேள்வி: ஆனால் உங்களது ஏ.பி.டி ஆய்வுக் கருவி மற்றும் செல்களில் ஆற்றல் மாற்றம் போன்ற விஷயங்கள் படைப்புவாதிகளால் *(Intelligent Design)* தங்கள் பக்கத்து ஆதரவு விஷயமாக பார்க்கப்படுகிறதே.

ஜான் வாக்கர்: ஏ.பி.டி.யின் - வடிவமைப்பு பற்றிய என் கண்டுபிடிப்பை அவர்கள் தங்களது பிரபஞ்ச கடவுள் வடிவமைப்பு அடிப்படை வாதத்திற்கு ஏற்ப மாற்றி பேசுவதை நான் அறிவேன். டார்வின் கொள்கையில் விளக்க முடியாத அளவிற்கு மிக நுணுக்கமான அதி சிக்கல் மிகுந்த விஷயமாக இதை அவர்கள் திரிக்கிறார்கள். உண்மையில் பரிணாமம் மட்டுமே புரதம் சம்பந்தமாக இத்தகைய சிக்கல் மிகுந்த உயிர் நுட்பங்களை உருவாக்க முடியும் என்பதை விவரித்து இருக்கிறேன். புதிதாக எதிலிருந்தும் ஏ.பி.டி. போன்றவை வந்து வானத்திலிருந்து குதித்து விடவில்லை. இத்தகைய சிக்கல் மிகுமூலக்கூறுகள் மற்றும் அவற்றின் செயல்பாடு ஏற்கனவே இருந்த எளிய மூலக்கூறுகள்-உயிர் அடிப்படை கட்டுமான அணுக்களில் இருந்து புதர்போல அல்லது மலை முண்டுபோல உருவாகியதே. பரிணாமவியலை தவிர்த்து ஏ.பி.டி. புரிந்து கொள்ளப்பட வாய்ப்பே இல்லை என்பதே உண்மை.

கேள்வி: இளைஞர்கள் மத்தியில் அறிவியல் கற்கும் ஆர்வம் குறைந்துவிட்டதாக வாதிடுகிறார்களே.

ஜான் வாக்கர்: மத அடிப்படைவாதத்தை திணிக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு உள்ளது. பிறகு உக அளவில் எந்த மதம் எனும் போட்டி மிக ஆபத்தான வன்முறையாகவும் இருக்கிறது. அறிவியலில் அப்படி இல்லை. நான் என் வேதியியல் ஆசிரியரால் கவரப்பட்டு அறிவியல் பக்கம் வந்தேன். ஏனெனில் அவர் தெளிவான அறிவியல்வாதியாக இருந்தார். இன்று ஒருவர் மத அடிப்படைவாதியாக இருந்துகொண்டே அறிவியல் பாடம் நடத்துவதை ஒரு சம்பள வேலையாக செய்கிறார். இதனாலும் அறிவியல், முக்கியத்துவத்தை இழக்கிறது. அழிவுகள்-குறிப்பாக அணு ஆயுதம், தொழிற்சாலை விபத்துகள் இவற்றை எல்லாம் முறி அறிவியல் மீதான ஆர்வமோ ஈடுபாடோ குறைந்துவிட்டது என்று வாதாட முடியுமா. சில சமயம் பி.எச்.டி வரை அறிவியல் துறையில் சாதித்து அல்லதும் எம்.டெக் வரை பொறியியலை படித்து பிறகு பொருளாதாரத்திற்கும்-சிலர் சென்று விடுவதும் நடக்கிறது. வருமானம் எந்த திசையில் இருக்கிறதோ அதை நோக்கி ஒருவர் பயணிப்பது இயற்கை. ஆனால் ஒரு நோய் தொற்று காலம் போதும். அறிவியலால் மட்டுமே காப்பாற்ற முடியும் என்பது விளங்கும்.

நேர்காணல்

புத்தகம் பேசுது வாசகர்கள் சார்பாக வணக்கங்கள், தமிழ் இலக்கிய விமர்சன உலகம் உங்களைப்போன்ற திறனாய்வாளர்களை, நாவலாசிரியர்களை, புறந்தள்ளிவிட்டுப் போகமுடியாத ஒரு இலக்கிய விமர்சன மேடையில் இருக்கிறீர்கள், உங்களுடைய இளமைக்காலங்கள் குறித்து எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

நான் இப்போதைய குமரிமாவட்டத்தில் பிறந்தேன். மலையாளமும் தமிழும் கலந்து பேசும் கல்குளம் பகுதியில் மலையடிவாரக் கிராமம். அப்போது வளர்ச்சியடையாத ஊர். இன்று வளர்ச்சியடைந்த ஊர். அப்போது அது திருவிதாங்கூர் மன்னர் ஆட்சியில் இருந்தது. பிறந்தது மிகச்சாதாரண குடும்பம். ஊரில் கல்லூரிக்குச்சென்ற மூன்று நான்கு பேரில் ஒருவன். ஏழாவது வயதில் அப்பகுதியைத் தமிழகத்தோடு சேர்க்க நடந்த, நேசமணி தலைமையிலான போராட்டத்தில், துப்பாக்கிச் சூடுகள், சிறைத்தண்டனைகள், சித்திரவதைகள் அனுபவித்தவர்களைக் கண்டு தமிழ் உணர்வு ஏற்பட்டது. அது நிலவுடைமையாளர்களான மலையாளம் பேசும் நாயர்களுக்கு எதிரான போராட்டமும் கூட. பனை ஏறும் தொழிலாளர்களும், கூலி விவசாயிகளும் அதிகம் நடமாடும் ஊர். ஏழை கிறிஸ்தவ மீனவர்களும் இருந்தனர். கிறிஸ்தவர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் என எல்லா மதத்தவர்களும் ஒற்றுமையாக வாழ்ந்தனர். பொருளாதாரத்தில் முஸ்லிம்களும் மலையாள நாயர்களும் உயர்ந்தநிலை. நான் பள்ளி இறுதி வகுப்பிலேயே யாப்புக்கற்று வெண்பா, ஆசிரியப்பா எல்லாம் எழுதுவேன். 1962 -இல் பாளையங்கோட்டைக்குப் படிக்க வந்தேன். கிராமத்தில் மலையாளம் கலந்த தமிழைப்பேசிய நான், என் தமிழை மாற்றுகிறேன். அது ஒரு புது உணர்வு. அதுபோல முதன் முதலாக மையத்தமிழத்துக்கு வந்த உணர்வு. முற்றிலும் வேறு உலகம். கல்லூரி மாகசினில் கவிதைகள் எழுதுவேன்.விலங்கியலில் இளங்கலை மாணவன் நான். முதலாண்டு படிக்கும்போது என்கதை தினமலரில் வந்தது. என்விடுதி நண்பர் வலம்புரி ஜான், அக்கதையை நோட்டிஸ் போர்டில் கொண்டு செருகி வைத்து அக்கதை எழுதிய மாணவன் விடுதியில் எந்த அறை எண்ணில் இருக்கிறான் என தகவல் கொடுக்கிறார். திடீர் புகழ். அந்த விடுதிக்கு, பின்னர் இன்றைய காங்கிரஸ் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் வருகிறார். வைக்கோ அவர்கள் பக்கத்து விடுதி.நான் புதுமையாக காதலும் கத்தரிக்காயும் என சிலேடை வைத்து எழுதிய வெண்பா அடுத்து தினமலரில் வருகிறது. தளை தட்டாத யாப்பில் கவிதைகள் பிரசுரித்துக்கொண்டேயிருக்கிறேன். விலங்கியல் படித்துவிட்டுக் கேரளப் பல்கலைக் கழகத்தில்

தமிழ் முதுகலை முடித்தேன். பாளையங்கோட்டையில் படித்த கல்லூரியில் வேலை. ஆசிரியன் ஆன பின்பு கண்ணதாசன், தீபம், தாமரை, அப்போது வந்துகொண்டிருந்த தமிழ்நாடு என்ற நாளேடு என என் எழுத்துப் பயணம் தொடர்கிறது. ஆராய்ச்சி, ஆசிரியர் நா.வா. - வைச் சந்தித்தல். அவர் என் திசையை மாற்றுகிறார். 1971-இல் இருந்து தொடங்கி, அவர் மரணம் வரை வந்த எல்லா ஆராய்ச்சி இதழ்களையும் வரிவரியாகப் படித்து விட்டுப்

பெரிய உணர்வுக் கொந்தளிப்புக்கு ஆட்படுதல். மனம் மார்க்சியத்தை அறிவதிலும் மேலும்மேலும் அறிவுப்பிரச்சனைகளையும் சமூகத்தின் வாழ்க்கைப்பிரச்சனைகளையும் இணைத்துப்பார்ப்பதிலும் தீவிரம் கொள்கிறது. இளமையில் கோவை ஞானியைச்சந்தித்தபோது மார்க்சியத்தில் வேறு சில வற்றைப்புரிந்துகொள்கிறேன். எழுத்து இதழ்களைச்சந்தா (இரண்டு ரூபாய்) கட்டிப் படித்ததில் வேறு கோணங்கள் அறிமுகமாதல்.



இப்படிப் புதிய புதிய கேள்விகள் தோன்றுகின்றன. சுருக்கமாய்ச் சொல்வதென்றால் அதுவரை ஆங்கிலமே தெரியாத ஒரு இளைஞனைத் தமிழ்ச்சமூகம் இப்படி உருவாக்கியது. இங்கே 1965 - இல் நான் இளங்கலை படிக்கும்போது தமிழகத்தில் நடந்த இந்தி எதிர்ப்பின் தாக்கமும் மனதின் உருவாக்கத்தில் பங்கு வகிக்கின்றது என்ற உண்மையைச்சொல்ல நான் மறக்கக்கூடாது..

உங்கள் பாளையங்கோட்டை ஆசிரியர் வாழ்க்கையின் போது என நினைக்கிறேன், என் ஞாபகம் சரியாக இருக்குமானால், ஆக்டோபஸ் என்ற ஒரு கவிதைத் தொகுப்பில் கூட உங்களது பங்களிப்பு இருந்ததாக பின்னாட்களில் படித்த ஞாபகம்•••

அந்தக் கவிதைத் தொகுப்பின் பெயர் ஆக்டோபஸும் நீர்ப்பூவும். அது 1972 - ல் வெளிவந்தது. அதில் வேறுவேறுபெயரில் ஆறுபேர் புதுக்கவிதையாக யாப்பின் எல்லா மரபையும் உடைத்து எழுதியிருப்போம். சென்னைப்பல்கலையில் மொழியியல் பேராசிரியராய் பின்னாளில் புகழ்பெற்ற தெய்வசுந்தரம், மேலும் சிவசு, இப்போது நாடகம், சினிமாவில் புகழ்பெற்றுள்ள மு. ராமசாமி, டெல்லி பல்கலையில் தமிழ்ப்பேராசிரியராய் பின்னாளில் புகழ்பெற்ற மாரியப்பன்,மற்றும் நான் ஆகியோர் அதில் முற்றிலும் மாறுபட்ட புதுக்கவிதைகளை எழுதினோம். அதன் புதுமை என்ன வென்றால்; அப்போது தமிழில் வந்த புதுக்கவிதை சமூக விமரிசனமாக இருக்காது. அது வெறும் அழுகுணிச்சித்தரின் வெளிப்பாடுதான் என்று எல்லோரும் கருதிய நேரத்தில் சமூக விமரிசனத்தை உணர்வு கலக்காமல் எல்லாக்கவிதைகளும் வெளிப்படுத்தியதுதான். தேன்குரல், பன்னீர்புஷ்பம், இளநிலவு, வசந்தம், புல்லாங்குழல் என்று பலர் எழுதியபோது இப்படி எழுதியது ஒரு மாற்று. மேலும் அப்போது பரவலாகத்தெரிந்திருந்த எழுத்து, மற்றும் கசடத பற, என்ற இதழ்கள் கவிதைகளுக்கு மாறாகவும் இன்னொரு பாதையை முதன்முதலில் இக்கவிதைகள் வெளிப்படுத்தின. எழுதியவர்கள் எல்லோரும், அன்று மாணவராய் இருந்தவர்கள் அல்லது இளம் ஆசிரியர்கள். இந்நூலுக்கு வேறு பெயரில் முன்னுரை எழுதிய நாச்சிமுத்துவையும் சேர்த்து, எல்லோரும் முப்பது வயதுக்கு உட்பட்டவர்கள். இப்படி ஒருபோக்கு மாற்றத்துக்குக்காரணமான இந்த நூல்பற்றி இன்று யாருக்கும் தெரியாவிட்டாலும், இது இலக்கிய வரலாற்றில் குறிப்பிடப்படும். எதிர்கால ஆய்வாளர்களுக்காக இத்தகைய ஆவணங்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பது என்கருத்து.

தமிழ் திறனாய்வு மற்றும் விமர்சன மரபு வரலாற்றில் நீங்கள் அறிமுகப்படுத்திய விமர்சன நோக்கு மிக முக்கியமானது. மரபான மார்க்சிய அடிக்கட்டுமானம் மேற்கட்டுமானம் என்கிற பொருளியல் வாதப்பார்வை போதாது என்று அமைப்பியல்வாதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அழகியல் சார்ந்த சமூகநலன் விளைவுகளை வாசித்து வெளிப்படுத்தும் பார்வை அது. உங்களுடைய இந்தப் பார்வைக்கு அடிப்படையாக அமைந்த சூழல்கள் மற்றும் தூண்டிய நூல்கள் என்னென்ன?

அது ஐம்பண்டுகளுக்கு முன்பு இருந்த சூழ்நிலை.பொருளாதாரம், அதாவது, நீங்கள் சொல்லும் அடித்தளம், மேற்தளத்தின் அதாவது பண்பாட்டின் கூறுகளான, குடும்பம், கல்வி, அரசியல் போன்றவற்றைத் தீமானிக்கும் என்ற பார்வையை அன்று எல்லோரும் நம்பினார்கள். புதுக்கவிதையும் புதுவிதமான நாடகங்களும் கதைகளும் தமிழில் வந்தபோது தான் பிரச்சனை பெரிதானது. அறிவுப் பெருக்கமும் தமிழ்ச்சமூகத்தில் ஏற்பட்டது. பழமை மெதுமெதுவாக மாறியது. அதுவரை அறிவு மறுக்கப்பட்ட பிரிவினர் அறிவைப்பெருக்கினர். பொருளைப் பெருக்கும் முறையை அறிந்தனர். அதுபோல, சிந்திக்கும் துறைகளுக்கு வந்தார்கள். மத்தியதர வர்க்கமானார்கள். படைப்புக்கும் வந்தார்கள். புதிய தமிழ்ச்சமூக விரிவாக்கப்பரிமாணத்தை அறிந்துகொள்ள புதிய சிந்தனைகள் வேண்டும். புதிய இதழ்கள், கசடதபற, நடை, பரிமாணம், மீட்சி, பிரக்னை, நீலக்குயில், சதங்கை போன்றன தமிழில் தோன்றுகின்றன. இந்தச் சூழலில் பொருளாதாரம், பிற எல்லாத்துறைகளையும் எந்திர கதியில் தீர்மானிக்கும் என்பது கேள்விக்குள்ளானது. அல்தூசர் பற்றி நான் அக்காலத்தில் மலையாளத்தில் முதன்முதலாக ஒரு கட்டுரை படித்தேன். பின்பு அவரை விரிவாய் அறிந்துகொள்ள பல நூல்கள் படித்தேன். அவர் அப்போது பாரிஸ் பல்கலையில் தத்துவத்துறைப்பேராசிரியர். பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர். அவர் பொருளதார அடித்தளம் கடைசியாய் (*last instance*)தான் மேற்கட்டுமானத்தைத் தீர்மானிக்கும் என மார்க்ஸ் கூறுகிறார் என்றார். அதன் பின்பு அவருடைய விளக்கத்தைச் சொன்னார். பொருளாதாரத்தால் மேற்கட்டுமானம் அப்படித் தீர்மானிக்கப்படாமலும் போகும் வாய்ப்புண்டு என்று அவர் சொன்னது முக்கியமான கருத்து. உதாரணத்துக்குக் கல்வி இருந்தால் பொருளாதாரம் பெருகுமே. தொழில்நுட்பத்தால் பெருகுமே. அப்படியென்றால் மேற்கட்டுமானமல்லவா அடித்தளத்தைத் தீர்மானிக்கிறது. இப்படி விவாதித் தார். நான் குமரிமாவட்ட மலைக்கிராமத்தில் அப்போது நிலத்தை வைத்திருந்த நாயர்களை மற்றவர்கள் எசமான் எசமான் என்று குனிந்து நின்றபடி பேசியதைக் கேட்டவன். எனக்கு முதலில் அல்தூசர் சொன்னது ஏற்றுக்கொள்ளும்படி இருக்கவில்லை என்பது தான் உண்மை. தொடர்ந்து சர்ச்சை செய்தபடியும் வாசித்தபடியும் இருந்தேன்.

இப்படி ஓரளவு ஆங்கிலமும் விருத்தி செய்து பலவற்றைப் படித்தேன். அமைப்பியல் பற்றி முதலில் ஸ்ட்ரக்சுரலிசம் என என் நூல் வந்தது. அதில் இக்கருத்துக்களை எழுதினேன். முதல் பதிப்பு *1982* - இல் பளையங்கோட்டையில் அப்போது இருந்த லூர்து என்னும் பேராசிரியர் தன் ஆர்வத்தால் அச்சிட்டார். அதில் அமைப்பியலை மானுடவியல், மொழியியல், இலக்கியம் போன்றன எந்த முறையில் பயன் படுத்துகின்றன என ஓரளவு விரிவாகப் படித்து விளக்கினேன். மூலநூல்களைப் படித்தேன். மார்க்சியம் கற்றுவிட்டால் மற்ற துறைகளைப் புரிந்து கொள்ளலாம். பல துறைகளில் அமைப்பியல் முறை விளக்கப்படுகிறது என அதன் சிந்தனையைப் புரிந்து எழுதினேன். அது விரிவான நூலாக வந்து இப்போதும் பல பதிப்புகளாய் தமிழில் விற்கப்படுகிறது. அப்போது பத்மநாப ஐயர் இலங்கையிலிருந்து வந்திருந்தபோது பாளையங்கோட்டை க்குச் சென்று *25* படிகள் விலைகொடுத்து வாங்கிச் சென்றார். அது ஈழப்போராட்டம் நடந்த காலகட்டம். பல குழுக்கள் அதனைப்பயன்படுத் தின என ஒரு முறை நான் லண்டன் போனபோது கூறினார்கள். இனவிடுதலை எப்படி வர்க்க விடுதலையோடு தொடர்புடையது என அங்குப் பல குழுக்கள் விவாதித்த நேரம். அந்நூலில்

உள்ள கருத்துக்கள் வழி இது பற்றிச் சிந்திக்க முடியும். தமிழகத்தில் அப்போது உள்ளொளியும் மூடநம்பிக்கைகளும் படைப்புக்குக் காரணம் என பரவலான கருத்து இருந்தது. தாங்கள் பாரதியின் தொடர்ச்சி என உரிமை கொண்டாடிய மேல்தட்டினர் இந்த நூலின் இலக்கியக் கருத்துக்களால் எரிச்சலுற்றனர் அவர்களுக்குக் காலம் மாறுகிறது என்பதும் வேறு பிரிவினர் கல்வி கற்று வருகிறார்கள் தமிழகத்தில் என்பதும் புரியவில்லை. மீண்டும் லட்சுமி காடாட்சத்தால் தான் கவிதை எழுதுகிறேன் என்றார்கள். அப்படிக் கூறியவர்கள், முதளாளியம் என்பது முதளாளிகள் மனம் மாறி எல்லோருக்கும் சமமாய் பகிர்ந்துகொடுக்கும் போதுதான் ஒழியும் என்றார்கள். அவர்கள் இது போன்ற நூல்களின் விவாதத்தைச் சரியாய் எதிர்கொள்ள வில்லை. படித்தால் புரியாது என்று ஒரு கருத்தைப்பரப்பினார்கள். புரியாதபடி எழுதுகிறவர்கள் என்று பகடி செய்தனர். படித்தவர்களால் இலக்கியம் படைக்கமுடியாது என இன்னொரு புதுக்கரடியைக் கொண்டுவந்தார்கள். உள்ளொளி இருந்தால் தான் படைக்கமுடியும் என்றும் உள்ளொளி இருப்பவர்கள் படைப்பு ரகசியம் அறிந்தவர்கள் என்றும் கூறினார்கள். நடக்கும் போது இரண்டு அடிக்கு ஒரு முறை நின்று வானத்தைப் பார்ப்பவர்கள் அந்த படைப்பு ரகசியத்தை அறிந்தவர்கள் என்றனர். சிலவேளை பிறப்பிலேயே அது தீர்மானிக்கப்படுகிறது என்றும் கூறி முத்தாய்ப்பு வைத்தனர். இங்குத்தான் பிரச்சனை வருகிறது. படைப்பு ஓர் ரகசியம். என்னதான், மேற்கத்திய அறிவோ, விஞ்ஞானமோ, பெற்றாலும் பயன் இல்லை. படைப்பு ரகசியத்தைக் கற்க முடியாது. சிலவேளை கலை என்ற சொல்லையும் பாவித்தனர். அதாவது இவ்விவாதங்களுக்குள் இரு சமூகத்தட்டினரின் முரண்பாடுதான் வெளியாயிற்று என்று தோன்றுகிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து தற்கால இலக்கியத்தை ஆக்கிரமித்து வந்தவர்களுக்கும் எழுபதுகளில் திராவிட மற்றும் முற்போக்குக் கட்சிகள் உதவியால் விழிப்புப்பெற்று கல்விக்கூடங்களில் சேர்ந்து புதிதாய்ப்படிப்பு பெற்றவர்களுக்கும் நடந்த போராட்டம். அமைப்பியலைச் சுற்றியும் பொதுவான இலக்கியத்தைச்சுற்றியும் தமிழில் நடந்த சர்ச்சைகளை இப்படித்தான் பார்க்கிறேன். அதுவரை படிப்பு மறுக்கப்பட்டவர்கள் விழிப்புற்று, புதிதாய் எழுச்சி பெற்றபோது நடந்த இலக்கிய உலகப் போராட்டம். அயோத்திதாசர் சிந்தனைகள், சிங்காரவேலர் சிந்தனைகள், சுய மரியாதைச்சிந்தனைகள் போன்றன தமிழ்ச்சமூகத்தில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அதாவது முதல் இருபதுகளில், பரவுகின்றன. அதற்கிடையில் மேற்தட்டினர் பிரதான பங்கு வகித்த அனைத்திந்தியச் சுதந்திரப் போராட்டச் சிந்தனைகள் பரவ ஆரம்பிக்கின்றன. அக்காலத்தில் ஈனப்பறையர்கள் என்ற சொல்பிரயோகம் பற்றிய அயோத்திதாசரின் பாரதிக்கு விரோதமான கருத்து வெளிப்படுகிறது. இது பற்றிய ஸ்டாலின் ராஜாங்கத்தின் சில மாதங்களுக்கு முன்பு வந்த கட்டுரை முக்கியம். நல்ல மனிதரான ஆஷ் துரையைக்கொன்ற வாஞ்சிநாதன் துஷ்டன் என அயோத்திதாசர் எழுதுகிறார். அயோத்திதாசர் படைப்பு எழுத்தாளர் அல்ல. ஆனால் பரதியாரைவிட அயோத்திதாசருக்கு விரிவான புரிதலும் அறிவும் இருந்திருக்கிறது. இதனை, ப. மருதநாயகம் தன் அயோத்திதாசர் பற்றிய நூலில் கூறுகிறார். பாரதியாருக்கு அன்றைய அனைத்திந்திய சுதந்திரபோராட்டத்தில் வேதத்தைக் கலந்த திலகர் வழி அரசியல் அவருக்குக் கவிஞராகவும் சித்தராகவும்/பித்தராகவும் பயன்பட்டது. அரவிந்தரால் பாரதி தன்னையொத்த அவதார புருஷர் என பிரகடனப்படுத்தப்பட்ட செய்தியை போன புத்தகம் பேசுது இதழில் இரா.மீனாட்சி கூறுகிறார். பாரதி திருவனந்தபுரத்தில் உள்ள மிருக காட்சிச்சாலையில் போய் புலியிடம் ஆபத்தை உணராமல் பேசப்போவதை அவருடைய கவிஞர் ஸ்தானத்துக்கு சான்றிதழாய்ப் பயன் படுத்துபவர்கள் அவரை பித்தர் என்றுகூறி, பித்துநிலை படைப்பாளிகளின் தகுதி என்பார்கள். இப்படித்தமிழ் நவீன இலக்கியம் சித்தர்/பித்தர் வழியில் போகத் தடம் போடும் பாதையில் பலவும் பின் தள்ளப்படுகின்றன. அறிவு வழியை நாடும் அயோத்திதாசரும் அடுத்த அறுபது, எழுபது ஆண்டுகள் மறக்கப்பட பல காரணங்கள் இருந்தன. இந்த சித்தர் வழிபாடும் ஒரு

காரணம். அயோத்திதாசர் மிகவும் கராரான அறிவைப்போற்றுபவர். பாரதியின் அறிவுத்தோற்றவியலுக்கு (Epistemology) எதிர்மாறான பௌத்தச் சிந்தனையாளர். ஆனால் தமிழில் வெற்றி பெற்றது பாரதியின்/திலகரின் ஆரியர் போற்றும் மரபு. சங்க இலக்கியத்தில் ஆரியர் அந்நியர். ந.பிச்சமூர்த்தியிலிருந்து எழுபதுகள் வரை, மணிக்கொடியாகட்டும் எழுத்து இதழ் ஆகட்டும் மதத்தையும் நவீன இலக்கியத்தையும் எல்லைக்கோடிட்டுப் பிரிக்கவில்லை. இது பெரிய பிழை. இன்று இந்திய அரசியல் போகும் பாதையின் ஆபத்திலிருந்து இது சாதரணப்பிழை மட்டும் அல்ல, என்பது புரியும். எனவே தான் சொல்கிறேன் தற்கால இலக்கிய வரலாற்றில் எழுபது வரை ஆதிக்கம் செலுத்திய சக்திகள் எழுபதுகளுக்குப்பிறகு தோன்றிய முற்போக்குசக்திகளின், திராவிடச்சக்திகளின், கூட்டால் உருவான மன நிலை கொண்ட புதிய இளைஞர்களின் உலகப் பார்வையோடு முரண்பட்டன. இன்றின் சூழலிலிருந்து பழையதை மீள்பார்வை மூலம் பார்க்கும்போது இப்படித் தான் தோன்றுகிறது. இவற்றை நேரடியாக வறட்டுத்தனமாய் வரையறுக்கக்கூடாது. சில கூறுகள் இரண்டு தரப்பாரிடமும் பொதுவாயும் காணப்படும். இலக்கியமும் பாண்பாட்டு உருவாக்கமும் மிகவும் சிக்கலானது. எனினும் சமயச்சார்பும் அதற்கு மாறான செக்குலர் மரபும் தயவு தாட்சண்யமில்லாமல் வேறுபடுத்திப் பார்க்கப்படவேண்டும். மரபு மார்க்சியத்துடன் சில புதிய கூறுகளைக் கொண்டுவர அமைப்பியல் பயன் பட்டது. நீங்கள் அமைப்பியல் பற்றிக் கேட்டதால் இவ்வளவும் சொன்னேன். இன்று தமிழகத்தில், எதிர்காலத்தில் வரப்போகிற பாசிச சக்திகள் பற்றிய ஆழ்ந்த கவனம், இல்லை. அவை மதத்தைப் பயன்படுத்திக் கொண்டுள்ளன. அவை மறைமுகமாய் இலக்கியத்தையும் பயன்படுத்துகின்றன. சில விஷயங்கள் நான் இப்போது சொல்லமுடியாது. பாரதி மரபைத்தான் அவர்கள் எடுக்கப் போகிறார்கள். ஆகையால் முன் யோசனையாகச் சிலவற்றைச்சொன்னேன். ஏனெனில் மார்க்சிய அமைப்பியலாளரான அல்துசர் அன்றைய பிரான்சின் பொதுவுடைமைச் சிந்தனையாளர் மட்டுமல்லாது இரண்டாம் உலகப்போர் சமயத்தில் பாசிச எதிப்பு அணிகளோடு இருந்தவர். பாசிசம் வேறு வேறு உருவத்தில் வரும். இன்னொரு உண்மையையும் கூறவேண்டும். இதுவரை பார்த்த தமிழ் இலக்கிய உலகப் போராட்டம் இப்போதும் தமிழில் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அன்று தோற்றவர்கள் இன்று வேறு நிறுவனங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். வேறுவித உத்திகளைப்பயன் படுத்துகின்றனர். அவர்களின் இன்றைய விவாதங்கள் வேறு.

1972-இல் கசடதபற இதழில் வெளியான ஞானக்கூத்தன் கவிதைகளுக்கு நீங்கள் எழுதிய விமர்சனத்திற்கு எவ்வாறு எதிர்வினைகள் வந்தன? அவற்றை எவ்வாறு எதிர்கொண்டீர்கள்?

நீங்கள் நன்றாக நினைவில் வைத்திருக்கிறீர்கள். நான் பெங்களூருக்கு வேலையின் பொருட்டு வந்த புதிது. நான் அப்போது வந்துகொண்டிருந்த கசடதபற இதழைப்படித்த போது எட்டுக்கவிதைகள் என்ற தலைப்பில் ஞானக்கூத்தன் என்ற பெயரில் அப்போது எனக்குத்தெரியாத யாரோ ஒருவர் புதுக்கவிதை எழுதியிருந்தார். விழிக்கிறான் முழங்காலொன்று காணலை, என்றும் ஒளித்துவைத்த மூக்கு என்றும் வரும் வரிகளைத் தமிழ் எம்.ஏ. படித்திருக்கிற எனக்கு அந்த வயதில் புரிந்துகொள்ள முடியவில்லை. பெரிய குழப்பம். ஆனாலும் அவை என்னை விட்டுவிடவில்லை. நான் ஒரு கட்டுரை இரண்டு பக்க அளவில் எழுதி தாமரைக்கு அனுப்பினேன். உடனே அழகான கையெழுத்தில் தி.க.சி.யிடமிருந்து ஒரு அஞ்சல் அட்டை. அதனை விரிவாக எழுதுங்கள் என்று. நான் விரிவாய் எழுதி அனுப்ப அக்கட்டுரை வெளிவந்து முற்போக்கு அணியினர் பேசுபொருளாய் அக்கட்டுரை ஆனது. நான் அக்கவிதைகள் ஏற்கத்தக்கன அல்ல எனவும் , மனித உடலை அவை கூறுபோடும் பார்வை என்றும் எழுதினேன். ஆனால் பின்னர் சுமார் நான்கு ஆண்டுகள் கழித்து அக்கவிதைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நீலக்குயில் என்ற இதழில் எழுதினேன். எனக்கு இந்தமாதிரி கவிதைகளைப் புரிந்து மதிப்பிடுவதில் தேர்ச்சியில்லை, தடுமாறுகிறேன் என்பதை உணர்ந்தேன். அதற்கான காரணம், இந்தவித

உத்தி அல்ல. உத்திக்குப்பின்னால் இருக்கும் தத்துவப்புரிதல். இலக்கியம் மனிதக் கூறுபோடலைச் சொல்லலாம், அது தவறு அல்ல என்று என் பார்வையைத் திருத்திக்கொண்டேன். அதன் பின்பு காஃப்காவின் கரப்பான்பூச்சியாக மனிதன் மாறும் கதையையும் ஏற்றுக்கொள்ளலாம் என்ற நிலபாட்டை எடுத்தேன். இது ஒரு நிலைபாட்டில் உள்ள தத்துவ மாற்றம். இதற்கு மார்க்சியத்தில் இடமுண்டு என்றும் விவாதிக்கலாம். அதை ஐரோப்பிய மார்க்சியத்தினர் மேற்கொண்டனர். உதாரணமாய் ஜெர்மன் மார்க்சிய விமரிசகர், லூசியன் கோல்ட்மன் என்பவர் அக்கருத்துக் கொண்டவர். வாசகர்கள் தேடிப்பிடித்தால் தான் இவர் அறிமுகம் கிடைக்கும். பரவலாகத்தெரிந்தவர் அல்ல. மார்க்சிய விமரிசகர், வால்டர் பெஞ்சமின் கூட காஃப்காவை ஏற்பார். மூக்கை ஒளித்துவைத்தேன் என மனித உடல்கூறு போடுதலுக்கு, மார்க்சியத்தில் இடமில்லை என்றும் விவாதிக்கலாம். அதை சோவியத் யூனியன் அன்று மேற்கொண்டது. அந்த ஞானக்கூத்தன் கவிதைகளை, சோவியத் விமரிசகர்களிடம் கொடுத்தால் இது நல்ல இலக்கியம் இல்லை என்று கூறிவிடுவார்கள். நான் இப்படி முரண்பட்ட இரண்டு நிலைபாடுகளுக்கு இடையில் தெளிவில்லாமல் தடுமாறி, பின்பு ஒரு நிலைபாடு எடுத்து என்னைத் திருத்திக்கொண்டதை, அன்று வேகமாகவும் வசைச்சொற்களையும் தயங்காமல் பயன்படுத்தும் ஒரு விமரிசகர் பல்டி என்று வருணித்தார். அவருக்கு அவர் பயன்படுத்தும் இம்மாதிரிச்சொற்கள் தத்துவம், இலக்கியம் போன்ற துறைகளில் பயன் படுத்தக்கூடாது என்று தெரியவில்லை. நான் எண்பதுகளில் இருந்த சூழலைச்சொல்கிறேன். மார்க்சியத்தில் பலவிளக்கங்கள் எப்படி ஏற்பட்டன? மார்க்சியம் சமூக அறிவியல். இயற்பியல் அல்ல. விலங்கியல் அல்ல. சமூக அறிவியலுக்கு ஒரு தனித்தன்மை உண்டு. சூழலுக்குத்தக்க வேறுவேறு விளக்கங்களை மேற்கொள்ளும். ரஷ்யாவில் ஒரு வகையும் லத்தீன் அமெரிக்காவில் இன்னொரு வகையும், சீனாவில் இன்னொரு வகையும் அவரவர் கலாச்சாரத்துக்கு ஏற்ப இருக்கும். நம் புராதன தமிழ்க்கலாச்சாரத்துக்கு ஏற்ப நாம்

ஒருவித தமிழ்க்குணம் உள்ள மார்க்சிய இலக்கிய விமரிசனத்தை ஏற்கவேண்டும். இப்போது யோசித்துப் பார்க்கும்போது வேடிக்கையாகத் தெரிகிறது. நாங்கள் எல்லாம் எப்படி இளமையில் இலக்கியம் படித்தோம் என்று எண்ணுகையில்.

சங்க இலக்கியங்கள் குறித்து உங்களுடைய நவீன விமர்சனங்களை எவ்வாறு வைக்கலாம்? சங்க இலக்கியங்களின் மீட்டுருவாக்கம் தொடர்பான உங்களின் பங்களிப்பு அல்லது திட்டங்கள் என்னென்ன?

சங்க இலக்கியம், தொல்காப்பியம், இவை அமைப்பியலின் வெளிச்சத்தில் பார்க்கப்படவேண்டும் என தொடர்ந்து நான் கூறுகிறேன். காரணம் மேற்கத்தியக்கருத்துக்களைத் தமிழால் உரசிப்பார்த்து எவை தமிழுக்குப் பொருந்தும், எவை பொருந்தாது என அறியவேண்டும்.ஏதோ ஒரு அனைத்துலகத் தத்துவம் வருகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். பின் நவீனத்துவம் ஆகட்டும், அல்லது வேறொன்று ஆகட்டும். அதன் தத்துவத்தளமோ அல்லது இன்னொரு கூறோ தமிழோடு ஏதோ ஒரு அம்சத்தில் ஒப்பிடக்கூடியதாக இருக்கும். அந்த அம்சத்தை விரிவாக்கி நாம் தமிழில் பேசவேண்டும். நான் பழந்தமிழில் அமைப்பியல் மற்றும் குறியியல் என ஒரு நூலில் இதைத்தான் செய்தேன்.தொல்காப்பியத்தின் மொழிபற்றிய சிந்தனைக்கும் அமைப்பியலை அறிமுகப்படுத்திய சசூரின் சிந்தனைக்கும் தொடர்பிருப்பது தெரிந்தது. சசூரின் சிந்தனையிலிருந்து மானுடவியல், மார்க்சியம்,இலக்கியம் என ஒவ்வொரு பிரிவிலும் புதுச்சிந்தனைகள் தோன்றி உலகை வியப்பிலாழ்த்தின. தொல்காப்பியம் சசூரைப்போன்று மொழிபற்றிய சிந்தனை. சசூரை எப்படி மறுவிசாரணை செய்து ஐரோப்பியர் வளர்த்தெடுத்துள்ளனரோ அது போல உரையாசிரியர்கள் தொல்காப்பியத்தை மறுவிசாரணை மட்டும் செய்துள்ளனர். சிந்தனையையை வளர்த்தெடுக்க முடியவில்லை. அதனால் தமிழிலிருந்து புதுவித சிந்தனைகள் வரவில்லை . சசூரை மறு சிந்தனைக்கு உட்படுத்திய மாதிரி யில் உரையாசிரியர்கள் தொல்காப்பியத்தை மறுவிசாரணைக்கு உட்படுத்தவில்லை. உரையாசிரியர்கள் ஒன்றில் சேனாவரையரின் சமஸ்கிருத மாதிரி யில் அல்லது இளம்பூரணர் போல தமிழ் மாதிரியில் மறுவிசாரணை , அல்லது மறுவாசிப்புச் செய்தனர். ஒரு விசயத்தை ஒத்துக்கொள்ளவேண்டும். நம்மிடம் கேள்விகேட்கும் சிந்தனைப் பின்னணி இல்லை. எனவே நம் கேள்வி இலக்கணத்துக்குள்ளேயே சுற்றிச்சுற்றி வந்தது. உதாரணத்துக்கு இன்றைய மேற்கத்திய மரபில் வந்த அமெரிக்கத் தமிழ் ஆய்வாளர் ஜார்ஜ் ஹார்ட் போன்றோரின் கேள்வி சார்ந்த சிந்தனைக்கு வருவோம். அவர் இந்தியாவுக்கு இரண்டு பாரம்பரிய மாதிரிகள் உள்ளன என்கிறார். ஒன்று சமஸ்கிருத மாதிரி, இன்னொன்று தமிழ் மாதிரி என்கிறார். தமிழ், சமஸ்கிருதத்துக்கு மாற்று. இதை விளக்குகிறார் ஜார்ஜ் ஹார்ட்.. அவரைத்தொடர்ந்து நாம் இன்னும் சிலவற்றைக்கூற முடியும். சமஸ்கிருதம் வேரில்லாமல் தன் நிறத்தை மாற்றி மாற்றிப் பரவும்குணம் கொண்டது. ஷெல்டன் போலக் என்பவர் இது பற்றி விளக்கிக்கூறுகிறார். இக்கருத்தை எடுத்துவந்து தமிழ் பற்றி வேறு கோணத்தில் பேசலாம். தமிழ் பிராந்திய மண்மணத்தை விடாமல் வேரை வலிமைப்படுத்தும் மொழி. தெற்காசியா முழுதும் தமிழ் அரசர்கள் போனாலும் அவர்களும் சமஸ்கிருதத்தையே அங்கு நிலை நாட்டினார் கள். சோழர்கள் சமஸ்கிருதப் பெயரையே தாங்கள் வைத்திருந்தனர்.வடமொழி வேதம் பரவ, பிரம்மதேயக் கிராமங்களை, எல்லாச் சோழ மன்னர்களும் ஆதரித்துக் காவேரி தீரங்களில் உருவாக்கினர். இப்போது தமிழ், சோழர்களுக்கு நாடு பிடிக்கப்பயன் படவில்லை எனத்தெரிகிறது. நாடுகளைப்பிடிக்க காற்றுப்போல எல்லா இடங்களிலும் வேரில்லாமல் பரவும் சமஸ்கிருதம் வேண்டும். சஸ்கிருதம் தெற்காசியா முழுதும் பரவியதை, ஷெல்டன் போலக் மிகவிரிவாக எடுத்துரைக்கிறார். தமிழ் அப்படிப்பட்ட மொழி அல்ல. தமிழின் வேர் ஆழமானது. பிடுங்கமுடியாது. அதன் மீது சமஸ்கிருதக் காற்று வீசும். காற்று போனதும் மரம் பழையது போல நிமிர்ந்துவிடும். விஜயநகர மன்னர்கள், நாயக்கர்கள், யார்யாரோ சுமார் ஆயிரமாண்டுகளாய் தமிழரல்லாதவர்கள் தமிழகத்தை முழுதும் ஆண்டனர். தமிழ் அழிந்து போகவில்லை. தமிழ் எப்படிப்பட்ட

மொழி யென்றால் அது சமஸ்கிருதத்தை மாற்றித் தமிழின் ஒரு பகுதியாக்கும். அது ஒரு வலிமை. நிறைய உதாரணங்கள் நான் சொல்லமுடியும். சமஸ்கிருத லோகதர்மி என்பதை உலகவழக்கு என மாற்றுவதோடு அர்த்தத்தையும் மாற்றும். ரசக்கோட்பாட்டை, புதிதாக்கி தமிழண்ணல் கூறுவது போல வேறு ஒரு கருத்தாக்கமான மெய்ப்பாடு ஆக்கும். தொல்காப்பியம் அப்படி செரித்துக்கொண்ட பல சமஸ்கிருத கருத்தாக்கங்கள் உண்டு. இதுபற்றிய தெளிவில்லாத சிலர் சமீபத்தில், சமஸ்கிருதம் தொல்காப்பியத்திற்குள்ளே ஏறி அதை அரித்துவிட்டது என கெக்கெலி கொட்டிச் சரித்ததை ஓரிதழ் சிறப்பு மலராய் வெளியிட்டு மகிழ்ந்திருந்தது. இப்படித் தமிழ் மாதிரியானது, திராவிடக் கலாசாரங்களின் பிரதிநிதி மட்டுமல்லாது ஆதிவாசிகள் பண்பாடு, நாட்டுப்புறவியல் போன்றவைகளுக்கும் பிரதிநிதி. அது மட்டு மின்றி, உலகமெங்கும் தன்மண்ணுக்காகப் போராடுகிறவர்களின் பிரதிநிதி. எனவே புதிய உலகச் சிந்தனைகளைத் தமிழ்த்துறைகள், புதிய தமிழ் விளக்கம் மூலம் கொண்டுவரவேண்டும் என்கிறேன். பாடத்திட்டங்கள், சமூகவியல், வரலாறு, தத்துவம், இலக்கியவியல் மொழியியல், போன்றவற்றின் மிகப்பிந்திய சிந்தனைகளோடு மறுகட்டமைப்புச் செய்யாவிடில் இன்றைய தமிழ்க்கல்வி பிரயோஜனமற்றது. இப்படிப்பட்ட சிந்தனைகளை உரையாசிரியர்களின் வழியில் அவர்களை புதிதாக்கி மேற்செல்லவேண்டும். பாடதிட்டங்கள், மாற்றப்படவேண்டும்.சங்க இலக்கியம், தொல்காப்பியம் போன்றன அப்போது சிந்தனையின் ஊற்றாக மாறும். இப்போது இருப்பதுபோல, சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் மாணவர்களால் மேற்கோள் காட்டும், மனனம்செய்யும் வெறும் துண்டு துணுக்குகளாய் இருக்காது. அரசியல் அடிமைகளாக இருப்பதுபோல் சிந்தனைத்துறை அடிமைகளாகவும் இருக்கிறோம்.

தமிழ்க்கல்வி வெறும் பழமைநிலைபெற்ற கல்வியாக இல்லாமல் எதிர்காலம் நோக்கிய கல்வியாக வேண்டும். அதற்கு உலகமெல்லாம் உள்ள சிந்தனைகளைத் தொல்காப்பியர் அன்று அவரது உலக அறிவை வைத்துக்கொண்டு வந்ததுபோல செய்யவேண்டும். இதை விரிவாக இங்கே பேச இடம் இல்லை.

முந்தைய கேள்வியை ஒட்டி இன்னொரு கேள்வி: உங்கள் மொழிதல் கோட்பாடும் தமிழிலக்கியமும் என்ற நூல் பற்றியும் அதுபோல், திராவிடம், தமிழ்த்தேசம், கதையாடல் என்ற நூல் பற்றியும், சொல்லுங்கள்.

என்னுடைய மொழிதல் கோட்பாடு நூல்பற்றிச் சமீபத்தில் சில இளம் ஆய்வாளர்கள் ஒரு கல்லூரியில் ஒருவாரம் கணினி வகுப்பு நடத்தினார்கள். அது தமிழ்த்துறைகள் மாறிவருவதைச்சுட்டின. மொழிதல் என்பது கூற்று என்று சங்க இலக்கியம் சொல்லுமே அதுதான். தலைவி, தோழி, தலைவன் போன்றவர்கள் பேசுவதுபோல் தான் அகப்பாடல்களை எழுதமுடியும் என்று ஒரு மரபு. இதனை மறுவிளக்கம் மூலம் அனைத்துலகச் சிந்தனையாக, மார்க்சியம், மொழியியல், வடிவவியல் போன்ற சிந்தனைகளில் பொதுச்சிந்தனையாக மாற்றலாம். இதற்கு ரஷ்யாவின் மைக்கேல் பக்தின் என்பவரின் சிந்தனைகள் தமிழில், தமிழுக்காகப் பயன் படுத்தப்பட்டன. பக்தின், ரஷ்யாவில் புரட்சி வந்த காலத்தில் உருவானவர். அவர் சிந்தனைகளை ஓரளவு விரிவாகப்படித்திருக்கிறேன். எனக்கு இன்றைய சூழலிருந்து பார்க்கும்போது அவரை வளர்மார்க்சிய முன்னோடி என்றே கூறத்தோன்றுகிறது. டெரி ஈகிள்டன் கூட அப்படித்தான் கூறுகிறார். இந்த மேலே குறிப்பிட்ட என் நூல் 27 ஆண்டுகளுக்கு முன்பு வந்தது. மீண்டும் புதிய பதிப்பு கொண்டுவந்து இப்போது விவாதிக்கிறார்கள். மொழிதல் (கூற்று) என்பது பரஸ்பரம் உரையாடுதல். இதை டைலாஜிக் என அழைப்பார் பக்தின். தமிழில் வடிவமைத்த மொழிதல் கோட்பாடு பக்தின் கோட்பாடு மட்டும் அல்ல. பக்தினைச் சற்று மாற்றி வேறு சிலரைச்சேர்த்து, சங்க இலக்கியத்துக்கு ஏற்ப மறுவடிவமைப்புச் செய்யப்பட்டது. ஏனென்றால் நம் மரபு வேறு. இதன் மூலம் தமிழில் அப்போது வந்த புதுக்கவிதைகளை விமரிசனம் செய்யலாம் என உதாரணம் கொடுப்பதன் மூலம் நீட்சிப்படுத்தப்பட்டது. கூற்றுக் கோட்பாடு,

இப்படித் தமிழ்ப்புதுக்கவிதைக்கேற்ற மார்க்சிய அடிப்படை கொண்ட விமரிசனமாக மாற்றமுற்று உருவானது. அதற்கு வோலஷினொவின், 'மார்க்சியமும் மொழித் தத்துவமும்' என்ற நூலின், சில தர்க்கங்கள் பயன் படுத்தப்பட்டன. மனித குல மொழிகளின் உள்ளே இருக்கும் உரையாடல் என்ற பண்பின் தத்துவமாய் மார்க்சியத்தை மறு வடிவமைப்பு செய்திருப்பார் வொலஷினொவ். மொழி என்றாலே உரையாடல் தானே. நம் தமிழன் கண்டுபிடித்த கூற்று, வெறும் காதல் சம்பத்தப்பட்ட சிந்தனை என்பதை மாற்றி, இப்படி உலகச்சிந்தனையான மார்க்சியமாக்க முடிந்தது. ஆனால் எனக்கு என்ன வியப்புத் தெரியுமா ? 27ஆண்டுகள் வரை ஏன் இந்த முயற்சியைத் தமிழில் மார்க்சியவாதிகள் கண்டுகொள்ள்ளவில்லை? அவர்கள் அளவு படித்தவர்கள் வேறு யாரும் இல்லையே. இப்போதும் கூட தமிழ்த்துறையினர்தான் இதுபற்றி ஒரு வெபினார் வகுப்பு நடத்தினார்களே ஒழிய மார்க்சியர் கள் அல்ல. இன்னும் தமிழ்ச்சூழலில் நாம் தீர்க்காத தத்துவப்பிரச்சனைகள் இருக்கின்றன என்பதைத் தான் இது காட்டுகிறது. தமிழர்கள் அளவு மொழிபற்றி அக்கரை காட்டுபவர்கள் உலகத்தில் யாருண்டு? தமிழர்கள் ஒவ்வொரு காலத்திலும் தமிழ் மூலமாகவே உலகைப் புரிந்திருக்கிறார்கள். இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் என்ற கூப்பாடு எதைக்காட்டுகிறது? அந்நியர் ஆட்சி காலத்தில் ஒரு இலக்கிய வடிவத்தை உருவாக்கி தமிழ்த்தூது என்கிறார்கள். அதுபோல், வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகம் என்று தமிழகத்துக்கு எல்லை வகுக்கிறார்கள். பிள்ளைத்தமிழ் என்று இன்னொரு இலக்கிய வகைக்கு பெயர்சூட்டுகிறார்கள். ஒன்றும் வேண்டாம், மொழிப்போராட்டத்தின் மூலம்தானே தமிழர்கள் ஒன்றிணைந்து அனைத்திந்தியக் கட்சிகள் இனி வேண்டாம் என்று முடிவெடுத்தார்கள். ஆனால் வொலஷினொவின் (இவரும் பக்தினும் ஒருவரே என்றும் பக்தின் ஓரிடத்தில் கூறுவார்.) மொழியியல் மார்க்சியம் நமக்கு ஏன் இன்னும் மொழிபெயர்ப்பாக வரவில்லை? இடதுசாரிகளின் அக்கரைக்கு உள்ளாகவில்லை? எவ்வளவு ரஷ்ய நூல்கள் மொழிபெயர்த்துள்ளோம். வொலஷினொவ் கூறும் மொழியல் மிகவும் வித்தியாசமான மொழியியல். தொல்காப்பியம் படித்த எனக்குத் தொல்காப்பியத்தின் தத்துவச்சாரம் உள்ள நூல் அது என்று கூறத்தயக்கமே இல்லை. படிக்கவேண்டிய முறையில் படித்தால் நான் சொல்வது விளங்கும். நம் மொழியியல் துறைகள் அக்கரை காட்டாது. அதற்கு வேறுகாரணம்.

அடுத்து, திராவிடம், தமிழ்த்தேசம், கதையாடல் என்ற நூல் பற்றிக்கொஞ்சம் பேசுகிறேன். இக்கட்டுரைகளை 2009- இல் ஈழத்தில் போர்நடக்கும்போது ஒரு இதழில் தொடராக எழுதினேன். தமிழ் பற்றி காலமெல்லாம் ஏன் தமிழர்கள் பேசிக்கொண்டே இருந்தார்கள் என அப்போது எனக்கு ஒரு கேள்வி உருவானது. அப்போதுதான் சங்க இலக்கியம் கூறிய, சிலப்பதிகாரம் வலியுறுத்திய, தமிழ் பேசும் அத்தனை பேருக்குமான ஒற்றைத் தமிழ் அரசியல் அடையாளம் தமிழர் வரலாற்றில் ஆயிரமாண்டுகளுக்கு மேல் இல்லாமல் இருந்தது தெரிந்தது. அதனைத் தமிழ் அரசியல் என அண்ணா அழைத்து ஊரெல்லாம் போய் சொற்பொழிவாற்றி மீண்டும்

ஆயிரமாண்டுகளுக்குப் பிறகு உருவாக்கினார். இத்தாலியின் விடுதலைக்குப் போராடிய மாஜினி, கரிபால்டி என்றெல்லாம் அவர் அன்று சொன்னதன் அர்த்தம் இதுதான். அதற்கு, பெரியாரின் பகுத்தறிவு அண்ணாவுக்குப்பயன்பட்டது தெரிந்தது. பெரியாரும் அண்ணாவும் மேற்கத்திய ரெனைசான்ஸ் சிந்தனையால் தாக்கம் பெற்றவர்கள். பகுத்தறிவை அளவுகோலாக வைத்துச் சிந்திப்பவர்கள். நிகரற்ற சிந்தனையாளர்கள். அத்துடன் பாரதிதாசன் 1930 இலிருந்து செய்த தமிழ் உணர்வு வலியுறுத்தல் அண்ணாவுக்குப்பயன் பட்டது. அடிக்கட்டுமானம் மேற்கட்டுமானம் என்று நாம் பார்த்த விஷயத்துக்கு வருவோம். அடிக்கட்டுமானம் இறுதியாகத்தான் தீர்மானிக்கும் என்ற மார்க்சின் வாசகத்தில் உள்ள பொருளாதாரம் இறுதியில் தான் தீர்மானிக்கும் என்ற சொற்களை விளக்க வேண்டும். தமிழ் உணர்வு என்பது கருத்துக் கலப்பு உள்ளது. கருத்தை, பொருள்தன்மை உள்ள கருத்தென்றும் பொருள்தன்மை இல்லாத கருத்து என்று பிரிக்கலாம். பொருள்தன்மை உள்ள தமிழ்உணர்வை மார்க்சிய தத்துவம் ஏற்கவேண்டும். அப்படி அது அடித்தட்டுச்சிந் தனையாகிவிடுகிறது. இது போலச்சிந்தனை அல்தூசரிடமும் கிராம்ஷியிடமும் காணப்படுகிறது. இப்படிப்பட்ட சிந்தனைகள் அந்த எனது நூலில் உண்டு.

உங்களின் முதல் நாவல் ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள், தமிழ் இலக்கிய உலகில் ஏற்படுத்திய சலசலப்புகள், அந்த நாவலைப்புறக்கணிப்பதற்காக நிகழ்ந்த அறிவு ஜீவிகளின் முன்னெடுப்புகள் ஒரு பெருங்கதையாடலாக உலவிய காலங்கள் பற்றி...

ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள் என்ற நாவல் 1985 இல் வந்தது. அதன் வாக்கியங்கள் புதுமையானவை. அதுவரை அப்படிப்பட்ட வாக்கியங்களை ஒரு நாவலில் பயன்படுத்தமுடியமா என யாரும் முயற்சி செய்யவில்லை. எனவே நிறைய சலசலப்பு ஏற்பட்டது. தமிழின் முதல் மாய எதார்த்த நாவல் என அழைக்கப்பட்டது. ஒரு பாத்திரம் தன் நிழலோடு சீட்டு விளையாடுகிறது. பீரங்கியை மந்திரவாதம் செய்து செயலிழக்க வைக்கமுடியும் எனப் பேசப்படுகிறது. ஒருவரின் உடலில் சிலந்தி வலை பின்னுகிறது. படுத்துக்கிடக்கிற முதியவரின் உடலில் இலைகள் முளைக்கின்றன. இப்படி படிமங்கள் மூலம் உருவான நாவல். சாகித்திய அக்காடமியின் தமிழ்ப்பிரிவின் மேநாள் ஒருங்கிணைப்பாளர் நாச்சிமுத்து, இந்நாவல் குமரி மாவட்ட நாட்டுப்புறவியலில் இருந்து வந்தது என்றார்.

க.நா.சு.இந்த நாவல் மீது ஒரு கருத்தரங்கு வைத்துப்பார்க்க விரும்பினார் என ஒரு முறை அவரோடு டெல்லியில் இருந்த பெண்ணேஸ்வரன் கூட்டத்தில் பேசினார். கோணங்கி அதனைப்படித்துவிட்டு என்னைப் பார்க்க பெங்களூருக்கு வந்தார். அவர் எழுத்துக்கள் வேறுமுறையில் மாற அது காரணமாக இருந்தது. இன்னும் பலரும் நீளவாக்கியங்கள் வைத்து எழுதுவது, மாயங்களைவைத்து எழுதுவது போன்றவற்றைப் பயன்படுத்தி எழுத இந்த நாவல் பாதை உருவாக்கியது. நிறைய வாதவிவாதங்கள் வந்தன. அதிகமான விமரிசனங்கள் வந்தன. முப்பது நாற்பதுபேர் எழுதியிருப்பார்கள். இலக்கிய உலக சூது வாதுகள் பற்றி, அவைகளை இன்று பேசுவதால் என்ன பயன் ? இதுபோன்ற நாவல்கள் சங்கத்தமிழின் உள்ளுறை போன்றவற்றின் ஒரு புதுவகைத் தொடர்ச்சி. இப்படி, மேலோட்டமான ஆங்கிலக் கதைசொல்லல் பாணியின் பலகீனம் தமிழ் வரலாற்றில் வெளிப்பட்டது. தமிழ் மரபிற்குள் இருக்கும் கதைமரபு இக்கட்டத்தில் வெளிப்பட்டது.

சரித்திரத்தில் படிந்த நிழல்கள் நாவலும் அரசியல் பின்புலத்தைக் கொண்டதுதான். இது பரவலாக தமிழ் வாசகர்களால் வரவேற்கப்பட்டதா?

நீங்கள் குறிப்பிடும் அந்த நாவலிலும் படிமமுறைக் கதை சொல்லலைப் பயன்படுத்தினேன். அது என் இரண்டாவது நாவல். ஒரு ராணி. அவள் தெகிமொலா என்றழைக்கப்படும் மக்களின் ராணி. கண்மூடியபடியே அவளால் பார்க்கமுடியும். அவளுக்கு இரண்டு குழந்தைகள், ஒருவன் ஒரே

நேரத்தில் இரண்டு இடங்களில் நிற்பான். இப்படிக்கதை போகும். இவை வித்தியாசமான நாவல்கள். ஏன் இப்படி எழுதப்பட்டன? என்று ஒரு கேள்வி வரும். அதற்குப்போகவேண் டும். புதுக்கவிதை இன்று ஒரு ஐம்பதாயிரம் தமிழர்கள் எழுதமாட்டார் களா? ஐந்து இலட்சம் பேர் படிக்கமாட்டார்களா? புதுக்கவிதை வந்ததும் தமிழ் வாக்கியம், கருத்தைச் சொல்லும் முறை, தலைகீழாகிவிட்டது. பக்தி காலத்தில் சொல் தான் கடவுள். சொல்லையும், அது குறிப்பிடும் பொருளையும் பிரிக்கமுடியாது. புதுக்கவிதைக் காலத்தில் சொல் அது சுட்டும் பொருள் அல்ல. அதனால் ஒரு கவிஞர் மூக்கை ஒளித்து வைத்தேன் என்கிறார். இங்கு மூக்கு என்பது மூக்கு அல்ல. இன்னொருவர் கையைத் தோள்முனைத் தொங்கல் என்பார். கை என்ன என்பது, அன்று அவருக்குத்தெரியவில்லை. இந்தக் கட்டத்தில் மரபான வாக்கியத்தில் நாவல் எழுதினால் ,வாக்கியத்தில் பொருள் தங்காது. அதனால் புதுவித புனைவுமொழி வருகிறது.எத்தனை பெட்டிசன் எழுதினாலும் அதிகாரிக்கு அதன் மொழி புரிவதில்லை. வேறு ஏதோ செய்யவேண்டியுள்ளது. கையூட்டு கோடுக்கவேண்டியுள்ளது. நூறு வருடங்களுக்கு முன்பு அப்படி இல்லை. புதுக்கவிதை வந்த போதே சமூகத்திற்குள் ஒருவித மொழிப்பிரச்சனை வந்து விட்டது என்றே பொருள். காட்சியைப்படம் பிடிக்கும் படிமம் கவிதைக்குள் வரும் போதே எழுத்து, பயன் இல்லை மனதில் படம் போடுதலே முக்கியம் என்று ஆகிவிட்டது.

ஜி.கே எழுதிய மர்ம நாவல் என்னும் உங்களின் புதினம் பௌத்த சமண முரண்பாடுகள் போன்ற கனமான விஷயங்கள் குறித்துப் பேசிய ஒரு நாவல் என்றாலும், அதன் தலைப்பு, நாவலின் கனத்தைக் குறைத்துவிட்டதாக நினைக்கிறீர்களா?

ஜி.கே.எழுதிய மர்ம நாவல் என்பது எனது மூன்றாவது நாவல்.இந்த நாவல் பற்றிச் சொல்லுமுன்பு சில விசயங்களைச் சொல்லவேண்டும்.சங்க இலக்கியம் அறிவு மரபிலிருந்து வருகிறது. மணிமேகலை, சீவகசிந்தாமணி, திருக்குறள், சிற்றிலக்கியம் எல்லாம் அதே மரபு. அதற்குக்காரணம் சமணம், பௌத்தம் வலியுறுத்திய அறிவு மரபு. புறவயமாகச் சித்தரிக்கும் மரபு. கதையை இணைப்புக்கள் மூலம் உருவாக்கலாம். மாறாக, பக்தி மரபு பல்லவர் அறிமுகப்படுத்திய சஸ்கிருத உணர்வு மரபிலிருந்து வருகிறது. அங்கு, தன்னை மறத்தல் முக்கியம். அறிவு மரபு தர்க்கத்தின் மரபு. அறிவு மரபை வலியுறுத்தும் என் நாவல்கள் சங்க இலக்கிய அறிவு மரபின் தொடர்ச்சி எனலாம். குறிப்பாய் நீங்கள் கேட்கும் ஜி.கே.எழுதிய மர்மநாவல், பல விசயங்களின் குவி மையம். இந்த நாவல் வந்த நேரம் பாப்ரி மசூதி, வலதுசாரியினரால் உடைக்கப்பட்டது. என் நாவலில் மதக்கொலைகள் நடக்கும். ஒரு மிகப்பழங்கால கற்பனையான நாடு வரும். சுருங்கை எனப்பெயர். சிலப்பதிகாரத்தில் வரும் இச்சொல் கிரேக்கச்சொல் என்பார் வையாபுரிப்பிள்ளை. அதை இந்த நாவல் எடுத்துப் பல விதமான தத்துவம், நூலாய்ச்சி, மத ஆராய்ச்சி, போன்றவற்றை அடிப்படையாய் வைத்து எழுதப்பட்டது. ஒரு பௌத்த துறவி கொலைகளைக் கண்டுபிடித்துக் கொண்டே வருவார். இத்தோடு இந்த நாவலை எழுதியது யார் என்ற கேள்வியும் வரும். இடையிடையே அக்கேள்வி குறிப்புகளாய் வந்துகோண்டே இருக்கும். கடைசியில் ஓர் இலங்கைத் தமிழர் தான் எழுதினார் என இக்கேள்விகளைக் குறிப்புகள் வழியே கேட்கும் கதைசொல்லி முடிவுக்கு வருவார். இது நாவலுக்கு வெளியே. மர்மநாவல் வடிவில் பல ஆயிரம் தகவல்களுடன் எழுதப்பட்ட அரசியல் நாவல். கட்டடக்கலை பற்றி பல தகவல்கள் உண்டு. கட்டடக்கலை தொடர்பான பல்வேறு கலைச்சொற்கள் வரும். கொலைகள், துப்பு துலக்கும் உத்திகள், கொல்லும் முறைகள் எல்லாம் உண்டு.இப்படி எழுதுவது இன்று ஓர் உலக மரபு. இந்த ஒரு நாவல் தான் இப்படித் தமிழில் உள்ளது என்று கருதுகிறேன். படைப்பு எழுத் து ஒரு ரயில் பயண நேரப்போக்குக்காய் எழுதப்படுவது அல்ல. உடனடி வாசகர்களைக் கவராவிட்டாலும் அவை அந்த மொழியில் வரவேண்டும். உலகில் பல நாவல்கள் முக்கியமாய், ஜேம்ஸ் ஜாய்ஸ் போன்றோர் எழுதுவது உடனடியாக நுகர்வதற்காக அல்ல. மார்க்ஸ் சொன்னது போல நுகர்வது என்பது, சரக்கு உற்பத்தியோடு தொடர்பு கொண்டது. இலக்கிய உற்பத்தி,

சரக்கு உற்பத்தி அல்ல. இலக்கியம் ஒரு வித புதிய அறிவு.மனிதகுலம் கண்டுபிடித்த எல்லா சாஸ்திரங்களையும் விட வித்தியாசமான கண்டுபிடிப்பு. ஏனெனில் ஒவ்வொரு புனைவும் முந்தியதிலிருந்து மாறுபடும். இந்த நாவலில் பல புத்தகங்களின் கதைகள் வரும். எழுத்தாளர் போர்ஹஸ் அவர் கதையில் கூறும் லாட்டரி சீட்டு வரும்.போர்ஹஸும் ஒரு சிறந்த மர்மக்கதை எழுத்தாளர் தெரியுமா? ஊடும் பாவுமாய் பல நூல்களின் பகுதிகளில் இருந்து கொண்டுவந்தது போல சில இடங்களில் இந்த நாவலில் எழுதப்பட்டிருக்கும். பொய்நூல்கள் பற்றி வரும். எண் முந்நூற்றிஅறுபத்தைந்தின் ரகசியம் வரும். இந்த நாவலில் மிகப்பல குடும்பவரலாறுகள் வரும். பல அரச குடும்பங்களின் கதைகள் வரும்.இவை எல்லாம் மதங்களின் போராட்டப் பின்னணியில், மதத்துக்குள் விழுந்துள்ள இந்தியாவின் இன்றைய வரலாறுபோல் இருக்கும். ஆனால் புற வடிவத்தில் ஒரு மர்மக் கதை.இதன் தலைப்பு இதன் முக்கியத்துவத்தைக் குறைத்ததாக நான் நினைக்கவில்லை. இதை, அந்தக்காலத்தில் படித்த நண்பர் ஆதவன் தீட்சண்யா மிகக்குறுகிய காலத்தில் ஒரே அமர்வில் படித்ததாய் சொன்னார்.

வார்சாவிலிருந்து ஒரு கடவுள் என்னும் உங்களது நாவல் ஒரு புலம்பெயர் இலக்கியம் எனக்கொள்ளலாமா? அந்த நாவலுக்கு எந்த வகையான வரவேற்பு கிடைத்தது? அநேகமாக, இந்த நாவல் தமிழ் வாசகர்களைவிட கன்னடத்தில் மொழிபெயர்க்கப்பட்டதால் கன்னட வாசகர்களை அதிகம் சென்றடைந்தது என்று சொல்லலாமா?

வார்சாவில் ஒரு கடவுள் எனக்கு வேறுபட்ட அனுபவத்தை எழுதும்போதும் எழுதிய பின்னும் கொடுத்தது. பெரிய நாவல் சுமார் 450 பக்கங்கள். இது நீங்கள் சொல்வதுபோல புலம் பெயர்தல் பற்றிய நாவல். தமிழர்கள் எவ்வளவு சிக்கலான பாதையில் புலம் பெயர்கிறார்கள் எனக் கூறியது. வார்ஸாவில் நான் பேராசிரியனாக இருந்த போது ஆறுமாதங்கள் அதிகம் இருக்கவேண்டும் என்றனர். நிறைய ஓய்வு இருந்தது. அங்கு இருந்த பிரிட்டீஷ் நூலகத்தில் ஏற்கனவே பல ஆங்கில நாவல்களைப் படித்திருந்த சூழலில் நாவல் எழுதும் ஆசை வந்தது. இரண்டு நாவல்களை எழுதினேன். அதில் ஒன்று இது. இதில் கிழக்கும் மேற்கும் சந்திக்கிற கதை அமைப்பு வருகிறது. பர்மாவிலிருந்து இரண்டாம் உலகப்போரின் போது திரும்பிவரும் ஒரு கோயம்புத்தூர் தமிழர், தனியாய் விடப்பட்டு உயிருக்குப்போராடும் மூன்று வயது மங்கோலியப்பெண் குழந்தையைக் காப்பாற்றி எடுத்துக்கொண்டு வருகிறார். அக்குழந்தை, கோவையில் ஒரு தமிழ்க்குழந்தையாக வளர்கிறாள். அந்த நல்ல மனிதர் தன்னுடைய மற்ற பெண்களைப்போல எந்த வித்தியாசமுமற்ற விதமாக வளர்க்கிறார். தமிழ்பேசி வளர்ந்து ஒரு தமிழருக்குத் திருமணமாகிறாள் அப்பெண். அவள் பெற்றெடுத்த மகன் சந்திரன். சந்திரன் வளர்ந்து 2005 வாக்கில் வார்சாவுக்குப் போகிறான். இரண்டாம் உலக யுத்தத்தின் எச்சங்களுக்கு இடையில் வாழும் பலரைச் சந்திக்கிறான். இப்படிக் கிழக்கில் யுத்தத்தின் போது கண்டெடுக்கப்பட்ட தாயின் வயிற்றில் பிறந்த ஒருவன், மேற்கில் யுத்தத்தால் உடைக்கப்பட்ட நகரில் சுற்றித்திரிகிறான். அப்போது தன்னை யாரென வினவாமல் தன்னுடன் வா என அழைக்கும் போலந்து நாட்டுப் பெண்ணான அன்னாவுடன் செல்கிறான். தன் வரலாற்றைச் சொல்கிறான். சமஸ்கிருதம் படித்து இந்தியவியல் அறிஞனாகி, வார்சா பல்கலைகழகத்தில் கற்பித்துக்கொண்டிருக்கும்போது கொல்லபடுகிற ஒருவனின் தங்கையையும் சந்திக்கிறான். அவளை அடிக்கடி சந்திக்கும் போது போலந்தின் சரித்திரம் அப்பெண்ணின் உளவியல் மூலம் புரிகிறது. தமிழ்நாட்டிலிருந்து மாஸ்கோ வழியாக போலந்துக்குச் சட்டவிரோதமாக வரும் போது ஜெர்மனியில் மாட்டிக்கொண்டு சிறையில் இருந்தவர் சிவநேசம். அவர் இன்னொரு பாத்திரம். சந்திரன், அவருடன் நெருக்கமாகப் பழகுகிறான். சிவநேசம், சிறை மருத்துவமனையில் சயரோகத்துக்கு சிகிச்சை பெறும் போது ஹிட்லரின் நாசிவதை முகாமில் நர்சாக இருந்த பார்வையிழந்த மூதாட்டியின், இரவில் மட்டும் பணிசெய்பவர், அன்புக்கு ஆளாகிறார். அம்மூதாட்டி, நாசி வதை முகாமில் பல ஜெர்மனியர் போல ஒரு காலத்தில் பணியில் இருந்தாலும் சயரோகத்தால்

பீடிக்கப்பட்ட சிவநேசத்தின் தலையை வருடி சிவநேசத்துக்கு உயிர் வாழும் ஆசையை ஏற்படுத்துகிறார். சந்திரன் தன் இறந்த மனைவியின் கதையைப் போலந்தில் பத்திரிகை ஒன்றில், தான் அங்கு முதலில் சந்தித்த அன்னா உதவியோடு பிரசுரிக்கிறான். ஆதிவாசிகளுக்கு உதவிய தீவிர வாதி என போலீஸ் என்கௌன்டரில் கொல்லப்பட்ட மருத்துவ மாணவனான, மனைவியின் தம்பி பற்றியும் அப்பத்திரிகையில் கதைபோல் எழுதப்படுகிறது. இப்படி கிழக்கும் மேற்கும் தொடர்ந்து நாவலில் கொண்டுவரப்படுகின்றன. இது ஒரு அனைத்துலக மதிப்பீடுகளைக் கொண்ட நாவல். யுத்தம், நாசிசம், நாசிசக் கொடுமைகள், இந்தியாவிலிருந்து மேற்கு, எதைத்தேடுகிறது போன்ற கேள்விகள் புனைவாக்கப்பட்டன. இழந்துபோன எதையோ கண்டடைய ஐரோப்பா ஏன் தனக்கான இந்தியாவைக் கட்டமைக்க விரும்புகிறது? அதுபோல இங்கிருந்து ஐரோப்பா போன சந்திரன், சிவநேசம் அதீத ஆற்றல் உள்ளவரா இல்லையா என யோசித்து முடிவுக்கு வர முடியாமல் இறுதிவரை, தடுமாறுகிறான்.

இந்த நாவல் கனடா நாட்டு இலக்கியத்தோட்டம் அமைப்பால் 2008-இல் வெளி வந்த சிறந்த தமிழ் நாவல் விருதுபெற்றது. நான் நாவல் பிரதி அனுப்பாவிட்டாலும் அவர்களே வாசித்துப் பார்த்து விருது அளித்தனர். கன்னடத்தில் மொழிபெயர்க்கப்பட்டபோது மிகச்சிறந்த மொழிபெயர்ப்பு நாவலுக்கான விருதை கர்நாடக அரசிடமிருந்து 2016 இல் பெற்றது. அதுபோல் ஒரே ஆண்டில் கர்நாடகத்தில் ஆயிரம் பிரதிகள் விற்றன. அப்போது தான் தமிழ் வாசகர்கள் பற்றி யோசித்தேன். நம் நாவல் வாசகர்கள் கல்கி, ஆனந்தவிகடன் பத்திரிகை நாவல்களால் தீர்மானிக்கப்பட்ட பெண்களின் வாசிப்புப்பழக்கத்தால் தாக்கம் பெற்றவர்கள். அவர்களை ஜெயகாந்தன் அதே பத்திரிகைகளில் எழுதி மாற்றப்பார்த்தார். அதற்குள் சுஜாதா வந்துவிட்டார். இலக்கிய நாவல் வேறுவகை வாசகர்களைக்கொண்டது. சிறு பத்திரிகைகள் இத்தகைய வாசகர்களை உருவாக்கத் தொடர்ந்து முயற்சித்தது. சமூகச்சூழல் தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது. தமிழிலும் சிறுவட்ட வாசகர்கள் வாசிக்கும் படைப்புகள், பெருவாரி வாசகர்கள் படிக்கும் நூல்கள் என்ற பாகுபாடு வந்துவிட்டது. இத்தாலியின் எழுத்தாளரான இட்டாலோ கால்வினோ இத்தாலிய பத்திப்பகம் ஒன்றில் வேலைபார்த்தார். அவருடைய பார்க்க முடியா நகரங்கள் என்ற சிறுநாவல் உலக அளவில் விற்பனையில் சாதனை படைக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. அவர் பதிப்பக அளவு கோல் தெரிந்தவர். அதனால் அது சாதனை படைத்தது. நாம் படித்தாலும் அந்த நாவலில் அனைத்துல விற்பனை சாதனை புரியும் எனச்சொல்ல எந்த அம்சமும் அதில் இல்லை என்பதறிவோம். மார்க்கோபோலோவும் குப்ளாய்கானும் பல நகரங்களைப்பற்றி பேசிக்கொண்டே யிருக்கிறார்கள். ஆனால் அது சிறந்த நாவல். ஒரு வாசகன் நிறைய இலக்கியம் படிக்கும்போது இலக்கிய அளவுபோல் மனதில் உருவாகும். இலக்கியச்சிறப்பை அளந்து கூறும் அளவு கோல் சிக்கலானது. இதற்கு, கலைஞராக இருந்தால் போதும், நமக்கு அந்த அளவுகோல் பிடிபடும் என்று சிலர் கூறுகின்றனர். கலைஞராக இருப்பது என்றால் என்ன? வேறு என்ன? கலைஞன் பிறக்கிறான் என்றுதானே பொருள். யார் நேரடியாகவோ மறைமுகமாகவோ பிறவி பற்றிக்கூறுகிறானோ அவன் யார் என்பது நமக்குத் தெரியாதா? சரி, விடுவோம். இத்தாலியில் இட்டாலோ கால்வினோ எழுதிய முதல் நாவல் ஒன்று உண்டு. அது வேறு வகையானது. நான் அதைப்படித்தேன். அகிலன் பாணியில் அதை எழுதலாம். இத்தாலியில் இன்னொரு நாவலாசிரியர் இருந்தார். உம்பெர்த்தோ இக்கோ என்று பெயர். அவரும் உலகப்புகழ் பெற்ற நாவல்களை எழுதினார். அவர் அங்குப் பேராசிரியர். அவரும் கால்வினோ போல அறிவை வைத்து நாவல் எழுதலாம் எனக்காட்டுபவர். ஆனால் இருவரின் நாவல்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இப்போது சொல்லுங்கள் வாசகர்களைக் கணிக்கமுடியுமா? கன்னடத்தில் கூட ஏற்கனவே ஆங்கிலப் பேராசிரியர்கள் கூட்டாக கன்னடத்தில் எழுதி, ஒரு ஐம்பது ஆண்டுகளாக தரமான வாசகர்களை உருவாக்கினார்கள். அடிப்படையில் ஒரு மொழியின் சூழல் முக்கியம். எனக்கு மொழியின் ஆழத்தில் சரடு போல ஓடும் மரபு, தமிழ் போன்ற மொழியில் முக்கியம் என்று படுகிறது. அது சங்க இலக்கிய

அறிவு மரபா மத்தியகால பக்தி மரபா? எதன் அடிப்படையில் தரமான வாசகர்களை உருவாக்குவது? இது வரை தமிழில் இருந்த, இலக்கியத்தை மட்டும் வலியுறுத்தும் ஒரே அளவு கோல் க.நா.சு. உருவாக்கியது. அது எண்பதுகளிலேயே காலாவதி ஆகிவிட்டது. அப்போது எட்டுமணிநேரப்பேட்டி ஒன்று அவருடன் எடுத்தோம் . அதில் அவர் சமூகவியல் என்பது என்ன என்று தனக்குத்தெரியாது என்றார். அவருடைய தந்தை அந்த வார்த்தையைக் கேட்டிருந்தால் வெறுத்திருப்பார் என்றார். மார்க்சியமும் தெரியாது என்றார். அவர் ஐம்பது களின் உலக இலக்கியத்தை வைத்துத் தமிழில் சில வரையறைகளை உருவாக்கினார். இலக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் எனவும் இலக்கியமே அளவு கோல், என்றும் கூறியவர்களும் இப்படி அத்தனைபேரும் அவரது கருத்துக்களைத்தான் கொஞ்சம் மாற்றி, மாற்றிப் பயன் படுத்தினார்கள். அந்த வரையறை, உலக சிந்தனை மரபுகளை உள்வாங்கி உதித்த அமைப்பியலும் அதுபோல பல்வகை மார்க்சிய மற்றும் அழகியல் தத்துவப்போக்குகளும் தமிழில் வந்த தவுடன் காலாவதியாகிவிட்டன. அவற்றுடன் ஒட்டிக்கொண்டிருந்த மேல்தட்டுக்குரிய குணமும் காலாவதியாகி விட்டது. இறுதியாக ஒன்று கூறுகிறேன். இலக்கியம் என்பது ஏற்கனவே இருக்கும் சாரம்சம் அல்ல. அந்தந்த காலமும் சூழலும் உருவாக்குவது. அவற்றிற்கேற்ப, பல்வேறு காரணிகள் மூலம், கட்டமைப்பது தான். ரசனை கொண்ட வாசகர்கள் இயல்பிலேயே இருக்கமாட்டார்கள். வாசகர்களும் இலக்கிய கட்டமைப்புக்குத்தக உருவாகிறார்கள்.

முதல் இந்தி எதிர்ப்பு நாவல் என்று சொல்லக்கூடிய உங்களது ஆடிப்பாவை போல நாவலுக்கு தமிழ் நாட்டில் எந்த அளவிற்கு வரவேற்பு கிடைத்தது? அது வெளிவந்திருக்கவேண்டிய கால கட்டம் அதுதானா?

எனது ஆடிப்பாவை போல என்ற நாவல் இந்தி எதிர்ப்பைப் பற்றிப் பேசுகிறது. அந்த நாவலை தொடர்ந்தும் வாசிக்கலாம். ஒவ்வொரு அதிகாரத்தையும் தாண்டித்தாண்டியும்



வாசிக்கலாம். வாசகர்களுக்குக் குறிப்புகள் கொடுக்கப் பட்டிருக்கும். கிண்டிலில் வாசிக்க ஏற்ற விதமான உத்தியில் எழுதப்பட்டிருக்கும். காலம் மாற மாற இலக்கிய மாதிரியும் மாறும். இதன் உள்ளடக்கம் 1965- இல் நடந்த இந்தி எதிர்ப்பின் போது தமிழகத்தின் தென் பகுதியைச்சார்ந்த இரு கல்லூரி மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட காதல் பற்றியது. அக்காலகட்டத்தில் தி.மு.க. ஆட்சிக்கு வரவில்லை. காங்கிரஸின் மதிப்பீடுகள் தமிழ்ச்சமூக மதிப்பீடுகளாய் இருந்த காலம். இப்போது பெரிய பேருந்து நிலையமாய் இருக்கும் இடம் அப்போது சிறிய பேருந்து நிலையம். மாணவ மாணவியர் பழக்க வழக்கங்கள் அன்று வேறுபட்டவை. காதல் புரிவார்கள். ஆனால் சாதி அன்றும் பெரியதடை . சதித்திட்டங்கள் அதுவரை ஆட்சிக்கு வராத புதிய கட்சியிலும் உண்டு. விடுதி மாணவர்கள் வேறுவிதமானவர்கள். பணப்புழக்கம் இல்லை. ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் மிகப்பெரிய

தொகை. சாதி வேறுபாடு இன்று போல் அன்றும் உக்கிரமாக இருந்து. மேடைப்பேச்சுத் திறமை ஒருவரை பாராளுமன்ற உறுப்பினராக்கிவிடும். ஆனால் அரசியல் தந்திரங்கள் மிகவும் முக்கியம். உறவுமுறைகளும் அரசியலில் முக்கியம்.ஒரு ஊர்வலம் நடக்கிறது அது துப்பாக்கிச்சூட்டில் முடிந்த போது அடுத்து ஆட்சி மாறும் என்று சந்தேகிக்கப்படுகிறது. ஆனால் பல துப்பாகிச்சூடுகள் நடக்கின்றன. ஆனால் உறவு முறைகள் தான் தத்துவத்தை விட பலமானவை. அதாவது குடும்பம் தமிழ்ச்சமூகத்தில் முக்கியமானது. தமிழும் குடும்பமும் பின்னிப்பிணைந்திருக்கும் சமூகம் தமிழ்ச்சமூகம் என பல நிகழ்ச்சிகள் விளக்குகின்றன. அப்போதே திரைப்படமும் அரசியலும் கலக்க ஆரம்பித்துவிட்டன. இடது சாரிகள், நக்சல்பாரி அனுதாபிகள் கொல்லப்படுகின்றனர். ஆனால் இடதுசாரிகளுக்கு ஆட்சியைப் பிடிக்கமுடியாது. எப்போதும் தியாகம் செய்பவர்கள் அவர்கள். அமரன் என்ற மாணவன் வருகிறான். இடது சாரி ஒருவரே அமரனின் பேச்சுத்திறமையைப் புகழ்கிறார்.வேறு ஒரு பேராசிரியர் வருகிறார். தனித்தமிழ் நாடு பற்றிப்பேசுபவர். அமரனை ஓரிடத்தில் ப்ளாட்பாரம் ஸ்பீக்கர் என கேவலப்படுத்துகிறார். பிளாட்பாரம் ஸ்பீக்கர் பெரிய குடும்பத்தாரிடம் தோற்கிறான். அக்குடும்பத்தார் எந்த கட்சி வந்தாலும் முக்கியமானவர்கள் ஆகிறார்கள். அது போலவே அவனைக் கேவலப்படுத்திய பேராசிரியரும் இழுத்து இழுத்துப் பேசும் அடுக்கு மொழிகள் நிறைந்த சொற்பொழிவு ஒன்றைக்கேட்டுவிட்டு இனி தாக்குப்பிடிக்க முடியாது என்று ஊரைக்காலி செய்கிறார். தலித்துகள் அன்றும் எரிக்கப்பட்டனர். கட்டுரைகள் எழுதும், இலக்கிய ஆசையுள்ள கதைத்தலைவனுக்கு சொற்பொழிவுக்குப்பரிசு வாங்குபவளாய் அறிமுகமாகும் அவன் காதலி திடீரென இந்தி எதிர்ப்புக்குப் பிறகு ஏன் கல்லூரியைத்தொடரவில்லை என்பது புரியவில்லை. அவன் படிப்பை முடித்து, டெல்லியில் பத்திரிகையாளனாய் மாறி, போராட்டம் நடந்து கொண்டிருக்கும் இலங்கைக்குச்செல்கிறான். இடையில் பிரிகிற கதைத் தலைவனும் லண்டனிலிருந்து வரும் அவன் காதலியும் வயதான பிறகு திடீரென ஐரோப்பாவில் சந்திக்கிறார்கள். இந்தி எதிர்ப்பின் மூலம் அப்போது தமிழகத்தில் மேலெழுந்த மக்கள் பிரிவுகளில் நடைபெற்ற சமுக மாற்றம் எத்தகையது என அலசும் நாவல்.

இந்த நாவல் வெளிவரவேண்டிய காலம் இது தானா என்ற உங்கள் கேள்விக்கு வருகிறேன்.*1965* இந்தி எதிர்ப்பு நேரத்தில் சாதாரண மக்களும் அரசியல் வாதிகளும் மாணவர்களும் எப்படி இருந்தனர் என்று இந்த நாவல் பார்க்கிறது. இன்று இந்தி எதிர்ப்புப்பற்றி பேசினால் சிலர் எரிச்சல் அடைகின்றனர். அதுபோல எண்பதுகளின் மேல் தட்டு அழகியல், அதன் அடுத்தகட்டமாக லத்தீன் அமெரிக்க மாதிரியில் எழுதுவதற்கு அனுமதிக்கும். ஆனால் இந்தி எதிர்ப்பு பற்றி எழுதுவதற்கும் வலதுசாரிகளை எதிர்த்து அரசியலை எழுதுவதற்கும் யாரையும் அது உந்தவில்லை பார்த்தீர்களா? இலக்கியத்தூய்மை வாதம் பல மாதிரிகளில் கடந்த முப்பது ஆண்டுகளாக முகமூடி இட்டு இங்கே உலவுகிறது. புதுக்கவிதைகளில் இருந்தும் அரசியலை கடந்த முப்பது ஆண்டுகளாய் ஒதுக்கிவிட்டிருக்கிறது. ஆத்மாநாமைச்சிலர் பேசுகின்றனர். அவருடைய எமர்ஜென்சிக்கான எதிர்ப்பு நிலைபாடு அவர்களுக்கு மறந்துபோயிற்று. இந்தி எதிர்ப்புப் பற்றிப்பேசும் போது, அது நாவல் வடிவம் எடுக்கும் போது, ஏதாவது ஒரு அரசியல் கட்சியை ஆதரிப்பதோ எதிர்ப்பதோ முக்கியம் அல்ல. அன்று இந்தி எதிர்ப்பை நடத்திய சமூகம் எப்படிப்பட்டது என்று பார்ப்பது முக்கியம். இந்த நாவலில் ஒரு வரலாற்றுப்பார்வை உள்ளது. இன்றைய கோணத்தில் இந்தி எதிர்ப்பு நோக்கபடுகிறது. இன்றைய சமூகத்துக்கும் அந்த சமூகத்துக்கும் என்ன ஒற்றுமை, வேற்றுமைகள் உள்ளன என்ற பார்வையும் முக்கியம். அதுபோல் இந்தி எதிர்ப்பு என்பது மொழி எதிர்ப்பு மாத்திரமல்ல. தமிழ் மொழி இருக்கும் வரை அது ஆதிக்கம் செலுத்தும் எல்லா மொழிகளையும் மனோபாவங்களையும் எதிர்க்கத்தான் செய்யும். தமிழ், முன்பு நான் சொன்னதுபோல பிராந்தியத்தின் வலிமையின் பெயர். அசாம், கர்நாடகா, கேரளா கூட தம் உரிமையைப் பெற தமிழ் உதவ வேண்டும். மாநில சுயாட்சி அரசியல் அதுதான். கர்நாடகத்தில் இந்தியை

எதிர்க்க தொடங்கிவிட்டார்கள் பார்த்தீர்களா? பிரதமர் திருக்குறள் சொல்லிவிட்டால் தமிழர்கள் அவர்களை வர விட்டு விடுவார்களா? அவர்கள் தமிழை ஆதரிப்பவர்கள் ஆகி விடுவார்களா? அதுபோல், மார்க்யெஸ் என்றும் சரமாகோ என்றும் சில பெயர்களைச் சொல்வதால் எழுத்துக்குள்ளே இருக்கும் சனாதனம் மூடி மறைக்கப்பட்டுவிடுமா? இப்படிப்பட்ட கேள்விகளையெல்லாம் ஆடிப்பாவை போல என்ற நாவலின் அரசியலை அறிகையில் கேட்க முடியும். அது கேட்கிறது.

உங்களின் நாவல் முயற்சிகள் எல்லாம் உங்கள் இலக்கியப் பயணத்தில் போதிய அங்கீகாரத்தைப் பெற்றதாக நினைக்கிறீர்களா? இவைகள் பல்கலைக்கழக வளாகங்களுக்குள் விவாதிக்கப் பட்டனவா?

என் நாவல்கள் நகுலன் நாவல்களுக்கு எதிரிடையானவை. நகுலனைப் பலர் ஏற்றுக்கொள்ளவில்லை. நகுலன் தீவிரமான உளவியலுக்குள் போவார். குறிப்பிட்ட நான்கைந்து பேர் அவரிடம் நேரம் போக்குவதற்காகப் போவார்கள். அவரை நான் பல முறை சந்தித்திருக்கிறேன். ஆங்கில மாடர்னிச நாவல்கள் படித்து அந்த தாக்கத்தில் எழுதியவர். கதையம்சம் அதிகம் அவர் நாவல்களைத் தீர்மானிக்காது. உணர்வோட்ட மே கதைப்பாத்திரங்கள். ஆனால் என் நாவல்கள் புற வய நாவல்கள் என்று கூறலாம். புறநானூறு இப்படிப்பட்டது. மணிமேகலையின் அழகியல் இப்படிப்பட்டது. பதிற்றுப்பத்து வெளியீட்டு முறை இப்படிப்பட்டது. பிரதாபமுதலியார் சரித்திரத்தின் நாட்டுப்புறவியல் இப்படிப்பட்டது. சிலப்பதிகாரம் இப்படிப்பட்டது. அம்சன் குமார் என் ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்களை சிலம்பிடம் சேர்த்து எழுதியிருப்பார். தெ. பொ.மீ. சிலப்பதிகாரம் பற்றி எழுதியதைப் படித்தபோது என் நாவல்களில் வரும் பாத்திரங்களின் அறிமுகம் போல இருந்தது. ஏன் தமிழில் காவிய மரபுக்கதைகள் எல்லாம் புறவயக்கதைகளைக் கொண்டிருக்கின்றன? இக்குணத்தைக்கவனித்து, நாகார்ச்சுனனும், எஸ். சண்முகமும் என்நாவல்கள் பற்றி விரிவாய் எழுதியுள்ளார்கள். இந்த எல்லா நாவல்களும் மாத நாவல்கள் போல வாசிக்கப்படாது. என் சில நாவல்கள் வாசகர்களே என்று அழைத்துக்கதை சொல்லும். சரித்திரத்தில் படிந்த நிழல்கள் நாவல், விநாயகர் வணக்க வெண்பாவுடன் தொடங்கும். என்னுடைய ஜி. கே.எழுதிய மர்ம நாவலில் இயல்களுக்கு இடையிடையே குறிப்புக்கள் வரும். ஜெர்மன் நாடக ஆசிரியர் பிரக்ட் தன் நாடகங்களில் குறிப்புகள் எழுதி இது நாடகம் தான் என உணரவைப்பார். வாசகன் படைப்போடு ஐக்கியப்படக்கூடாது என்பார். அதை அந்நியமாக்கும் உத்தி என்பார். என்நாவல்கள் இந்த உத்தியைபிபிரதானமாகக்கொண்டது. மேலும் நாவல் இலக்கியம் என்பது அந்த மக்கள் கூட்டதின் ஆதி மொழியுடன் ஒன்றிணைந்தது என்று கூறுவது என் நாவலின் கலைக்கோட்பாடு எனலாம். சங்க இலக்கியமும் சிலம்பும் அந்த ஆதி மொழியின் குரல்கள். இன்றைய நாவல் அதன் தொடர்ச்சி என்பது என்கருத்து. இப்படிப்பட்ட ஒரு கருத்து சிறுபத்திரிகையில் எப்போதும் ஒலித்ததே இல்லை. சங்க இலக்கியமும் சிலம்பும் தற்கால இலக்கியத்தை எழுதும் புனிதக் கைகளில் படுவதே பாவம் என்றுதான் அன்றுமுதல் எல்லோரும் நினைத்தார்கள். இன்றும் அப்படியே நினைக்கிறார்கள். மரபு வேண்டாம் என்பதே எல்லோரின் ஏகோபித்த குரல். முக்கியமான காரணம், தற்கால இலக்கியம் வேறு கைகளில் மாட்டிக்கொண்டிருந்தது என்று ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளேன். இதுபோல ஒரு சுட்டிக்காட்டல் தொ.மு.சி. ரகுநாதனின் ஒரு நூலில் வந்தபோது பெரிய பரபரப்பு ஏற்பட்டது. சிலருக்கு ஞாபகமிருக்கலாம். தமிழ் நாவல் இலக்கியத்துக்குச் சங்க கால மரபு வேண்டும் என்பது பெரிய பாவம் ஏதும் இல்லை. ஜேம்ஸ் ஜாய்ஸ் அவரது நாவலான,யுலிசஸில், ஹோமர் காவியத்தைப் பயன்படுத்துகிறார். இந்தச் சங்கதி இவர்களில் ஓரிருவருக்குத்தெரிந்தாலும் இவர்கள் சங்க இலக்கியம் படிக்க அது தூண்டுதலாகாது. தமிழன் மரபில் இவர்களுக்கு மதிப்புமில்லை, அறிவுமில்லை. இன்னொரு விஷயம். எண்பதுகளில் வாசகர்கள் ஒரு குறுகிய வட்டத்தினர் தான். பொது வாசகர்கள் இல்லை. பொது வாசகர்களைப் பெரும் பத்திரிகைகள் வியாபாரத்துக்காகப் பயன்படுத்தின. இலக்கிய

தரத்தில் எழுதப்பட்ட நாவல்கள் சிறு பதிப்பகங்களால் வெளியிடப்பட்டன. நகுலன் கைச்செலவு செய்து வெளியிடுவதாய் தன்னை நையாண்டி செய்வார். சுந்தர ராமசாமி படைப்புக்கள் க்ரியா மூலம் வந்தன. இவர்கள் யாருடைய நாவலும் கல்கி, குமுதம், வாசகர்களால் வாசிக்கப்படவில்லை .அகிலனுக்கு ஞானபீடம் வந்தபோது சு.ரா. ஒரு கட்டுரை எழுதி அகிலனைக் காலி செய்தார். இந்திராபார்த்தசாரதியின் குருதிப்புனல் வந்தபோது அம்பை ஒரு கட்டுரை எழுதி அவரை ஆண்மை நாவலாசிரியர் என விளக்கினார். நகுலன் பொதுசன படைப்பாளி அல்ல. இப்படி அன்று யாரும் பொதுவாசகர்களால் வாசிக்கப்படவில்லை. இது பற்றிக்கொஞ்சம் பார்ப்போம். நம்மிடம் வாசகர் சர்வே எதுவும் கிடையாது. அது சமூகவியலாளர்களின் வேலை. நம் பல்கலைகளில் அப்படிப்பட்ட சமூகவியல் என ஒரு துறை இருக்கிறதா என்றே யாருக்கும் தெரியாது. கர்நாடகத்தில் பெரும்பாலான எல்லா கல்லூரியிலும் அது ஒரு முக்கியமான பாடம். வாசகர் சர்வே அவர்கள் எடுப்பது உண்டு. சரி, வாசகர்கள் நம்மிடமும் அதிகம் உண்டுதான். அது நேரப்போக்காய், நாவல் வாசிப்பைக் கருதுபவர்கள். ஒரு காலத்தில் நா. பார்த்தசாரதிக்கும் மு.வ.வுக்கும் இருந்த வாசகர்கள் எழுபது எண்பதுகளில் இரண்டாய் பிரிந்து, ஒரு பிரிவு, சிறு பத்திரிகைக்குப் போயிற்று. க.நா.சு.போன்றவர்களின் தீவிர இலக்கியம் வேண்டும் என்ற பிரச்சாரமும் அதுபோல, திராவிட பரம்பரை ஆட்சிக்கு வந்த பின்பு திராவிட வாசகர் கூட்டம் இலக்கியத்திலிருந்து வெளியேறியதும் ஒரு புதிய சூழலைத் தமிழில் உருவாக்கியது. குறுங்குழுவினர் சிலர் மேல்சாதி சார்ந்து மாடர்னிசத்தைத் தமிழுக்குக் கொண்டுவர முயன்றனர். அபத்தநாடகம் (அப்ஸர்ட் தியேட்டர்) போன்றன வந்தன. அதற்கு எதிராக அப்போது தி.க.சி.ஆசிரியத்துவத்தில் செயல்பட்ட தாமரை பத்திரிகை முக்கியமாயிற்று. இப்படி ஒருவித சிறுவாரி (ஜமாலனின் தத்துவச் சொல்லாட்சி இது) எழுத்தும் வாசிப்பும் தமிழைத் தீர்மானிக்கும் சரித்திரம் உருவாயிற்று. அதே இலக்கியச்சூழலாயும் ஆயிற்று. இது 21 ஆம் நூற்றாண்டின் முதல் ஐந்தாண்டுகள் வரை ஒரு குறிப்பிட்ட குணத்தைத் தமிழுக்கு அளித்தது. இக்கட்டத்தில் நாவல்களுக்கு வாசகர்கள் கிடையாது. பத்திரிகை தொடர்கதையின் வாசகர்களைப் பற்றி நாம் பேசவேண்டாம். அவர்கள் எப்போதும் இருப்பார்கள். ஆனால் எதையும் தீர்மானிக்கமாட்டார்கள். ஆனந்தவிகடன் வாசகர்களாய் ஐம்பதுகளில் இருந்தனர். இவர்கள் வருவார்கள் போவார்கள். எனவே என்போன்றவர் எழுத்துக்களுக்கோ, வேறு சீரிய எழுத்துக்களுக்கோ, கன்னடம் போல, தமிழில் இலக்கிய நாவல் வாசிப்பவர்கள் பேரளவில் இருக்கமாட்டார்கள்.

தமிழ்த்துறையினர் தற்கால இலக்கியத்திற்கு ஏனோ வரவில்லை. மு.வ.நாவல்கள் வந்தபோதும் பாடமாக இருக்குமே தவிர அவற்றின் மீது அந்த காலத்தில் இங்கிலாந்தில் ஆங்கிலப்பேரா. எஃப்.ஆர்.லீவிஸ் நாவல் இலக்கியம் மீது எழுதியதுபோல பெருமரபு (Great Tradition) இது என விளக்கிச்சொல்லும் ஒரு நூல் வராது. பெரும்பாலும் கற்பிக்கமாட்டார்கள். மாணவர்களே படிக்கவேண்டும்.

தமிழ் இலக்கிய உலகில், வாசக எண்ணிக்கை ஒரு புறம் குறைந்துகொண்டே இருக்கையில், தினமும் மலம் கழிப்பதுபோல் இன்றைய எழுத்தாளர்கள் நிறைய எழுதிக் குவிக்கிறார்கள்; பெரிய பெரிய புத்தகங்களாக எழுதுகிறார்கள்; இது ஒருவகையான பைத்தியக் காரத்தனமாக காணப்படுகிறது. இப்படிப்பட்ட இலக்கிய வகைமைகளை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்? ஏனென்றால், பொதுவாக உங்களுக்கான இலக்கியக் களமாடல் நாவல் வடிவத்தில் இருக்கிறது. அதனால்தான் இந்தக் கேள்வி.

ஆமாம், இப்போது வந்துகொண்டிருக்கும் எழுத்துக்கள் எழுபதுகளில் ஆரம்பித்து, தொன்னூறுகள் முடிய வந்த இலக்கியச்சூழலுக்கு மிகவும் மாறாக உள்ளன. உங்களைப்போல நானும் கவனித்துள்ளேன். அதாவது இவை பெரும் பாலும் முகநூல் வந்தபின்பு தீர்மானிக்கப்பட்டது. இது ஏற்கனவே நான் சொன்னதுபோல கடந்த சுமார் இருபது ஆண்டு கால நிகழ்வு. 2005 - க்கு பிந்திய நிகழ்வு. முகநூலில் லைக் வாங்குவதற்காக ஒரு புத்தகம்

வரும். அடுத்து ஏதும் வராது. அவர் காணாமல் போவார். அதுபோல விருதுகள். விருது பெற்றவர் இனி நிறைய எழுதுவார், தமிழுக்கு அடித்தது யோகம் என்று நாம் நினைத்தால் அவரும் முகநூலில் சில போட்டோக்கள் போட்ட பின்பு காணாமல் போவார். முகநூல் புறரீதியான அடையாளம். சிறுபத்திரிகை போல, அகரீதியான அடையாளம் அல்ல. ஆனால், மொத்தத்தில் பெரிய மாற்றம் நடந்து கொண்டிருக்கிறது. நாம் இவைகளைக் கவனிக்கவும் அவற்றின் மூலம் வெளிப்படும் பாடங்களையும் கற்கவும் தவறக்கூடாது. அந்தக்காலத்தில் கையெழுத்துப் பத்திரிகை நடத்துவது போல இப்போது முகநூல் பயன்படுகிறது. உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் அதிகம் முகநூலில் பங்கெடுக்கிறார்கள். அவர்களைக் கவர சீப்பான செக்ஸ் உத்திகளைச் சிலர் பயன் படுத்தினார்கள். டிஜிட்டல் குற்றம் பற்றிய சட்டங்கள் வந்த பின்பு அவை குறைந்திருக்கின்றன. அறுபது வயது எழுத்தாளர் நாற்பது வருடங்களாக எழுதிய அனுபவம் சார்ந்து இறுதியாக அவர் வந்தடைந்த ஒரு கருத்தை எழுதுகிறார் என்று வைத்து கொள்வோம். பத்து லைக் இருக்கும். அடுத்து அவர் நன்றாக முகச்சவரம் செய்து ஒரு போட்டோ பதிவேற்றுகிறார் என்று வைத்துக்கொள்வோம். சுமார் ஐந்நூறு லைக் இருக்கும். இதிலிருந்து என்ன முடிவுக்கு வர? அவர் கருத்தை விட அவர் முகம் நன்றாக இருக்கிறது என்றுதானே. இது அவரைக்கேலி செய்வது ஆகாதா? சிலர் தமக்கிருக்கும் மனநோயை இறக்கிவைக்கவும் வெளிநாட்டில் இருப்பவர்கள் குடித்த பின்பு தோன்றுவதையெல்லாம் கிறுக்கவும் பயன் படுத்துகின்றனர். ஒரு முறை ஒரு ஆங்கிலப்பேராசிரியர் கவித்துவம் என்பது ஒரு நிகழ்த்துதல், (ஃபெர்பார்மென்ஸ்) என்று எழுதினார். அது ஒரு ஆழமான சிந்தனை. அதை முக நூலில் படித்த பலர் நாடக நிகழ்த்துதல் எனப்பொருள்கொண்டு நாடகம் பற்றி



எதிர்வினை ஆற்றினார்கள். ஆங்கிலப் பேராசிரியரும் தான் எழுதியது நாடகம் பற்றித்தானோ என்று ஐயம் கொண்டு கடைசியில் தன்னையே மாற்ற ஆரம்பித்துவிட்டார். இது ஒரு பெரிய தமாஷ். அதாவது புதியது தோன்றுவதற்குப் பதில் பெருவாரியானது தீர்மானச்சக்தியாகிறது. இது இப்படியே போனால் கடைசியில் பாசிசத் துக்கு வழி வைக்கும். கூட்டம் தான் பாசிசத்தை

உருவாக்குவது. ஹிட்லர் பாசிசத்தை உருவாக்கியதை விட கூட்டத்தினர் தான் அவரைக் கொலைகாரராக்கியது. இது இப்போது இந்தியாவிலும் பாசிசமாக வந்து கொண்டிருக்கிறது.வங்கிகள் முன்பு கால்கடுக்க நின்று செத்துப்போன மக்களைப் பார்த்தபின்பும் அதற்குக் காரணமான அதே கூட்டம் இன்னும் அதிக பலத்துடன் வெற்றிபெறுவது எப்படி? கணினி வந்தபின்பு இதெல்லாம் மிக எளிது. ஒருவர் ஆஹா, மக்கள் அதிகாரம் பெற ஆரம்பித்துவிட்டார்கள் என மகிழ்ந்தார். கூட்டத்துக்கும் மக்களுக்கும் வித்தியாசம் அவருக்குத் தெரியவில்லை. இலக்கியத்தை இந்தச் சூழல் எப்படிப்பாதிக்கிறது என்பது இன்னும் ஆழமாகப்பேச வேண்டியது. நூல்விமரிசனமும் கேள்விமரபும் மழுங்கியுள்ளன. பாராட்டுரைகள் மட்டும் பரவுகின்றன. சமீபத்தில் ஒரு நாவலுக்கு பெரிய விருது வந்தது. விருது பெற்றவரை எல்லோரும் பாராட்டினர். ஏழாயிரம் பிரதிகள் விற்றன. ஏழாயிரம் பேர் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்களா? சுமார் இருநூறுபேர் முழுதும் படித்திருந்தால் மிகப்பெரிய விசயம். வீடுகளில் அடையாளப்பொருளாய் வைக்க வாங்கினார்கள். அடையாளங்கள் ஊடகங்கள் மூலம் உருவாகின்றன. அடையாள உருவாக்கம் வேறு ஒரு சமுக வெளிப்பாடு. அதனை உடைத்து அதன் உள்ளே இருக்கும் பொருள் என்ன எனப்பார்ப்பது இன்னொரு விதமாய் சமூக அர்த்தத்தைத் தேடும் காரியம். விரிவாய் இவற்றை இங்கே பேசமுடியாது.

தமிழில், கணினி, முகநூல், இவை மூலம் கொஞ்சம் நல்லதும் நடக்கிறது, மறுப்பதற்கில்லை. பரவலாய்ச் செய்திகளைக் கொண்டுபோக முடிகிறது. பெரும்பான்மையாதல், பரவுதல், வேகமாக தொடர்புறுத்துதல் நடக்கின்றன. இத்தன்மைகள் நல்லதும் கெட்டதும் கொண்டது. முக நூலில் எழுதியதைப்பலர் நூலாக்குகின்றனர். சில நல்ல நூல்கள் அப்படி வந்துள்ளன. மறுப்பதற்கில்லை. முகநூல் பற்றி முழுஆய்வுகள் வந்த பின்புதான் இறுதியான முடிவு எடுக்கவேண்டும். நான் எதிர்மறைகளை அதிகம் பேசிவிட்டேன். முற்றிலும் எதிர்மறையான தீர்ப்பும் வழங்கக்கூடாது. புதிய ஊடகம் இது.

உங்களின் சமீபத்திய நாவல் ஷம்பாலா, இன்றைய மோடி அரசின் நடவடிக்கைகளை நையாண்டி பண்ணும் ஒரு அரசியல் நாவல். இப்படி நேரடியாக விமர்சித்து எழுதும் மன நிலைக்கு நீங்கள் தள்ளப்பட்டீர்களா? அல்லது இயல்பாக இன்றைய அரசியல் நடவடிக்கைகளால் ஏற்பட்ட அழுத்தத்தால் எழுதினீர்களா?

இனி நான் இறுதியாக எழுதிய ஷம்பாலா என்ற நாவல் பற்றிச்சொல்கிறேன். என் நாவல் எழுத்து முறையின் தொடர்ச்சியும் விலகலும் இந்த நாவலில் உண்டு. 2014 க்கு பின் வந்துள்ள வலதுசாரி அரசியலில் பாசிசத்தின் இந்திய முகம் தெரிந்தது. 14-7-20 அன்று வரலாற்றாய்வாளர் ராமச்சந்திரா குஹாவின் மோடி-ஷா ஆட்சிபற்றிய மதிப்பீடு வந்துள்ளது. அவர் சொல்லும் விஷயங்கள் மிகுந்த கவனத்துக்குரியவை. அதில் இந்திராவின் நெருக்கடி பிரகடனத்துடன் இணைத்து இன்றைய வலது சாரிகளின் பாசிசப்போக்கை உணர்த்துகிறார். அவர் இன்று ஊடகங்களும் நீதிமன்றமும், அதிகாரிகளும் தோற்றுப்போனதோடு, வேறுபல நிறுவனங்களான மிலிட்டரி, சிவில் ஆட்சித்துறை, இன்கம் டாக்ஸ், வங்கித்துறை போன்ற பலவும் அதனதன் தன்னுரிமையை இழந்து சனநாயகம் இனி பெரிய ஆபத்தைச்சந்திக்கும் என்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைக் கோடிக் கணக்கில் பணம் கொடுத்து கவிழ்க்கிறார்கள் என்கிறார். அவர்கள் எல்லாவற்றையும் தங்கள் பிடிக்குள் கொண்டுவருகிறார்கள் என்கிறார்.இந்த ஆபத்து எல்லோரும் அறிந்ததுபோல படைப்பு மனத்திலும் படும். அது வேறு வடிவத்தில் இருக்கும். எல்லாவற்றையும் இந்து முஸ்லிம் பிரச்சனை ஆக்குவது என்பது பெரிய பாசிச உத்தி. அது மிகுந்த மன உளைச்சலைத் தந்தது. அவர்கள் உருவாக்கிய சொல்லாட்சி, அர்பன் நக்சல். அதுபோன்ற சூழலுக்கு முகம் கொடுக்கும் ஒரு கதைப்பாத்திரம் இந்த நாவலில் வருகிறது. பாசிசத்தின் அடையாளச் சொல் ஹிட்லர். அது இன்னொரு பாத்திரம். இப்படி ஒரு தற்கால அரசியல் நாவல் எழுத எண்ணிய போது என்ன வடிவம் கொடுப்பது என்று யோசித்தேன். என் பல நாவல்களில் வரும் இரண்டு அடுக்கு

கதைமுறை எனக்குத்தெரியாமலே உருவானது. ஒரு சுவாமிஜி வருகிறார். ஷம்பாலா என்ற இடத்தில் உலகின் அதிகாரம் எல்லாம் கிடைக்கும் என்ற புராணக்கதை உள்ளது. சுவாமிஜி, நவீன ஹிட்லருக்கு அந்த இடம் பற்றிக்கூறுகிறார். அரசியலும் மதவழிபாடும் எப்படிப் பின்னிப் பிணைந்துள்ளன எனக்காட்டுவதற்காக அப்பாத்திரம். அழகியலைப் பொறுத்தவரையில் இந்த நாவல் என் முந்தைய நாவல்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. நேரடியாக வாசகரைத் தொடுவதற்காக நேரடி அரசியல் வரும். 2014 லிருந்து 2018 வரை இங்கு நடந்த பல சம்பவங்களை நேரடியாகத் தந்து அவற்றைச்சுற்றி உலக அளவில் அரசியல் எதிர்ப்பு நாவல்கள் பலதில் வருவதுபோல ஒரு உருவகத்தன்மையை உருவாக்கினேன். உருவகம் என்றால் கதை அமைப்பில் இந்த எல்லா உண்மைகளையும் அடக்கிய ஒரு உருவம் வரும் படி கற்பனை செய்து பாத்திரம், பேச்சு, சம்பவம் என எழுதுதல். அதனால் தான் நாவலில் அறிவை உளவு பார்க்கும் நிகழ்ச்சிகள் வந்தன. அறிவை உளவு பார்த்தல் பாசிசம் செய்வது. உருவகமும் யதார்த்தமும் அப்படி இணைத்தேன். பாசிசமும் இன்று உடலைப்பேணுங்கள் யோகா செய்யுங்கள் என்று கூறும். அது பற்றி நேரடியாகக் கூறாமல் குஸ்தி பயிற்சிபெற்ற பள்ளிக்கூட சிறுவனை ஹிட்லர் பெயர் கொண்டவனாய் அறிமுகப்படுத்தினேன். இதன் மதிப்புரை இந்து தமிழில் வந்தபோது மிக அதிகமான அழைப்புக்கள் எனக்கு வந்ததைப்பார்த்து வியந்தேன். லண்டனின் இருக்கும் ஒரு மருத்துவர் ஊருக்கு வந்தபோது கிடைத்த மதிப்புரையை படித்துவிட்டு தன்னை அறிமுகப்படுத்திவிட்டுக் கொஞ்சநேரம் பேசினார். அவர் மதிப்பீட்டில் தமிழகத்தில் வலதுசாதி அமைப்புக்கள் பலப்பல பெயரில் கோயில் சார்ந்து செய்யும் காரியங்கள் இன்னும் பயங்கரமானவை. அதுபோல் தமிழ்ப்பண்பாட்டு வெளியில் பாசிசத்தை அகவயப்படுத்தும் காரியங்களைப் பெருநிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் காட்சி ஊடகங்கள் மிகத்திறமையாகச்செய்வது புரிந்தது. சினிமாவும் மாயைப்படுத்தலைச் சிறப்பாகச் செய்து இளைஞர்களை அரசியலற்றவர்களாக்குகிறது. என் ஷம்பாலா நாவல்போல பல நேரடியான அரசியல் நாவல்கள் தமிழில் வரவேண்டும். சமீப காலங்களில் தமிழ்ப்பண்பாடும் இலக்கியமும் அரசியல் மயப்படுத்தாத போக்கைக் கையாள்கின்றன. அரசியல் மயப்படுத்தப்படாமல், உள்ளதால் பண்பாடு என்றால் சினிமா பற்றிப்பேசுவதுதான் என்றாகிவிட்டிருக்கிறது. இது எப்படிப்பட்ட ஆபத்து என பலருக்கும் தெரியவில்லை. உலக இலக்கியத்தில் அரசியல் நாவல்கள் பல உள்ளன. அதற்கு ஒரு மரபு உள்ளது. பிரிட்டிஷ் எழுத்தாளர் ஜார்ஜ் ஆர்வெல்லின் விலங்குப்பண்ணை முக்கியமானது. அது முற்றிலும் உருவகம். ஷம்பாலா சற்று மாறுபட்டது. இந்த நாவலுக்கு நிறைய எதிர்வினைகள் வந்தன. மாலன் ஒரு கட்டுரை எழுதி எனக்கு அனுப்பினார். ஹிட்லருக்குப் பதிலாக ஸ்டாலின் வரக்கூடாதா என்பது போல எழுதினார்.அவரிடம் என்குறி தப்பவில்லை என்றேன்.

படிகள் மற்றும் சிற்றேடு இதழ்கள் குறித்து ஓரிரு வார்த்தைகள்

படிகள், இதழ் பற்றிப் பலர் கேட்கிறார்கள். ஜி.கே. இராமசாமி, மற்றும் சிவராமன் என்ற இரண்டு சமூகவியல் பேராசிரியர்களுடன் செயல்பட்டேன்.அவர்களின் சமூகவியல் அறிவு அவ்விதழில் பிரதிபலித்தது. சிற்றேடு என்ற இதழ் தமிழ்த்துறையையும் சிறுபத்திரிகையும் இணைக்கும் இலட்சியத்தில் பல இளம் பேராசிரிய நண்பர்கள் துணையுடன் தொடங்கப்பட்டது என்பதைத்தெரிவிக்கிறேன்.

இலக்கு இலக்கியப் போக்குகள் வீரியத்துடன் எழும்பி கொஞ்சம் கொஞ்சமாக நீர்த்துப் போனதாக உணர்கிறீர்களா?

ஓ, நீங்கள் இலக்குக் கூட்டங்களில் கலந்திருப்பீர்கள் அல்லவா? இலக்கு அமைப்பு, பத்தாண்டு தமிழிலக்கியப் போக்குகளை மதிப்பிடுவதை ஒரு திட்டமாக வைத்திருந்தது. அப்படி மூன்று நாள் கருத்தரங்கு சென்னை வில்லிவாக்கத்தில் நடந்தது. அது ஒரு முக்கியமான இலட்சியத்தை வைத்திருந்தது. மாஸ் கல்சர் என்று சொல்லப்படும் பெரும் பத்திரிகை மற்றும் பொது சன மாயையை மக்களிடம் உருவாக்கும் சக்திகளை அடையாளம்

காண்பது. அப்போது மாதநாவல் தமிழில் உச்சத்தில் விற்ற சமயம். சுஜாதா பெரிய பத்திரிகை வியாபாரத்திற்குப் புது வேகம் கொடுத்தார். இலக்கியம் வணிகப்பொருள் அல்ல என்ற முழக்கத்துடன் பல மாறுபட்ட கருத்துள்ளவர்களை, கோவை ஞானி, திருச்சி ஆல்பர்ட், அக்னிபுத்திரன், பெங்களூர் படிகள், திருச்சி மானுடம் இதழ், பு.வ.மணிக்கண்ணனின் நீலமலை பனிமலர் போன்ற அமைப்புகளும் தனிநபர்களும் இணைந்து சிலகாலம் கருத்தரங்குகள் நடந்தன.சென்னையில் நடந்தது. மதுரைப் பல்கலைக்கழகத்தில் மூன்றுநாள் கருத்தரங்கம் நடந்தது. அப்போது இளைஞராக இருந்த, இன்றைய நீதியரசர் மகாதேவன் சென்னையிலிருந்து அதற்காகவே மதுரைக்கு வந்து கலந்து கருத்தரங்கைக்கேட்டார். கோவை, பெங்களூர், திருச்சி, ஹோசூர் என்றெல்லாம் இடங்களில் கருத்தரங்குகள் ஏற்பாடாயின. ஒவ்வொரு கருத்தரங்கும் நூல்களாக வந்தன. பல தகவல்கள் மறந்துவிட்டன. இந்தச் செயல்களைத் தொடர்வீர்களா எனக்கேட்கிறீகள். இளைஞர்கள் முன்னெடுக்க வேண்டும்.

பிறமொழிகளைப்போலல்லாது, தமிழில் தலித் இலக்கியப் படைப்புக்கள் பெரிய அளவில் வரவில்லை என்றே தோன்றுகிறது; உங்களுடைய பார்வையில் எவ்வாறு கணிக்கிறீர்கள்?

பிற மொழிகளான கன்னடம், மராத்தி போன்றவற்றில் தலித் இலக்கியம் முக்கியம். நான் கூட சாகித்திய அக்காடமி மூலம் கன்னடத்தில் தலித் இலக்கியம் என்று ஒரு கன்னட தலித் இலக்கியத் தொகுப்பு நூலை அறிமுகம் செய்துள்ளேன். பலர் மூலம் மொழிபெயர்த்த கன்னட இலக்கிய மாதிரிகளைஅந்த நூல் அறிமுகம் செய்யும். பிரதிபா, நீங்கள் எல்லாம் கவிதை எழுதிய அக்கால கட்டத்தில் தலித் இலக்கியம் தமிழில் பிற மொழிகள் போல முக்கியமாகும் என நினைத்தோம். 1980 வாக்கில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒரு கருத்தரங்கு நடத்தியபோது எதிர்காலக் கவிதை எனத் தலைப்புத் தந்தார்கள். நான், தமிழில் எதிர்காலத்தில் தலித் கவிதை வரப்போகிறது என கட்டுரை வாசித்தேன். தமிழில் முற்போக்கு இயக்கம் சார்ந்து இலக்கியம் உள்ளது. பெண்ணிய இயக்கம் சார்ந்து கவிதை உள்ளது. இன்னும் சிலகாலம் போனபிறகு தான் தலித் இயக்கம் ஒரு இயக்கமாக வரையறுக்கப்படுமா தமிழில் எனக்கூறமுடியும் என்று நினைக்கிறேன். ஆனால் வரையறை பெறவேண்டும். பரியேறும் பெருமாள் போன்ற திரைப்படம் இப்போது எல்லோர் கவனத்தையும் கவர்கிறது. தலித் பிரச்சனையை வேறு கோணத்தில் அது அணுகுகிறது.

இந்திய கம்யூனிச வரலாற்றை எவ்வாறு பார்க்கிறீர்கள்? அதன் இயல்பூக்கங்கள் உயிரோட்டத்துடன் இன்னும் இருப்பதாகக் கருதுகிறீர்களா? கம்யூனிசச் சித்தாந்தம் சார்ந்த புனைவுகள் தமிழில் போதுமான அளவில் வெளிவந்துள்ளனவா?

உலக கம்யூனிசம் இன்று மாறிவிட்டது. புதுக்கம்யூனிசம் என்று பெயருடன் ஒரு போக்கைச் சிலர் உருவாக்க முன்று வருகின்றனர். அலென் பதயூ (*Alain Badiou.*), ஸ்லவாய் ஷிஷெக்(*Slavoj Zizek*) போன்றோர். முதலாமவர் பிரான்ஸ் நாட்டுத் தத்துவப்பேராசிரியர். அல்தூசரின் மாணவர். இரண்டாமவர் ஸ்லோவொக்கியா என்று இன்றைக்கு அழைக்கப்படும் சிறிய ஐரோப்பிய நாட்டவர். பழைய யுகோஸ்லாவாகிய பல துண்டுகளாக உடைந்த போது உருவான நாடு. இரண்டாமவர், லக்கான் என்ற தத்துவ வாதியைப்பயன்படுத்துகிறார். தத்துவவாதி ஹெஹலையும். இவர்கள் எல்லோரும் ஸ்டாலினை ஏற்பதில்லை. நான் புதுக்கம்யூனிசம் என்ற தலைப்பில் சில ஆண்டுகளுக்கு முன்பு ஓர் கட்டுரையைச் சிற்றேடு இதழில் வெளியிட்டேன். பழைய தவறுகளை, அடையாளம் கண்டு ஒதுக்கிப் புதுக்கம்யூனிசம் இன்று மனித குலத்தைக் காப்பாற்றும் போக்கில் சிந்தனைத் துறையில் ஒரு போக்காய் வருகிறது. சமீபத்தில் அமெரிக்காவில் கறுப்பினத்தைச் சார்ந்த ஜார்ஜ் ப்ளாய்ட் கொல்லப்பட்டபோது எதிர்ப்புத்தெரிவிக்க உருவான எதிர் பாசிச (ஆன்டிஃபா) அமைப்புக்கள் இத்தகைய சிந்தனைகளால் ஊக்கம் பெற்றவை. இப்படி மார்க்சியச் சிந்தனைகளின் மாற்றுவழி பற்றி சோவியத் யூனியன் உடையாமல் இருந்தபோதே பலர் சித்தித்தனர். அவர்கள் ஆரம்பத்தில்

பிராங்பர்ட் மார்க்சியர் எனப்பெயரிட்டுக்கொண்டு உருவானார்கள். அவர்களில் ஒருவர் மாக்ஸ் ஹொர்ஹேமர், இன்னொருவர் ஊடகங்கள் பற்றி ஆய்ந்த தியோடர் அடார்னோ, வேறொருவர் ஹெர்பர்ட் மார்க்யூஸ். மார்க்சியத்தில் உளவியலாளரான இவர் பிராய்ட் சிந்தனைகளை இணைத்தவர். இன்னும் பலர். இவர்கள் எல்லோரும் மார்க்சியத்தில் வந்து சேர்ந்த அதிகமான பகுத்தறிவுப் போக்குத்தான், ஸ்டாலினிசமும் இறுக்கமான எதேச்சாதிகாரப்போக்கும் கம்யூனிச இயக்கத்தில் உருவாகக் காரணங்கள் என்றனர். அப்போக்கை எந்திர மயவாத பகுத்தறிவு என்று பெயரிட்டு அழைத்தனர். அது மிகையான விஞ்ஞானத்தை வலியுறுத்திப் பேசியதால் வந்த ஆபத்து என்றனர். அதற்கு எதிராக இவர்கள் சிந்தித்தனர். பகுத்தறிவுத் தத்துவத்துக்குக்கு எதிரான தத்துவங்களையும் சமூகச்சிந்தனைகளையும் மார்க்சியத்தில் கொண்டுவந்து அந்தந்த நாடுகளுக்கும் சூழலுக்கும் தக இணைத்தனர். ஆனால் இரண்டாம் அலை பிரங்ஃபர்ட் சிந்தனையாளரான, யுர்கன் ஹேபெர்மாஸ் என்பவர், இவர்கள் பலருக்கு இளையவர். அவர் பகுத்தறிவும் அதனால் சமூகத்தில் உருவான வளர்ச்சியும் தன் பயன்பாட்டை முடித்துக்கொள்ளவில்லை என ஒரு கருத்தை முன்வைத்தார். இவர்களுக்கு மாற்று. ஒருவகையில் பெரியார் கருத்துக்கள் இன்னும்வேண்டும் என்று கூறுவதுபோன்ற விவாதம் இது. பெரியாரில் மேற்கத்திய அறிவுவாதம் அதிகம் உண்டு. இவர்கள் எல்லோரும் தங்களை விமர்சனச் சிந்தனையாளர்கள் என்று அழைத்துக்கொண்டனர். எதிர்த்து, கேள்விகேட்டு, விவாதித்துச் சிந்தனையை உருவாக்கவேண்டும் என்பது இவர்களது கருத்து. இவர்களிடமிருந்து நாம் பெறவேண்டிய பாடம், எது என்றால் இவர்கள் பலரும் இலக்கியத்தை மிகமுக்கியமான சிந்தனை என எடுத்துக்கொண்டனர் என்பதுதான். இவர்களில் ஹேபர்மாஸை அதிகம் நாம் கற்க வேண்டும் என்பேன். அவர் நவீன பெருமுதலாளியம் இன்றைய அரசுகளிடம் ஏற்படுத்தும் , பண்பு மாற்றம் பற்றி ஆய்கிறார். ஊடகங்கள் பற்றி ஆய்கிறார். நவீன முதலாளியம் உருவாக்கும் புதுத் தன்மைகள் பற்றிச்சிந்திப்பவர். சமயம், சட்டத்துறைச் சிந்தனைகள், மொழியியலின் பொருண்மையியல் (*Semantics*) போன்ற மிக நவீனமானவற்றைச் சிந்திக்கிறார். இந்தியாவில் வலதுசாரி மௌடீக வாதம் வளரும்போது பெரியார் வேண்டும் என்று எல்லா இடங்களிலும் பேசுகிறார்கள். பகுத்தறிவை அடிப்படையாக்கியுள்ள ஹேபர்மாஸையும் நாம் இங்குக் கொண்டு வரவேண்டும். அதேநேரத்தில் நம்முடையது மரபுரீதியான சமூகம். எனவே நமக்கு வேண்டியது, முழு அறிவு வாதமா, அதற்கு எதிர்ப்பான எதிர்-அறிவுவாதமா, என்றால் நம் சூழலுக்குப் பொருத்த மானதைக் கொண்டுவந்து வடிவமைக்கவேண்டும் என்பதே என் பதிலாகும். அது போல இன்று நம் முன்புள்ள ஆபத்து வலதுசாரிகள், அடையாளத்தோடும் அடையாளமில்லாமலும் தமிழுக்குள் ஊடுருவுவதைத் தடுப்பது. அவர்கள் அறிவைப் பயன்படுத்தாமல் கூட்டத்தையும் தேசப்பற்றையும் உபயோகப் படுத்தும் அரசியலைச் செய்கிறார்கள். நாமா, அந்நியரா என்ற இருமையில் ஒன்றைத்தேர்ந்தெடு எனக் கேட்கும் சிந்தனையைப் பயன்படுத்துகின்றனர். பெரியாரை மட்டும் அவர்களால் சாயம் மாற்றிப் பயன்படுத்த முடியவில்லை. அம்பேத்கரை கூட உள்ளே இழுத்துக் கொண்டனர். ஏன் பெரியாரை மறுக்கின்றனர்? சிலை மீது காவிச்சாயம் பூசுகின்றனர்? கோயில் கட்டினால் எல்லாம் சரியாகிவிடும் என்ற மாயையும் உருவாக்குகின்றனர். பெரிய ஆபத்துக்கள் காத்திருக்கின்றன. இதற்கு மார்க்சிய மரபின் குறிப்பிட்ட விளக்கங்களை மட்டும் ஏற்பது என்ற எண்ணத்தை விட்டு நம் பார்வையை அகன்றதாக்கவேண்டும். அமெரிக்காவில் உள்ள ஃப்ரடரிக் ஜேம்சன், இங்கிலாந்தின் டெரிஈகிள்டன், போன்றோர் விரிவாக்கப்பட்ட மார்க்சிய மரபில் வருவர். இடதுசாரி அறிவை விசாலமாக்குகின்றனர். பாரதி புத்தகாலயம், டெரிஈகிள்டனின் நூலையும், ஜார்ஜ் லூக்காக்சின் வரலாறும் வர்க்க உணர்வும் என்ற நூலையும் எர்னஸ்ட் பிஷரின், கலையின் அவசியம் என்ற நூலையும் வெளியிட்டுள்ளது. இந்நூல்கள் பாராட்டுக்குரியன.



தற்போது சாகித்ய அகாதெமியில் என்ன பொறுப்பு வகிக்கிறீர்கள்? இப்பொறுப்பின் மூலம் தமிழ் இலக்கிய உலகில் நீங்கள் செய்ய நினைத்திருக்கும் செயற்பாடுகள் என்னென்ன?

சாகித்திய அகாடமியின் இப்போதுள்ள ஐந்து பொதுக்குழு உறுப்பினரில் நானொருவன். ஒருங்கிணைப்பாளர் கவிஞர் சிற்பி. ஆரம்பத்தில் இந்தியாவின் இருபத்திரண்டு மொழிகளிலிருந்து வருபவர்களைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்பட்டது. இந்தியாவின் பல மொழிகளின் பிரதிநிதிகள் ஒரே இடத்தில் கூடுவது எவ்வளவு முக்கியம். அப்படிப்பட்ட அமைப்பு இது ஒன்றே. ஆனால் ஒரு விஷயம் தெளிவானது ஒவ்வொரு மொழியும் வேறு வேறானது என்பது. இந்திய மொழி என்று ஒன்றும் இல்லை. இலக்கியத்தைப்பொறுத்த அளவில் இந்தி கூட பிராந்திய மொழியே. இந்திய இலக்கியம் என்று ஒன்று இல்லை. ஒவ்வொரு மொழியிலும் வேறு வேறு இலக்கியங்கள் அந்தந்த பிராந்தியத்துக்கு ஏற்றவிதமாய் இருக்கின்றன. இரண்டு விசயங்களில் அம்மொழிகளுக்குள் ஒற்றுமை உள்ளன. ஒன்று, அவை பெரும்பாலும் ஒன்றுபோல, தற்கால இலக்கியத்தைப் பொறுத்தமட்டில், ஆங்கில இலக்கியத்தின் நிழல்கள். நாவலும் சிறுகதையும் கவிதையும் கூட அப்படித்தான். இரண்டு, அவை பெரும்பாலும் இராமாயண, மகாபாரதத்தின் நிழல்கள். சங்க மரபும், சிலப்பதிகார, மணிமேகலை கதை மரபும் அவர்கள் அறியாதவை. நம் தூய தமிழ் மரபை நம் தொடக்க கால நாவலாசிரியர்களும் படைப்பாளிகளும் உதாசீனப்படுத்தி ஆங்கிலம் வழி வரும் நாவல், படைப்பு, மரபுக்குப் போயினர். நாம், மணிமேகலை மரபில் கதை எழுதினால் நம் படைப்புப் புதிய இந்திய மரபை, படைப்பு இலக்கியத்தில் கொண்டுவரும். அசோகமித்திரனின் ஆகாசத்தாமரை என்ற நாவல் மற்றும் கதைகள், காஃப்கா போல இருக்கும். நகுலனின் நாவல் வர்ஜினியா வுல்ஃப், போல இருக்கும். இது போல அனைத்திந்தியாவிலும் பார்க்கலாம். இது மாறி நம் தமிழ் மரபின்வழி நவீன இலக்கியம் வர வேண்டும். அப்போது இந்திய மரபாய்த் தமிழ் மரபு எல்லா இடத்திலும் பரவும். இரண்டாயிரம் ஆண்டுகளாய் வற்றாத ஆறுபோல பாயும் இலக்கிய மரபு சமஸ்கிருதம் தவிர எந்த இந்திய மொழிக்கும் கிடையாது. சமஸ்கிருதத்தில் தற்கால இலக்கியம் தமிழ் போல இல்லை. செயற்கையாக எழுதுகின்றனர். தமிழ் பழமையும் தற்கால இயல்புத்தன்மையும் கொண்ட மொழி. பிற மொழியினர், அவர்கள் பின்பற்றும் போலி ஆங்கில மாதிரியும் மீண்டும் மீண்டும் பின்பற்றப்படும் போலி இராமாயண, மகாபாரத மாதிரியும் இனி மேல் ஒதுங்கும். இதற்கு மிகப் பல காலம் எடுக்கும். நம் மாநில அரசுகளும் பிற மொழிகளில் இருந்து பிரதிநிதிகளை அழைத்துத் தமிழின் பல்வேறு போக்குக்களை அவர்களின் மொழிகளுடன் ஒப்பிட வேண்டும். அப்போது தமிழின் தனித்தன்மை விளங்கும். சமீபத்தில் கன்னடத்தில் தொல்காப்பியம் மொழிபெயர்ப்பு வந்துள்ளது. அவர்கள் அதற்கு ஏங்கிக்கொண்டிருந்தனர். அவர்கள் சமஸ்கிருதம் அல்லாத கூறுகளைத் தேட ஆரம்பித்துள்ளார்கள். தமிழுக்கும் கன்னடத்துக்கும் ஒரு ஆழமான தொடர்பு உண்டு. வலதுசாரிகளால் கொல்லப்பட்ட முன்னாள் துணை வேந்தரான கல்புர்ஹி, சங்க இலக்கியம் மீதும் தமிழ் மீதும் மிகவும் அன்பு கொண்டவர் என்பதை நாம் அறியவேண்டும். பெரியார் சிந்தனைகளின் தேர்ந்தெடுத்த தொகுப்பையும் கன்னடத்தில் கொண்டுவந்துள்ளனர். இதுபோல பிற மொழிகளோடு நம் மொழியை ஒப்பிட சாகித்திய அக்காடமியைப் பயன் படுத்திக்கொள்ளலாம்.

அஞ்சலி

நவீன ஓவியத்தின் தூதுவர்



- டிராட்ஸ்கி மருது

முகநூலில் பதிவிடுவதற்காக எனது சேகரிப்பில் இருந்த ஓவியர் திரு. ஆதிமூலத்தின் கடிதம் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்குப் பின் கண்களில் பட்டவுடன் எடுத்துக் குறிப்பு எழுதிக் கொண்டிருந்தபோது இடையில் அவரது இளைய மகன் அபராஜிதன் தொலைபேசியில் வந்து சா. கந்தசாமி மறைந்துவிட்டார் என்ற அதிர்ச்சிச் செய்தியைச் சொன்னார்.

திரு. ஆதிமூலம் நினைவில் செயல்படும்போது சா.கா. மறைந்த செய்தி வந்தது. என்னோடு இருவருக்குமான நெருக்கம், நட்பு என எனது வாழ்நாளில் இருவரும் நிறைந்திருந்த கணங்களை மனம் விரித்துக்கொண்டே சென்றது. திரு. கந்தசாமியின் உற்சாகம் மேலும், அவரது அலங்காரமும் போலித்தனமும் அற்ற எழுத்து என பல மனம் முழுவதும் வந்து நிறைந்தது.

அவரை ஐம்பது ஆண்டுகள் அறிந்திருந்ததுடன் கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் அவர் அருகிலேயே நட்பாடு இருக்கும் வாய்ப்பையும் பெற்றிருந்ததோடு எனது வாழ்வில் மிக முக்கியத் தருணத்திலும் அவர் இருக்கிறார் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். ஓவியக் கல்லூரி நாட்களில் சாயாவனம் மூலம் அறிமுகமானார். எனது ஆசிரியர் ஓவியர் R.B. பாஸ்கரன், சிற்பி தட்சிணாமூர்த்தி ஆகியோர் மூலம் அது நாள் அவரை எழுத்தாளராக அறிந்திருந்தது மட்டும்தான். தனது 20 வயதுவாக்கில் எழுதிய சாயாவனத்தோடு அறியப்பட்டு 80 ஆண்டுகள் பல்வேறு படைப்புகளோடு தமிழ் சமூகத்தோடு தன்னை முன் நிறுத்தாமல் எளிமையாகவும் அற்புதமாகவும் செயல்பட்டிருக்கிறார். தக்கையின் மீது நான்கு கண்கள், தொலைந்து போனவர்கள், அவன் ஆனது, சூரியவம்சம், விசாரணை கமிஷன் போன்றவற்றோடு கட்டுரைகள், ஆவணப் படங்கள் என்று விரிந்த தளத்தில் இயங்கியவர். தனிப்பட்ட முறையில் எனது வாழ்வில் வழி நடத்தியவர் என்ற முறையிலும் நிரம்பியிருக்கிறார். 1970 களில் எனது ஓவியக் கல்லூரி நாட்களில் கல்லூரியில் படைப்பு நிலை சார்ந்து ஆசிரியர் மாணவர்கள் என்று உக்கிரமான காலம். இப்போதும் அனைவரும் நினைவுகொள்ளும் காலம். 60களில் கல்லூரி வாழ்வை முடித்திருந்த பாஸ்கர், தட்சிணா, ஆதிமூலம் இளம் ஓவியர்களாக அறியப்பட்டிருந்ததுடன் பாஸ்கரும் தட்சிணாவும் நேரடி ஆசிரியர்கள் எனக்கு. ஆதி அப்போது வீவர்ஸ் சர்வீஸ் சென்டரில் வேலையில் இருக்கிறார். சிற்பி தனபால், சந்தானராஜ் போன்றவர்கள் கல்லூரியில் இருப்பதால் ஆதியும் மாலை அங்கு வந்துவிடுவார். அப்படியான காலம்.

இம்மூவரும் 60களின் கடைசியிலும் 70களிலும் சிறு பத்திரிக்கைகளோடு பெரும் பங்களித்து இயங்கியவர்கள் என்பதும் மாணவனாகிய என்னையும் எனது ஓவியங்களையும் நீயும் இயங்க வேண்டும் என்று இணைத்தவர்கள். பல இலக்கிய நண்பர்களையும் எனக்கு அறிமுகப்படுத்தினர். எனது கோட்டின்மேல் உள்ள நம்பிக்கையில்

இணைத்ததுடன் நான் இன்றுவரை செயல்பட அதுவே காரணம் என்றும் நம்புகிறேன். குறிப்பாக க்ரியா ராமகிருஷ்ணன், எஸ்.வி. ராஜதுரை, ஞானக்கூத்தன், ஆத்மாநாம், வீராச்சாமி, வைதீஸ்வரன், முத்துச்சாமி எனப் பலரை அறிமுகப்படுத்தியதுடன் அவர்களோடு ஓவியனாகச் செயல்படத் தொடர்ந்து ஊக்கப்படுத்தினர். மாணவப் பருவத்தில் சா. கந்தசாமியை அறிந்திருந்ததுடன் ஓவியக் காட்சிகளுக்கு அவர் வரும் போதும் தூரத்திலேயே பார்த்திருப்பதுடன் அவருடன் பெருத்த அறிமுகம் இல்லை. தொடர்ந்து வீவர்ஸ் சர்வீஸ் சென்டரிலேயே வேலை கிடைத்தும் விஜயவாடாவில் 4 ஆண்டுகள் இருந்தாலும் சிறு பத்திரிக்கை, இலக்கியம் சார்ந்த நண்பர்களோடு தொடர்பில் இருந்தேன். பிறகு மாற்றலாகி சென்னைக்கு ஓவியர் ஆதிமூலம் அருகிலேயே வந்து அமர்ந்துவிட்டேன். அப்போது சென்னை அலுவலகம் 'நந்தனம்-சேமியர்ஸ் சாலை'யில் இருந்தது. இங்கு வந்த பிறகு தீவிரமாக இயங்க ஆரபித்தபோது சிறு பத்திரிக்கையைத் தாண்டி பொது வெளியிலும், வெகு மக்கள் பத்திரிக்கைகளிலும் இயங்க வேண்டி ஆதிமூலம் முன் எடுத்ததோடு நானும் இயங்க வேண்டும் என என்னையும் அறிவுறுத்தி செயல்பட வைத்தார்.

இக்கால கட்டத்தில் நந்தனம் அலுவலகத்திற்குப் பக்கத்திலேயே கந்தசாமி அவர்களின் வீடு இருந்தது. ஒரு பஸ் ஸ்டாப் தள்ளி நான் இருந்தேன். சந்திப்பது இன்னும் சுலபமாகிவிட்டது. 80களின் நடுவில் கிட்டத்தட்ட மதியம் உணவிற்குப் பிறகு கந்தசாமி தினமும் எங்கள் அலுவலகத்திற்கு வந்துவிடுவார். ஆதிமூலத்திற்கும் எனக்கும் நடுவில் வந்து அமர்ந்துவிடுவார். மூத்த ஓவியர்கள் ரெட்டப்ப நாயுடு, ராஜேந்திரன் செல்லப்பா போன்ற ஓவியர்கள் நடுவில் ஓவியம், இலக்கியம், சினிமா என்று எல்லோரோடும் கந்தசாமி உரையாடுவார். அக்கால கட்டத்தில் குறிப்பாக A.S. பன்னீர்செல்வம், கலைஞன் பதிப்பகம் மாசிலாமணி என பலர் வந்துவிடுவர். ஒரு திருமண விழாவில் ஆதியும், கந்தசாமியும் குங்குமம் இதழ் ஆசிரியர் பாவைச் சந்திரனோடு பேசியபோது மருதுவையும் பயன்படுத்தலாம் என்று இருவரும் சொல்ல அடுத்த நாளில் இருந்து பாவையோடு இயங்கும்படியும், பின்பு ஆனந்தவிகடனில் துணை ஆசிரியராக இருந்த இரா.வேலுச்சாமி அவர்களை முதன் முதலாக அழைத்து வந்து நவீனக் கவிஞர்களின் கவிதைக்காக ஆனந்தவிகடனின் துணை இதழில் ஆதியையும் என்னையும் இணைத்து வரையவைக்க வேலுச்சாமியோடு இணைத்தவர் சா. கந்தசாமி. எனது ஆசிரியர் ஆர்.பி. பாஸ்கரன் அவர்கள் தமிழ்ச் சிறு பத்திரிக்கைகளுடன் நவீன ஓவியத்தைச் சேர்த்ததில் சா. கந்தசாமிக்குத்தான் பெரிய பங்கு இருக்கிறது என்று சொல்லுவார். எனக்கு தெரிந்து ஓவியக் கல்லூரி படிக்கும்போது ஆதி, பாஸ்கர், தட்சிணா ஆகியோர் தங்கள் செலவில் ஓவியத்தை Block செய்து அளிப்பதையும் ஆசிரியர்களின் மேசையில் இருந்து சிறு பத்திரிக்கைகளுக்குச் செல்வதையும் நேரில் கண்ட சாட்சி நான்தான் என்றும் கூறுவேன். தங்கள் அளவுக்கு அவர்கள் சிறு பத்திரிக்கைகளுக்கு ஓவியம் தருவதுடன்

பொருளாதாரச் சுமையையும் குறைக்க Blocம் கொடுத்து உதவியிருக்கிறார்கள். வெகு சிலருக்கே தெரியும் கந்தசாமி ஓவியராக வேண்டும் என்று ஆரம்பத்தில் முயன்றார் என்பது. அவர் என்னிடம் ஒருமுறை, தான் இளம் வயதில் ஓவியராகத் தான் வர வேண்டும் என்று விரும்பியதாகவும் எழுத்தில் சுகம் கண்டவுடன் நமக்கான வெளி எழுத்திலேயே இருக்கிறது என்றும் எனக்கான வெளியாக இளம் வயதிலேயே உணர்ந்து எழுத வந்துவிட்டேன் என்றும் அப்பார்வையே என்னை வளர்த்தது என்றும் கூறியிருக்கிறார்.

அதனுடைய நீட்சியே நவீன ஓவியத்தின்பால் உள்ள பார்வை புத்தகம் தயாரிப்பது, பாரம்பரிய கலை வடிவங்கள் பற்றிய கட்டுரைகள், ஆவணப்பட முயற்சி, குறிப்பாக ஓவியர்கள் பற்றி ஆவணப்படங்கள் என்று விரிந்தது. இவரோடு சம காலத்தில் இருந்த ஓவியர்கள் அனைவருக்கும் மற்றுமொரு தொடர்பு திரைப்படக் கல்லூரியின் மீதானது. கிட்டத்தட்ட கந்தசாமியோடு ராஜவேலு, தட்சிணாமூர்த்தி, ஆதிமூலம், ராஜேந்திரன் மற்றும் என்னுடன் பிறந்தவர்கள் மற்றும் அவர்களின் மகன்கள் என்று திரைப்படக் கல்லூரி, ஓவியக் கல்லூரிகளில் தொடர்ந்து படித்தனர். அவ்வாறாக பலருக்கு உதவியதிலும் கந்தசாமிக்குப் பங்குண்டு.

இளம் கலைஞர்களை ஊக்கப்படுத்துவதில் இணையற்றவர். எப்போதும் கண்டவுன் உற்சாகப்படுத்திக் கொண்டே இருப்பார். கறாரான விமர்சனத்தையும் தெளிவாக வைப்பார். கடைசியாக பரிசல் செந்தில்நாதன் புத்தகக் கடையில் ஆதியின் சித்திரங்களைத் திறந்து வைத்துப் பேசும்போது நவீன ஓவியங்கள் பொது வெளியில் வெகுமக்கள் இதழில் வந்த காலத்தை சி.மோகன் தவறுதலாகச் சொன்னபோது அதை அப்போதே திருத்தியும், விமர்சித்தும் திரு சி. மோகன் ஏற்றுக்கொள்ளும்படி செய்து வழி நடத்திப் பேசினார். அவரை நான் கடைசியாகப் பார்த்ததும் அன்றுதான். கடந்த நாற்பது ஆண்டுகளில் எந்த ஓவியக் காட்சிக்கும், எந்த இலக்கியக் கூட்டங்களுக்கும் சென்று திரும்பும்போதும் அவரோடு பாராட்டையும், எதிர்வினையையும் கேட்டுக் கொண்டே

பலமுறை அவரை வீடுவரை சென்று விட்டு வந்திருக்கிறேன். அவரது கணிப்பும் சரியாகவே இருந்திருக்கிறது. அவரது பல கதைகளுக்கும், சில அட்டைகளுக்கும் சித்திரங்கள் தீட்டியிருக்கிறேன். உடனே தொலைபேசியில் வந்துவிடுவார். திராவிட இயக்க உணர்வை அடிநாதமாகக் கொண்டிருந்தாலும் பெரும் பண்போடு பிராமண நண்பர்களிடம் அவர் நட்பு பாராட்டி வந்திருப்பது கண்டு வியந்திருக்கிறேன். அவர்கள் முன்பு காட்டும் நட்பின் மேன்மையையும், அவர் பேசுகிற விமர்சனங்களும் சக மனிதர்களோடு இயங்கிய எளிமையும் அவரது எழுத்தில் முழுமையும் இருக்கிறது. எளிய மனிதர்கள் பற்றியே எழுதினார், செயல்பட்டார். வெண்ணிலா தொகுத்த நூலுக்கு அவர் என்னைப் பற்றி எழுதியதை முதலில் கண்டதும் பெரிதும் நெகிழ்ந்து போனேன்.

நட்புநிலையின் முழுமைதான் ஆதி அவர்கள் நினைவில் நான் இருந்த கணம் அவரோடு இணைந்துவிட்டார் போல் கண்கலங்கி நின்றேன். இலக்கிய இதழ்களில் நவீன ஓவியம் இணைந்ததும், நண்பர்களின் துணை நின்று பொதுவெளிக்கு அதைக் கடத்த முற்பட்டதிலும் எழுத்தாளர் என்ற முறையில் கந்தசாமி முதலில் நிற்கிறார். ஓவியர்கள் சூழ்ந்திருக்கிற சூழலில் எப்போதும் தவறாது அவர் இருப்பு இருந்திருக்கிறது.

சா. கந்தசாமி என்ற கலைஞன் தமிழ்ச் சமூகத்தின் மனதில் எப்போதும் நிலைத்திருப்பார்.

அஞ்சலி

தமிழ்–மார்க்சிய அறிவுச்சுடர் கோவை ஞானி

ஜமாலன்



தமிழின் மார்க்சிய முன்னோடிகளில் ஒருவரும், சிறந்த தமிழ் இலக்கிய அறிஞரும், ஆய்வாளரும், மார்க்சியத்தின் மாற்று மரபு குறித்து சிந்தித்தவரும், மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்று இந்திய வழிபட்ட மார்க்சியத்தை முன்வைத்தவரும், பரிமாணம், நிகழ் போன்ற சிற்றிதழ்கள் வழியாக மார்க்சிய சிந்தனையை தொடர்ந்து உரையாடலில் முன்வைத்து பல இளைஞர்களை மார்க்சிய சிந்தனைக்குள் கொண்டுவந்தவருமான கோவை ஞானி அவர்களின் இறப்பு, தமிழ் மார்க்சிய ஆய்வுலகிற்கு ஒரு பேரிழப்பாகும்.

கி.பழனிச்சாமி, என்ற இயற்பெயரைக் கொண்ட ஞானி, கோவையில் உள்ள சோமனூரில் 1-7-1935 இல் பிறந்தார். கோவையிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் தமிழிலக்கியம் பயின்றவர். கோவையில் தமிழாசிரியராக 30 ஆண்டுகள் பணியாற்றினார். இவரது துணைவியார் மு. இந்திராணி, உடற்கல்வி ஆசிரியராகப் பணியாற்றியவர். தன் 75-வது வயதில் புற்றுநோயால் காலமானார். ஞானி நீரிழிவு நோயால் கண்பார்வை இழந்தபோதிலும், உதவியாளர் துணையோடு, படித்தும் எழுதியும் இயங்கி வந்தவர். வாசிப்பு, எழுத்து இரண்டிலும் தொடர்ந்து தனது இருப்பை தக்கவைத்துக் கொண்டிருந்த ஞானி, தமிழ் தேசிய உணர்வையும், மார்க்சியத்தையும் இரண்டு கண்களாக கொண்டு இயங்கியவர்.

தமிழில் மாற்று சிந்தனை மரபை தொடர்ந்து முன்வைத்துவரும் சிற்றிதழ் இயக்கத்துடன் தன்னை பிணைத்துக் கொண்டவர். மார்க்சிய இதழாகிய புதிய தலைமுறையோடும் (1968-70) வானம்பாடி இயக்கத்தோடும் தொடர்பு கொண்டிருந்தார். வானம்பாடி இயக்கம்தான் இன்றைய திராவிட இயக்கம் மற்றும் தமிழியல் சார்ந்த சிந்தனைப் பின்புலத்திற்கான இலக்கியக் களத்தை அமைத்துத் தந்தது. மார்க்சியத்தின் பன்முகப் பரிமாணங்களை வெளிப்படுத்தும் முறையில் பரிமாணம் (1979-83), நிகழ் (1988-96), தமிழ்நேயம் (1998-2012) ஆகிய சிற்றிதழ்களை நண்பர்கள் ஒத்துழைப்போடு இவர் வெளியிட்டார்.

சிற்றிதழ்களோடு உருவான சீரிய சிந்தனைத் தளத்தில் தொடர்ந்து இயங்கியதால் மார்க்சிய அழகியலையும், தமிழில் சிற்றிதழ் சார்ந்து உருவான நவீனத்துவ இலக்கியத்தையும் இணைத்த ஒரு பார்வையை தொடர்ந்து வலியுறுத்தியவர். இத்தகைய வலியுறத்தல்கள் சிலநேரம் அவரை கருத்துமுதல்வாத எல்லை நோக்கி நகர்த்திவிட்டதான விமர்சனங்கள் எழுந்ததுண்டு. கட்சி சார்ந்த மார்க்சியர்களிடையே ஞானி மீது கடும் விமர்சனங்கள் உண்டு. பொதுவாக, அவரை அத்வைத மார்க்சியவாதி என்றே நான் இயங்கிய இயக்கத்தில் குறிப்பிடுவோம். அதேவேளையில் ஞானியிடமும் அவர்கள் மீதான விமர்சனங்கள் உண்டு. மார்க்சியத்தை ஐரோப்பிய மையவாத பாணியில் யாந்தரீகமாக பயன்படுத்துகிறார்கள் என்று. மார்க்சியம் குறித்த ஒரு விவாதக்களத்தை உருவாக்கியதில் அவருக்கு முக்கிய பங்கு உண்டு. 80-களில் உருவான தேசிய இனப்பிரச்சனையை முன்வைத்து, மார்க்சியத்தையும் தமிழ்தேசியத்தையும் இணைத்து ஒரு கருத்துநிலையை உருவாக்கியவர் ஞானி.

கோவை ஞானியை, இரட்டையர் என்று கூறுமளவிற்கு ஞானியுடன் சேர்ந்தியங்கிய எஸ். என் நாகராசனோடு, நான் மாணவனாக இருந்த காலத்தில் ஈரோட்டில் ஒரு கருத்தரங்கில் சந்தித்திருக்கிறேன். அது மார்க்சியத்தையும் சூழலியல், இந்திய தத்துவ சிந்தனை குறிப்பாக வைணவத்தை இணைத்து கட்டுரைகள் வாசிக்கப்பட்ட இரண்டு நாள் கருத்தரங்கம். முதல் நாள் கருத்தரங்கு முடிந்து இரவு அனைவரும்பல விஷயங்களை விவாதித்தார்கள். எஸ்விஆர், ராஜ் கௌதமன் உள்ளிட்ட தமிழகத்தின் முக்கிய அறிவுஜீவிகள் கலந்துகொண்ட உரையாடல் அது. அந்த இனிய நினைவு என்றும் மனதில் ஞானியை பிம்பப்படுத்திக் கொண்டே இருக்கும். மார்க்சியத்தையும் இந்திய அத்வைத சிந்தனையையும் ஞானி இணைத்து எழுதிய 'இந்திய வாழ்க்கையும் மார்க்சியமும்' என்ற நூல் அப்பொழுது இளைஞர்கள் மத்தியில் விவாதிக்கப்பட்ட ஒருநூல். அக்காலங்களில் மார்க்சியத்தில் எஸ்விஆர் முன்வைத்த இருத்தலியல் மார்க்சியம், எஸ்என் நாகராசனின் வைணவம் சார்ந்த மார்க்சியம், ஞானியின் அத்வைத மார்க்சியம் குறித்து, கட்சி சார்ந்த மார்க்சியர்களிடம் ஒரு எதிர்மறை விமர்சனம் இருந்தது. அதை எல்லாம் மீறி தமிழ் இலக்கியம், தமிழ் தேசிய உணர்வு ஆகியவற்றை மார்க்சிய வழியில் புரிய முற்பட்டு. அதை விரிவாக எழுதியவர் ஞானி.

பழந்தமிழிலக்கியத்தோடும், நவீனத் தமிழிலக்கியத்தோடும் இடையறாத உறவுகொண்டு இயங்கியவர். மார்க்சிய நோக்கில் தமிழிலக்கிய ஆய்வில் கடந்த நாற்பது ஆண்டுகளாக ஈடுபட்டு 25க்கும் மேற்பட்ட திறனாய்வு நூல்களைப் படைத்துள்ளார். இரஷ்ய மார்க்சியம், சீன மார்க்சியம் என்பது போல தமிழ் மார்க்சியம் என்பதை இவர் முன்மொழிந்தார். மார்க்சிய வாய்பாடுகளை தாண்டி அதை மரபுவழியில் உள்வாங்க வேண்டும் என்று பேசியவர். அதன்மீது நமக்கு நிறைய கருத்து மாறுபாடுகள் விமர்சனங்கள் இருந்தாலும், அவரது மார்க்சியம் மக்கள் விடுதலைக்கான சிந்தனை என்கிற உணர்வில் இறுதிவரை நின்றவர் என்பது முக்கியமானது. மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்று அதன் அதீத எல்லையாக இந்துமத அத்வைத ஆன்மீகத்தை நோக்கியதாக மார்க்சியத்தை நகர்த்தினார்.

'தமிழிலக்கியத்தில் மூன்றில் ஒரு பகுதி பக்தி இலக்கியம். பக்தி இலக்கியம் கற்பதற்கு பகுத்தறிவுப் பார்வை போதாது என்கிறார். சமயம் பற்றிய நம் ஆய்வு விரிவுபட வேண்டும் என்கிறார். தமிழ் நமக்கு உயிர் என்று பாரதிதாசன் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை நாம் மெய்ப்பிக்க வேண்டும் என்கிறார். இவையெல்லாம் ஞானியின் கருத்துகளாக மட்டுமில்லை, சுமார் 5000 பக்கங்கள் தோறும் இவரது ஆய்வுக் கட்டுரைகள் அனைத்திலும் இக்கருத்துக்களை மெய்ப்பிக்கும் முறையில்தான் எழுதுகிறார். ஞானியின் வாழ்வுக்கும் அவரது சிந்தனைக்கும் இடையில் இடைவெளி என்பது சிறிதளவுமில்லை.' என்கிறது ஞானியைப்பற்றிய அவரது வலைதள அறிமுகம். மேற்கண்ட அவரது பார்வை மார்க்சிய இடதுசாரி சிந்தனையாளர்கள், திறனாய்வாளர்களிடம் அவரை அந்நியப்படுத்தும் ஒன்றாக இருந்தது.

அதே அறிமுகத்தில், 'உலகமயமாதல் என்னும் பெயரில் வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கு இந்திய அரசு இடம் கொடுத்ததன் விளைவாகத் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் ஏற்பட்ட சீரழிவு பற்றிப் பேசுகிறார். இந்திய அரசோடு ஒத்துழைக்கும் தமிழின தலைவர்களைச் சாடுகிறார். சமதர்மமின்றி நமக்கு எதிர்காலம் இல்லை என்பதை உரத்துச் சொல்கிறார்.'ஞானி குறித்த இக்கருத்து முக்கியமானது. தொடர்ந்து மக்கள் மீது பற்றுறுதி கொண்டவராக, தமிழ் தேசிய உணர்வோடு இயங்கியவராக இருந்தார்.

கோவை ஞானி தமிழ் மார்க்சிய வரலாற்றில் புறக்கணிக்க முடியாதவர். அவரது பக்கங்கள் இல்லாமல் அந்த வரலாறு எழுதப்பட முடியாதது. தோழர் கோவை ஞானி அவர்களை இழந்துவாடும் தோழர்கள், நண்பர்கள், குடும்பத்தினர் அனைவரது சோகத்தையும் பகிரந்து கொள்கிறேன். அவருக்கு எனது இதயபூர்வ அஞ்சலிகள்.

கோவை ஞானி அவர்களின் நூல்கள் அனைத்தும் அவரது தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய கீழ்கண்ட சுட்டியை கிளிக் செய்யவும் *http://kovaignani.org/downloadbooks*

நூல் அறிமுகம்

தகழியின் ஏணிப்படிகள்

- ஸ்ரீதர் மணியன்

1891ஆம் ஆண்டு மலையாள இலக்கிய உலகு தன் முதல் படைப்பினைக் கண்டது. சி.வி.இராமன் பிள்ளை அதனைத் தொடங்கி வைத்தாலும், 1899இல் ஓ.சந்து மேனோனின் இந்துலேகாவே முதல் பெருங்கதை என பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்தகைய மலையாள இலக்கியத்தின் பிதாமகர்களுள் ஒருவராக இன்றுவரை கொண்டாடப்படுபவர் தகழி சிவசங்கரன்பிள்ளை. வைக்கம் முஹம்மது பஷீர், கேசவதேவ், உறூப், பாறப்புரத்து, லலிதாம்பிகை அந்தர்ஜனம், எஸ்.கெ. பொற்றெக்காட், யு.எ.காதர், ஓ.வி.விஜயன், மாதவிக்குட்டி, பட்டத்துவிள கருணாகரன் உள்ளிட்ட முதல் தலைமுறை ஆளுமைகளால் நிறைந்திருந்திருந்தது மலையாள இலக்கிய தளம். உயிரோட்டமிக்க, மிகை வர்ணணைகள் ஏதுமற்ற, மலையாள மொழிக்குரிய பெண்மை கலந்த நளினமான உச்சரிப்போசையுடன் கூடிய படைப்புகள் நிரம்பியது.

தகழியின் எழுத்துகள் ஏழை வர்க்கத்தினரின் பாடுகளை, அல்லல்களைப் பற்றிப் பேசுபவை. வாழ்வின் கசப்புகள், முதலாளி வர்க்கத்தினரின் ஏய்ப்புகள், அடிமைமுறை வழியாக உழைப்பினை உறிஞ்சும் வஞ்சகங்கள், உழைப்பாளிகளின் போராட்டங்கள் மற்றும் பொதுவுடைமைக் கொள்கைகள் குறித்தும் பேசுபவையாக அவை இருந்தன.

ஏணிப்படிகள் நாவல் இத்தகைய கருத்துருக்களிருந்து சற்றே மாறுபடுகிறது. ஒரு தனி மனிதனின் சுயநலம், பதவி மோகம், வஞ்சகம் என அவனுடைய இயல்பினைக் கொண்டு புனையப்பட்டுள்ளது. அரசுக்கு அடிவருடிச் செல்லும் அதிகாரிகள் குறித்து ஏணிப்படிகள் விவரிக்கிறது. அவர் பணியில் சேர்ந்த கணம் பெறும் பாலபாடம் அதிகாரவர்க்கத்தின் விழைவிற்கேற்ப கோப்புகளில் குறிப்பெழுதக் கற்றுக் கொள்வதுதான். அதில் மிக விரைவில் தேர்ச்சி பெறுகிறார் கேசவபிள்ளை. அது அவரை அதிகாரபீடத்தின் உச்சியை நோக்கித் தனது பாதையினை அமைத்துக்கொள்ள ஏதுவாகிறது. அதிகாரத்தின் போதை, அது மனிதனுக்கு மயக்கம், சுகம், மமதை இன்னும் பலப்பலவற்றை அளிக்கிறது. ஒரு முறை அதிகாரத்தின் சுவையை சுவைத்துவிட்ட மனிதனுக்கு அது மனிதவாழ்வின் மற்ற அடிப்படையான நற்பண்புகள் அனைத்தினையும் துச்சமாகக் கருதி பின்னுக்குத் தள்ளிவைக்கத் தூண்டுகிறது. அதன் இன்னுமொரு இன்றியமையாத அங்கமான சுயநலத்தைத் துணைக்கழைத்துக் கொள்கிறது. தனது பதவி விலகல் கடிதத்தினை அரசுக்கு அனுப்பிவிட்ட பிறகும் கூட அவரது மனத்தில் அலையடிக்கும் எண்ணங்கள் மேற்கூறப்பட்ட கருத்துகளுக்கு வலு சேர்ப்பதைக் காணலாம்.

அதிகாரத்துடன் கூடிய சுயநலம் மனிதனைப் பற்றிக் கொண்டுவிட்டால் அவன் அதனைத் தக்க வைத்துக் கொள்ள எந்த எல்லைக்கும் சென்றிடத் தயங்கமாட்டான். சிறு கிராமத்தில் பிறந்து வளர்ந்த கேசவப்பிள்ளையின் பரிணாம வளர்ச்சி வியப்பளிப்பது. மனச்சான்றின் கழுத்தினை ஏறத்தாழ நெறித்துக் கொன்றுவிட்ட கேசவப்பிள்ளை தான் பதவியிலிருந்து ஓய்வு பெறும் அன்றுதான் அதனை ஆழ்ந்த துயிலிலிருந்து எழுப்பி மீள்பார்வைக்கு உட்படுத்துகிறார். மனைவியிடம், காதலியிடம், பெற்றோரிடம், சக அலுவலக



N.B.T. ரூ 140

நண்பர்கள் உள்ளிட்ட யாரிடமும் அவர் உண்மையாகப் பழகுவதில்லை. அது குறித்து அவர் மன சஞ்சலமடைந்ததுமில்லை. தன் பதவி உயர்வு மட்டுமே அர்ச்சுனனின் பறவைக் கண்ணாக அவருக்குத் தெரிகிறது. கேசவபிள்ளையின் குணநலன்களை விரித்துச் சொல்வதில் செல்வதில் தகழியின் எழுத்து வன்மையும், மேன்மையும் காணலாம்.

முதன் முதலாக லஞ்சமாக மூன்று ரூபாய் பெறுகிறார். அதைக் கொடுப்பவரது கொடிய வறுமையை அவர் பொருட்படுத்துவதில்லை. அதுவே போல், பணியில் சேர்ந்த காலத்தில் தனது சூழலை மனதில் கொண்டு உணவிட்ட உணவகப் பெண்ணான லட்சுமி அம்மாளைக் குறித்து அவர் நினைப்பதும் இல்லை, எண்ணிப்பார்க்க விரும்புவதுமில்லை. பல நேரங்களில் இத்தகைய சுயநலத்தினை மனம் சுட்டிக்காட்டினாலும் அதனை அவர் பொருட்படுத்தாது மிக இயல்பாகக் கடந்து சென்றுவிடுகிறார்.

காங்கிரஸ் கட்சியின் போராட்டங்கள், அவர்களது அரசியல் நடவடிக்கைகள், பொறுப்பாட்சி கோரிக்கைகள் மற்றும் போராட்டத்தினை வலுவிழக்கச் செய்திட திவான் முடிவெடுக்கிறார். அதனைச் செயலாக்கிட குண்டர்களுக்குப் பணம் தந்து கல்லெறிந்து கலவரத்தினை உண்டாக்கவும் பிள்ளை ஏற்பாடு செய்கிறார். துப்பாக்கிச்சூடு நடந்து, பல அப்பாவி மக்கள் பலியாகின்றனர். இதனால் மக்களிடையே அவருக்குக் கடும் எதிர்ப்பு உண்டாகிறது. அவரது உயிருக்கும் ஆபத்து உண்டாகும் சூழல் ஏற்படுகிறது.

இந்நிலையில், தனது தாய், தந்தையின் தார்மீக அறம் குறித்தான கேள்விகளை அவர் உதாசீனம் செய்கிறார். அது பற்றி யாருடனும் பேச அவர் விரும்புவதில்லை. களங்கமற்ற, எளிய கிராம மக்களான அவர்களுக்கு தங்களது ஒரே மகனான பிள்ளையின் இத்தகைய செயல்பாடுகள் ஆழ்ந்த வேதனையினை அளிக்கின்றன. அத்தருணத்தில் கேசவபிள்ளையின் தந்தை காங்கிரஸ் கட்சித் தொண்டனால் கொலையுறுகிறார். ஒரு முதியவரின் கொலை மக்களிடையே பலத்த தாக்கத்தினை உண்டாக்குகிறது. மக்கள் கவனம் திசை திரும்புகிறது. காங்கிரஸ் கட்சி மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறது. கேசவபிள்ளைக்கு இது சிறு ஆசுவாசத்தினை அளிக்கிறது. தந்தை மரணமுற்றதும் அவரது நன்மைக்கு என தகழியின் எழுத்து உச்சத்தைத் தொடும் இடமும் உண்டு. அதன் விளைவாக அவரது வாநாள் கனவு நிறைவேறுகிறது. அரசு தலைமைச் செயலராக அவர் பதவி உயர்த்தப்படுகிறார்.

நாடு விடுதலை பெறுகிறது. பிள்ளையைத் தங்களது முதல் எதிரியாகப் பாவித்து அவரைத் தூக்கிலிட வேண்டும் என்று மேடைதோறும் முழங்கி வந்த காங்கிரஸ் கட்சியினர், சுதந்தரத்திற்குப் பிறகு தேர்தலில் வெற்றி பெறவும், ஆட்சியமைத்திடவும் அவருடைய உதவியை நாடுவது சுவையான நகைமுரண். காங்கிரஸ் தலைவர்களின் இச்சூழலை பிள்ளை திறம்பட பயன்படுத்திக் கொண்டு எனக்குத் தெரியாத தேர்தல் தந்திரங்களா என இறுமாப்புடன் கூறுகிறார். அத்துடன் தனது பதவிக்கும் எவ்வித சிக்கலும் உண்டாகாத நிலையினையும் உறுதி செய்து கொள்கிறார்.

ஆட்சிப் பீடத்தில் அமரும் காங்கிரஸ் தலைவர்களின் பொருளாசையினை பிள்ளை பல வகைகளில் தனக்குச் சாதமாக பயன்படுத்திக் கொள்ளும் பகுதிகள் மிக்க சுவாரசியத்துடனும், விறுவிறுப்பாகவும் புனையப்பட்டுள்ளது. அதிகாரம் கைக்கெட்டியதும் மக்களின் பிரதிநிதிகள் பர்மிட்டுகள், காடுகளை தங்கள் உறவினர்களுக்கு ஒதுக்கிக் கொள்ளுதல், பேருந்து வழித்தடங்களை ஒதுக்கித் தந்திட என பல்வேறு திட்டங்களுடன் அவரை அணுகுகின்றனர். அவரும் சட்டச் சிக்கல்கள் ஏதும் எழாவண்ணம் அவற்றை பெற்றுத் தருகிறார். இதற்கான தொகையினை பிள்ளைக்கு காணிக்கையாக அவர்கள் அளிகின்றனர். காங்கிரஸ் தலைவர் ஒருவர் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் தேயிலைத் தோட்டம் உண்டாக்கிக் கொள்கிறார்.

தனது கணவரின் பதவி உயர்விற்காக எதையும் இழக்கத் துணியும் பகவதி அம்மாளின் கதாபாத்திரம் வாசகனுக்கு அதிர்ச்சியளிக்கலாம். அதை மிக்க துணிவுடன் தகழி உருவாக்கியுள்ளார். பகவதி அம்மாள், தலைமைச் செயலரான தனது கணவரின் திறமையின்மையினால் போட்ட முதலுக்குக்கூட பலனில்லாது போனதே எனப் புலம்பும் கட்டம் அதிகாரவர்க்கத்தின் உள்ளடுக்குகளின் உண்மையினைப் பட்டவர்த்தனமாக்குகின்றன. கேசவபிள்ளையும் தனது மனைவியிடம், மனைவிமார்கள் மனது வைத்தால் கணவர்களுக்கு பதவி உயர்வு உறுதி எனக் கூறுகிறார். இருப்பினும், அத்தகைய செயல்கள் இறுதியில் அளிப்பது விரக்தியையும், வெறுமையையுமே. இதனையும் தகழி பதிவாக்கிடத் தவறவில்லை. தனி மனிதன் வாழ்வில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றாலும் அதனூடே இணைந்துவரும் வெறுமையும் வாழ்வின் தவிர்க்கவியலாத கூறுகள். இவ்வாறு மனித மனதின் ஊசலாட்டங்களை தகழி எளிய வாசகனும் இரசிக்கும் வண்ணம் சொல்லிக் கொண்டே செல்கிறார். இது போன்ற ஒரு மனவோட்டத்தினை தமிழின் மற்றொரு படைப்பாளுமையான ஆதவனின் காகித மலர்களில் காணலாம்.

தான் தனது பணிக்காலத்தில் எவருக்காவது உதவியிருக்கிறோமா என்ற எண்ணம் அவருக்கு ஓய்வு நாளன்று தோன்றுகிறது. சிந்தித்துப் பார்த்தால் தன்னைச் சந்திக்க தனது அலுவலக வாயிலில் காத்துக் கிடந்த எளிய மனிதர்கள் குறித்த பிரக்ஞையே அவருக்கில்லாதிருந்ததை உணர்ந்து துணுக்குறுகிறார். பல இடங்களில் கேசவபிள்ளையின் மனம் சஞ்சலத்திற்குள்ளாகுகிறது. எனினும், தன்னைத் தனது அதிர்ஷ்டமும், விதியும் காப்பாற்றிவிடும் என்பதாகத் தன்னைத் தேற்றிக் கொள்கிறார். பொதுவுடைமைக் கொள்கைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட தகழியின் இத்தகைய கதாபாத்திரம் மிக மாறுபட்டு அமைந்திருப்பதனை பல இடங்களில் காணலாம்.

அவ்வாறே, அரசின் உயர்ந்த பீடங்களில் இருக்கும் அதிகாரிகள் தாங்கள் கையூட்டுப் பெற்றவர்களின் வயிற்றெரிச்சலும், கோபத்தின் சாபங்களும் தங்களைப் பாதிக்காதிருக்கவும், பதவி உயர்வுக்காகவும் சாஸ்தாவிற்கு பூஜையும், புஷ்பாஞ்சலியும் நடத்துவதை தகழி மிக்க அங்கதத்துடன் கூறுகிறார்.

கேசவபிள்ளையின் காதலியும், அவரது முன்னேற்றத்திற்குப் படியமைத்து உதவிய தங்கம்மாள், பின்னாட்களில் மடம் ஒன்றினை உருவாக்கி மதிப்பிற்குரிய மாதாவாகிறாள். இருப்பினும், காவி உடையிலேயே பிள்ளையுடனுனான உறவு தொடர்கிறது. இன்றைய நாட்களில் காவியுடை தரித்தலையும் மகான்கள் எவ்வாறு அரசில் செல்வாக்கினையும், அரசினையே ஆட்டிப்படைக்கும் சூத்திரதாரிகளாக அவதாரமெடுக்கும் அவலத்தின் அந்தரங்கத்தினை தகழி அன்றே வெளிச்சமாக்குகிறார். கம்யூனிஸ்டுகளை தீவிரவாதிகளாகச் சித்தரிக்கும் மனோநிலையினையும் படைப்பாளி பதிவாக்குகிறார்.

சங்கரன்பிள்ளை எனும் போராட்டவீரர் தியாகிகளுக்கான உதவித் தொகை பெற தலைவரைச் சந்தித்து மனம் வெதும்பி மீள்வது மிக உருக்கமானது. சுதந்தர திருவாங்கூர் கோஷமிட்டுத் திரிந்த பலர் இப்போது கதராடையும், காந்தி குல்லாயினையும் உடுத்தி வேஷமிட்டுத் திரிவதும், திடீரென அவர்கள் முக்கிய பிரமுகர்களாக உருமாற்றமடைந்ததையும் கண்டு மனம் குமுறுகிறார். ஊழல்கள் மலிந்த ஆட்சியினையும் கண்டு வேதனையுறுகிறார். இருப்பினும் அவர் விடுதலை குறித்தும், அனைவருக்குமான உரிமைகள் குறித்தும் மிக்க கண்ணியத்துடனும், மனமுதிர்வுடனும் தன்னைத் தேற்றிக் கொள்ளும் பகுதி அற்புதமாகக் கூறப்படுகிறது. இதனை வாசகர்கள் அனைவரும் நிச்சயம் வாசிக்க வேண்டும்.

ஏணிப்படிகள் கேசவபிள்ளை எனும் தனி மனிதனின் வாழ்வினைக் குறித்ததாக புனைவாக மட்டுமன்றி கதை சொல்லப்படும் காலம் குறித்த சிறந்ததொரு அரசியல் வரலாற்றுப் பதிவாகவும் புனையப்பட்டுள்ளது. தகழியின்

நேர்மையான எழுத்திற்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது. புனைவில் இரு பெரும் பிரதான கட்சிகளின் செயல்பாடுகள், ஆட்சி முறைகள் குறித்து நடுநிலையில் நின்று புனைவினை நடத்திச் செல்கிறார் தகழி.

புனைவில் சங்கரன்பிள்ளை, கிருஷ்ணன் நாயர் இருவரும் தகழியின் அத்தகைய நடுநிலைமைக்கேற்ற பொருத்தமான கதை மாந்தர்களாகின்றனர். அரசியல் சாதுர்யம் எதுவும் அறியப்பெறாத, கொள்கைகளுக்காக தங்கள் வாழ்வினை அர்ப்பணித்து, வாழ்வாதாரத்தினை இழந்து போராடும் எளிய தொண்டர்களுக்கு இலக்கணமாக அவர்கள் திகழ்கின்றனர். இருவருக்குமே தங்கள் போராட்டத்தின் பலன் எதுவுமே கிடைக்கப் பெறாது, வாழ்வினைத் தொடர வழியின்றி, திசையறியாது நிற்கின்றனர்.

இருவரும் தாங்கள் சார்ந்தியங்கிய கட்சித் தலைவர்களை உதவித்தொகை பெறுவதற்காக அணுகிய தருணங்களில் அவர்கள் நடத்தப்பெறும் முறை அவர்களுக்கு கண்ணியக்குறைவினையும், ஆழ்ந்த மனக்காயங்களையும் உண்டாக்குகிறது. அரசின் சிகப்பு நாடா நடைமுறைகளால் அலைக்கழிக்கப்பெற்று, வெறுப்புற்று வேறு தேர்வின்றி தற்கொலை செய்து கொள்கின்றனர். எண்ணற்ற எளிய, கீழ்நிலைத் தொண்டர்களின் அவலநிலைக்குத் தக்கதோர் உதாரணமாகிறது அவர்களது வாழ்வு.

தகழியின், தோட்டியின் மகன், மலம் அள்ளும் கீழ்நிலைத் தொழிலாளர்களின் அவல வாழ்வினை சித்தரிக்கும் படைப்பாகும், தகழியின் முக்கிய படைப்புகளில் இதுவும் ஒன்று, மேலும், நான்கு தலைமுறைகளின் வாழ்வினை உள்ளடக்கியதாக விரியும் கயிறு மிக அரியதொரு படைப்பாகிறது. 1885 - 1971 ஆண்டு காலகட்டத்தில் வாழ்ந்த பல நூறு கதை மாந்தர்களைக் கொண்டு உண்டாக்கபட்ட இது 1300 பக்கங்களைக் கொண்ட நீண்டதொரு புதினமாகும். .N.B.T (நேஷனல் புக் டிரஸ்ட்) கயிறு நாவலினை தொடர்கல்வி நூல் வரிசையில் குறுநாவலாக 2002இல் ரூ 30 விலையில் வெளியிட்டது. மண்டை ஓடு குறுநாவலும் புரட்சியினை அடிநாதமாகக் கொண்டு எழுதப்பட்டது. .

திருவனந்தபுரம் சட்டக்கல்லூரியில் தகழி பட்டம் பெற்றார். முதல் பணி கேரள கேசரி இதழில் செய்தியாளர். பின்னர், அம்பலப்புழா நீதிமன்றத்தில் வழக்கறிஞரானார். கம்யூனிச சிந்தாந்தங்களால் ஈர்க்கப்பட்டு போராட்டங்களிலும் அவர் பங்கேற்றார். அவரது இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக சில காலம் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தார்.

தனது இளம் வயதிலேயே அதாவது பதிமூன்று வயதிலேயே அவர் தனது முதல் சிறுகதையினை எழுதினார். நாற்பது நாவல்கள், சற்றேறக்குறைய இருநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், இரண்டு நாடகங்கள் என அவரது எழுத்துக்களம் பரந்து விரிந்தது. அவருடைய ஏழு நாவல்கள் திரைப்படங்களாக்கப் பெற்று பல விருதுகளையும் பெற்றுள்ளன. செம்மீன் அவற்றில் முக்கியமானதொன்றாகும். செம்மீன் 19 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டது. அத்திரைப்படம் 15 நாடுகளில் வெளியானது. ஏணிப்படிகளும் திரைப்படமாகியது. மலையாள படைப்புலகின் மிக அரிய கௌரவமான எழுத்தச்சன் விருது உட்பட கேரள சாகித்ய அகாதெமி, வயலார் விருது சாகித்ய அகாதெமி, ஞானபீட விருது, பத்மபூஷன் என எண்ணற்ற விருதுகள் அவருக்கு சாத்தியப்பட்டன.

N.B.T. (நேஷனல் புக் டிரஸ்ட்) இதனை 1977இல் தனது அனைத்திந்திய நூல் வரிசையில் பதிப்பித்தது. சிறந்த தொழிற்சங்கவாதியாக விளங்கிய சி.ஏ.பாலன் இதனைத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார், மொழிபெயர்ப்பு மிக எளிய நடையில் தடையின்றி உருவாக்கப்பட்டுள்ளது. தகழியின் படைப்புகள் இந்திய மொழிகளிலும், பல ஐரோப்பிய மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவர் கடந்து சென்ற தலைமுறையினைச் சேர்ந்தவராக இருப்பினும் இக்கணம் வரை மலையாள படைப்புலகிலும், தமிழ் வாசகர்கள் மனதிலும் நிலையான இடம் பெற்றிருக்கிறார்..

மிருதுவாய் ஒரு நெருப்பு
ரோஸா பார்க்ஸ்

நிகழ் அய்க்கண்

1619 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் அடிமைமுறை உருவாகி, 1863 ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்தது., இன்றைய அளவில், இனம், கல்வி, போக்குவரத்து, சுகாதாரவசதி குடிநீர், வீடு, வாக்குரிமை வேலைவாய்ப்பு உள்ளிட்டவகளில் சட்டங்களின் மூலமாகவும், போராட்டங்களின் மூலமாகவும் மாற்றங்கள் படிப்படியாக வந்திருப்பினும், அமெரிக்கர்களுக்கும் - ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்கும் இடையே பாகுபாடுகள் எதோ ஒருவகையில் தொடர்ந்து நீடித்துவரவே செய்கின்றன.

1955 இல் அமெரிக்க நாட்டையே உலுக்கிய பேருந்து இருக்கைக்கான போராட்டத்தின் விதையாக திகழ்ந்து, அப்பாகுபாட்டினைக் களையவும் செய்தவர் ரோஸாபார்க்ஸ். அவரைப்பற்றியதுதான் இச் சிறு நூல்ரோஸாபார்க்ஸ் 04.02.1913 அமெரிக்காவின் அலபாமா மாநிலத்திலுள்ள தஸ்தகி எனும் ஊரில் பிறக்கிறார். அம்மா பள்ளி ஆசிரியை. அப்பா தச்சுவேலையும், கட்டிட வேலையும் தெரிந்தவர். அப்பாவும் அம்மாவும் பணி நிமித்தமாக வெவ்வேறு இடத்தில் இருந்து பணிபுரிவதால், ரோஸா பைன்லெவலிலுள்ள தனது தாத்தா-பாட்டி வீட்டில் வளர்கிறார். இவரது தாத்தாவின் தந்தை கருப்பினத்தவர் இல்லை. அவர் அயர்லாந்தைச்சேர்ந்த ஒரு வெள்ளையர். பிழைப்புத்தேடி அடிமையாக அமெரிக்கா வந்தவராவார். ஆறு வயதில் பைன்லெவலில் உள்ள பள்ளியில் சேருகிறார் ரோஸா. அப்போது கருப்பினக் குழந்தைகளுக்கும், வெள்ளையினக் குழந்தைகளுக்கும் படிப்பதற்கு தனித்தனியே பள்ளிகள் இருந்தன. வெள்ளையர் பள்ளிகள் நன்கு பராமரிக்கப்பட்டிருந்தன. மேலும், படிக்க - எழுத நாற்காலி, மேசைகள் இருந்தன. வகுப்புக்கு ஓர் ஆசிரியர் இருந்தார். பள்ளிக்கு அழைத்துச்செல்ல பேருந்து வசதி செய்யப்பட்டிருந்தது. ஆனால், கருப்பினத்தவ குழந்தைகள் நன்கு பராமரிக்கப்படாத, தரையில் அமர்ந்து படிக்கவும் எழுதவும் செய்தனர். நடந்துதான் பள்ளிக்கு வரவேண்டும். அனைத்து வகுப்புக்களுக்கும் ஓராசிரியரே கற்பித்துவந்தார். வெள்ளையர் பள்ளிகள் ஆண்டுக்கு பத்து மாதங்கள் முழுமையாக நடந்தது. கருப்பினக் குழந்தைகளின் பள்ளிகளோ ஐந்து மாதங்கள் மட்டுமே நடந்தது. மற்ற நாட்களில் அக்குழந்தைகள் வீட்டு வேலைகளையும் தோட்ட வேலைகளையும் செய்து வந்தனர். ரோஸா பள்ளிக்குச்சென்ற பிறகுதான் கருப்பின வெள்ளையின நிறவேற்றுமையையும், நிறத் துவேஷங்களையும் கண்டுணர்கிறார்.

ரோஸா பைன்லெவலில் தான் படித்துவந்த கருப்பினக் குழந்தைகளின் ஓராசிரியர் பள்ளியிலிருந்து மாறி அருகிலுள்ள மாண்ட்காமரி நகரத்திலுள்ள ஒரு கருப்பின பெண்கள் பயிலும் பள்ளியில் சேருகிறார். இங்குள்ள பள்ளிகளில் குழந்தைகள் தொடர்ந்து ஒன்பது மாதங்கள் படித்திட முடியும். ரோஸாவின் அம்மாவுக்கு பைன்லெவலி லிருந்து எட்டு மைல் தொலைவுள்ள ஸ்பிரிங் ஹில் எனும் ஊரில் ஆசிரியப்பணி கிடைக்கிறது. பள்ளி நாட்களில் அம்மா அங்கேயே தங்கி விடுவார். ரோஸாவும் அவளது தம்பியும் பைன்லெவலில் இருந்து எட்டு மைல் தொலைவுள்ள மாண்ட்காமரி பள்ளிக்கு தினமும் நடந்தே சென்று வீடு திரும்பவேண்டும். பள்ளிச்சேர்க்கையின் போது அம்மா கல்விக்கட்டணம் செலுத்தினார். அதன் பிறகு கட்டணம் செலுத்திட முடியவில்லை. நிர்வாகத்தின் கல்வி உதவித்தொகையைப் பெற்றே ரோஸா படிப்பினைத் தொடர்ந்து வந்தார். ரோஸா மிஸ் ஓயிட் பள்ளி எனும் தொழிற்பள்ளியில்தான் படித்துவந்தார். அப்பள்ளியானது. கருப்பினக்குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கவேண்டும் எனும் நோக்கில் வெள்ளையர்களால் நடத்தப்பட்டுவருவதாகும். இதன் காரணமாக, வெள்ளைச்சமூகமானது, அப்பள்ளி நிர்வாகிகள் முதல் ஆசிரியர்கள்வரை

பாரதி புத்தகாலயம்,
பக்:64 விலை: 50/-

சமூக நீக்கம் செய்து வைத்ததோடு அல்லாமல் வெள்ளையின வழிபாட்டுத் தலத்திற்குள்ளும் நுழைய தடை விதிக்கிறது. கருப்பினக் குழந்தைகளுக்கு 'சுயமரியாதையை கற்றுத்தந்த : கருப்பினத்தவர் தாழ்வானவர்கள் இல்லை' என உணர்த்திய அப்பள்ளியானது. வெள்ளையின தீவிரவாதிகளால் இருமுறை தீக்கிரையாக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் நிர்வாகத்தினர் மனந்தளராது அப்பள்ளியை நடத்தி வருகின்றனர். ரோஸா, பள்ளியில் படிக்குபோது, மாண்ட்கமாரி வீதிகளில் குடிநீர் குழாய்களில்கூட வெள்ளையின-கருப்பினத்தவர்களுக்கென தனித்தனி குழாய்கள் இருப்பதை காண்கிறார். அதேபோல் வெள்ளையினச்சிறுவர்கள் வீண் வம்பிற்கிழுப்பதையும் பார்க்க நேரிடுகிறது. வெள்ளையின ஆதிக்க எதிர்ப்பு ரோஸாவிடம் இயல்பாக உருவாவதற்கு இதுபோன்ற சம்பவங்கள் காரணமாக அமைந்திருந்தன.

1932 ல் ரேமண்ட்பார்க்ஸ் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொள்கிறார். இவரும் ரோஸாவின் பாட்டனாரைப்போல் வெள்ளை நிறத்திலிருந்தார். பார்க்ஸ் அமெரிக்காவில் கருப்பினதவர்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட என்.எ.எ.சி.பி எனும் அமைப்பேடு தன்னை இணைத்துக்கொண்டவராவார். .நீதிக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் போராடிவந்த அவ்வமைப்பில் ரோஸாவும் தன்னை இணைத்துக்கொண்டார். அந்த நாளில், கருப்பு இனத்தவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை எளிதில் கிடைத்துவிடவில்லை. 1940-ஆம் ஆண்டு கணக்குப்படி, மாண்ட்கமாரியில் வாக்களிக்க உரிமை பெற்றிருந்தவர்கள் வெறும் 32 பேர்தான். கருப்பினத்தவர்கள் வாக்களிக்கும் உரிமை பெறுவதற்கு பல விதிகள் இருந்தன.குறிப்பாக,

- செல்வாக்குள்ள வெள்ளையர் ஒருவர் பரிந்துரைக்கவேண்டும்.
- சொத்து இருக்க வேண்டும்
- எண்ணறிவு, எழுத்தறிவு தேர்வு எழுத வேண்டும்.
- அமெரிக்கர்களின் அரசியல் சட்டத்தை புரிந்திருக்கவேண்டும்.

ஆனால்,21 வயதான அனைத்து வெள்ளையருக்கும் வாக்களிக்கும் உரிமை எளிதில் கிடைத்தது. வாக்குரிமை பெறுவதில் ரோஸா உறுதியாக இருந்தார்.அதற்கான முயற்சியில் 1943-ஆம் ஆண்டு ஈடுபட்டார். முதலில் நிர்வாகத்தினர் இழுத்தடித்து பின்னர் எழுத்துத்தேர்வு வைத்தனர். அதன் பிறகு இருமுறை தேர்வெழுதியும் வாக்குரிமைக்கான அனுமதி கிடைக்கவில்லை. மூன்றாம் முறையே, அதாவது இரண்டு வருடகால போராட்டத்திற்குப்பிறகே வாக்குரிமை கிடைத்தது.

மாண்ட்கமாரி பேருந்தில் 36 இருக்கைகள் இருக்கும்.அதில் முன் வரிசையில் உள்ள பத்து இருக்கைகள் வெள்ளையர்களுக்கு உரியவை. இது எழுதப்பட்ட சட்டம். கடைசி பத்து இருக்கைகள் கருப்பு இனத்தவர்களுக்குரியது. இது எழுதப்படாத சட்டம். மீதமுள்ள 26 இருக்கைகளிலும் வெள்ளையர்களே அமருவர். இதில் வெள்ளையர்கள் யாரும் பேருந்தில் நின்றுகொண்டு பயணம் செய்தால் ,கருப்பினத்தவர்கள் தனது இடத்தை காலி செய்து வெள்ளையருக்கு கொடுக்கவேண்டும்.பேருந்தில் பயணச்சீட்டு பெறுவதிலும் கூட பாகுபாடுதான். வெள்ளையர் பேருந்தின் முன்புறம் ஓட்டுநரிடம் பயணசீட்டு பெற்றுக்கொண்டு முன்பக்கமே அமர்ந்துவிடுவர். ஆனால், கருப்பினத்தவர்களோ முன்பக்கம் போய் பயணச்சீடைப் பெற்றுக்கொண்டு, பேருந்தின் முன்பக்க படிக்கட்டிலிருந்து இறங்கி, பின்பக்கமுள்ள படிக்கட்டு வழியேதான் பேருந்தில் ஏறவேண்டும். பேருந்து ஓட்டுநர்கள் கருப்பினத்தவர்களிடம் கடுமையாக நடந்துகொள்வர். அவர்களிடம் துப்பாக்கிகளும் இருக்கும்.

ரோஸாபார்க்ஸ் இரண்டாவது முறையாக வாக்களிக்க செல்வதற்கு, பேருந்தில் ஏறி ஓட்டுநரிடம் பயணசீட்டைப்பெற்றுக்கொண்டு, இறங்கி பின்பக்கம் வழியாக ஏறாமல் ,அப்படியே முன்பக்கம் நுழைய முயல்கிறார். ஓட்டுநர் கோபங்கொண்டு கத்துவதோடு மட்டுமல்லாமல், ரோஸாவின் மேல் கோட்டினைப்பற்றி இழுக்கிறார். ஓட்டுநரிடமிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு போகும்போது, வேண்டுமென்றே தனது பர்ஸை கீழே நழுவ

விட்டு, பின்னர் வெள்ளையர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்து அப்பர்ஸை எடுக்கிறார். இதனைப்பார்த்த ஓட்டுநர் கொந்தளித்துப்போகிறார். 1955 டிசம்பர் ஒன்றாம் தேதி, மாலை கோர்ட் ஸ்கொயர் என்ற இடத்திலிருந்து பேருந்தில் ஏறுகிறார் ரோஸா பார்க்ஸ். பண்ணிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு, பேருந்திலிருந்து இறக்கிவிட்ட அதே ஓட்டுநர் பேருந்தை ஓட்டுவதை கவனிக்கிறார்...பேருந்தின் மையப்பகுதியில் காலி இருக்கை ஒன்று இருந்தது. அங்குபோய் அமருகிறார் ரோஸாபார்க்ஸ். அடுத்து, எம்பயர் பேருந்து நிறுத்தம் வந்தது. வெள்ளையர் பலர் ஏறி இருக்கையில் அமர்ந்தனர். ஒரே வெள்ளையர் மட்டும் இடமின்றி நின்று கொண்டிருந்தார். ஓட்டுநர் இரு முறை சத்தம் போடுகிறார். ரோஸா பார்க்ஸ் எழவில்லை. உன்னை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்போகிறேன் என்கிறார் ஓட்டுநர். செய்து கொள் என்கிறார் ரோஸா பார்க்ஸ். பேருந்து நிறுத்தப்பட்டது. சிறிது நேரத்தில் காவலர் வந்து,. அவரை கைது செய்து பிறகு சிறையில் அடைக்கின்றனர். ரோஸாபார்க்ஸ் கைதான செய்தி கருப்பினச்சமூகத்தின் ரிடையே வேகமாகப்பரவுகிறது. பிறகு, ரோஸாவின் கணவர் பார்க்ஸ் மற்றும் என்.எ.எ.சி.பி அமைப்பினர் சிலரும் வந்து அவரை மீட்கின்றனர். பின்னர் அமைப்பினருடன் ஆலோசனை நடக்கிறது கருப்பினத்தவர்களின் உரிமையினை நிலைநாட்ட, .நீதிமன்றம் செல்வதற்கு இச்சம்பவம் தகுதியானது என்பதால், வழக்கு தொடுக்கப்படுகிறது. பேருந்து புறக்கணிப்பு போராட்டம் தொடங்குகிறது. கருப்பினத்தவர்கள் யாரும் பேருந்தில் ஏறவில்லை. பெரும்பாலானோர் நடந்தனர். சிலர் வாடகைக்காரில் பயணஞ்செய்தனர். பேருந்துகள் காலியாகவே சென்றன.

1955 டிசம்பர் 5 ந்தேதி வழக்கு விசாரணைக்கு வருகிறது. நீதிமன்றத்திற்கு வெளியே கருப்பினத்தவர் ஏராளமானோர் கூடுகின்றனர். 'பின்னால் காலியாக இடம் இருந்தும் ரோஸா பிடிவாதமாக பேருந்தின் மத்தியப்பகுதியில் அமர்ந்திருந்தார்' என நீதிமன்றத்தில் வெள்ளையர் ஒருவர் பொய்சாட்சியம் அளிக்கிறார். பொய்சாட்சியை ஆதாரமாகக்கொண்டு நீதிமன்றம் ரோஸாவுக்கு 14 டாலர் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கிறது. அன்று மாலை, கிறித்தவ தேவாலத்தில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், இந்த வழக்குக்கு எதிராக போராடவும் மக்களை அணிதிரட்டவும் எம்.ஐ.எ எனும் அமைப்பு உருவாக்கப்பட்டு, அதன் தலைவராக கிறித்துவ மதபோதகராக இருந்த 26 வயது இளைஞர் மார்ட்டின் லூதர் கிங் (ஜூனியர்) தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

- பேருந்தில் கருப்பினத்தவர் மரியாதையாக நடத்தப்படவேண்டும்.
- முதலில் வருபவருக்கே முன்னுரிமை. முதலில் வந்து பேருந்தின் பின் பகுதியில் இடம் பிடித்தவர்களை எழச்சொல்லக்கூடாது.
- கருப்பினத்தவர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் ஓட்டுநர்களாக அவர்களையே நியமிக்கவேண்டும். என்கிற கோரிக்கைகளை முன்வைத்து போராடுவதென முடிவெடுக்கப்படுகிறது. போராட்டமும் தொடர்கிறது.

பிரெட் கிரே எனும் கருப்பின வழக்கறிஞர் பேருந்தில் பாகுபாடானது அமெரிக்க அரசியல் அமைப்புக்கு விரோதமானது என ஐந்து பெண்கள் சார்பில் வழக்கு தொடுக்கிறார். முதலில் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கிறார். பிறகு அரும்பாடுபட்டு உச்சநீதி மன்றத்திற்கு கொண்டு செல்கிறார். வழக்கை விசாரித்த நீதிமன்றம், 1956 ஆம் ஆண்டு நவம்பர் 13 ந்தேதி பேருந்துகளில் பாகுபாடு தவறானது அது அரசியல் அமைப்புக்கு எதிரானது என தீர்ப்பு வழங்கியது. இதனையொட்டி, ஓராண்டுக்கும் மேலாக நடந்து வந்த பேருந்து புறக்கணிப்பு போராட்டமும் முடிவுக்கு வந்தது. பேருந்து புறக்கணிப்பு போராட்ட வெற்றிக்குப்பிறகு, ரோஸாபார்க்ஸின் பாதுகாப்பு கேள்விக்குறியானது. தினசரி மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் தொடர்ந்தவண்ணம் இருந்தது. அச்சமயத்தில் இவரின் தம்பி, டெட்ராய்டு நகரில் வசித்துவந்தார். அவர் அழைக்கவே அந்நகருக்கு 1957-ல் குடியேறினார்.

அதன் பிறகான காலகட்டங்களில் வெள்ளையர்-கருப்பினத்தவர்களுக்கிடையேயான பகைமை ஓயவில்லை அன்பையும் உரிமைகளையும் இரு கண்களாகக்கொண்டிருந்த மத போதகரான. மார்ட்டின் லூதர் கிங், குடியரசுத்தலைவர் கென்னடி, கருப்பினப்போராளி மால்கம் எக்ஸ் ஆகியோர் கொல்லப்படுகின்றனர். இதற்கிடையே ரோஸா பார்க்ஸும் தன்னுடைய உறவுகளை இழக்கிறார். 1990 களில் ரோஸாபார்க்ஸ் அமெரிக்காவைத்திரும்பிப் பார்க்கும் போது, எவ்வளவோ மாற்றங்களும், முன்னேற்றங்களும் ஏற்பட்டுவிட்டன. இருப்பினும் இவர்களுக்கிடையேயான பகைமை முற்றிலும் ஒழிந்துவிடவில்லை என்கிறார்.



சா.கந்தசாமி : வற்றாத சிந்தனை நதி

பாவண்ணன்

வாசகர் வட்டம் அறுபதுகளில் வெளியிட்ட நூல்களில் ஏராளமான பிரதிகள் எஞ்சியிருக்கின்றன என்றும் விருப்பப்பட்டவர்கள் வந்து வாங்கிச் செல்லலாம் என்றும் பிரசுரமாகியிருந்த ஓர் அறிவிப்பை ஒருமுறை பார்த்தேன். அந்த முகவரியை உடனடியாக என் குறிப்பேட்டில் எழுதிவைத்துக்கொண்டேன். அப்போது நான் கர்நாடகத்தில் ஹொஸ்பேட் என்னும் இடத்தில் வேலை செய்துகொண்டிருந்தேன். ஆண்டுக்கு மூன்று அல்லது நான்கு முறை ஊருக்கு வந்து செல்வேன். ஹொஸ்பேட்டிலிருந்து குண்டக்கல் வரைக்கும் ஒரு ரயில் பயணம். பிறகு குண்டக்கல்லிலிருந்து சென்னை வரைக்கும் மற்றொரு ரயில் பயணம். சென்னையிலிருந்து புதுச்சேரிக்கு பேருந்துப்பயணம். போக ஒரு நாள், திரும்பி வர ஒரு நாள் பயணத்திலேயே கழிந்துவிடும்.

ஒருமுறை ஊருக்குச் சென்று திரும்பிவரும் வழியில் சென்னையில் வாசகர் வட்டம் முகவரிக்குச் சென்றேன். அந்த வீட்டிலிருந்தவர் என்னிடம் 'எந்த புத்தகம் வேணும்?' என்று கேட்டார். நான் ஏதேனும் ஒரு புத்தகத்தின் தலைப்பைச் சொல்லக்கூடும் என்று அவர் எதிர்பார்த்தார். 'ஒருதரம் எல்லாத்தயும் பார்த்துக்கறேன்' என்று நான் தயக்கத்தோடு சொன்னேன். அவர் அமைதியாக ஓர் அடுக்கிலிருந்த புத்தகங்களைக் காட்டினார். நான் அதிலிருந்து பதினைந்து புத்தகங்களை எடுத்து தனியாக வைத்து 'இதயெல்லாம் எடுத்துக்கறேன்' என்றேன். அவருக்கு ஆச்சரியம். அவர் என்னைப்பற்றிய விவரங்களைக் கேட்டார். நான் சிறுகதைகளை எழுத ஆரம்பித்திருந்த காலம் அது. என் பெயரைச் சொன்னதுமே 'கணையாழியில உங்க கதையப் படிச்சிருக்கேன்' என்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். எல்லாப் புத்தகங்களையும் அழகாக அடுக்கி ஒரு பெரிய பைக்குள் போட்டுக் கொடுத்தார். குறைவாகத்தான் பணம் வாங்கிக்கொண்டார். அந்தப் புத்தகங்களில் ஒன்று சாயாவனம். எழுத்தாளர் சா.கந்தசாமி. அந்தப் பெயரை அன்றுதான் நான் முதன்முதலாக அறிந்துகொண்டேன்.

ஹொஸ்பேட்டுக்குத் திரும்பியதுமே சாயாவனத்தைப் படித்துமுடித்தேன். எனக்கு அந்த நாவல் மிகவும் பிடித்திருந்தது. ஒரு பெரிய புளியந்தோப்பை அழித்து கரும்பு ஆலையை கட்டியெழுப்பும் சித்திரத்தை அந்த நாவல் தீட்டிக் காட்டியிருந்தது. ஒரு காலமாற்றத்தின் பதிவாக அது காட்சியளித்தது. நேற்றிருந்தது, இன்றில்லை என்பதையும் அது தவிர்க்கமுடியாதது என்பதையும் உணர்த்துவதுபோல இருந்தது. விவசாயம் மட்டுமே இருந்த ஒரு வாழ்க்கைக்குள் எந்திரங்களுக்கும் ஒரு இடம் உருவாகிறது.

நான் அப்போதுதான் தாராசங்கர் பானர்ஜியின் ஆரோக்கிய நிகேதனம் நாவலைப் படித்து முடித்திருந்தேன். அந்த நாவலில் மரபான ஆயுர்வேத மருத்துவமுறை, நவீன மருத்துவமுறை என இரு முறைகள் தொடர்பான மாறுபட்ட பல நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொன்றும் தனக்கென நிறுவிக்கொள்ளும் எல்லைகளையும் அடையாளப்படுத்தியிருந்தது. ஒன்று தேய்ந்து மற்றொன்று எழுச்சி பெறும் காலம்.

எப்படியோ என் மனம் அந்தக் கருத்தியல் மையத்தின் நீட்சியாக சாயாவனம் நாவலை வகுத்துக்கொண்டது. பழமை எவ்வளவுதான் புனிதமானது, உயர்வானது என்றபோதும் அது நவீனத்தின் வரவை ஒருபோதும் தடுக்க முடியாது என்று புரிந்துகொண்டேன். முதலில் எதுவரைக்கும் நமக்கு பயனுள்ளதாக இருக்கிறதோ, அதுவரைக்கும் நாம் நவீனத்தை பயன்படுத்துவோம், பயனற்றதாக மாறும்போது விலக்கிவிடுவோம் என்றுதான் நம் மனம் தொடக்கத்தில் நினைக்கும். ஆனால் அதெல்லாம் மனம் நிகழ்த்தும் நாடகம். மெல்ல மெல்ல நவீனத்தின் வசதிகள் நம்மை ஈர்த்து திரும்பிவர முடியாத தொலைவுக்கு அழைத்துச் சென்றுவிடும். ஆலை என்பது நவீன யுகத்தின் அடையாளம். சாயாவனம், நவீனம் இந்த மண்ணில் காலூன்றத் தொடங்கிவிட்டது என்பதை சுட்டிக்காட்டும் நல்லதொரு படைப்பு என்பதே என் எண்ணமாக இருந்தது. அன்றிரவே நான் சாயாவனம் பற்றி ஒரு கடிதம் எழுதினேன். மறுநாள் கணையாழி அலுவலகத்துக்கு தொலைபேசி செய்து சா. கந்தசாமியின் முகவரியைப் பெற்று அந்தக் கடிதத்தை அனுப்பிவைத்தேன்.

இரண்டு வார இடைவெளியில் எனக்கு அவரிடமிருந்து கடிதம் வந்தது. அதுவரை நாவலைப்பற்றி பேசியவர்கள் யாரும் சாயாவனத்தையும் ஆரோக்கிய நிகேதனத்தையும் ஒப்பிட்டுப் பேசவில்லை என்றும், அந்த ஒப்பீட்டைக் குறிப்பிட்ட முதல் பதிவைப் படிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது என்றும் அவர் பதில் எழுதியிருந்தார். சென்னைக்கு வரும்போது சந்திக்கும்படி குறிப்பிட்டிருந்தார். எனக்கும் அவரைச் சந்திக்க ஆவலாகவே இருந்தது. ஒரு மூத்த படைப்பாளியை எப்படி அணுகுவது என்பதில் சற்றே தயக்கமாகவும் இருந்தது.

சென்னையில் பாலு என்றொரு நண்பர் வசித்துவந்தார். ஆந்திரவங்கியில் வேலை செய்துவந்தார். திருவல்லிக்கேணியில் முருகேசநாயகர் மேன்ஷனில் தங்கியிருந்தார். கடிதம் வழியாக அறிமுகமானவர். ஒருமுறை அவரோடு தொலைபேசியில் பேசும்போது சாயாவனம் பற்றியும் கந்தசாமி பற்றியும் சொன்னேன். இறுதியாக என் தயக்கத்தையும் சொன்னேன். அதைக் கேட்டு அவர் சிரித்தார். கந்தசாமி தன்னுடைய ஊர்க்காரர் என்றும் சென்னைக்கு வரும்போது தானே அழைத்துச் செல்வதாகவும் சொன்னார். தற்செயலாக இப்படி எல்லாமே கூடிவரும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

அடுத்த சென்னை பயணத்தின்போது, பாலு என்னை கந்தசாமியிடம் அழைத்துச் சென்றார். நான் அவரை வணங்கினேன். 'வாங்க வாங்க'என்றபடி புன்னகைத்துக்கொண்டே என்னை தோளில் அழுத்தி நாற்காலியில் உட்காரச் செய்தார். ஜெயகாந்தனைப்போன்ற முடியமைப்புடன் காணப்பட்ட அவர் முகமும் உருவமும் என்னை முதல் கணத்திலேயே வசீகரித்தன. 'கணையாழியில உங்க கதைகள படிச்சிருக்கேன். அசோகமித்திரன் உங்கள பத்தி நல்லவிதமா சொன்னாரு' என்றார்.

நான் பேச்சை சாயாவனத்தின் பக்கமாகவே திருப்பினேன். அது தன் சொந்த ஊர் என்றும் தன் இளமைப்பருவம் அந்தக் கிராமத்தில்தான் கழிந்தது என்றும் அவர் சொன்னார். இளமையிலேயே படிப்பதற்காகவும் வேலைக்காகவும் நகரத்தை நோக்கி வந்துவிட்டதாகச் சொன்னார். 'அந்தத் தோப்பு உண்மையிலேயே அழிந்துவிட்டதா?' என்று நான் ஆவலோடு கேட்டேன். அவர் புன்னகைத்தபடியே இல்லையென்று தலையசைத்தார். 'சாயாவனத் தோப்பு அப்படியேதான் இருக்குது. ஆனா தஞ்சாவூர சுத்தி, கும்பகோணத்த சுத்தி நெறய தோப்புகள் அழிஞ்சியிருக்குது. தமிழ்நாடுன்னு எடுத்துகிட்டா, அப்படி அழிக்கப்பட்ட தோப்புகள் ஏராளம்' என்றார். ஒருகணம் சாயாவனம் என்பது சாயாவனத்தின் கதை இல்லை என்பது எனக்கு ஏமாற்றமாக இருந்தது.

அவர் அதை உடனே உணர்ந்துகொண்டார். 'எதார்த்தங்கறது எப்பவும் புள்ளிவிவரங்கள் சார்ந்த உண்மை கிடையாது. நிலவரங்கள் சார்ந்த ஒரு தொகுப்பு. ஒரு கிராமத்துடைய நிலவரம், ஒரு வட்டாரத்துடைய நிலவரம், ஒரு நகரத்துடைய நிலவரம் என்று பல நிலவரங்களை சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி அடுக்கி வச்சிக்கிற

அமைப்பு. ஒரு வீடு கட்ட தேவையான மண்ண ஒரு இடத்திலேருந்து, கல்ல ஒரு இடத்திலேருந்து, மூங்கில், கீற்றுங்கள ஒரு இடத்திலேருந்து, உத்திரத்துக்கான பனைமரத்தை ஒரு இடத்திலேருந்து கொண்டுவந்து சேத்து அடுக்கி கட்டறமாதிரிதான் இதுவும்'என்று மெதுவாகச் சொன்னார். அதற்குப் பிறகே நான் ஓரளவு தெளிவு பெற்றேன். எதார்த்தவாதம் சார்ந்து அவர் சொன்ன அந்தச் சிறிய விளக்கம் எனக்கு எதிர்காலத்தில் பேருதவியாக இருந்தது.

'ஆரோக்கிய நிகேதனத்தையும் சாயாவனத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க உங்களை எது தூண்டியது?' என்று ஆவலோடு கேட்டார். 'இங்க இருக்கிற யாருக்குமே அது தோணலை. எனக்கு அப்படி ஒரு யோசனை வந்ததே இல்லை'என்று மறுபடியும் சொன்னார். நான் உடனே 'அந்த யோசனை திட்டமிட்டு வரலை சார். சட்டுனுதான் அந்த யோசனை வந்தது'என்றேன். அதுதான் உண்மையும்கூட. அவருக்கு அதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி பெருகியது.'க்ரியேட்டிவான ஆளுங்களுக்கு எல்லாமே இப்படி சட்டுனுதான் தோணும். அது ரொம்ப நல்லதுய்யா. உட்டுடாத. க்ரியேட்டிவிட்டிக்கு அதுதான் நல்ல அடிப்படை'என்று சொன்னார்.

சாயாவனத்தில் எனக்கு மிகவும் பிடித்த சில காட்சிகளைச் சொன்னேன். சிதம்பரம் தன் தாயின் மரணத்தைப்பற்றி பேசும்போது தாயின் உயிரற்ற உடலை வைத்துக்கொண்டு ஒரு நாள் முழுதும் தனியாக அமர்ந்திருந்ததையும் தெருவில் இருந்தவர்கள் அனைவரும் வேலைக்குச் சென்று திரும்பிவந்த பிறகே அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் சொல்லும் காட்சி மிகவும் உருக்கமானது. ஒரு உரையாடல் வழியாக அந்தக் காட்சி தோன்றி மறைந்துவிடும். உயிரற்ற தாயின் உடலுக்கு அருகில் துயரத்தில் தலைகவிழ்ந்திருக்கும் மகனின் சித்திரத்தை அந்த உரையாடல் வழியாக நான் எடுத்துக்கொண்டேன். இன்னொரு காட்சியில் மரங்களைச் சுற்றியிருக்கும் கொடிகளை அறுத்து அகற்றும்போது ஒரு குருவிக்குஞ்சு முள்வேலியில் விழுந்து கதறும். அப்போது அந்த முட்புதர்களுக்கிடையில் வேகமாகச் செல்லும் சிதம்பரம் அந்த உயிரற்ற குஞ்சை எடுத்து வந்து மடியில் வைத்துக்கொண்டு தலைகவிழ்ந்து அழுவான். இதுவும் ஒரு நாலைந்து வரியில் நகர்ந்துபோகும் காட்சி. நான் இரு காட்சிகளையும் சொல்லிவிட்டு, 'சிதம்பரம் அந்தக் குருவிக்குஞ்ச மடியில வச்சிருக்கும்போது தன் அம்மாவின் மரணத்த நினைச்சிருப்பானா சார்?' என்று கேட்டேன். அதைக் கேட்டு கந்தசாமிக்கு முகம் மலர்ந்து நின்றுவிட்டது. 'நீங்க நினைக்கறதே சிதம்பரம் நெனச்சிக்கிறமாதிரிதான்' என்று சிரித்தார்.

நாங்கள் விடைபெற்று எழுந்தோம். அவர் எங்களை வழியனுப்புவதற்காக வெளியே வந்தார். என்னென்ன புத்தகங்கள் படித்திருக்கிறேன் என்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்டு என்னென்ன படிக்கவேண்டும் என்று சொன்னார். 'கதை, நாவல்னு வெறும் ஃபிக்ஷன் மட்டும் படிக்கறதோட நிறுத்திக்காதிங்க. நிறைய நான்ஃபிக்ஷன் படிங்க. முக்கியமா வாழ்க்கை வரலாற்று புத்தகங்களை படிங்க. அது ரொம்ப ரொம்ப முக்கியம். உ.வே.சா.வுடைய என் சரித்திரம், நாமக்கல் கவிஞருடைய என் கதை, யதுகிரி அம்மாளுடைய பாரதி நினைவுகள் எல்லாத்தயும் படியுங்க. தேச வரலாறு என்பது எந்த அளவுக்கு முக்கியமோ, அதே அளவுக்கு தனிமனிதர்கள் வரலாறும் முக்கியம்' என்று சொன்னார். புறப்படும்போது 'நீங்க கசடதபற படிச்சிருக்கீங்களா? நாங்க நடத்தன பத்திரிகை'என்று கேட்டார். இல்லை என்பதன் அடையாளமாக நான் தலையசைத்தேன். 'கேள்விப்பட்டிருக்கேனே தவிர படிச்சதில்லை சார். ப்ஃரெண்ட்ஸ்கிட்ட சொல்லி வச்சிருக்கேன் சார். கிடைச்சதும் படிப்பேன்' என்றேன்.

பொதுவாகவே நான் வாழ்க்கை வரலாற்று நூல்களை தேடித்தேடிப் படிக்கக்கூடியவன். கந்தசாமியின் சொற்கள் சரியான பாதையிலேயே நான் செல்வதை உறுதிப்படுத்திக்கொள்ள உதவின. ஊருக்குத் திரும்பிய பிறகு மேலும் வேகத்தோடு புத்தகங்களைத் தேடியெடுத்துப் படிக்கத் தொடங்கினேன்.

முதல் சந்திப்பைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் நான் அவரை மறுபடியும் சந்தித்தேன். இந்த முறையும் பாலுதான் என்னை அழைத்துச் சென்றார். அப்போது என் முதல் சிறுகதைத்தொகுதி வெளிவந்திருந்தது. அதைக் கொடுத்துவிட்டு

சிறிதுநேரம் உரையாடிக்கொண்டிருந்துவிட்டுத் திரும்பினேன். எனக்கு அவர் அப்போது அவருடைய சிறுகதைத்தொகுதியை எனக்கு கையெழுத்து போட்டுக் கொடுத்தார். வழக்கம்போல நான் ஊருக்குத் திரும்பியதும் அத்தொகுதியைப் பற்றி விரிவாகவே ஒரு கடிதம் எழுதினேன். நேரில் உரையாடுவதைவிட கடிதங்கள் எழுதுவது எனக்கு மிகவும் வசதியாக இருந்தது.

அடுத்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நான் பெங்களூருக்கு மாற்றலாகி வந்தேன். இந்திய அறிவியல் கழகத்தில் நண்பர் சுந்தரமூர்த்தி நடத்திவந்த இலக்கியச்சந்திப்பின் வழியாக கிழார் என்னும் தமிழாசிரியரின் அறிமுகம் கிடைத்தது. அவருடன் பேசிக் கொண்டிருந்தபோது அவரிடம் கசடதபற இதழ்கள் இருப்பதாகத் தெரிவித்தார். யாரோ என்னிடம் புதையல் இருக்குமிடத்தைச் சொன்னதைப்போல மகிழ்ச்சியாக இருந்தது. அன்றே அவருடன் சென்று அவற்றை வாங்கிவந்து ஒளியச்சு நகல் எடுத்துக்கொண்டு திருப்பிக் கொடுத்தேன். ஏறத்தாழ இரு வார காலம் அவ்விதழ்களை ஒன்றுவிடாமல் படித்துமுடித்தேன். தமிழ்ச்சிந்தனைப்போக்கை வடிவமைப்பதில் அவ்விதழுக்குள்ள பங்கை என்னால் உணரமுடிந்தது. நான் உடனே வழக்கம்போல அவருக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதி அனுப்பிவைத்தேன்.

பெங்களூருக்கு வந்த பிறகு நான் சென்னை வழியாக ஊருக்குச் செல்லவேண்டிய அவசியமே இல்லாமல் போய்விட்டது. அதனால் அவரைச் சந்திக்க இயலவில்லை. பெங்களூர் தமிழ்ச்சங்கத்தில் அவருடைய நாவல்களும் சிறுகதைத்தொகுதிகளும் கிடைத்தன. நான் அவற்றையெல்லாம் விரும்பிப் படித்தேன். சாகித்ய அகாதெமி ஏற்பாடு செய்திருந்த ஒரு கூட்டத்துக்காக ஒருமுறை அவர் பெங்களூருக்கு வந்திருந்தார். அப்போது அவரைச் சந்திக்க காவ்யா சண்முகசுந்தரமும் தமிழவனும் சென்றார்கள். நானும் அவர்களோடு சென்று அவரைச் சந்தித்து உரையாடி மகிழ்ந்தேன்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அவர் தம் மகளுக்குத் திருமணம் முடித்து, அவரை குடியமர்த்துவதற்காக பெங்களூருக்கு வந்திருந்தார். வந்ததும் எனக்கு காலையிலேயே தொலைபேசியில் தகவலைச் சொன்னார். நான் அவர் தங்கியிருக்கும் முகவரியைக் கேட்டேன். அவர் சொன்ன இடம் எங்கள் வீடிருந்த தெருவுக்கு எதிர்ச்சாரியில் இருந்தது. 'இன்னும் அஞ்சே நிமிஷத்துல உங்கள வந்து பாக்கறேன் சார்' என்றேன். 'எப்படி?'என்று ஆச்சரியத்தோடு அவர் கேட்டார். 'அந்த அளவுக்கு பக்கத்துலதான் சார் இருக்கேன்' என்று சொல்லிவிட்டு சந்திக்கச் சென்றேன். மூன்று நாட்கள் அவர் அப்போது பெங்களூரில் தங்கியிருந்தார். எல்லா நாட்களிலும் மாலை வேளைகளில் சந்தித்து உரையாடினோம். நண்பர் காவ்யா சண்முகசுந்தரத்தின் வீடும் அருகிலேயே இருந்தது. அங்கு சென்று நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டிருந்தோம்.

அவருக்கு எல்லாத் துறைசார்ந்தும் ஆர்வமிருந்தது. ஒவ்வொன்றைப்பற்றியும் ஒரு அரைமணி நேரமாவது பேசும் அளவுக்கு தெரிந்துவைத்திருந்தார். உலகவரலாறு அவருக்கு மனப்பாடம். கிரேக்க வரலாறு, செவ்விந்தியர் வரலாறு, ஆப்பிரிக்க வரலாறு என பேச்சு எதைப்பற்றியதாக இருந்தாலும் உடனே உரையாடத் தொடங்கிவிடுவார். சாக்ரடீஸ், பிளாட்டோ, கலிலியோ போன்ற சிந்தனையாளர்களைப்பற்றி விரிவாகவே தெரிந்துவைத்திருந்தார். இவர்களைப்பற்றியெல்லாம் ஆங்கிலத்தில் என்ன புத்தகங்கள் வந்திருக்கின்றன, தமிழில் யார்யார் இவர்களைப்பற்றி எழுதியிருக்கிறார்கள் என்பதைப்போன்ற தகவல்களை எப்போது கேட்டாலும் சோர்வின்றி சொல்லக்கூடிய ஆற்றல் கந்தசாமிக்கு இருந்தது. ஓவியம், சிற்பம், ஆவணப்படம் போன்றவற்றிலும் அவருக்கு ஆர்வமிருந்தது.

எப்படியும் ஆண்டுக்கு இருமுறை அவர் பெங்களூருக்கு வரும்போதெல்லாம் சந்தித்துவிடுவேன். 'புதுசா என்ன புத்தகங்கள் படிச்சீங்க?' என்றுதான் அவர் உரையாடலைத் தொடங்குவார். நம்மிடம் கேட்டுத் தெரிந்துகொண்டதும் தாம் படித்த புத்தகங்களைப்பற்றி சொல்வார். ஒருமுறை கூட புதிய புத்தகம் பற்றி அவர் பேசாமல் இருந்ததே இல்லை. ஒரு மாதத்தில் ஐந்து அல்லது ஆறு புதிய புத்தகங்களாவது படித்துவிடுவதாக அவர்

சொன்னார். திடீரென அவர் யானைகள் பற்றிப் பேசுவார். பிறகு ஆறுகள், அருவிகள் பற்றிப் பேசுவார். உலகில் உள்ள எல்லாவற்றைப்பற்றியும் பேசக்கூடிய ஆற்றலும் ஞானமும் அவருக்கு இருந்தன என்பதுதான் உண்மை. கங்கை, யமுனை, பிரம்மபுத்திரா ஆகிய வற்றாத ஜீவநதிகள் போல, சா.கந்தசாமி வற்றாத ஞானநதி.

27.05.2018 அன்று கவிக்கோ அரங்கில் சென்னையில் என்னைப்பற்றி நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் சிறப்புரையாற்றினார். மறுநாள் நான் தொலைபேசியில் அழைத்து அவருக்கு நன்றி சொன்னேன். 'உம்ம பத்தி பேச இப்படி ஒரு வாய்ப்பு அமைஞ்சதுல எனக்கு ரொம்ப சந்தோஷம்யா' என்று அப்போது அவர் சொன்ன சொற்கள் இன்னும் என் காதில் ஒலிக்கின்றன. அடுத்த ஆண்டில் அவர் பெங்களூரில் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். அப்போது தமிழில் புதிதாக மொழிபெயர்க்கப்பட்டு வந்திருக்கும் ஓடை நாவலைப்பற்றி நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தோம். நாவலின் மொழிபெயர்ப்பாளர் நல்லதம்பியும் நண்பர் திருஞானசம்பந்தமும் அப்போது உடனிருந்தார்கள். நண்பகல் தொடங்கி ஏறத்தாழ ஆறேழு மணிநேரம் தொடர்ந்து அவர் உரையாடினார். தற்சமயம் நாம் படித்துக்கொண்டிருக்கும் மொழிபெயர்ப்புகள் எல்லாமே ஐம்பது அறுபது ஆண்டுகள் பழைமை மிக்கவை. அன்றைய காலகட்டத்து மொழியை உடையவை. அவற்றை இன்றைய மொழியில் மீண்டும் மொழிபெயர்ப்பது சரியாக இருக்குமா என்று கந்தசாமி கேட்டார். தாராளமாக செய்யலாம் என்பதே என் பதிலாக இருந்தது. உடனே தொகைநூல்களை உருவாக்குவது பற்றி பேசத் தொடங்கிவிட்டார்.

தெருக்கூத்து இடம்பெற்றிருக்கும் சிறுகதைகள், மரணச்சடங்கு இடம்பெற்றிருக்கும் சிறுகதைகள், திருமண மண்டபங்கள் இடம்பெற்றிருக்கும் சிறுகதைகள் என வெவ்வேறு களங்கள் சார்ந்து கதைகளைத் தொகுத்துப் பார்ப்பது ஆரோக்கியமாக இருக்கும் என்பது அவர் எண்ணம். நாம் இதுவரை அடைந்தது என்ன, அடைய மறந்தது என்ன என்னும் கேள்விக்கு இப்படிப்பட்ட தொகைநூல்களே விடைகளை வைத்திருக்கும் என்பது அவர் பார்வை.

எழுத்தாளர் விட்டல்ராவைப் பாராட்டும் விதமாக ஒருநாள் கருத்தரங்கமொன்றை பெங்களூரில் நிகழ்த்தும் திட்டமொன்றை நானும் திருஞானசம்பந்தமும் அவரிடம் பகிர்ந்துகொண்டோம். 'நல்ல திட்டம்யா. அவருக்கு நாம கண்டிப்பா செய்யணும்' என்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். 'அடுத்த மாசம் கனடாவுக்கு போறேன். திரும்பிவர ஆறு மாசமாய்டும். வந்ததுமே நிகழ்ச்சிய வச்சிக்கலாம். நானே வந்து நடத்திக் கொடுக்கறேன்' என்று தெரிவித்தார். அந்த ஊக்கம் எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. நிகழ்ச்சியை எங்கு நடத்தலாம், எந்தெந்த அமர்வுகளுக்கு யார்யாரை அழைக்கலாம் என்றெல்லாம் பல திட்டங்கள் மனத்துக்குள்ளேயே எழுந்து அடங்கின. ஆறு மாதங்களுக்குப் பிறகு அவரும் கனடாவிலிருந்து திரும்பிவிட்டார். 2020 பிறந்த பிறகு ஒருமுறை அழைத்து எங்கள் திட்டத்தை மீண்டும் நினைவூட்டினேன். ஏதோ ஒரு எழுத்துவேலையில் இருப்பதாகவும் அதை முடித்துவிட்டு ஏப்ரல் வாக்கில் பெங்களூருக்கு வருவதாகவும் சொன்னார். துரதிருஷ்டவசமாக மார்ச் இறுதிவாரத்திலிருந்தே ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு செல்லமுடியாதபடி கோவிட் தீநுண்மி பரவல் அச்சம் அனைவரையும் தடுத்துவிட்டது. அவருக்கும் அது ஏமாற்றமளிப்பதாகவே இருந்தது. 'இது ஓயட்டுமே, பிறகு பார்க்கலாம்' என்று சொன்னார். அதற்குப் பிறகு அவருடன் தொலைபேசியில் உரையாடவே முடியவில்லை. உடல்நிலை வேகமாக சரிந்து 31.07.2020 அன்று உயிரைப் பறித்துவிட்டது.

உரையாடலில் எப்போதும் புதுப்புது கோணங்களை உருவாக்கி, அதை மேலும் மேலும் பேசி விரிவாக்கி, புதிய சிந்தனைகளை நோக்கி பெரும்பாய்ச்சல் நிகழ்த்துவது சா. கந்தசாமியின் வழிமுறை. அவர் உரையாடல்கள் ஒவ்வொன்றும் ஒருவகையில் விவாதம் நிகழ்த்துவதற்கான விதைகளைக் கொண்டவை. அதன் விளைச்சல் எப்போதும் தமிழ்ப்படைப்புலகுக்கு பெருமை சேர்ப்பதாகவே இருந்தது. எதிர்பாராமல் நிகழ்ந்த அவர் மறைவு அந்த விதைகளை நம்மிடமிருந்து பறித்துவிட்டது. இது ஒருவரும் எதிர்பாராத பேரிழப்பு. சா.கந்தசாமிக்கு அஞ்சலிகள்.

வறுமையின் உச்சமும் ஆதங்கத்தின் நகைச்சுவையும்

முனைவர் இரா.மோகனா

தமிழ் இலக்கிய உலகில் புனைவு இலக்கியங்களான கவிதை, சிறுகதை, நாவல் எழுதுவோர் வரவு அதிகரித்திருந்தாலும் அனைவருடைய படைப்புகளும் நூலாக்கம் பெறுவதில்லை. பலரின் தூண்டுதலாலும் ஊக்குவிப்பாலுமே இத்தகு படைப்புகள் எழுத்துரு பெறுகின்றன. அவ்வகையில் மேனாள் வங்கி ஊழியரான எஸ். வி. வேணுகோபாலன் அவர்கள் சிறுவயது முதலே எழுத்திலும் வாசிப்பிலும் பேரார்வம் உடையவராக இருந்துள்ளார். இவருடைய முதல் எழுத்தாக்கம் ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போது நிகழ்ந்துள்ளது. அறிஞர் அண்ணா நிறுவிய பத்திரிக்கையில்தான் சுகந்தன் என்ற புனைபெயரில் இவருடைய முதல் கவிதை வெளியானது.

கல்லூரி படிப்பிற்காகச் சென்னை வந்தபோது சந்திரமவுலி என்கின்ற அழகியசிங்கர்தான் இவருக்கு இலக்கிய வாசிப்பின் சாளரங்களைத் திறந்து தந்தவர் என்று ஆசிரியர் தன்னுடைய என்னுரையில் கூறியுள்ளார். நன்றி மறப்பது நன்றன்று என்பதற்கிணங்க தன்னை ஏற்றிவிட்ட ஏணிகளான தோழர்களை நினைவு கூறியுள்ளமை சிறப்பிற்குரியது. இத்தகைய பண்பு மாறா எஸ். வி. வேணுகோபாலன் அவர்களால் எழுதப்பட்ட தர்ப்பண சுந்தரி என்ற இந்நூலை பாரதி புத்தகாலயம் டிசம்பர் 2019 இல் வெளியிட்டுள்ளது. இந்நூலில் இடம்பெற்றுள்ள 16 சிறுகதைகளும் மலர்த்தும்பி, கணையாழி, செம்மலர், ஆனந்த விகடன், தினமணிக்கதிர், அமுதசுரபி, புதிய ஆசிரியன் மற்றும் வண்ணக்கதிர் ஆகிய எட்டு பத்திரிக்கையில் வெளிவந்தவையே ஆகும். கோடையின் தாக்கத்தில் உழன்ற நகரவாசிகள் பொழுதுபோக்குவதற்காக கடலுக்குச் செல்கின்றனர். இவர்கள் பேருந்தில் பயணிக்கின்றபோது கோடையின் புழுக்கம் குழந்தையையும் விடாத காரணத்தால், அழுகின்ற குழந்தையைச் சமாதானப்படுத்த பல்வேறாக முயற்சிக்கின்றனர். இறுதியில் குழந்தை பசிக்காகத்தான் அழுகிறது என்பதாகக் கூறி முதற்கதையாகிய கோடை என்ற கதையை முடித்துள்ளார் ஆசிரியர். இக்கதையில் எவ்வளவுதான் அவசரகதி ஆனாலும் குழந்தை மீது மக்கள் காட்டுகின்ற அன்பு அழகாக படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. கடைசிநாள் படுக்கை என்ற கதையில் வாழ்விற்கும் மரணத்திற்குமான மனப்போராட்டம் பேசப்பட்டுள்ளது. இக்கதையில் வரும் புனிதா பிறந்தவீடு மற்றும் புகுந்தவீட்டில் அன்பானவளாகக் காட்டப்படுகிறாள். வீட்டிலோ தம்பியோடு இருக்கும்போது குறும்புத்தனமான பேச்சுகள் கணவன் வீட்டிலோ வெகுளித்தனத்தோடு கணவனின் அப்பாவித்தனத்தைக் கொண்டாடி இருபத்தைந்து ஆண்டுகள் இன்பமாக தாம்பத்தியம் நடத்தி வருகிறாள் என்பதை வெள்ளிவிழா ஆண்டுவரை வண்டி ஓட்டத்தில் பெரிய கஷ்டம் நஷ்டம் இல்லை, இருபத்தாறாம் வருடத்திலோ இப்படி ஒரு இடியை அந்த அப்பாவி கணவனின் தலையில் இறக்கப் போகிறாள் என்று ஆசிரியர் எழுதியுள்ள இடம் வாழ்வின் நிலையாமை தத்துவத்தைக் கூறுவதோடு வாசகரின் நெஞ்சில் ஈரத்தை உண்டாக்குகிறது. இக்கதையில் வருகின்ற வேலு அண்ணன், மாமா, அப்பா, பாஸ்கர் மாமா, டாக்டர் ரமணன், ஜலஜா எனப் பல நல்ல மனிதர்களைக் கதையில் உலவ விட்டுள்ளார். நள்ளிரவில் ஆறுதல் சொல்லவரும் டாக்டர் ரமணன், ஜலஜா ஆகியோர் வாசகர் மனதில் நிற்கின்றனர். புனிதாவின் வாழ்க்கையோடு நம்மையும் பயணிக்க வைக்கின்ற தன்மை சிறப்புடையது.



பாரதி புத்தகாலயம்
ரூ. 110, பக்கம் 120

விருப்பின் பொருள் வெறுப்பு என்ற கதையில் சரியான நேரத்தில் கிடைக்காத எந்த வாய்ப்புகளும் நமக்கு வெறுப்பையே உண்டுபண்ணும் எனும் கருவாடு எழுதப்பட்டுள்ளது. சிறுவனான நரசிம்மன் தீபாவளிக்காக ஏங்கியதும் பண்டிகைக்கு முதல்நாள்தான் தந்தை துணி,

பட்டாசு வாங்கித்தரும் செய்தியும் அதுவும் தந்தையின் எண்ணத்திற்கு ஏற்பவே அனைத்தும் நிகழும் என்ற கருத்தையும் அழகாகச் சொல்லியுள்ளார் ஆசிரியர். நரசிம்மனின் தந்தைக்குப் பட்டாசு வெடிப்பது என்பது காசைக் கரியாக்குகின்ற செயலாகும். காந்தி, புத்தன் பிறந்தநாட்டில் எதுக்கு வெடிகுண்டு போடணும் என்று குதிப்பார். ஒருமுறை தீபாவளி அன்று பாட்டி இறந்து நரசிம்மனை அன்றைய வருடம் தீபாவளி இல்லாமல் ஏமாற்றிவிட்டார். ஒருமுறையோ வேண்டுதல் என்று, தீபாவளியன்று திருப்பதிக்கு அவருடைய தந்தை அழைத்துச் சென்றார். இப்படியாக ஒவ்வொரு தீபாவளியாகக் கழிய தான் வேலைக்குப் போய் கொண்டாடும் தீபாவளி வரவே அது அவனுக்கு வெறுப்பைத் தந்தது என்பதாகக் கதையை முடித்துள்ளார்.

சூடாமணி மாமி முட்டுச்சந்து இரண்டு கதைகளும் அன்பு என்ற ஆணிவேரை வைத்து எழுதப்பட்டுள்ளது. சூடாமணிமாமி கதை ஒரு காவியம் என்றுதான் சொல்ல வேண்டும். எத்தனைக் குழந்தைகளோடும் பரிவோடு கவனித்த கரிசனம் மாமியிடம் உண்டு. தன்னுடைய மைத்துனரையே குழந்தை போல் பாவித்து வளர்த்த கைகள் அவளுடையவை. அவளது ரசனைமிக்க மொழியில் சிறிதுகூட கள்ளம்கபடம் இருக்காது. அவள் விளையாட்டாகக் கோபம் கொள்வதுகூட ஒரு கவிதை போல இருக்கும். தயக்கமற்ற பேச்சின் வேகம் புதிய மனிதர்களைக் கூட உறவுக்காரர் போல உணர வைத்துவிடும் என்று மாமியைப் பற்றியும் அவருடைய குணாதிசயங்களையும் பற்றியும் சிறுகதைகளில் ஆங்காங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார் ஆசிரியர். அப்பேர்பட்ட மாமி கடைசியில் முதியோர் இல்லத்தில் விடப்படும் அவலம் படிப்பவர் நெஞ்சில் பெரிய பாரமாக இறங்குகிறது. முதியோர் இல்லத்தை அத்தனை யதார்த்தமாக ஏற்கும் பக்குவம் மாமியிடம் தோன்றியதாக பிச்சப்பா எழுதியிருந்தான். குறைகளைப் பேசி அறியாத இயல்பு கொண்டவர் என்று ஆசிரியர் கோடிட்டுக் காட்டியுள்ளார். மாமியின் மரண வேதனையை வாசகரின் நெஞ்சில் ஒரு கோடாக குறிப்பதாக இச்சிறுகதை வடிக்கப்பட்டுள்ளது. சூடாமணி மாமியின் முதுமையைப் பற்றி இந்தச் சிறுகதையில் தள்ளாமை ததும்பும் முதுமை, மாநகர ஓட்டத்தில் கரை ஒதுங்கி நின்று ஏங்க வைத்துவிடுகிறது. பாதசாரிகளுக்கே வழிவிடாத நெரிசல் போக்குவரத்து போன்ற வாழ்க்கையில் நடக்கவே முடியாதவர்களுக்குக் கூட இடம் கிடைக்காது போய்விடுகிறது என்று முதியோர் இல்லத்தில் சேர்வதற்குச் சில வரம்புகள் வேண்டும் என்பதை இந்தச் சிறுகதையில் சொல்லிச் சென்றுள்ளார். சூடாமணி மாமி தன் வாழ்க்கையின் இறுதி நாள்களை ஒரு வாரம் போராடிப் போராடி கழித்திருக்கிறார். போராட்டம் விடுதலைக்காக அடர்ந்த காட்டில் எத்தனை தூரம் நடக்கலாம் என்ற கேள்விக்குப் பாதிதூரம் என்பதே பதில். அதற்குப் பிறகு நாம் காட்டின் அடுத்த முனை நோக்கி வெளியேறி கொண்டிருக்கிறோம் என்று பொருள். வாழ்வின் நுழைவாயில் அடுத்த நொடியில் வெளியேறுதலாக மாறிவிடுகிறது என்கின்ற ஆத்மார்த்த தத்துவத்தை ஆசிரியர் இக்கதையில் சொல்லிச் சென்றுள்ளார். முட்டுச்சந்து என்ற கதையில் கணவன் மனைவி அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். பிள்ளைகள் இருவரும் ஆளுக்கு ஒருவராக தன் தாய் தந்தையரைப் பிரித்து தங்கள் வீட்டில் தங்க வைத்துள்ளனர். இக்கருத்தை எதிரெதிர் சாரிகளில் வாழ்ந்த இரண்டு பிள்ளைகளிடம் பங்குவைக்கப்பட்ட அந்தப் பெரியவர்களின் வாழ்க்கையை ஒன்றுமே சொல்லாமல் ஓரிரு வரிகளில் கூறியுள்ளவிதம் அருமை. பாட்டியின் மரணச்செய்தியைத் தெருவில் நிறுத்தி அவரிடம் கூறுகிறார்கள். அச்செய்தியை அவர் விளங்குகின்ற கணம் உண்மையிலேயே வாசகர் நெஞ்சில் குத்தியது போன்று உள்ளது. பெரியவர் அப்படியே நிற்கின்றார். ஒரு நொடிப்பொழுது. ஒரே ஒரு நொடிப்பொழுது உறைந்தவண்ணம் நிற்கிறார். தழுதழுத்த குரலில் போயிட்டாளா? என்று வினாவினார். நல்லதுக்குத்தான் என்று அடுத்தக் கணம் மெதுவாக நடக்கத் தொடங்கினார். பெரியவரின் மனப் போராட்டத்தையும் அவரது மனைவி அடைந்த துன்பத்தையும் நான்கைந்து வரிகளில் ஆசிரியர் அழகாகக் காட்டியுள்ளார். வயதான தாய் தந்தையரை உயிரற்ற பொருட்கள் போல பங்கீடு செய்து நடத்துகின்ற குழந்தைகளுக்குச் சவுக்கடி கொடுத்தார் போன்று கதையை எழுதியுள்ளார். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் முட்டுச்சந்து மனதில் ஓர் இறுக்கமான உணர்வைத் தருகிறது . மாநகர் புதைகுழி என்ற கதையில் நடுத்தரவர்க்கத்தின் வாழ்வு, மன உலகு, அற்ப சந்தோஷம், ஆழமான குற்ற உணர்வுகளை இயல்பாகக் காட்டியுள்ளார். தினந்தோறும் இயந்திர உலகில் உலவுகின்ற எத்தனையோ சண்முகங்களைச் சற்று ஆதங்கத்தோடு எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

பிளம்பர் பையன் வீட்டுக்கு முன்னால் இறந்துபோக மறுநாள் காலையில் அவனைப் பெற்ற தாய்வந்து கதறும் காட்சி படிப்பவர்

மனதை உருக்குகிறது. அதேசமயம் அந்தப் பையன் தன்வீட்டு குழாய் ரிப்பேர் செய்ய வரும்பொழுது இவ்வாறு இறந்துவிட்டான் என்பதை வெளியில் சொல்ல முடியாமல் சண்முகம் படுகின்றபாடு நடுத்தரவர்க்கத்தின் வாழ்வைச் செம்மையாக எடுத்துக்காட்டுகிறது. படுக்கை அறையின் ஜன்னல் வழியே இரண்டாவது மாடியிலிருந்து கீழே பார்த்தார்கள் இருவரும் என்ற ஒரு வரியில் அந்த நடுத்தரவர்க்கத்தின் இயல்பினை ஆசிரியர் சிறப்பாக சொல்லி கடக்கின்றார். இறந்த குழந்தையின் தாய் சண்முகத்திடம் வந்து நியாயம் கேட்பது போன்று அவன் மனசாட்சி அவனை அவனுடைய குற்ற உணர்வை முன்னிறுத்திக் செல்வதாகக் கதை முடிக்கப்பட்டுள்ளது. தர்ப்பண சுந்தரி என்ற கதையிலும் சாதி உணர்வை இலைமறைகாய் போல் வாழைப்பழத்தில் ஊசி இறக்குவது போல் மிக மென்மையாகக் சொல்லிச் சென்றுள்ளார் ஆசிரியர். இளநீர் வெட்டும் நாகலட்சுமியை ஒரு தட்டிலும் கோவில் வழிகாட்டியான கேசவா ஐயங்காரை இன்னொரு தட்டிலுமாக சமமாக வைத்து கதையை நகர்த்திச் சென்று இருக்கின்ற தன்மை சிறப்புடையது. ஆணவக்கொலைகள் காலத்தில் கலை அழகுடன் எழுதப்பட்ட கதை இது. கேசவ அய்யங்கார் தன் பேத்தியைச் சரியாக அடையாளம் காண்பதும் ஆனால் பேத்தி நான் உன்னுடையவள் அல்ல என மறுத்து ஜாதியில் உழன்று கொண்டிருக்கும் தாத்தாவை நிராகரித்து, தாழ்த்தப்பட்டவரான தன் நாகலட்சுமி அத்தையிடம் சென்று நிற்கின்ற மனசாட்சியைக் காட்டுகிறது. இக்கதையைச் சிறிதுகூட தொய்வில்லாமல் எழுதி இருக்கின்றவிதம் பாராட்டுதற்குரியது. இக்கதை ஒரு குறு நாவலாக வந்திருக்க வேண்டிய கதை அந்த அளவிற்கு விரிவான பார்வையை ஆசிரியர் இதில் செலுத்தியுள்ளார்.

கொஞ்சம் மேலே வரட்டும் என்ற கதையில் ஆசிரியரின் சொந்த அனுபவம் எழுதப்பட்டுள்ளது. இந்தக் கதையில் சுய எள்ளலும் ஆசிரியரின் திறமையான நடையும் சிறுகதையை மிக அழகாக நகர்த்திச் செல்கின்றது. இக்கதையின் கதாப்பாத்திரமான சிம்மனின் தந்தை அவருடைய மரணத்தை ஒட்டிய சுகந்தனின் செயல்பாடுகள் படிப்பவர் மனதைக் கரைய வைக்கின்றது. இவர்களைத் தவிர டாக்டர் சுரேந்திரன், டாக்டர் பாஸ்கரன் எல்லோருமே நல்ல மனிதர்களாக இருக்கிறார்கள். இப்படி நல்ல மனிதர்களை ஒரு கதையில் கொண்டு வருவதால் அது வாசகனுக்கு ஒரு நேர்மறையான ஆறுதலை அளிக்கின்றது. இன்னும் கொஞ்சம் மேலே என்பது ஒரு குறியீடு போல நின்று வாழ்க்கையின் யதார்த்தத்தை மிக அழகாக சொல்லிச் செல்கின்றது. அம்மாவின் மகன் சோறு நெருப்பின் அருகே சக்கரங்களின் மீட்சியில் இந்த நான்கு கதைகளும் வறுமை, சாதிப் புறக்கணிப்பால் வருகின்ற கோபம் இவற்றை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளது. அம்மாவின் மகன் என்ற கதையில் தாய் மற்றும் மகனின் பாசப் போராட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. சிறுவயதுமுதல் தாயை நல்லநிலையில் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்த மகனின் எண்ணமே கதையின் கருவாக உள்ளது. அதிகப்படியான யதார்த்தத்தை இக்கதையில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். இக்கதையில் வருகின்ற மூர்த்தி தனக்கு உரிமையான ஒரு வீடு, ஒரு வாழ்க்கை, தன் தாய்க்கு வளமான ரூபாய் கட்டுகள், அவளுக்குப் பிடித்தமான வெளிர் நீலத்தில் தரமான ஒரு சேலை என்று இதுவே தன்னுடைய கனவு என்பதாகச் சொல்லி மூர்த்தியின் கதாபாத்திரத்தை உயர்த்தி இருக்கின்றார் ஆசிரியர்.

இலவச ஹாஸ்டல் குறித்த பார்வை சிறப்பாக உள்ளது. இரவு விடுதிக்குப் போகின்ற வழியில் உணவு சாப்பிடுவதற்காக மூர்த்தியும் அவருடைய நண்பரும் ஹாஸ்டலுக்குச் செல்ல, அங்கே பாதி உயரத்திற்கு உடைந்துபோன பழைய பிளாஸ்டிக் வாளியில் சோறு கொண்டு வரப்படுகிறது. அதைப் பார்த்தவுடன் அங்கு பயின்ற இரண்டாம் மற்றும் மூன்றாம் வகுப்பு கல்லூரி மாணவர்கள் கோபத்தில் சண்டையிட அங்கே உள்ளே நுழைந்த அதிகாரவர்க்கம், ஓசி சோத்துக்கே இத்தனை முழக்கமா? உனக்கு வைக்கிற இடத்தில் வெச்சிருக்கணுண்டா பன்னீங்களா, அப்பன் பேரே தெரியாத வேத்தாளுக்குப் பிறந்தவர்களா என்று அந்த மாணவர்களை அறையப் போகிறான். அதுவரை அமைதிகாத்த மூர்த்தியும் அடிக்கிறதுன்னா எல்லாத்தையும் அடி. உடம்புல அடி. அம்மாவோட கர்ப்பத்தில் அடிச்சே செத்தீங்கடா ஒவ்வொருத்தனும் என்று இரண்டு கைகளையும் காற்றில் வீசிக்காட்டி பெருங்குரலெடுத்து கத்திக் கொண்டே செல்கிறான். இந்த இடத்தில் அம்மாவின் மீது பாசம் கொண்ட ஒவ்வொரு மகனையும் கண்ணீர் சிந்த வைத்திருக்கின்றார் ஆசிரியர். நெருப்பின் அருகே என்ற கதையில் நெசவாளியின் வாழ்வை மையமாகக் கொண்டு எழுதி இருக்கின்றார். தாழ்வு மனப்பான்மை இருக்கக்கூடாது. எந்தச் சோகத்தையும் தனக்குள்ளே வைத்துக் கொள்ளக்கூடாது என்ற கருத்தைக் கதைக் கருவாக கொண்டுள்ளார். தாயின் மனக்குமுறல் இக்கதையில்

வெளிச்சமிட்டு காட்டப்பட்டுள்ளது. ஒரு பெண் குழந்தையின் மீது தந்தை கொண்டிருக்கின்ற பாசமும் உள்ளீடாக உள்ளதையும் ஆசிரியர் மிக அழகாக எழுதியுள்ளார். தன் மகள் படிப்பதற்காக மெட்ராஸ் சென்று இருக்கின்றார். அதைத் தன் மனைவியிடம் கூறுகின்ற வைரவேல், ஊர் இருக்கிற இருப்பு சரியில்ல. ஒரு கிராமத்து பொண்ணு எப்படி மெட்ராஸ்ல தங்கிப் படிக்கும். அதுவும் ஹாஸ்டல் சோறு ஒருவேளை கஞ்சின்னாலும் வீட்டுச்சோறு மாதிரி வருமா. கறிக்குழம்பு வச்சா எப்படி ருசிச்சு தின்னுவா குழந்தை. என்ன தின்கிறாளோ, எப்படி தூங்குகிறாளோ, தெரியலையே என் தெய்வமே என்று தேம்பித்தேம்பி அழுவது சிறுகதை வரிகளை வலிகளாக மாற்றியிருக்கிறார் ஆசிரியர். இதைப் படிக்கின்ற ஒவ்வொரு தகப்பனும் தன் மகள்மீது கொண்டிருக்கின்ற பாசத்தில் உறைந்து போவது உண்மை. சோறு என்ற சிறுகதையில் சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதற்கிணங்க அரசாங்கத்தின் அலட்சியத்தை ஆணி அடித்தார்போல் தந்தி அடித்து அம்பலப்படுத்தி, அவசரஅவசரமாக தேவையை நிறைவேற்றிய செயலைப் பதிவுசெய்துள்ளார். ஆண்டியும் அரசனும் தன் தேவையைக் கேட்டால் மட்டுமே கிடைக்கும் என்ற நிதர்சனம் இக்கதையில் சொல்லப்பட்டுள்ளது. ரெவின்யூ ஸ்டாம்ப் வாங்கப் போயிருந்த தற்காலிக ஊழியர் சீனிவாசன் பதட்டமாக ஓடிவந்து சார் ஹாஸ்டல் வார்டனை சஸ்பெண்ட் செஞ்சுட்டாங்க சார். நோட்டீஸ் அடித்து சுவரில் ஒட்டிட்டாங்க. ஒரே கூட்டம் ஜீப்பில் யாராரோ அதிகாரிகள் வந்து இருக்காங்க. அவங்களே ஹாஸ்டல் பசங்களுக்கு மார்க்கெட் போய் காய்கறி, முட்டை, பழம் எல்லாம் வாங்கி சூடா சமையல் வேலை நடக்குது. என்ன நடக்குதுன்னே தெரியலை சார் என்று தன்னுடன் வேலை பார்க்கும் ஒருவரின் வார்த்தையைக் கேட்டவுடன் தன் வயிறு நிறைந்தால் மட்டும் போதாது ஏழையின் வயிறும் நிறைக்க வேண்டும் என்று எண்ணம் கொண்ட குமரனின் உயரிய எண்ணம் நிறைவேறியதோடு அவனுடைய வயிறும் நிறைந்ததாக ஆசிரியர் காட்டுகின்றார் .

சக்கரங்களின் மீட்சியில் என்ற கதையில் 14 குடும்பங்கள் சேர்ந்து ஏழு நாட்கள் பயணம் மேற்கொள்கின்றனர். அந்தப் பயணத்தின் அனுபவமே ஒரு கதையாக எழுந்துள்ளது. மகிழ்ச்சியாக துவங்கிய பயணம் பேருந்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இடையில் நின்றுவிட, வண்டியில் வந்த 14 குடும்பங்களும் வெறுத்துப்போய் மரத்தடியிலும் கடைவாசலிலும் கிடைக்கிற இடம் பார்த்து உட்கார்ந்து வெறுத்துப் போயிருந்தனர். எப்படியும் ஒரு மணி நேரத்திற்குள் ஆள் வந்து சரிபார்த்து பேருந்தைச் சரிசெய்து விடலாம் என்று சமாளித்து பேசிக் கொண்டிருந்த ஓட்டுநரும் நடத்துனரும் நேரம் கடந்தபடி இருக்க கடையின் உள்ளே கண் மறைவாய் எங்கோ போய் உட்கார்ந்து விட்டனர். ஓய்வுபெற்ற பெருசுகள் ஒருவர் மெல்லிய குரலில் ஆளப் பாத்தியா எல்லாம் கோட்டாவில் வந்தவனாய் இருக்கும் என்று தணிந்த குரலில் மனைவியிடம் சொல்லிக் கொண்டிருந்ததாக கண்ணனிடம் அவனது மனைவியும் மிகவும் கோபத்தோடு சொல்லுகின்ற செய்தியை ஆசிரியர் இந்தச் சிறுகதையில் பதிவு செய்துள்ளார்.

பலர் சேர்ந்து செல்லுகின்ற பயணத்திலும் கூட ஜாதி உணர்வு தலைதூக்கியது. முதலில் சாடி பின்பு முடிவிலும் சரியான அடி கொடுத்துள்ளார் ஆசிரியர். அனைவரும் சிக்கித் தவித்த அந்த நேரத்தில் கோட்டாவில் வந்த அந்த மிகப் பெரிய மனிதர்தான் சகதியில் மாட்டியிருந்த சக்கரத்தை மேலேதூக்கி அனைவரையும் மூச்சுவிடச் செய்தார். அவ்வாறு செய்த மனிதரைப் பார்த்து கோட்டா கமெண்ட் கொடுத்த தாத்தா குற்ற உணர்வில் நெளிந்தார் என்றும் அந்தக் கோட்டாவில் வந்த அவருடைய கதாபாத்திரத்தின் பெயர் குணசீலன். அவரைக் கண்ணன் உங்கள் குடும்பத்தோடு இன்றைக்கு இரவு உணவு எங்கள் வீட்டில்தான் என்று சொல்ல வேண்டாம் சார் காலம் காலமாக அதெல்லாம் நாங்க செஞ்சுகிட்டு இருக்க வேலைதானே என்று நாசுக்காக சொல்ல கண்ணனும் அதிர்ச்சியில் உறைந்தார்.உங்க ட்ரீட் தானே காலாகாலத்துக்கும் நாங்க சாப்பிட்டு வர சாப்பாடு. இன்னைக்கு மட்டுமாவது உங்களுக்கு மத்தவங்க கொடுத்து பார்த்து உணர்ந்துக்கட்டுமே என்றாள் கண்ணனுடைய மனைவி என்பதாகக் கதையை முடித்திருக்கிறார். இந்த வரிகள் படிப்பவர் மனதில் உற்சாகத்தை ஏற்படுத்துகிறது. இச்சிறுகதை ஜாதி உணர்வில் மூழ்கியவனுக்குச் சவுக்கடி தந்தார் போல் இருக்கின்றது. எஸ். வி. வேணுகோபாலன் நடையைப் பற்றி கூறவேண்டும் என்று சொன்னால் பாமரரும் படிக்கின்ற விதத்தில் மிக எளிமையான நடையாக உள்ளது. கதையினைப் படிக்கின்றபோது சலிப்பு, தொடர்பின்மை காணப்படவில்லை. சிறுகதைக்குரிய இலக்கணத்தில் சிறிதும் மாறாமல் எழுதியுள்ள ஆசிரியரின் போக்கு பாராட்டுதற்குரியது. இந்நூலை நன்முறையில் நூலாக்கம் செய்த பாரதி புத்தகாலயத்திற்கும் வாழ்த்துகள்.

ஓடுவதற்கான உத்தரவு

லேனா கலாஃப் துஃபாஹா

தமிழில்: ரவிக்குமார்

அவர்கள் தொலைபேசியில் அழைக்கிறார்கள்
குண்டுகளைப் போடுவதற்கு முன்பு
தொலைபேசி அடிக்கிறது
எனது பெயரைத் தெரிந்த யாரோ அழைக்கிறார்கள்
சுத்தமான அரபியில் சொல்கிறார்கள் "
டேவிட் பேசுறேன்"
குண்டுகள் விழும் ஒலியும் கண்ணாடிகள் நொறுங்கும்
சப்தமும் கலந்த இசைக் கோர்வையின் பின்னணியில்
நான் சிந்தித்துப் பார்க்கிறேன் " எனக்கு டேவிட் என்று
யாரையாவது தெரியுமா? "
அவர்கள் ஃபோன் செய்து ஓடச் சொல்கிறார்கள்
இந்தச் செய்தி முடிந்ததும் உங்களுக்கு 58 நொடிகள்
உள்ளன
உங்கள் வீடுதான் அடுத்த இலக்கு
போர்க்காலக் கருணையென இதை அவர்கள்
நினைத்திருக்கலாம்
ஓடுவதற்கு ஒரு இடமும் இல்லையென்றாலும்கூட
இதற்கு எந்த அர்த்தமுமில்லை
எல்லைகள் மூடப்பட்டுவிட்டன உங்கள்
கடவுச்சீட்டு செல்லாமல்போய்விட்டது
கடலால் சூழப்பட்ட இந்த இடத்தில் நீங்கள் ஆயுள்
கைதியாக இருக்கிறீர்கள்
பாதைகள் குறுகிப்போய்விட்டன
உலகில் வேறு எந்த இடத்தைவிடவும்
மனிதர்கள் நெருக்கியடித்துக்கொண்டு வாழும் பகுதி இது
' ஓடுங்கள்' அவர்கள் சொல்வது அவ்வளவுதான்
நாங்கள் உங்களைக் கொல்வதற்கு
முயற்சிக்கவில்லை
நாங்கள் தேடும் நபர்கள் உங்கள் வீட்டில்
இல்லையென்பதை நீங்கள் எங்களுக்குச்
சொல்லவேண்டுமென்பதுகூட அவசியமில்லை
நீங்களும் உங்கள் குழந்தைகளும்தவிர வேறெவரும்
வீட்டில் இல்லை
கால்பந்துப் போட்டியில் நீங்கள்
அர்ஜெண்டினாவுக்காக
ஆர்ப்பரித்துக்கொண்டிருக்கிறீர்கள்
இந்த வாரத்து ரேஷன் ரொட்டியின் கடைசித்
துண்டை சாப்பிட்டுக்கொண்டிருக்கிறீர்கள்
மின்சாரம் நின்றுபோனால் கொளுத்துவதற்கு
மிச்சமிருக்கும் மெழுகுவர்த்திகளைக்
கணக்கிட்டுக்கொண்டிருக்கிறீர்கள்
எதுவும் பொருட்டல்ல
உங்களுக்குக் குழந்தைகள் இருக்கின்றன என்பதுகூட
ஒரு விஷயமல்ல
நீங்கள் தவறான இடத்தில் வாழ்கிறீர்கள்
இல்லாத இடத்தைத் தேடி
ஓடுவதற்காகக் கிடைத்திருக்கும் ஒரு வாய்ப்பு
இந்த 58 நொடிகளில்
உங்கள் திருமண ஆல்பத்தைத் தேடியெடுக்கமுடியாது
உங்கள் மகனுக்குப் பிடித்த போர்வையை
எடுத்துக்கொள்ள முடியாது
உங்கள் மகளின் அரைகுறையாய் பூர்த்தி
செய்யப்பட்ட கல்லூரி விண்ணப்பத்தை
எடுத்துக்கொள்ள முடியாது
வீட்டிலுள்ளவர்களைக் கூப்பிடக்கூட முடியாது
எதுவும் பொருட்டல்ல
நீங்கள் யாரென்பதுகூட பொருட்டல்ல
நீங்கள் மனிதர்தான் என்பதை நிரூபியுங்கள்
நீங்கள் இரண்டு கால்களில்தான் நிற்கிறீர்கள்
என்பதை நிரூபியுங்கள்
ஓடுங்கள்"

(பாலஸ்தீனிய அமெரிக்க எழுத்தாளரான
லேனா கலாஃப் துஃபாஹா 21.7.2014 அன்று
எழுதிய கவிதை இது.)

எங்களைப் பயங்கரவாதிகள் என்கிறீர்கள்

நிஸார் கப்பானி

தமிழில்: ரவிக்குமார்

துண்டு துண்டாகிச் சிதைந்து
அழிந்ததுபோக
எஞ்சியிருக்கும் எம் தாய்நாட்டைப்பற்றிப் பேசினால்
தனக்கென ஒரு இடத்தைத் தேடிக்கொண்டிருக்கும்
முகமற்ற எம் தேசத்தைப்பற்றிப் பேசினால்
எங்களைப் பயங்கரவாதிகள் என்கிறீர்கள்
ஒப்பாரியையும் ஓலத்தையும் தவிர
தொன்மையான தனது
இலக்கியங்களெல்லாம் அழிந்துபோன
தாய்நாடு
தன்னிடம் சுதந்திரமோ கருத்தியலோ இல்லாத
தாய்நாடு
ஒரு செய்தித்தாளை வாங்குவதையோ
வானொலியைக் கேட்பதையோ
தடை செய்திருக்கும் தாய்நாடு
பறவைகள் பாடமுடியாத தாய்நாடு
படைப்பாளிகள் பயத்தின் காரணமாக
கண்ணுக்குப் புலப்படாத மையைக்கொண்டு
எழுதும் தாய்நாடு
மண்ணிலிருந்து மனிதர்களிடமிருந்து விலகி
அவர்களது துயரங்களை ஒதுக்கிவிட்டு
அந்நிய மொழியில் அந்நிய
ஆன்மாவுடன் பேசிக்கொண்டிருக்கும்
எல்லைகளற்ற , இறக்குமதியான
எமது கவிதையைப்போல இருக்கும் தாய்நாடு
எந்தவித கௌரவமும் இல்லாமல்
பேச்சுவார்த்தைக்குப் போன தாய்நாடு
ஆண்களில்லாத பெண்கள் மட்டுமே வாழும் தாய்நாடு
எமது வாயில் பேச்சில் விழிகளில் கசப்பு
தொன்மைக்காலம் தொட்டு
எம்மிடம் கையளிக்கப்பட்ட பாரம்பரியத்தை
அழித்துவிட்டதா ?
எமது தேசத்தில் எந்த உடலும் இல்லை
அவமானப்பட்ட உடல்களும் இல்லை
வண்ணமயமான எமது வரலாற்றை
சிலர் சர்க்கஸாக மாற்றும்போது
எமக்கேயுரிய ரொட்டியை வெண்ணையைக்
கைவிடும்போது 'கூடாது ' எனச் சொல்ல எவருமில்லை
ஆட்சியாளரின் அந்தப்புரத்தில் கற்பை இழக்காத
ஒரேயொரு கவிதைகூட எம்மிடம் இல்லை
நாங்கள் அவமானத்தோடு வாழப் பழகிவிட்டால்
மனிதனென்று சொல்லிக்கொள்ள என்ன இருக்கும் ?
எம்மை இருட்டிலிருந்து மீட்க
எமது பெண்களை நெருப்பின்
கொடுமையிலிருந்து காப்பாற்ற
எவரேனும் ஒரு மாமனிதர் வரமாட்டாரா என
வரலாற்று நூலில் தேடினேன்
நேற்றைய மனிதர்களைத் தேடினேன்
எனக்குக் கிடைத்ததென்னவோ எலிகளின்
ஆதிக்கத்துக்குப் பயந்த பூனைகள்தான்
நாங்கள் தேசிய
குருட்டுத்தனத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறோமா
அல்லது நிறக் குருடா
எங்கள்மீது பயங்கரவாதக் குற்றத்தைச் சுமத்துகிறீர்கள்
எமது ஒற்றுமையை
எமது வரலாற்றை
எமது பைபிளை குர் ஆனை
நபிகளின் தேசத்தை
நாசமாக்கிக்கொண்டிருக்கும்
இஸ்ரேலின் கொடுங்கோன்மைக்குப் பணியமறுப்பதால்
அதுதான் நாங்கள் செய்த பாவம் அல்லது குற்றம் என்றால்
பயங்கரவாதம் என்ற அடையாளமும் சரிதான்
மங்கோலிய யூதக் காடையர்களால்
அழித்தொழிக்கப்படுவதற்கு சம்மதிக்காததால்
எம்மைப் பயங்கரவாதிகள் என்கிறீர்கள்
கெய்சுராஸ் மன்னரால் ரத்துசெய்யப்பட்ட
பாதுகாப்புச் சபையைக் கல்லெறிந்து நொறுக்குவதால்
எம்மைப் பயங்கரவாதிகள் என்கிறீர்கள்
ஓநாயிடம் பேச்சுவார்த்தை நடத்தாததால்
விலைமாதுவிடம் செல்லாததால்
எம்மைப் பயங்கரவாதிகள் என்கிறீர்கள்
அமெரிக்கா எமது பண்பாட்டின்மீது போர் தொடுக்கிறது
ஏனெனில் அதற்கென ஒரு பண்பாடு இல்லை
எமது நாகரிகத்தின்மீது தாக்குதல் நடத்துகிறது
ஏனெனில் அதற்கு நாகரிகம் தேவை
அமெரிக்கா ஒரு மிகப்பெரிய கட்டடம்
சுவர்தான் இல்லை
திமிர்பிடித்த பலம்பொருந்திய பணக்கார அமெரிக்கா
ஹீப்ருவை வியாக்கியானப்படுத்தும்
ஒரே குரலாக மாறிவிட்ட
இந்த நிகழ்காலத்தை நாங்கள் ஏற்க மறுப்பதால்
எம்மைப் பயங்கரவாதிகள் என்கிறீர்கள்

மக்கள் இலக்கியம் – பள்ளேசல் நாடகம்

மயிலம் இளமுருகு

தமிழ்மொழி மிகப்பழமை வாய்ந்த மொழியாக விளங்கிவருகிறது. மொழியின் தோற்றத்தையும் அதன் இலக்கிய வளத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது தமிழில் வளர்ந்துள்ள இலக்கிய வகைகள் மிகவும் சிறப்பானதாகவும் இருந்துள்ளதை நாம் காண்கிறோம். அந்த அடிப்படையில் முதன்முதலில் செவ்வியல் இலக்கியங்கள் என்று சொல்லப்படுகின்ற சங்க இலக்கியங்கள் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. இவ்விலக்கியம் பரந்துபட்ட நம் தமிழ்ச் சமூக, மரபார்ந்த வாழ்வியல் நெறிகளைச் சொல்வதாக இருக்கின்றன. காலம் செல்ல செல்ல நடைமுறை இலக்கியமான மக்கள் இலக்கியங்களும் தோன்றின. சங்கம் மருவிய கால இலக்கியங்கள் வளர்ந்தன. இதனை நாம் நீதிநூல்கள் என்கிறோம். பிறகு சிற்றிலக்கியங்கள் தோன்றின. காப்பியங்கள், கவிதைகள் மேலும் ஐரோப்பியரின் பாணி இலக்கியங்களான நாவல், சிறுகதை என்று படிப்படியான வளர்ச்சியை நம் தமிழ்மொழி பெற்று விளங்குகிறது.

சிற்றிலக்கியங்கள் என்பது 96 வகை என்று சொல்லப்படுகின்றது. இந்த 96 இலக்கியங்கள் குறித்து நம் தமிழ் இலக்கணங்கள் நிறைய பேசி உள்ளன. பல்வேறு இலக்கணங்கள் அதன் வகைகளையும் குறிப்பிட்டுள்ளன. அதனுள் ஒன்றாக பள்ளு இலக்கியம் விளங்குகிறது. இவ்விலக்கியம் நாடகமாகவும் எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக பள்ளு இலக்கியம் குறித்து சொல்கின்றபோது 'நெல்லு வகையை எண்ணினாலும் எண்ணலாம் பள்ளு வகையை எண்ண முடியாது' என்ற பழமொழி இருக்கின்றது. அப்படி என்றால் சிற்றிலக்கியத்தில் அப்போது எழுதப்பட்ட இலக்கியங்களில் குறிப்பாக பள்ளு இலக்கியங்கள் அதிகமாக இருந்துள்ளன. ஆனால் நமக்குக் கிடைத்த இலக்கியங்கள் என்று பார்க்கின்றபோது குறைவாகவே இருக்கின்றன. தமிழ் இலக்கியங்களை உ.வே.சா அவர்கள் கடினப்பட்டு, அரிதின் தொகுத்து நூலாக்கம் செய்ததை அறிகின்றோம். நம் தமிழ் இலக்கியம் குறித்தும் அதன் பழமையை உணர்கின்றோம், சுவைக்கிறோம் ஆனால் தமிழில் தோன்றிய இலக்கியங்கள் பல இப்படி ஓலைச்சுவடியிலிருந்தும் தாள் சுவடிகளிலிருந்தும் இலக்கிய பதிப்பாக்க முயற்சியைச் செய்யாமலே இருந்த காரணத்தால் நிறைய இலக்கியங்கள் காணாமல் போயிருப்பதை நாம் உணர்கின்றோம். இந்த அரிய பணியைச் சென்னைப் பல்கலைக்கழக லெக்சிகன் பதிப்பாசிரியர் மு.வையாபுரிப்பிள்ளை அவர்கள் அவ்வப்போது வெளியிட்ட நிகண்டு குறித்த ஆய்வுகளின் நூல்களின் பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

நம் தமிழ் இலக்கியத்தில் பல இலக்கியங்கள் காணாமல் போனது குறித்து மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களும் எழுதியுள்ளார். இப்படி பல்வேறு அறிஞர்கள் பழந்தமிழ் இலக்கியத்தின் அருமையை உணர்ந்து தொடர் கட்டுரைகளை எழுதி வந்துள்ளனர். அவையெல்லாம் கிடைத்திருந்தால் தமிழருக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் இன்னும் பலம் கொடுத்தாக விளங்கியிருக்கும். 'பள்' என்ற சொல் உகர விகுதி பெற்று பள்ளு என்று ஆகியுள்ளது. பள்ளு, கள்ளு, முள்ளு என்ற வழக்காறுகளை இதற்குச் சான்றாகக் காட்டலாம். உழவுத் தொழிலுக்குச் சிறந்த இடம் மருதம். இது பயிர்த்தொழில் செய்வதற்குத் தக்கவாறு தண்ணீர் தங்கும் பள்ளமான இடங்களை உடையது. பள்ளங்கள் நிறைந்த இடத்தில் வேலை செய்வோரைப் பள்ளர் என்று குறிப்பிட்டனர். பள்ளர்கள் பாடும் பாடலே பள்ளு என்றானது. பள்ளு இலக்கியம் பிற்காலத்தில் இலக்கிய வடிவைப் பெற்றாலும் அதன் கூறுகள் பண்டைய இலக்கியங்களிலேயே தென்படுகின்றன. பள்ளு இலக்கியம் முழு வடிவைப் பெறுவதற்குப்

டுடே பப்ளிகேஷன்ஸ், ரூ. 160, பக்கம் - 238,

பல்வேறு கூறுகள் துணை செய்திருக்க வேண்டும். அவைகள்,

1. தொல்காப்பியர் 'புலன்' என்னும் செய்யுள் பற்றிக் கூறும் செய்திகள் பள்ளு இலக்கியத்தின் தோற்றம் பற்றிய செய்திகளோடு ஒத்துள்ளன. புலன் என்பது சேரி மொழிகளால் அதாவது வழக்கு மொழிகளால் புனையப்படுவது. (தொல். பொருள். 542)

2. தொல்காப்பியர் கூறும் ஏரோர் களவழி எனும் புறத்துறையையும் இங்குக் கூறுதல் வேண்டும். ஏரோர் களவழி என்பது உழவர்களின் நெல்களத்தில் நிகழும் செயல்கள் ஆகும். (தொல். பொருள். 75)

3. பன்னிருபாட்டியல் கூறும் உழத்திப் பாட்டும் பள்ளு இலக்கியத் தோற்றத்திற்குக் காரணமாகும். உழத்திப் பாட்டு என்பது உழவுப் பெண்களின் பாடல் என்று பொருள்படும்.

4. சிலப்பதிகாரம் சுட்டும் முகவைப் பாட்டு (10:137) (களத்தில் நெல் அடிக்கும்போது பாடும் பாட்டு) ஏர்மங்கலம் (10:135) (முதல் ஏர் பூட்டி ஓட்டும்போது பாடப்படும் மங்கலப்பாட்டு) ஆகியனவும் பள்ளு இலக்கியத் தோற்றத்திற்குக் காரணங்கள். பள்ளு இலக்கியம் என்று பார்க்கின்றபோது முக்கூடற்பள்ளு மிகச்சிறந்த இலக்கியமாக விளங்குகிறது.

அந்த அடிப்படையில் இத்தகைய பள்ளு இலக்கியங்களின் வளர்ச்சியை நாம் அறிகின்றோம்.

அண்ணா ஆதர்ச மகளிர் கல்லூரியில் உதவிப்பேராசிரியராகப் பணியாற்றும் முனைவர் லோ. ஜெயலட்சுமி அவர்கள் ஓலைச்சுவடியில், தாள் சுவடியிலிருந்த பள்ளு நாடகத்தை நூலாக்கம் செய்து தமிழ் இலக்கிய உலகிற்குப் பலம் சேர்த்துள்ளார். இம்முயற்சி தமிழ்மொழிக்கு வளமாகவும் விளங்குகிறது. இவர் ஏற்கனவே சங்க அக இலக்கியத்தை குறித்து விரிவாக ஆய்வு செய்துள்ளார். இந்நூல் இவரது இரண்டாவது நூல். டுடே பப்ளிகேஷன்ஸ் இந்நூலைப் பதிப்பித்துள்ளது. இந்நூல் குறித்து சொல்கின்றபோது 19-ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் அர்த்தநாரீசுவரர் பேரில் பள்ளேசல் நாடகத்தைத் திறம்பட நூலாக்கம் செய்திருக்கிறார். இது பாராட்டுக்குரியதாகும். இவரைப்போன்ற ஆர்வலர்கள் பலர் முன்வந்தால் அச்சில் வெளிவராமல் மறைந்து கிடக்கும் பல அரிய பழம்பெரும் இலக்கிய இலக்கண சுவடிகளை வெளிக்கொண்டு வர முடியும். இதனால் நம் தமிழ்மொழியின் செழுமை மென்மேலும் சிறப்புறும். இந்நூலுக்குச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறைத் தலைவர் முனைவர் யா. மணிகண்டன் அவர்கள் வாழ்த்துரை வழங்கியுள்ளார். அர்த்தநாரீஸ்வரர் பெயரில் பள்ளேசல் நாடகம் இப்போது நூல் வடிவம் பெற்றுள்ளது. சுவடியியல் பயிலுங்காலத்தில் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்பட்டு உருவாக்கிய ஆய்வேடு, நூல் வடிவம் பெற்றுள்ளமை கண்டு மிகவும் மகிழ்கிறேன் என்று பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். முனைவர் ச.உஷா அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ளார். அந்த அணிந்துரை இந்நூல் படிப்பற்கான ஒரு நுழைவுவாயிலாக விளங்குகிறது. நூலில் சொல்லப்பட்ட கருத்துகளை தெளிவாக 5 பக்கங்களில் குறிப்பிட்டுள்ளார். பள்ளு இலக்கியம் என்றால் என்ன? அதன் வேறு பெயர்கள், நூலாசிரியர் சிறப்பு, இந்தப் பள்ளு இலக்கியத்தின் பாடுபொருள் எனப் பலவற்றை அணிந்துரையில் உஷா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அடுத்ததாக என்னுரை என்னும் பகுதியில் நூலாசிரியர் தமிழ் சிற்றிலக்கிய மரபில் பல்வகைமை இலக்கியங்கள் இருந்துள்ளதைக் குறிப்பிட்டு பள்ளு இலக்கியங்கள் பள்ளர்கள் எனும் உறவு சார்ந்த மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை வெளிப்படுத்துவதாக அமைந்திருப்பதைக் கூறியுள்ளார்.

பள்ளு உழத்திப்பாட்டு என்றும் அழைக்கப்படுகின்றவிதத்தையும் இந்நூலில் பதிவு செய்துள்ளார். பல்வேறு கருத்துகளையும் இவர் குறிப்பிட்டுள்ளார். இப்பகுதி சிறப்பாக அமைந்துள்ளது. பள்ளு இலக்கியத்தின் தோற்றம் பிற்காலமாக இருந்தாலும்கூட பள்ளு நூல்களுக்கான வித்தாக நம் பழைய இலக்கணங்களில் இருக்கின்ற குறிப்புகளை நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக தொல்காப்பியத்தில் உள்ள நூற்பாவை இங்கே பதிவு செய்துள்ளார். அதுமட்டுமன்றி சிலப்பதிகாரத்தில் ஏர்மங்கலம், முகவைப் பாட்டு என்பன குறித்து விளக்கமாக இவர் எழுதியுள்ளார். மேலும் கம்பராமாயணத்தில் கம்பர் கோசலை நாட்டின் வளமையை வர்ணிக்கும்போது தமிழ்ச் சூழலை மையமாகக் கொண்டு எழுதிருப்பதைக் காணலாம். அவர் படைத்த ஏரெழுபது பாடல்களில் முழுக்க உழவர்களையும்

உழுதொழிலின் சிறப்புகளையும் பாடியுள்ளதை நூலாசிரியர் பதிவு செய்துள்ளார்.

இவ்விலக்கியம் குறித்தும் மிகத் தெளிவான புரிதலை ஏற்படுத்திக் கொண்டு இவர் தன்னுடைய கட்டுரையை எழுதியுள்ளார். குறிப்பாக உழத்திப்பாட்டு என்பது வேறு என்பதற்கான காரணங்களையும் அதிலிருந்து எப்படி பள்ளு இலக்கியம் வேறுபடுகின்றன என்பதற்கான விளக்கத்தையும் ஆய்வாளர் வெளிப்படுத்தியுள்ளார். மேலும் இந்த நூல் எதை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது, எப்படி பதிப்பித்துள்ளேன் என்ற கருத்துகளையும் இந்நூலில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலிருந்த சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு இவர் பதிப்பித்துள்ளார்.

இந்த இலக்கியம் திருச்செங்கோடு என்னும் ஊரில் கோயில் கொண்டிருக்கும் இறைவன் அர்த்தநாரீசுவரனைப் பாட்டுடைத் தலைவனாகப் போற்றிப் பாடப்பட்ட நூலாகும். இதன் காலம் கி.பி 19 நூற்றாண்டாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. தனக்கு ஓலைச்சுவடியும் தாள்சுவடியும் கிடைத்தது என்றும் அதில் தாள் சுவடியை மட்டுமே எடுத்துக்கொண்டு நூலை கொண்டு வந்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கான விளக்கத்தையும் ஆசிரியர் கட்டுரையில் பதிவு செய்துள்ளார். ஓலைச்சுவடிகள் மற்றும் பல்வேறு விளக்கங்களையும் நாம் இதன் வழி அறிந்து கொள்கிறோம். இறுதியில் இந்த ஓலைச்சுவடியிலிருந்து தாள்சுவடியில் யார் எழுதினார் என்ற குறிப்பினையும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். நூலமைப்பு என்று பார்கின்றபோது இந்தப் பள்ளு இலக்கியம் 306 பாடல்களைக் கொண்டதாக இருக்கின்றது. இவ்விலக்கியம் விருத்தம், கலி, கும்மி, சிந்து, அகவல், தரு, முடுகு, தணிவு என்ற பா வடிவங்களில் எழுதப்பட்டுள்ளது. பொதுவாக பள்ளு இலக்கியம் என்பது பள்ளன், மூத்தபள்ளி, இளையபள்ளி, பண்ணைக்காரன் என்பதை மையமாகக் கொண்டு எழுதப்படும். இந்த இலக்கியத்தில் கதைத் தலைவனாக சதாசிவக் குடும்பன் என்பவன் விளங்குகிறான். இவர் திருச்செங்குன்னூரைச் சேர்ந்தவன். மூத்த பள்ளியும் இந்த ஊரைச் சார்ந்தவரே. இளையபள்ளி ஸ்ரீரங்கம் என்ற ஊரைச் சேர்ந்தவர். மூத்தவள் சைவசமயத்தை குறித்தும் இளையவள் பெருமாளைக் குறித்தும் புகழ்பேசுகின்றனர். இப்படியாகவே இவ்விலக்கியம் அமைக்கப்பட்டுள்ளது.

பண்ணையார் அவர்களின் சண்டையைத் தீர்த்து வைப்பவராக விளங்குகிறார். இறுதியில் திருச்செங்கோடு மலை வளத்தையும் நில வளத்தையும் பேசுவதாகவும் இந்நூல் அமைந்திருக்கிறது. அங்கே இருக்கின்ற ஆணும் பெண்ணுமாக உள்ள தற்பரானந்த மூர்த்தியான சிவனைக் குறித்து இவ்விலக்கியம் பேசுகின்றது. இவ்விலக்கியம் எழுந்ததற்கான நோக்கத்தை குறிப்பிடும்போது இலக்கியங்கள் பல பதிப்பு உலகிற்கு அறிமுகம் ஆகாமல் புதைந்து கிடைக்கின்றன. அவற்றை வெளிக்கொண்டு வருவதின் சிறு துளியே இந்நூல் என்று ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

இந்த நூல் பதிப்பிற்குத் தனக்கு உதவி செய்தவர்கள் என்று, பேராசிரியர் வீ. அரசு அவர்கள் பதிப்பு நெறியைக் கற்பித்த முறையையும் குறிப்பிட்டுள்ளார். மேலும் பேராசிரியர் ய. மணிகண்டன், பேராசிரியர் கோ. பழனி, பேராசிரியர் ஆ.ஏகாம்பரம் போன்றோரைக் குறிப்பிட்டு நன்றி நவின்றுள்ளார். தற்போது தனக்கு உதவி செய்த அனைவரது பெயரையும் இந்நூலாசிரியர் என்னுரையில் குறிப்பிட்டுள்ளார். அர்த்தநாரீசுவரர் பேரில் பள்ளேசல் நாடகம் 200 பக்கம் கொண்ட நூலாக விளங்குகிறது. இறுதியில் துணைநூற்பட்டியலாக ஒன்பது நூல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்ததாகச் செய்யுள் முதற்குறிப்பு அகர நிரல் என்ற பகுதி அமைந்துள்ளது. தமிழில் பள்ளு இலக்கியம் அகர நிரல் என்ற அடிப்படையில் அமைந்துள்ள 85 நூல்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

இந்த நூலை எதை அடிப்படையாகக் கொண்டு தான் பதிப்பித்தேன் என்பதற்கான அந்த மூலத்தாள்சுவடி, ஓலைச்சுவடியைப் புகைப்படமாகவும் நூலாசிரியர் கொடுத்துள்ளார். அர்த்தநாரீசுவரர் பேரில் பள்ளேசல் நாடகம் என்ற சிற்றிலக்கிய வகையான பள்ளு நாடக நூலைத் தமிழ் இலக்கிய உலகிற்குக் கொடுத்துள்ள முனைவர் லோ. ஜெயலட்சுமி அவர்களின் பணி பாராட்டத்தக்கது. மேலும் இதுபோன்ற இலக்கியங்களைப் பதிப்பித்தும் புது நூல்களைப் படைத்தும் தமிழ் இலக்கிய உலகிற்கு அணி சேர்ப்பார் என்று நம்புவோம். நூலைப் பதிப்பித்த டுடே பப்ளிகேஷன்ஸ் அவர்களுக்கும் நூலாசிரியர் அவர்களுக்கும் வாழ்த்துகள்.

ஓசோன் பிரச்சனையில் மூழ்கிக் கிடந்தோம்

ஜெ.பால சரவணன்

என்.ராமதுரை மிகச்சிறந்த அறிவியல் எழுத்தாளர். அவரது எளிமையான எழுத்து முறையே அனைவரையும் வாசிக்கச் செய்தது. தினமணி சுடர் தொடரின் முதல் இதழில் அவர் எழுதிய விண்ணில் இருந்து மண்ணை அளக்கும் செயற்கைக்கோள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது. இன்றும் அதனை நான் ஒவ்வொரு கல்வியாண்டின் தொடக்கத்தில் அறிவியல் வகுப்பில் வாசிக்கும் கட்டுரையாக உள்ளது. என்.ராமதுரை எழுதிய பருவநிலை மாற்றம் என்ற நூல் க்ரியா வெளியிடாக வந்துள்ளது. இன்றைய சூழல் என்பது பெருந்தொற்றால் உலகமே நோயின் கோரப்பிடியில் உள்ளது. அவ்வப்போது ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள், அரசால் ஏற்படுத்தப்படும் பொருளாதார நெருக்கடி போன்றவை ஒருபுறம் இருக்க அதைத் தாண்டி எல்லாவற்றிலும் முன்னுக்கு வரும் பிரச்சனை பருவநிலை மாற்றமே. மேற்கண்ட பிரச்சனையெல்லாம் வந்து போகக்கூடிய பிரச்சனையே. பருவநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பிரச்சனை அப்படி அல்ல. அது மனித குலத்தையே அழித்து விடக்கூடியது. அல்லது அதன் விளைவுகள் கற்பனை செய்ய முடியாதது.

புவி வெப்பமாதல் குறித்து அண்மைக் காலமாக நிறையவே பேசப்படுகிறது. பூமி வெப்பமடைவதைத் தடுக்காவிட்டால் தங்கள் நாடே கடலில் மூழ்கிவிடும் என்று மாலத்தீவுகளின் அரசு அலறிக் கொண்டிருக்கிறது. ஏதாவது செய்யுமாறு ஐ.நா.வைத் தீவு நாடான கிரிபாட்டி வற்புறுத்துகிறது. பூமிக்கு திடீரென அப்படி என்ன ஏற்பட்டு விட்டது? பூமியின் வெப்பம் அதிகரித்துள்ளதாக எப்படி கூறுகிறார்கள்? பூமியின் உட்புறத்தில் வெப்பம் அதிகரித்து விட்டதா? அல்லது மேற்புறத்தில் அதிகரித்துள்ளதா? பூமியின் மேற்புறத்தில் தானாக வெப்பம் எப்படி அதிகரிக்கும்?



க்ரியா

விலை. 130

பூமிக்கு காய்ச்சல் வந்துள்ளதாக வல்லுநர்கள் கூறுவது சரிதான். அவர்கள் கூறும் கணக்குப்படி பூமியின் சராசரி வெப்பநிலை உயர்ந்துதான் வருகிறது. இந்த அதிகரிப்பு, பொதுவாக அரை டிகிரி, கால் டிகிரி அளவில்தான் இருக்கிறது. சொல்லப்போனால் 1880 ஆம் ஆண்டிலிருந்து 2012 வரையிலான காலத்தில் பூமியின் சராசரி வெப்பம் 0.85 டிகிரி தான் உயர்ந்துள்ளது. எனவேதான் இந்த அதிகரிப்பை நம்மால் உணரமுடியவில்லை. உலகில் சராசரி வெப்பநிலை அரை டிகிரி, கால் டிகிரி வீதம் உயர்ந்தால் முப்பது, நாற்பது ஆண்டுகளில் மொத்தத்தில் 'இது கணிசமான உயர்வாக அமைந்துவிடும். இதுதான் கடல் மட்டம் உயரக் காரணம் ஆகும். சராசரி வெப்பம் உயரும் போது கடல் நீரும் வெப்பமடையும். இதன் விளைவாக கடல்கள் வீங்கும். இதன் விளைவாக கடல் நீர் மட்டம் உயரும். இதனை யாட்டி துருவப் பகுதியிலும் பிரதிபலிக்கிறது. வட, தென் துருவ பனிக்கட்டிகள் உருகுவதால் கடல்நீர் மட்டம் கணிசமாக உயரும் வாய்ப்பும், அதனையொட்டி

கடற்கரை நகரங்கள் மூழ்க வேண்டியதுதான். மலைப்பாங்கான நாடுகளில் இது வெவ்வேறான பாதக விளைவுகளை ஏற்படுத்துகிறது. உலகில் பரவலாகப் பருவநிலை மாறிவிடும். வழக்கமான பருவத்தில் மழை இருக்காது. அத்துடன் காலம் தாழ்ந்து பெருமழை பெய்யும் இதனால் பயிர் விளைச்சல் பாதிக்கப்படும். உலகில் ஆங்காங்கு உணவுப்பஞ்சம் தோன்றும். விளைநிலங்கள் பாலைவனங்களாக மாறலாம். பருவநிலை மாறும்போது நோய்களும் அதிகரிக்கலாம். எதிர்காலத்தில் இப்படியான நிலைமைகள் ஏற்படும் என்பது நிபுணர்களின் எச்சரிக்கை. இதற்குக் காரணம்என்ன? அடிப்படையில், கரியமிலவாயு தான் இதற்குக் காரணம். அதாவது எப்போதும் இல்லாத அளவில் காற்று மண்டலத்தில் கரியமிலவாயு நிறைய சேர்ந்து விட்டதுதான். உயரே செல்லும் கரியமிலவாயு பூமியை எவ்வீதம் சூடாக்குகிறது என்பதைப் புரிந்துகொள்வதும் முக்கியம். கரியமிலவாயு பயன்பாடு இல்லாமல் நாம் வளர முடியாது. கரியமிலவாயு கறுப்பு நிறம் கொண்டது என்பது தவறான எண்ணமாகும். புவி வெப்பமடைவது குறித்த எந்தச் செய்தியானாலும் பத்திரிக்கை, தொலைக்காட்சி படங்களில் கரும்புகையைக் கக்கும் ஆலைகளின் படங்கள்தான். உண்மையில் கரியமிலவாயுக்கு நிறம் கிடையாது, வாசனையும் கிடையாது. கரியமிலவாயு மட்டும் கறுப்பு நிறம் கொண்டதாக இருக்குமானால் நாம் வெளியே விடும் மூச்சுக் காற்று கரிய நிறத்தில் இருக்க வேண்டும். ஆக்சிஜன் எரியக்கூடியது அல்ல. ஆனால் எரிதலுக்கு ஆக்சிஜன் தேவை. எதை எரித்தாலும் கரியமிலவாயு தோன்றும். எரிதலின்போது இரு ஆக்சிஜன் அணுக்களும் ஒர் கார்பன் அணுவும் சேருவதுதான் கரியமிலவாயு. எனவேதான் இதனை *Co2* என்று குறிப்பிடுகிறார்கள்.

இவ்விதம் உருவான கரியமிலவாயு இயல்பாக மறுபடியும் கார்பனாகவும், ஆக்சிஜனாகவும் தானாகப் பிரிவது கிடையாது. கரியமிலவாயுவை நம்மால் தனித்தனியாகப் பிரிக்க முடியும் என்றால் புவி சூடாகிறது என்ற பிரச்சனைக்கே இடமிருக்காது. அடுத்து கரியமில வாயுக்கும் காற்று மண்டலத்திற்கும் இடையே உள்ள தொடர்பு புரிய வேண்டும். பூமியைச் சுற்றிலும் சுமார் *300* கிலோமீட்டர் உயரம் வரை காற்று உள்ளது. பூமியைச் சூழ்ந்துள்ள இக்காற்று மொத்தத்தையும் காற்று மண்டலம் என்கிறார்கள். உயரே செல்லச் செல்ல அவற்றின் அடர்த்தி குறைகிறது. பல அம்சங்களை வைத்து இக்காற்று மண்டலத்தைப் பல அடுக்குகளாகப் பிரித்துள்ளனர். பல அடுக்குகளைக் கடந்து வரும் சூரிய ஒளி நம்மை வந்தடைகிறது. அப்படி வரும்போது சூரிய ஒளி காற்றைச் சூடாக்குவதில்லை. சூரிய ஒளி பூமியை வந்தடைந்தபின் எதன் மீது படுகிறதோ அதனைச் சூடாக்கும்.

சூரியனிலிருந்து ஏ, பி, சி என மூன்று வகையான புற ஊதாக் கதிர்கள் வெளிப்படுகின்றன. இவற்றில் சி-வகை மிகவும் தீங்கானவை. பூமியில் காற்று மண்டலத்தின் மேற்புறத்தில் உள்ள ஓசோன் படலமானது சி வகைக் கதிர்களை முற்றிலுமாகத் தடுத்து விடுகிறது. பி- வகைக் கதிர்களில் *95%* தடுக்கப்பட்டுவிடுகிறது.ஏ-வகைப் புறஊதாக் கதிர்கள் பூமியின் மேற்பரப்பை வந்தடைகிறது. பூமியில் நம்மைச் சுற்றியுள்ள காற்று (காற்று மண்டலம்) என்பது பல்வேறு வாயுக்களால் ஆனது. காற்று *(Air)* வேறு. வாயு *(gas)* என்பது வேறு. காற்றுமண்டலத்தில் பெரும் அளவில் அதிகரிக்க வாய்ப்புள்ள வாயுக்கள் கரியமிலவாயு மற்றும் மீத்தேன் ஆகும். இவை இரண்டுமே இயற்கையில் தோன்றுபவை. அதே நேரம் மனிதச் செயல்களாலும் தோன்றுபவை. கடந்த *150* ஆண்டுகளில் மனிதனின் செயல்களால் காற்று மண்டலத்தில் கரியமில வாயுவின் சேர்மானம் அச்சுறுத்தும் அளவுக்கு அதிகரித்து விட்டது. கரியமிலவாயுக்கும் பூமி சூடாவதற்கும் என்ன தொடர்பு என்று கேட்கலாம். அதற்கு பசுமைக்குடில் பற்றிய அறிவும் அவசியம். அதன் வழியே கரியமிலவாயு ஆற்றும் பங்கினை அறியலாம். குளிர்ப் பாங்கான இடங்களில் சுற்று வட்டாரம் முழுவதும் பனிமூடியிருக்கும். அதே சமயத்தில்

கூடாரத்துக்குள் பனிப்பொழிவு இருக்காது. இந்தக் கூடாரத்துக்குள் பசுமையான பயிர்கள் காணப்படுகின்றன என்பதால் இவ்விதம் பயிர் வளர்க்கப்படும் கூடாரத்துக்குப் பசுமைக்குடில் என்று பெயர். இவ்விதப் பசுமைக் குடில் ஏதோ வீட்டுத் தோட்டம் போல சிறியதாக இருக்கும் என்று நினைத்து விட வேண்டாம். அமெரிக்காவில் ஒரு பசுமைக்குடில் 92 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. பிரிட்டனில் தானெட் தீவில் மொத்தம் 220 ஏக்கர் பரப்பளவில் ஏழு பசுமைக்குடில்கள் உள்ளன. ஸ்பெயின் நாட்டில் எண்ணற்ற பசுமைக்குடில்களின் மொத்த நிலப்பரப்பு 64 ஆயிரம் ஏக்கர்.

பசுமைக்குடிலில் உள்ள மாதிரியில் பூமியைச் சுற்றிலும் இயற்கையாகவே இப்படியான ஒரு கண்ணாடிக் கூரை அமைந்துள்ளதாகக் கூறலாம். கரியமிலவாயு, ஆவி வடிவிலான நீர், மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைட் வாயு முதலியவை நம் தலைக்கு மேலே வானில் கண்ணாடிக் கூரை அமைந்துள்ளது போன்ற விளைவை ஏற்படுத்துகிறது. பூமியானது சூரியனிடமிருந்து வெப்பத்தைப் பெறுகிறது. இதனால் பகலாக உள்ள பகுதியில் தரை சூடேறுகிறது. பின்னர், இரவு வந்ததும் தரையிலிருந்த வெப்பம் உயரே செல்கிறது. இந்த வெப்பம் முற்றிலுமாக விண்வெளிக்குச் சென்றுவிட்டால் பூமி முழுவதும் கடுமையாகக் குளிர்ந்து விடும். பூமியில் கடும் குளிர் வீசாதபடி கரியமிலவாயுவும் மற்ற வாயுக்களும் தடுக்கின்றன. அதாவது, உயரே செல்லும் வெப்பத்தின் ஒரு பகுதியை இந்த வாயுக்கள் கீழ் நோக்கிப் பூமிக்குத் திருப்புகின்றன. இதன் விளைவாக பூமியின் இரவாக உள்ள பகுதி கடும் குளிரால் பாதிக்கப்படாமல் தடுக்கப்படுகிறது. கண்ணாடியால் ஆன பசுமைக்குடிலில் நிகழ்வது போன்ற விளைவை இந்த வாயுக்கள் உண்டாக்குவதன் காரணமாகவே இந்த வாயுக்கள் பசுமைக் குடில் வாயுக்கள்(*Green House Gases)* என்று குறிப்பிடுகின்றனர். கரியமிலவாயு உட்பட பசுமைக்குடில் வாயுக்கள் இவ்விதம் நன்மை பயப்பவையாக உள்ளன.

நன்மை செய்யும் பசுமைக் குடில் வாயுக்கள் இப்போது மட்டும் கெடுதல் செய்பவையாக மாறியது எப்படி? இந்த வாயுக்கள் ஓரளவு வெப்பத்தை விண்வெளிக்குச் செல்ல அனுமதிக்கின்றன. ஆனால் காற்று மண்டலத்தில் மிக அதிகமாக பசுமைக்குடில் வாயுக்கள் சேரும்போது அவை விண்வெளிக்குச் சிறிது வெப்பம் கூட வெளியேறாதபடி அனைத்து வெப்பத்தையும் பூமியை நோக்கித் திருப்பி விடுகின்றன. இதனால் பூமியின் சராசரி வெப்பம் அதிகரிக்கிறது. இன்றுள்ள பிரச்சினையே இது தான்.

காற்று மண்டலத்தில் இயற்கையாகக் கரியமிலவாயு சேருகின்ற அதே நேரத்தில் காற்று மண்டலத்திலிருந்து அந்த வாயு இயற்கையாக அகன்றும் வருகிறது. பூமியில் தாவரங்கள் தோன்றிய காலம் முதல் பல கோடி ஆண்டுகளாக இது தான் நிகழ்ந்து வருகிறது. காற்றில் அடங்கிய கரியமிலவாயுவின் ஒரு பகுதி இயல்பாகக் கடல்நீரில் கரைந்துவிடுகிறது. இப்படியாக சேருவதும் அது அகற்றப்படுவதும் கடந்த பல கோடி ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. இது சரிசமமாக இருந்தால் பிரச்சினை இல்லை. இல்லாவிடில் பருவநிலையில் சிக்கல்களை உண்டாக்கி விடும். அது தான் நம்முன் உள்ள சவால். காற்று மண்டலத்தில் பொதுவாக கரியமில வாயு எந்த அளவுக்கு இருக்கிறது என்று எப்படி அளப்பது? அது ஒன்றும் பெரிய பிரச்சனை அல்ல. பத்து லட்சம் லிட்டர் பிடிக்கக் கூடிய ஒரு பெரிய அண்டாவைத் தயார் செய்து ஏதேனும் ஓர் இடத்தில் வைக்க வேண்டும். நாம் எதுவும் செய்ய வேண்டாம். பிறகு அண்டாவுக்குள் தானாக நுழையும். பிறகு அண்டாவின் வாயை மூடிவிட்டு அந்த அண்டாவுக்குள் கரியமிலவாயு 280 லிட்டர் அளவுக்கு இருப்பதாக வைத்துக் கொள்வோம். இதை சுருக்கமாக 200 *PPM* என்று குறிப்பிடலாம். அதாவது *PPM* என்றால் பத்து லட்சத்தில் இருக்கும் பங்கு. *(Parts per million)* என்று அர்த்தம். இதுதான் உலக அளவில் பின்பற்றப்படும் அளவுமுறை.

2020 ஜூலை 22 PPM அளவு 414.22.2019 ஜூலை 22 PPM அளவு 411.41. கடந்த ஒரு வருட வேறுபாடு 2.81PPM. (0.68%) ஆனால் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் இது 280PPM ஆக இருந்தது. ஆக கரியமிலவாயு அளவு நிறையவே அதிகரித்துள்ளது என்பது தெளிவு. தொழிற்புரட்சிக்குப் பின்னர் இதன் வேகம் செங்குத்தாக அதிகரித்து உள்ளது. கரியமிலவாயு சேர்மானம் காரணமாக பூமியில் சராசரி வெப்பம் மெல்ல அதிகரித்து வருவதாக பல நிபுணர்கள், பல ஆராய்ச்சி அமைப்புகளும் கூறினாலும் உலகத் தலைவர்கள் இதனைப் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. ஓசோன் பிரச்சனை எழுந்த போது இதற்கான உலகப் பார்வை கிடைத்தது.

பூமி சூடாகி வரும் பிரச்சனை குறித்து ஏற்கனவே கவனம் செலுத்தி வந்த உலக வானிலை அமைப்பும் ஐ.நா.சுற்றுச்சூழல் அமைப்பும் சேர்ந்து பருவநிலை மாற்றம் குறித்த உலக நாடுகள் குழு ஒன்றை 1988 ஆம் ஆண்டில் அமைத்தது. இது சுருக்கமாக IPCC என்று அழைக்கப்படும். இதன் முதல் மாநாடு 1992ல் பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் புவி உச்சி மாநாடாக நடத்தப்பட்டது. 172 நாடுகள் கலந்து கொண்டன. அதில் 116 நாடுகள் பிரதமர் அல்லது அதிபர்கள் கலந்து கொண்டனர். இயற்கை ஆற்றல் வளங்களைப் பயன்படுத்த வேண்டும். வாகனங்களிலிருந்து கரியமில வாயு வெளிபாட்டைக் குறைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் தொடர்ச்சிதான் இன்றைய மின்சார வாகனம். அவற்றில் முக்கியமானது ஒவ்வொரு நாட்டிலிருந்தும் எவ்வளவு கரியமிலவாயு காற்றில் கலக்கிறது என்று அளவிடுவதாகும். தகுந்த உத்திகளைப் பின்பற்றி இக்கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அமெரிக்காவிலிருந்துதான் அதிக அளவில் கரியமிலவாயு காற்றில் கலக்கிறது என்பது தெரியவந்தது. அப்போது சீனா இரண்டாமிடம் வகித்தது. ஆனால் சீனா விரைவிலேயே முதல் இடம் பிடித்தது. இந்தியா தொடர்ந்து மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஒரு நாட்டிலிருந்து மொத்தம் (டன் கணக்கில்) எவ்வளவு கரியமிலவாயு வெளிப்படுகிறது என்பது ஒரு கணக்கு. இன்னொன்று நபர் வாரிக் கணக்கு இது முக்கியமானது. ஒரு நாட்டின் மொத்த கார்பன்டையாக்சைட் வெளிப்பாட்டை அந்த நாட்டின் மக்கள் தொகையால் வகுத்தால் கிடைப்பது. 2015 பாரிஸ் ஒப்பந்தம் பருவ நிலை மாற்றம் குறித்த நிகழ்வில் மைல்கல். ஆனால் வெப்பமண்டலத்தில் அமைந்த வளரும் நாடுகள் மீது ஒரு சுமை உண்டு. அது காற்று மண்டலத்திலிருந்து கரியமிலவாயுவை மேலும் அதிக அளவில் அகற்றுவதற்கான வகையில் நிறைய காடுகள் வளர்ப்பதாகும்.

முன்னேறிய நாடுகளின் நிலக்கரி, பெட்ரோல், டீசல் ஆகியவற்றிக்கு பதிலாக அல்லது உபயோகத்தைக் குறைத்து சூரிய மின்சாரம், காற்று மின்சாரம் ஆகியவற்றுக்கு மாறுவது பெரிய பிரச்சனையாக இராது. இவ்விதம் மாற்றிக்கொள்ளத் தகுந்த நிதியும், தொழில்நுட்பமும் உண்டு. இதனை வளர்ந்து வரும் நாடுகள் தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும். அமெரிக்கா எவ்வாறு பாரிஸ் ஒப்பந்தத்தை மீறியது என்று அதன் அரசியலை வாசித்து அறியலாம். இதுகாறும் அதிக அளவில் நுகர்ந்த முன்னேறிய நாடுகளையும்,வளர்ந்து வரும் நாடுகளையும், மூன்றாம் உலக நாடுகளையும் ஒரே தன்மையில் பார்ப்பது சரியில்லை என்பதே உலகத் தலைவர்கள், அறிஞர்களின் பார்வையும் கூட.

இறுதியாக கிரெட்டா துன்பர்க் வார்த்தையில் கூறுவதானால் "நீங்கள் நம்பிக்கையுடன் இருக்கவேண்டுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் பேரச்சம் கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறேன். நான் நாள் தோறும் உணரும் அச்சத்தை, நீங்களும் உணரவேண்டுமென எதிர்பார்க்கிறேன். நம் வீடு தீப்பற்றி ஏரியும் போது என்ன செய்வோம்? அதையே இப்போது செய்ய வேண்டும். ஏனென்றால் , நம் தாய்மண்ணான பூவுலகு பற்றி ஏரிந்து கொண்டிருக்கிறது"

அபிமானி கவிதைகள்

சுதந்திரக் கொடி

சுதந்திரத் தினவிழாக் கொண்டாட்டம்.
வெயிலில் நின்று கொடியேற்றிவிட்டு
குளிர்சாதனக் காருக்கு வந்த
மந்திரியின் கண்களில்
காட்சிகளாகத் தெரிந்தவை –
அரை நிர்வாணமாய்
சாலையில் ஓடிச்சாடிப்
பொருட்களை விற்ற
ஏழை வியாபாரிகளும்...
அவர்களின் கூடையிலிருந்த
பொருட்களோடு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த
தேசியக்கொடிகளும்.

●●●

திரும்பும் காலம்

வாய்திறக்க முடியவில்லை
திறந்தால் வாயில்சுடு என்கிறார்கள் நம்மை
வாழவைக்க வந்த பிரதிநிதிகள்.
ஊர்வலம்போக முடியவில்லை போனால்
சிறையில் தள்ளு என்கிறார்கள்
அவர்களின் ஏவல்படைகளான காவல் அதிகாரிகள்.
குண்டர் சட்டம் தேசியப் பாதுகாப்புச் சட்டம்
தீவிரவாத எதிர்ப்புச் சட்டம்
எல்லாம் இயற்றப்பட்டிருக்கின்றன
அவர்களைப் பாதுகாப்பதற்காக.
பொறுப்போம் மக்களே
அடுத்த தேர்தலுக்கு இவர்கள்
நம்மிடம்தான் வரவேண்டும்
தங்களைக் காப்பாற்றச் சொல்லி.

●●●

கொள்ளை' நோய்
அடைபட்டக் கோழியாய் வீட்டுக்குள்
முடங்கிக்கிடக்கும் என் கால்கள்
அவசரம் சுமந்து
வெளியே சென்றால்
மவுனித்து விடும்படி என் வாய்க்கு
நாசியோடு சேர்த்து
திரைப்போடச் சொல்கிறார்கள்
தொட்டால் ஒட்டிவிடும் என்றவர்கள்
இப்போது தூரே நின்றாலும்
காற்றில் வந்து
தொட்டுவிடும் என்கிறார்கள்

கொரானா என்று சிலரையும்
கரோனா என்று சிலரையும்
குழப்பிவிட்டிருக்கிறது
மரணப் பயம்

'நோய் இடைவெளி' என்ற
உண்மையை மறைத்துவிட்டு
'சமூக இடைவெளி' என்று
பொய் சொல்லி
மக்களைச் சமாதானப்படுத்துகிறார்கள்
நோயைச் சாந்தப்படுத்த முடியாதவர்கள்

நோய்க் காலத்திலும்
நுகர்வு வேட்டையில்
கஜானா நிரப்பும்
அரசு எந்திரங்கள்

வாய்க்கட்டோடு அலையும்
சனங்களுக்குக்
குரலெழுப்ப முடியாதென்று
துணிந்து
பொதுத் துறைகளைத்
தனியார்களிடம்
விலைப்பேசி விற்கிறார்கள்

என்று ஒழியுமோ இந்தக்
கொரானா சனியன் என்று
நித்தமும் சபிப்பவர்களாக
மக்கள் மட்டுமே....

எதையெல்லாம் விற்கலாம்
கொரானோ ஒழிவதற்குள் என்று
சதியாலோசனை நடத்தும்
மன்னர்கள்.

காகித மலரின் ஆதவன்

ஸ்ரீதர் மணியன்

ஸ்கூல்ல நீங்க எங்களுக்கு The East of Eden, Crime and Punishment கதை சொன்னது எங்களுக்காக இல்லே, உங்களுக்காக, அங்க உங்க அடையாளம் தொலைஞ்சு போகாம காப்பாத்திக்கறத்துக்காக இருந்திருக்கலாம்... (ஆதவன் தனது ஆசிரியரான இந்திரா பார்த்தசாரதியிடம்).

ஆதவன், இந்திரா பார்த்தசாரதியிடம் கூறிய மாறுபட்ட இக்கருத்தே அவரது எழுத்தின் தன்மையினை உணர்த்தும் உரைகல்லாகிறது. தமிழ் எழுத்தாளர்களில் அதிகம் அறியப்படாத, கொண்டாடப்படாத பலருள் ஒருவர், கல்லிடைக்குறிச்சியில் பிறந்த கே.எஸ்.சுந்தரம் எனும் ஆதவன் தில்லியில் மத்திய அரசுப்பணியில் இருந்தவர். இரண்டு நாவல்களும், சிறுகதைகளும் எழுதினார். இரண்டு நாவல்களுமே வெளியான காலத்தில் ஒரு சலசலப்பினை உண்டாக்கியிருக்க வேண்டும்.தான் பணியிலிருந்த தில்லி நகரினைக் களமாகக் கொண்ட, மத்தியமேல் வர்க்கக் குடும்பமொன்றின் கதை காகித மலர்கள். படைப்பில் செல்லப்பா, பத்ரி, விசுவம், கணேசன் பாக்கியம் அனைவருமே தங்களுக்கான அக உலகிலும், புற உலகான நடைமுறை உலகிலும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஏதோ ஒரு நம்பிக்கை பல அவநம்பிக்கைகளுக்கிடையிலும் அவர்களைச் செலுத்திக் கொண்டிருக்கிறது. தங்கள் புறக்கண்களால் ஓர் உலகினையும், அகக்கண்களான ஓயாத சிந்தனைகள் வழி தங்களுக்கே உரித்தான சொந்த உலகிலும். இது மனித இனத்திற்கான வாழ்வு நியதி. இதையே ஆதவன் பல்வேறு கதைமாந்தர்கள் வாயிலாக வாசகனுக்கு அளிக்கிறார்..

அன்றாட வாழ்வில் இயல்பாக நடக்கும் சிறுசிறு நிகழ்வுகளுக்கும் தர்க்கத்தினையும், கற்பிதத்தினையும் உண்டாக்கிக் கொண்டு விரக்தியடைகிறான் செல்லப்பா. மீண்டும் அடுத்த கணம் எதிர்பார்ப்பிற்கேற்ப சம்பவங்கள் நிகழும்போது மகிழ்ச்சியும், பெருமிதத்தினையும் ஒருங்கே பெறுகிறான். நிகழ்வுகளாக அவன் நகரப் பேருந்தில் பயணச்சீட்டு பெறுவதனையும், காரில் செல்லும்போது சிகரெட் விற்கும் சிறுவனிடம் அதனை வாங்கிய பின்னர் அவன் எண்ணங்களையும் வாசிக்கும்போது இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும். ஒவ்வொரு மனித உயிரும் பிறந்த கணம் முதல் தனது விருப்பத்தின் வாயிலாக வாழ விரும்புகிறது. தனக்கான விழைவு, அதனூடான வாழ்க்கை என வகுத்துக் கொண்டாலும், தங்களின் பிரதிபலிப்பாகவே எல்லோரையும் பார்க்க விரும்புகிறது சமூகம். எந்த ஒரு உயிருக்கும், இனத்திற்கும் தன்னியல்பினை வெளிப்படுத்த இயலாதவாறு பல விழுமியங்களை, சம்பிரதாயம், கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்கம் என பல்வேறு பெயர்களிட்டு தடைகளை, தளைகளை ஏற்படுத்துகிறது. இவைகளை மனித இனமே உண்டாக்குகிறது. சக மனிதனின் மீது மட்டுமன்றி தன் மீதும் திணித்துக் கொண்டு மறுகிக்கொண்டும்,

காலச்சுவடு
ரூ.425

மறுத்துக் கொண்டும், பொருமிக் கொண்டும் வாழ்ந்து தீர்க்கிறது.

அவரது கதைமாந்தர்கள் தன்னை மறந்து உறங்கும் நேரங்கள் நீங்கலாக யோசித்துக் கொண்டே இருக்கிறார்கள். தங்களது தனித்தன்மையினை, அதன் வாயிலாக தங்களது ஆளுமையினை, இருப்பினைத் தக்க வைத்துக் கொள்ள போராடியவண்ணம் வாழ்கிறார்கள். ஆதவன் தான் வாழ்ந்த காலமான 70களில் இளந்தலைமுறையினர் குறித்த சித்திரத்தினை மிக விரிவாகப் பதிவு செய்கிறார். அவர்களது கல்லூரிப் பருவம், அவர்களது வேட்கைகள், விழைவுகள், அவற்றிற்கான வடிகால்கள் என அது விரிகிறது. பல பெண் கதைமாந்தர்கள் மூலம் அவர்களது எண்ணங்களை, உள்ளக்கிடக்கைகளை கட்டுடைத்துச் செல்கிறார், சொல்கிறார். அவை பல சுவாரசியங்களையும், நிதர்சனங்களையும் உள்ளடக்கியவை. பல தருணங்களில் அவை தி.ஜா.ராவின் சில கதாபாத்திரங்களை தொட்டுக்காட்டுவதை உணரமுடியும். கணேசன் ஆடை மாற்றும் தருணத்தில் அவனது அம்மா வந்து நிற்பதும், அது குறித்த கணேசனது நுண்ணிய அவதானிப்புகளும் பொருத்தமான எடுத்துக்காட்டுகளாகின்றன.. .இத்தகைய பல நுண்ணிய உணர்வுகளைத் தனது படைப்புகள் அனைத்திலும் நிறுவத் தலைப்படுகிறார் ஆதவன். மனதின் அடுக்குகளில் சுழன்றாடிக் கொண்டிருக்கும் ஊசலாட்டங்களை படைப்பு நெடுகிலும் தூவிச் செல்லும் இலாவகமும், அவற்றில் தெறிக்கும் காத்திரங்களுமே ஆதவனின் வெளிப்பாடு. பெண்கள், ஆண்கள் என அனைவர் மனதிலும் காமம் மெல்லிய திரைபோன்றதொரு மறைபொருளாக ஊடாடிக் கொண்டிருப்பது இயல்பாக அமைந்திருப்பது சிறப்பு மட்டுமன்றி எதார்த்தமான உண்மையுமாகிறது. அதுபோன்று அமைச்சருடன் தங்கும் அம்மாவின் படைப்பும் அதிர்வினை உண்டாக்கலாம் விசுவமும் அவனது மனைவி பத்மினியும் பேசிக் கொள்ளுதல், விசுவத்தின் செயற்கை உரங்கள் குறித்த சூழலியல் சிந்தனைகள், ஏ.எஸ் மற்றும் பசுபதி இவர்களது உரையாடல்கள், அவற்றினூடாக பரஸ்பரம் மனதின் ஆழங்களை அளக்க முற்படுதல், மிக நுட்பமாக பரஸ்பர காயங்களை உண்டாக்கிக் கொள்ளுதல் என ஆதவன் மன உரையாடல்கள், பவுதிக உரையாடல்கள் என இருப்புப் பாதைகளாக அப்பகுதியினை நகர்த்திச் செல்கிறார்.

ஏராளமான அறிவு மூட்டையை ஒரு தோளிலும், இன்னொரு தோளில் சட்டத்திருத்தங்களையும், சடங்குகளையும் சுமந்து கொண்டு எதிலும் நிச்சயமோ, ஆறுதலோ இல்லாமல் சங்கடப்படும் மனிதனைவிட, சில எளிய விஷயங்களை மட்டும் தெரிந்துகொண்டு அவற்றில் தெளிவுடனும், நிச்சயத்துடனும் இருக்கும் அணில்கள் எவ்வளவோ மேலானவை. எவ்வளவு குழப்பமற்ற, சுலபமான வாழ்க்கை அவற்றுடையது. விஜயநகர, ராஜபுதன, மொகலாயப் பேரரசுகளின் எழுச்சி, வீழ்ச்சி பற்றி ஆராய வேண்டியதில்லை. எண்ணற்ற அரசர்களின் பெயர், அவர்களது யுத்தங்கள் குறித்த தேதிகள், வருடங்கள் ஆகியவற்றை நினைவில் வைத்திருக்கத் தேவையில்லை. ஓ... அணில்களே, நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள். நான் அவ்வாறல்ல, பாவம் செய்தவன், அதனால் மனிதனாகப் பிறந்து பரிட்சைக்குப் படித்துக் கொண்டிருக்கிறேன். இவ்வாறாகத் தோட்டத்தில் செல்லப்பா கட்டிலின் மீது படுத்தவாறு சிந்தித்துக் கொண்டிருக்கிறான். இவ்வாறு நமது கல்வி முறை குறித்த பூடகமான பகடியும் உண்டு. அரசு தலைமைச் செயலகத்தின் சிகப்பு நாடா நடைமுறைகளும், அதன் தந்திரங்களும், குளறுபடிகளும் கூறப்படுகின்றன. ஆழ்மனதின் அடுக்குகளில் நீரோட்டமாய் ஓய்வின்றி ஓடிக்கொண்டிருக்கும் எண்ணச் சலனங்களின் வெளிப்பாடு, தொகுப்பு என அவரது எழுத்தினை வகைப்படுத்திக் கொள்ளலாம். அவரது கதைகளில் கதைமாந்தர்கள் பேசுவதைக் காட்டிலும் கதைமாந்தர்களின் மனம் ஓயாது பேசிக் கொண்டிருக்கும். இவ்வாறாக, அந்தரங்கத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் மனிதனின் எண்ணங்கள் பெரும்பாலும் நாகரீகம் என்ற முகக்கவசத்தின் பின் ஒளிந்து கொண்டிருக்கின்றன. இதனையும் ஆதவன் பட்டவர்த்தனமாக்குகிறார்.

மனிதனின் அகவுலகு முற்றிலும் மாறுபட்டது. புறவுலகில் அவை முகமூடிகளால்

மறைக்கப்பட்டுள்ளன. இத்தகைய முகமூடிகளை சமூகம் நமக்கு வழங்கி அதனை அணிந்து கொள்ள வற்புறுத்துகிறது. அவற்றிற்கு பாரம்பரியம், கலாச்சாரம், சடங்கு என பல்வேறு அளவுகோல்களை தன்னகத்தே கொண்டிருக்கிறது. அவற்றை அணிய மறுப்பவனை அதற்கு பிடிப்பதில்லை. அவன் சமுதாயத்தின், இனத்தின் விரோதியாகிறான்.

தனது மாறுபட்ட எண்ணங்கள், செயல்பாடுகள் வழி அவன் தாங்கள் பெறவியலாத, தங்களுக்கு மறுக்கப்பட்ட சுதந்தரங்களை அவன் மட்டும் பெறுவது அல்லது அனுபவிப்பதனைக் கண்டு சமுதாயம் அல்லது இனம் எரிச்சலடைகிறது. கோபமுறுகிறது. ஆதவன் இதனைப் பல்வேறு நிலைகளில் பதிவாக்குகிறார். அவர் அவரது படைப்புகளில் தார்மீகம் அல்லது அறம் சார்ந்த கோட்பாடுகளையோ, தனி மனித விழுமியங்கள் குறித்தோ பேசுவதில்லை. மனிதன் என்பவன் இவ்வாறானவனே என்று கூறுகிறார். இதுவே அவரது படைப்புகள் ஏனைய படைப்பாளிகளிடமிருந்து மாறுபட்டுக் காட்டும் வெற்றிக்கான புள்ளியாகிறது. ஆயினும், குறைந்தபட்ச ஒழுக்கங்களின் உள்ளீடுகளற்ற தன்னிச்சையான போலிவாழ்வு வெறுமையையும், கசப்பினையும், ஏமாற்றத்தையுமே இறுதியில் பரிசாக அளிக்கிறது என்பதனையும் அவர் கூறத்தயங்கவில்லை. பாக்கியத்தின் மரணம் இதனைக் கூறுகிறது. நறுமணம் ஏதுமற்ற அலங்காரமான காகித மலர்களாகவே மலர்ந்து அது வாடிவிடும் என்ற கருத்துருவினை அடிநாதாமாக் கொண்டே காகித மலர்கள் உருவாகியிருக்கிறது. இந்திரா பார்த்தசாரதியின் மாணவராக அவர் இருந்தார். பள்ளி மாணவராக இருந்தபோதே ஆதவன் தனது எழுத்துப் பணியினைத் தொடங்கியிருந்தார். அவன் சிறுகதை எழுதுவதே எனக்குத் தெரியாது. அதனை சம்பத் எனக்குக் கூறினான் என இந்திரா பார்த்தசாரதி கூறுகிறார். நா. பார்த்தசாரதி தீபத்தில் ஆதவனை எழுதும்படி கேட்டார். அவ்வாறு எழுதப்பட்டதே காகித மலர்கள். கணையாழியில் அவர் குறிப்பிடத்தக்க உறுப்பினராக இருந்தார். என்றென்றைக்குமான கண்ணாடி எனும் தலைப்பில் ஆர். வெங்கடேஷின் பதிப்புரையில் ஆதவனின் பரிமாணங்கள் குறித்த ஆழமான கருத்துகளைக் காணலாம்.. ஆனந்த விகடன் இதழில் அவரது முத்திரைக் கதைகள் வெளியாயின. தில்லி சாகித்ய அகாதெமியில் தமிழ்ப் பிரிவில் துணைப் பதிப்பாசிரியாகவும் பணியாற்றினார். ஆதவனின் இப்படைப்புகள் பல இந்திய மொழிகளிலும், ஆங்கிலம், பிரெஞ்ச், ருஷ்யன் உள்ளிட்ட மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. காகித மலர்கள் ருஷ்ய மொழியில் வித்தாலி ஃபூர்ணிகா *(Vitali Fournika)* என்பவரால் மொழியாக்கம் செய்யப்பட்டது. ஏறத்தாழ ஒரு லட்சம் பிரதிகள் விற்பனையாயின. கிழக்கு பதிப்பகம் இவரது அறுபது சிறுகதைகள் அடங்கிய தொகுப்பினை வெளியிட்டுள்ளது.

காகித மலர்களுக்கு தி.க.சி. மதிப்புரை எழுதினார் அதற்கான ஆதவனது பதிலைக் கூறி இக்கட்டுரையினை நிறைவு செய்வது பொருத்தமானதாக இருக்கும். அது, ஒரு விதத்தில் என் எழுத்துக்கள் யாவுமே நுட்பமான, நேர்மையான சம்பாஷணை (உரையாடல்) முயற்சிகள் என்றுதான் சொல்லவேண்டும். சாதாரண சம்பாஷணையின் கெடுபிடி, பவுதிக நிர்பந்தங்கள், பரஸ்பர தாட்சண்யங்கள், வேஷங்கள் நமக்கே புரியாத சில குரோத அலைகள் ஆகியவற்றினூடே என் எண்ணங்களைக் கோர்வைப்படுத்த முடியாத ஒரு தாபம்தான் என்னை மீண்டும் மீண்டும் எழுத்துக்கு விரட்டுகிறது. அதாவது, நேரடி சந்திப்புகளின் போது என் வார்த்தைகள், அவற்றின் அர்த்தங்களுக்கு அப்பாற்பட்டு என் பவுதிக ஆகிருதி, முகத்தின் தன்மை ஆகியவை கூட எதிராளியிடம் சாதக, பாதக விளைவுகளை ஏற்படுத்தியவண்ணம் இருக்கின்றன. இந்த சம்பாஷணைக்கும் ஒரு மறுபக்கம் உண்டு. நீங்கள்தான் அந்த மறுபக்கம். உங்கள் எதிரொலிகளே இச்சம்பாஷணைக்கு முழுமை தரவேண்டும், எத்தனைக்கெத்தனை இந்த எதிரொலிகள் முதிர்ச்சியும் நுட்பமும் மிக்கனவாயிருக்கின்றனவோ, அத்தனைக்கத்தனை நம்மிருவருக்குமே மகிழ்ச்சியும் பயனும் தரக்கூடியதாக இந்த முழுமையின் தேடல் அமையும், என அக்கடிதம் நிறைவாகிறது.

நூல் அறிமுகம்

மூன்று காந்திகள் படுகொலையும் இந்துத்துவ பாசிச எழுச்சியும்

- ஜமாலன்

'ஆனால் நமது அரசியலமைப்பில் பண்டைய பாரதத்தில் தனித்துவமான அரசியலமைப்பு வளர்ச்சி பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. மனுவின் சட்டங்கள் ஸ்பார்டாவின் லைகர்கஸ் அல்லது பெர்சியாவின் சோலோனுக்கு முன்பே எழுதப்பட்டவை. இன்றுவரை மனுஸ்மிருதியில் விவரிக்கப்பட்டுள்ள அவரது சட்டங்கள் உலகத்தால் போற்றுப்படுகின்றன மற்றும் அவை தன்னிச்சையான கீழ்ப்படிதலையும் இணக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன. ஆனால் நமது அரசியலமைப்பு பண்டிதர்களுக்கு அது ஒன்றும் இல்லை.' *(Organizer in an editorial on November 30, 1949 (qt. from KNOW THE RSS: BASED ON RSS DOCUMENTS - Shamsul Islam)*

'மத்தியமாநிலம், பீஹார் மற்றும் பாம்பே ஆகிய மாநிலங்களில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு மிகவும் வலிமை மிக்கதாக உள்ளது. ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அரசியல்ரீதியான வர்த்தக அமைப்பு. இதனைப் பாசிசக் கண்ணோட்டமுள்ள தீவிரவாத அமைப்பாக உருவாக்கத் தனது முழு பலத்தையும் செலுத்தி வருகிறது.'(பிரிட்டிஸ்-இந்திய அரசாங்கத்தின் சுற்றறிக்கை மார்ச் 16, 1944)

இந்தியத் துணைக்கண்டம் இன்று பாசிசத்தின் உச்ச வளர்ச்சியை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது. ஜெர்மானிய ஹிட்லர் கம்யுனிச தொழிற்சங்கம் வழியாக வளர்ந்து, பின்னாளில் தேசிய வெறியை ஊட்டி, இனவெறியை வளர்த்து, தூய ஆரிய ரத்தம் என்கிற மகா ஜெர்மானியர்கள் குறித்த கதையாடல்களைக் கட்டமைத்து பாராளுமன்றம் வழியாக ஜெர்மானிய தேசத்தை தனது நாஜிக்கட்சியின் வெற்றி வழியாக கைப்பற்றினான் என்பது உலகறிந்த வரலாறு. அவன் ஜெர்மானியர்களின் எதிர்மையாக யூதர்களைக் கட்டமைத்து அவர்களைக் கொன்றொழித்தான். அதே பாதையில் திட்டமிட்டு பல்வேறு சதிகள், சமரசங்கள், நெழிவு சுழிவுகள், இரட்டை நாக்கு பேச்சுகள், ஏற்ற இறக்கங்கள் வழியாக எண்ணற்ற பொய்கள், புனைவுகள், கட்டுக்கதைகளைக் கட்டமைத்து, பரந்துபட்ட மக்களை நம்பவைத்து, இந்திய நாஜிகள் என்று சொல்லும் அளவிற்கு இன்று பாஜக என்ற கட்சியின் வழியாக இந்துத்துவ காவி சங்பரிவார்களின் தாய்க் கழகமான 'தேசிய தன்னார்வ சேவைப்படை' என்கிற 'ராஷ்டீரிய சுயம் சேவக்(RSS) அமைப்பானது இந்திய மையநீரோட்ட அரசியலில் அதிகாரத்தில் அமர்ந்துள்ளது. இந்துத்துவா என்ற பெயரில் இந்திய பெரும்பான்மை மக்களுக்கு எதிராக முஸ்லிம்கள், கிறித்துவர்களை கட்டமைக்கிறது. அவர்களை தனிமைப்படுத்தவும், நாடுகடத்தவும், கொன்றொழிப்பதற்குமான விஷமமான சதித்திட்டங்களை தீட்டிக் கொண்டுள்ளது. 1925-ல் ஒரு தசரா பண்டிகையின் விஜயதசமி அன்று ஹெட்கேவரால் நாக்பூரில் துவக்கப்பட்ட இந்த அமைப்பு கடந்த 97-ஆண்டுகளாக இந்திய மையநீரோட்ட அரசியலுக்கு வந்த கதையை விவரிக்கும் நூலே ஏ.ஜி. நூரானியால் எழுதப்பட்டுள்ள "ஆர்.எஸ்.எஸ்.சும் பா.ஜா.க.வும்".



பாரதி புத்தகாலயம்
விலை: 70 பக்கம்: 176

2024-ல் நூற்றாண்டை அடையும்

தருணத்தில் இந்திய அரசின் அதிகார பீடத்தில் அதன் சேயான பாஜக அமர்ந்துகொண்டு இந்துத்துவத்தையும், வெறுப்பரசியலையும் பரப்பி, ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நீண்டகால திட்டத்தை நிறைவேற்றும் செயல்போக்கில் அவசரம் காட்டி வருகிறது. இந்தச் சூழலில் ஏ.ஜி. நூரானியின் இந்துத்துவா குறித்த தொடர் நூல்கள் குறித்து உரையாட வேண்டியதும், அவற்றை இடதுசாரிகள் வாசிக்க வேண்டியதும் அவசியம். அவரின் *The RSS and BJP: A division of labour*" என்ற 2000-ஆம் ஆண்டு வெளிவந்த இந்நூல் பாரதி புத்தகாலயத்தால் 2004 ஆம் ஆண்டு தமிழில் இலக்குவன் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது. சிற்சில மொழிபெயர்ப்பு சிக்கல்கள் தவிர்த்து சரளமான நடையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்நூல் எழுதப்பட்ட காலத்தில் பாஜக அதிகாரத்திற்கான வேட்கையில் பல பிராந்திய கட்சிகளுடன் கூட்டணியும், பாபர் மசூதி இடிப்பிற்கு பிறகான அரசியல் சூழலை தனது வகுப்புவாதத்திற்கு ஏற்ப மாற்றிக் கொண்டும் இருந்தது. பாஜக அதிகாரத்திற்கான பயணத்தில் ஒரு முக்கியமான இடத்தை அடைந்திருந்த காலகட்டம். இரண்டுமுறை அதிகாரத்தை சுவைத்திருந்த வேட்கையில், சங்பரிவார் என்கிற பல அமைப்புகளின் வழியாக தனது ஆக்டோபஸ் கரத்தை விரிவுபடுத்தி, முழுக்க முழுக்க அரசு மற்றும் தனியார் நிறுவனங்களைக் கையகப்படுத்தி தன்னை, தனது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்டிருந்த காலம். அக்காலகட்டத்தில் இந்துத்துவ அமைப்புகளின் புகழ்பெற்ற 'இரட்டை நாக்கு' உறுதிமொழிகள், காலையில் ஒன்று மாலையில் ஒன்று என வண்ணம் மாற்றி பேசும் 'திருப்புமாறி' பேச்சுகள், சங்பரிவாரின் ஒவ்வொரு அமைப்பும் ஒரு பிரச்சனை குறித்து பல வண்ணங்களில் வெளிப்படுத்தும் அறிவிப்புகள், அறிக்கைகள் என அனைத்தையும் இந்நூல் விரிவாக பட்டியலிடுகிறது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு குறித்து எனக்கு நிகழ்ந்த சில அறிமுகங்களை நினைவூட்டக் கூடியதாக அமைந்திருந்தது இந்நூலின் வாசிப்பு. அந்த அமைப்பு எப்படி மக்களைக் கவர்கிறது. மூளைச் சலவை செய்கிறது, அதன்பின் எப்படி பல நூற்றுக்கணக்கான அமைப்புகளை உருவாக்கி அதில் மக்களை அடையாளப்படுத்துகிறது என்பதை எனது அனுபவம் வழியாக ஒப்பிட்டுப் புரிந்துகொள்ள முடிந்தது. பொதுவாக ஆர்.எஸ்.எஸ். முன்வைக்கும் ராணுவ ஒழுங்கு, தேசியசேவை ஆகியவை பள்ளிகளிலேயே துவக்கப்பட்டு விடுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக தமிழ்நாடு சாரணர் இயக்கத் தலைவருக்கான தேர்தலில் பாஜக தேசியக் குழு உறுப்பினரான ஹெச். ராஜா அவர்கள் போட்டியிட்டு 4 வாக்குகள் பெற்று படு தோல்வியடைந்ததை அனைவரும் அறிவோம். ஏன் இவர்கள் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான சாரணர் இயக்கத்தை குறி வைக்கிறார்கள் என்பது சிந்திக்கப்படுவதில்லை. அதேபோன்று கல்லூரி மாணவர்களுக்கான நாட்டு நலப்பணித்திட்டம் (NSS), தேசிய மாணவர் படை (NCC) போன்ற அமைப்புகளிலும் அவர்கள் முழுமையாக கவனம் செலுத்துகிறார்கள்.

நான் உயர்நிலைப் பள்ளியில் சாரணர் இயக்கத்தில் இருந்தேன். அப்பொழுது பெரும்பாலும் உள்ளூர் கோவில்களில் திருவிழா சேவை, குளம், கோவில் சுத்தம் செய்தல் இதுபோன்ற நிகழ்வுகள்தான் அதிகம் செய்யப்படும். நான் சிறுவயதில் தீவிர சிவபக்தனாக மாற அது ஒரு காரணமாக இருந்திருக்கலாம் என்பதை யோசிக்க முடிகிறது. அதன்பின் மேல்நிலைப்பள்ளி படிக்கும்போது எங்கள் ஊரில் உள்ள சிலருடன் இணைந்து 'டே ஆர்கனைசேஷன்' என்றதொரு நற்பணி மன்றம் வைத்திருந்தோம். அதில் 6 துறைகள், துறைக்கு ஒரு பொறுப்பாளர். வேலைவாய்ப்புத் துறை, கல்வித்துறை, அறநிலையத்துறை, பொதுப்பணித்துறை இப்படியான துறைகள் இருந்தது. அதிலும் எங்கள் ஊர் கோவில்களில் திருப்பணி செய்தல், உப்பிலியப்பன் கோவிலுக்கு வரும் பக்தர்களிடம் அறிமுகம் ஆகவென சிவன்கோவில் தலபுராணங்கள் எழுதிவைத்தல் இப்படியான பணிகளோடு பல பொதுப்பணிகளும் செய்துவந்தோம். அப்பொழுது தமிழீழப் போராட்டத்தில் எங்கள் ஊருக்கு அருகில் முகாமிட்டிருந்த ஈபிஆர்எல்எப் (EPRLF) என்ற ஈழபோராட்டக்காரர்களுக்கு தீபாவளி அன்று பலகாரங்கள் சேகரித்து தருதல் போன்ற பணிகளை செய்தோம்.

அக்காலத்தில் எங்கள் அமைப்பைச் சேர்ந்த ஒரு நண்பர், என்னிடம் பேச என ஒருவரை அறிமுகப்படுத்தினார். கோல்வால்கர் பாணியில் நீளமான தாடி, பரட்டை தலை என வேஷ்டி சட்டையுடன் காணப்பட்டார். அவர் என்னிடம் அறிமுகப்படுத்திய இயக்கம் ஆர்.எஸ்.எஸ். எங்கள் இளைஞர் நற்பணி மன்றத்தை தத்தெடுப்பது குறித்தும், பொதுவான தேசிய அரசியலும் பேசினார். அதில் முரண்நகை என்னவென்றால், அந்த மொத்த குழுவில் நான் மட்டுமே முஸ்லிம். தவிரவும் அப்போதே பல புராணங்கள், வரலாறு என படிப்பது, கையெழுத்து பத்திரிக்கை நடத்துவது, எழுதுவது என்று இருந்தவன் என்பதால் என்னிடம் நீண்ட நேரம் உரையாடினார் அவர். இது நடந்தது 1981-82ஆம் ஆண்டுகளில். அவரிடம் நான் விவாதித்த விதத்தில், பின் என்னை அவர் சந்திக்கவில்லை. ஆனால், இயக்கத்திற்குள் இந்துத்துவ கருத்துகள் புக ஆரம்பித்ததாக எனக்கு ஐயம் தோன்ற, நான் அந்த அமைப்பில் ஆர்வம் காட்டவில்லை. பின்னால் அது என்னவானது என்றும் தெரியவில்லை. கூறவருவது இதுதான், ஆர்எஸ்எஸ் என்ற இயக்கம் பல ஆண்டுகளாக வேர்க்கால் மட்டத்தில் இளைஞர்களை, உள்ளூர் நற்பணி மன்றங்களை கையகப்படுத்த துவங்கிவிட்டது என்பதையே.

அதன்பின் கல்லூரியில் படித்தபோது நாட்டு நலப்பணித் திட்டத்தில் இணைந்திருந்தேன். அங்கு காவல்துறைக்கு உதவுதல், கோவில் திருப்பணிகள், பொதுச் சேவைகள் இப்படித்தான் பயிற்றுவிக்கப்பட்டோம். குறிப்பாக கும்பகோணம் கும்பேஸ்வரன் கோவிலில் நீண்ட நாட்களாக ஓடாமல் இருந்த ஐந்து ரதங்களை தூய்மைப்படுத்தி, வர்ணம் பூசினோம். அந்த திருப்பணி சுமார் 15 நாட்கள் நடந்தது. ஐந்து ரதங்கள் நகர்வலம் என அந்த ஆண்டு தேர்த்திருவிழா விமரிசையாக கொண்டாடப்பட்டது. அதில் ஒரு சிறிய ரதத்தை நாங்களே தனியாக இழுத்து நகர்வலம் வந்தோம். அப்போது எனது வகுப்புத் தோழன் ஒருவன் என்சீசீ-யில் இருந்தான். அவன் என்னிடம் நட்பாக பழகுவான். பல பொதுவிஷங்கள் பேசுவோம். நான் கல்லூரியில் அப்பொழுது இலக்கியம், கவிதை என்று இருந்த காலம். அந்நண்பன் பலமுறை புராணங்கள், இதிகாசங்கள் படித்திருப்பதையும், இந்திய தத்துவங்கள் குறித்து பேசுவதையும் கண்டு, இவ்வளவு தெரிந்த நீ ஏன் இந்துவாக மாறக்கூடாது என்றும், என்னோடு சாகாவிற்கு வருகிறாயா? என்றும் கேட்டான். அப்பொழுதுதான் எனக்கு தெரியும் கும்பகோணம் போன்ற நகரங்களில்கூட சாகாக்கள், பயிற்சிகள் வழங்கப்படுவது. கல்லூரியில் படித்தபோது மார்க்சியம் அறிமுகமாகி முழு நாத்திகனாக மாறி, தீவிரமான பொதுவுடமை மாணவர் இயக்கத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்தேன். அச்சமயத்தில்தான் அந்நண்பன் இப்படி இடையீடு செய்தான். அவன் பிராமண சமூகத்தை சேர்ந்தவன் என்பது ஒரு கூடுதல் செய்தி இங்கு. ஆக, பள்ளி கல்லூரிகளில் இருந்தே அவர்கள் தங்கள் ஆட்சேகரிப்பை துவக்கிவிடுகிறார்கள்.

இவ்வாறு, ஆர்எஸ்எஸ் வேர்க்கால் மட்டத்தில் கடந்த 60-70 ஆண்டுகள் இந்தியாவெங்கும் உழைத்ததின் விளைவு பாஜக இன்று ஆட்சியில் அமர்ந்துள்ளது. மிக எளிமையாக அதனால் இளைஞர்களையும், கட்சிகளில் பணியாற்றும் ஆட்களையும் வளைக்க முடிந்துள்ளது. அதற்கு காரணம் அது தனது அரசியல் நிறத்தை மறைத்து, தன்னை ஒரு பண்பாட்டு இயக்கமாக, தொண்டு செய்யும் இயக்கமாக, சேவை அமைப்பாக காட்டியதே. ஆனால் உண்மையில் அவ்வியக்கம் தோற்றுவிக்கப்பட்டது, அதன் இந்துத்துவ அரசியல், அதன் உள்ளிருக்கும் மதவெறியும், பிறமதவெறுப்பும், வரலாற்று திரிபு என பலவும் இந்நூலில் விவாதிக்கப்பட்டுள்ளது. தன்னை ஒரு தொண்டு இயக்கம், பண்பாட்டு அமைப்பு என்கிற முகத்திரையிலிருந்து பாஜக என்ற அரசியல் இயக்கம் வழியாக எப்படி வெளிப்படுத்துகிறது என்பதே இந்நூலின் மையக் கருத்தாடல். ஆர்எஸ்எஸ் பல கைகளும், பல வாய்களும் கொண்ட ஒரு பேருடல். அதன் பல உறுப்புகளே எண்ணற்ற இயக்கங்கள். அது பண்பாடு, தேசியம் என்று பேசுவது எல்லாம் இந்த பேருடலின் அரசியலே. இந்துத்துவ அரசியல் ஒருவருக்குள் நுழைந்துவிட்டால், அவர் தனது உடலை ஒரு இந்துத்தவ தேசிய உடலாக கட்டமைத்துக் கொண்டுவிடுகிறார். இதுவே அதன் உடலரசியல்.

இப்படியான உடல்களை கண்டடைய எல்லா மட்டங்களிலும் அது ஒரு இயக்கத்தை கட்டமைத்துள்ளது. ஒவ்வொரு உள்ளூர் பிரச்சனைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறது. தலித்துகளுக்கு ஒன்று, பழங்குடிகளுக்கு ஒன்று, பெண்களுக்கு ஒன்று, சாதுக்களுக்கு ஒன்று, மாணவர்களுக்கு ஒன்று என பல நிறுவன அமைப்புகளும், கல்வி நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் என வெவ்வேறு வடிவங்களிலும் அவ்வியக்கம் இயங்குவதை இந்நூலில் ஆங்காங்கே சுட்டிக்காட்டுகிறார். ஆசிரியர் முழுக்க ஆர்எஸ்எஸ் தன்னை அரசியலற்ற இயக்கம் என்று சொல்வதும், அதன் திரிசூல அமைப்புகளான பாஜக (அரசியல் பிரிவு), விஎச்பி (சாதுக்கள் பிரிவு), பஜ்ரங்தள் (இளைஞர் பிரிவு) என்ற மூன்று முக்கிய அமைப்புகளும் எப்படி இயங்குகின்றன, அவற்றின் வேலைப் பிரிவினைகள் எப்படி ஒழுங்கமைக்கப்படுகிறது என்பதை அவ்வியக்கத்தினரின் நடவடிக்கை, அதன் தலைவர்களின் பேச்சுக்கள் ஆகியவற்றின் மூலம் விவரிக்கிறது.

இந்நூல் ஏழு தலைப்புகளில் ஆர்எஸ்எஸ் பாஜக வேலைப்பிரிவினைகள் குறித்து பேசுகிறது. ஆர்எஸ்எஸ் துவக்கிய வரலாறு, அதன் தத்துவமாக வடிவமைக்கப்பட்ட இந்துத்துவா, அதனை உருவாக்கிய கோல்வால்கர் குறித்து அவரது நூல்களில் இருந்து ஆதாரங்களுடன் எப்படி இரட்டை நாக்குடன் அவர் செயல்பட்டார் என்பதை விவரிக்கும் பகுதிகள் முக்கியமானவை. காந்தி, நேரு, படேல் இவர்களுடன் அவர் கொண்டிருந்த முரண், பிரிட்டிஸ் அரசிற்கு சாதகமாக நின்று காங்கிரஸை எதிர்த்தது என வரலாற்றின் அந்த பக்கங்களை நம்முன் விரித்து வைக்கிறார். அறிமுக உரையில் பாசிச ஹிட்லரின் நிகழ்வு ஒன்றுடன் துவங்கி, பாஜக என்ற கட்சியின் கூட்டணி தந்திரங்கள், தன்னை ஒரு அரசியல் கட்சியாக நிலைநிறுத்துவதற்கான முயற்சி ஆகியவை அறிமுகப்படுத்துகின்றார். பா.ஜ.க. இவ்வாறு அதிர்ஷடவசமாக பெற்ற வெற்றிகளுக்கு மதச்சார்பற்ற கட்சிகளுக்கிடையே நிலவிய ஒற்றுமையின்மைக்கும், பி.வி. நரசிம்மராவ் அரசு (1991-96) பாபர் மசூதி இடிப்பில் உடந்தையாக இருந்ததற்கும் பெரிதும் நன்றிக்கடன் பட்டிருக்கிறது. (பக். 19) என்பதை பாஜக இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களில் இருந்து 96ஆம் ஆண்டு 161 மற்றும் 98ஆம் ஆண்டு 180 இடங்களையும் பெற்று வாஜபேயி தலைமையில் ஆட்சியமைத்த வரலாற்றை அடைந்த அதன் இரட்டை நாக்கு தந்திரங்களை, வஞ்சகத்தை, ஏமாற்று வேலையை அம்பலப்படுத்துகிறார். பக்.22ல் ஆர்.எஸ்.எஸ். கூறும் மாபெரும் ஐந்து பொய்களை அம்பலப்படுத்துகிறார்.

"ஆர்.எஸ்.எஸ்: கண்ணோட்டமும் கொள்கைகளும்" என்ற தலைப்பில் சாவர்க்கர் துவங்கி, கோல்வால்கர் வரை இந்துத்துவ கண்ணோட்டம் எப்படி உருவாக்கப்பட்டது, அதன் கொள்கைகள் என்ன என்பதை விவரிக்கிறார். குறிப்பாக கோல்வால்கர் இந்துத்துவ சிந்தனையை எந்த வரலாற்று ஆதாரங்களும் இன்றி, புராண, இதிகாச அடிப்படைகளில் உருவாக்கி, ஜெர்மானிய இனவாதத்துடன் ஒப்பிடத்தகுந்ததாக, இந்து மதம் என்பதை ஒரு இனமாக மாற்றும் வேலையை தனது பகட்டான மொழிகளில் கட்டமைக்கிறார். ஒரே கலாச்சாரம், ஒரே தேசியம், ஒரே நாடு என்பதாக இந்துத்துவாவை ஒரு கருத்தியலாக வடிவமைக்கிறார். பல தலைகளைக் கொண்ட பூதமான ஆர்.எஸ்.எஸ். (பக்.30) என்ற உருவகத்தை மிகச்சரியாக விவரிக்கிறார் நூரானி. 1925ல் உருவாக்கப்பட்ட அந்த அமைப்பு, அரசின் பல நிர்பந்தங்களுக்குப் பின் எழுத்துபூர்வமான சட்டம் 1949 ஜூன் மாதத்தில்தான் வெளியிடப்பட்டது. ஆக, எந்த அமைப்பு விதிகளும் சட்டமுமின்றி 24ஆண்டுகள் இந்திய சுதந்திரப் போராட்ட காலங்களில் இயங்கிய ஒரு அமைப்பாக இருந்துவந்துள்ளது. அதனால் அது முழுக்க காங்கிரஸ் எதிர்ப்பு பிரித்தானிய ஆதரவுநிலை எடுப்பதும், சூழலுக்கேற்ற தனது சுயநல வேட்கைக்கு ஏற்ப மாறிக்கொள்வதுமாக இருந்து வந்துள்ளது.

'ஒரு தேசம்' என்பதற்கான பூகோள அமைப்பு, இனம், மதம், கலாச்சாரம், மொழி ஆகிய ஐந்து கூறுகளை உள்ளடக்கியதுதான் ஒரு தேசம் என்று கோல்வால்கரின் நூல் குறிப்பிடுகிறது. (பக். 37). இந்த ஐந்து அடிப்படைகளிலும் இந்தியாவை ஒரு தேசமாக கருதமுடியாது என்பதை விரிவாக

விவரிக்காமல் விட்டுவிடுகிறார் நூரானி. நூல் முழுக்க பாஜகவின் சந்தர்ப்பவாத அரசியலை மையப்படுத்துவதால், அடிப்படையான இந்த விளக்கத்தை கடந்து சென்றுவிடுகிறார். இன்று இந்துத்துவா இந்த புள்ளியில்தான் ஒரே தேசம், ஒரே பண்பாடு, ஒரே மொழி என்ற கருத்தாக்கத்தை முன்வைக்கிறது. அதன்பின் அமைந்துள்ள வர்ண - வர்க்க வேறுபாடுகளை மூடிமறைக்கிறது. மதத்தையும், பண்பாட்டையும் ஒரே சொல்லாடலுக்குள் திணிக்க முயலும் அரசியலை தங்களது உயர்சாதி நலனுக்காக செய்வதை மூடிமறைக்கிறது கோல்வால்கரின் வாதங்கள். "சக்ரவர்த்தி ஆகாமலே சாம்ராஜ்யத்தை ஆளும்" தனது ராஜகுரு பிராமண மனுவாதத்தை மூடி மறைத்து, மொத்த இந்தியாவையும் மனுவாத வர்ணாசிரமப்படி ஆள்வதற்கான வேட்கையை மறைத்தும் சொற்ஜாலங்களில் ஈடுபடும் ஒன்றே கோல்வால்கரின் "சிந்தனைக் கொத்து" என்கிற இந்துத்துவர்களின் பைபிள்.

கோல்வால்கர் ஒரு குழந்தை பிறக்கும்போதே இந்துவாக பிறக்கிறது, மற்ற மதங்களைப்போல ஞானஸ்தானம், சுன்னத் போன்ற சடங்குகளால் மதம் மாறுவதில்லை என்கிறார். அடிப்படையில் உபநயனம் என்பதும், இருபிறபாளர்கள் என்பதுமே பிராமண - வேத - மதத்தின் (அதாவது இன்று 'இந்து' மதம் என்று ஏமாற்றித் திரியும்) அடிப்படை. அதுவே சாதியத்தை, வருணதர்மத்தை காப்பதாக உள்ளது. அம்பேத்கர் திரும்ப திரும்ப இந்து 'துவிஜர்கள்' எனப்படும் இருபிறப்பாளர்கள் உயர்சாதிகளாகவும், இது மறுக்கப்பட்ட (பூனூல் அணிய தகுதியற்ற) சூத்திரர்கள், வர்ணகலப்பில் உருவான பஞ்சமர்கள் கீழ்சாதியாக, இழிசாதியாக மாற்றப்பட்ட கொடுங்கோன்மையை சுட்டிக்காட்டியுள்ளது கோல்வால்கர் அறியாததா? இது எத்தனை பெரிய ஏமாற்றுவேலை. இஸ்லாமிய, கிறித்துவ மதமாற்றங்கள் நிகழ்ந்ததற்கான வரலாறு பிராமண-வேத-மத வர்ணாசிரம கொடுங்கோன்மையே காரணம் என்பதும், கீழ்சாதியாக்கப்பட்ட சூத்திரர்களும், இழிசாதி என ஒதுக்கப்பட்ட பஞ்சமர்களுமே மதமாற்றத்தினை ஏற்றவர்கள் என்பதே வரலாறு. (இந்துமதக் கோடுங்கோன்மையை அறிந்துகொள்ள தர்மகீர்த்தி அடிகளின் "இந்துமதக் கொடுங்கோன்மை வரலாறு" என்ற நூலை வாசிக்கலாம். அதில் பிராமணர்கள் எப்படி இந்துமதத்தை கொடுங்கோன்மையாக மாற்றினார்கள் என்பது பேசப்படுகிறது.) தமிழகத்தில் சைவ கழுவேற்றத்தில் தப்பிய இல்லறம் சார்ந்த சமண, பௌத்தர்களே இஸ்லாமியர்களாக மாறியதாக தமிழக முஸ்லிம் வரலாறு கூறுகிறது (பார்க்க "முஸ்லிம்களும் தமிழகமும்" எஸ்.எம். கமால்). ஆக, பிராமண வேத மத வர்ணாசிரம கொடுங்கோன்மையை மீண்டும் அரசின் இறையாண்மை வடிவில் பாசிச அரசதிகாரமாக நிறைவேற்றவே இன்று இந்துத்துவர்கள் முயல்கிறார்கள் என்பது வெள்ளிடைமலை.

'அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு உடந்தையாக செயல்படுவது ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் வழக்கமான நடைமுறையாக இருந்து வந்துள்ளது.'(பக். 69) என்று கூறும் நூரானி, இந்திராகாந்தி ஆட்சியிலும், அவரது அவசரகாலம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்திலும், அந்த அமைப்பின் நடவடிக்கை எப்படி இந்திராவை புகழ்வதாக அமைந்தது என்பதை சுட்டிக்காட்டுகிறார். 1960-70கள் குறிப்பாக பங்காளதேச பிரிவினைக்காலத்தில் நிகழ்ந்த இந்திரா காந்தி, கோல்வால்கர் இடையிலான கடிதப் போக்குவரத்துகள் மக்களிடம் கவனப்படுத்தப்படாமல் போனது விந்தையானது என்பதை சுட்டிக்காட்டி, அதில் இந்திராவை ஆதரித்து கோல்வால்கர் எழுதிய கடிதங்கள் சிலவற்றை மேற்கோளாகத் தருகிறார். அதன் பின் தலைமைக்கு வந்த தேவரஸ் இந்திரா ஆதரவு நிலையை எடுத்தார் என்பதுடன், 'தேசிய அரசியலில் சஞ்சய் காந்தி வலிமைமிக்க தாக்கத்தை ஏற்படுத்தினார். இதற்கு அவரது குடும்பப் பின்னணி மட்டும் காரணமல்ல. அவரது தனிப்பட்ட குணங்களும் ஆளுமையும் இதற்கான காரணங்களாகும்" என்றும் தேவரஸ் குறிப்பிட்டுள்ளார் (பக். 69). இந்திரா காந்தியை ஒரு 'அரசியல் இந்து' என்று எழுதியது ஆர்கனைசர் (பக். 69). பாஜகா வும், 70-80கால இந்திராவின் காங்கிரஸும் பாசிசத்தின் இரண்டு முகங்களாகவே செயல்பட்டன. காங்கிரஸை உள்ளிருந்த ஆர்.எஸ்.எஸ். நுண்கிருமி போல அரிக்கத் துவங்கியதை உணரமுடிகிறது. அது இந்திராவிற்கு மாற்றாக சஞ்சய் காந்தியை

முன்னுக்கு கொண்டுவந்ததும், அவர் விமான விபத்தில் மரணமடைந்ததும், அவரது மனைவி மேனகா காந்தி இன்று சங்பரிவார் அதிகாரத்தில் அமைச்சராக இருப்பதும் ஒருவகை அரசியல் சித்து விளையாட்டோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இரண்டாம் பகுதியில் ஆர்.எஸ்.எஸ். கண்ணோட்டத்தை விரிவாக விளக்கியதன் தொடர்ச்சியாக, "சங் பரிவாரமும் பிரிட்டிஷ்காரர்களும்" என்ற அடுத்த பகுதியில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடம் காங்கிரஸை எதிர்த்து தங்கள் அதிகாரப்போட்டிக்காக, அடங்கி ஒடுங்கி சமசரம் செய்துகொண்ட வரலாற்றை ஆதாரங்களுடன் விவாதிக்கிறது இந்நூல். விரிவாகப் பேசப்படவேண்டிய இப்பகுதி பாஜகவின் வரலாறே நூலின் மையம் என்பதால் ஒரு கட்டுரை அளவே சுருக்கமாக பேசப்பட்டுள்ளது. சியாம் பிரசாத் முகர்ஜியை எப்படி சாவர்க்கர் கண்டுபிடித்து, அவரை வைத்து பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து அதிகாரத்தைப் பிடிக்க முயன்றனர் என்பதுவே இப்பகுதியின் மையமான கருத்துரை. இக்காலகட்டத்தில் சாவர்க்கருக்கும், கோல்வால்கருக்கும் இடையில் யார் பெரியவன் என்கிற அதிகார போட்டி நிலவியதையும் (பக்.75) சுட்டிக்காட்டுகிறார்.

'இரண்டு தேசங்கள்' என்ற நச்சுத் தன்மையுள்ள கொள்கையை 1939ஆம் ஆண்டில் தான் ஜின்னா முதன்முறையாக முன் மொழிந்தார். 1940ஆம் ஆண்டில் தான் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை அவர் முன்வைத்தார். அதே கொள்கையை 25 ஆண்டுகளுக்கு முன்னரே 'இந்துத்துவா' என்ற தமது நூலில் சாவர்க்கர் வெளியிட்டிருந்தார். (பக்.77) இது ஏற்கனவே அறிந்த ஒன்று என்றாலும், இக்கருத்து வாசிப்பில் உருவாக்கும் சிந்தனை அவர்களது திட்டங்கள் பற்றிய ஒரு சட்டகத்தை தருகிறது. சங்பரிவார் முஸ்லிம் வெறுப்பு என்ற நெருப்பு வளையத்தை உருவாக்க அவர்கள் கூறிய காரணம் பாரதத்தாயை இரண்டாக வெட்டினர் என்பதே. உண்மையில் இந்த இருதேசக் கோட்பாடு என்பதை முதலில் பேசியவர்கள் அல்லது இந்த தேசம் இரண்டாக துண்டாடப்பட வேண்டும் என்று ஆசைப்பட்டவர்கள் அவர்களே. இப்படி ஒரு கருத்தாக்கத்தை உருவாக்கி பிறகு அதை இஸ்லாமிய அமைப்புகள் ஏற்று தங்கள் கருத்தாக வெளிப்படுத்தியபின், அவர்களை குற்றவாளியாக மாற்றுவது. இது அவர்களின் ஒரு உத்தி. இந்தியா இரண்டாக பிரிந்தால், அதை வைத்து பெரிய பிரிவினைக் கலவரத்தை உருவாக்கி தங்களது அரசியலுக்கான அடிப்படை உளவியலை, பிம்பங்களை, கொடுங்கனவுகளை உருவாக்கிவிட முடியும். அதை வைத்தே அதிகாரத்தை கைப்பற்றிவிட முடியும் என்பதே அவர்களது திட்டம். அடிப்படையில் இந்து மக்கள் என்று குறிக்கப்படும் பெரும்பான்மை இந்தியர்களின் நலனுக்கான அமைப்பு அதுவல்ல என்பதை இத்தகைய நடவடிக்கைகள் வெளிப்படுத்துகிறது. காந்தியைக் கொன்றதுடன் முடியும் மூன்றாம் பகுதி, ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் காந்தியும்" என்ற அடுத்த பகுதியில் காந்தியுடன் அவர்களது அமைப்பு உருவாக்கிய எதிர்ப்பையும் அதன் உச்சமாக அவர் படுகொலையில் முடிந்ததையும் பல்வேறு அறிக்கைகள், சான்றுகளுடன் விளக்குகிறது. காந்தி கோல்வால்கர் சந்திப்பு, அந்த அமைப்பு பற்றிய காந்தியின் மதிப்பீடு, நேரு தொடர்ந்து அந்த அமைப்பு எப்படி ஒரு வகுப்புவாத மக்கள் விரோத, இந்திய தேச விரோத அமைப்பாக வளரும் என்பதை முன் அனுமானம் செய்ததை விவாதிக்கிறது. படேலின் மென்மையான அணுகுமுறை, அவர் ஆர்.எஸ்.எஸ்.ஐ மையநீரோட்டத்தில் இணைக்க எடுத்த முயற்சி ஆகியவற்றை விமர்சனரீதியாக அணுகுகிறது இந்நூல்.

பிரிவினையால் சங்பரிவாரம் பெருமளவில் ஆதாயம் அடைந்தது. காந்திஜியின் படுகொலை இதனை தடுத்து நிறுத்தியது. தானே ஏற்படுத்திக் கொண்ட காயத்தின் பாதிப்பு இன்னமும் சரிசெய்யப்படவில்லை. ஆர்.எஸ்.எஸ். மற்றும் பாஜகவுக்கு ஓரளவு அரசியல் அந்தஸ்த்து கிடைப்பதற்கு 30 ஆண்டுகள் பிடித்தன. அது அவசர நிலை காலம் அவர்களுக்கு தந்த பரிசு. ஆட்சி பீடத்திற்கு அருகேவர அவற்றிற்கு 40ஆண்டுகள் பிடித்தது. அயோத்திப் பிரச்சனையை எழுப்பியதால் ஆட்சியை பிடிக்க முடிந்தது என்று அத்வானி கூறியது இங்கு நினைவுகூரத் தக்கது. (பக். 80-81) இது ஒரு வரலாற்றை அதன் உள்ளார்ந்துள்ள தளத்தின்

வழியாக வாசிக்கும் முயற்சி அல்லது நமது வாசிப்பு இதை உணர்த்துவது ஆர்.எஸ்.எஸ்.-பாஜக என்கிற அமைப்பின் ஆழ்தளத்தில் இருக்கும் ஒருவகை வெறுப்பு அரசியலை வெளிப்படுத்துவதாக உள்ளது. இப்பகுதியில் காந்தி படுகொலை துவங்கி பாபர் மசூதி இடிப்புவரையிலான அவ்வமைப்பின் "பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த" முறை, அவதூறுப் பிரச்சாரங்கள் என அதிகாரத்தைப் பிடிக்க அவர்கள் ஆடிய ஆட்டங்கள் விவரிக்கப்பட்டுள்ளது.

"சர்வாதிகாரக் கண்ணோட்டமுள்ள ஒரு வகுப்புவாத அமைப்பு" என்று ஆர்.எஸ்.எஸ். பற்றி காந்திஜி மதிப்பீடு செய்தார். (பக். 90) என்பதைக் குறிப்பிடுகிறார் இந்நூலில். காந்தி ஒரு பெரும் தடையாக இருந்தார் அவர்களுக்கு. ஆர்.எஸ்.எஸ்.ஸின் இந்திய காவலன் மற்றும் "தேசபக்த" கருத்தாக்கங்களின் பொய்மையை காந்தியின் உண்மையான இந்திய காவலன் என்ற மஹாத்மா பிம்பமும், உண்மையான தேசபக்தியும் மக்களிடம் நிரூபித்துக் கொண்டிருந்தது. அதாவது அவர்களின் போலித்தனத்தை அம்பலப்படுத்தவதாக இருந்தது காந்தியின் இருப்பு. அதை நீக்கியதன் வழியாக அவர்கள் அடிப்படையான தடைக்கல் ஒன்றை தகர்த்தார்கள். அவர்கள் அதிகாரம் பெற பாபர் மசூதியை தகர்த்ததற்கும், காந்தியின் படுகொலைக்கும், கோத்ரா ரயில் சம்பவத்திற்கு பிந்தைய குஜராத் படுகொலைகளுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. தடைக் கற்களைத் தகர்ப்பதற்கான ஒரு நீண்ட வரலாறே 2014ல் அவர்கள் மோடியின் தலைமையில் பெற்ற அதிகாரம். 2019ல் அவர்களது திட்டங்கள் முழுமையும் செயல்பாட்டிற்கு கொண்டுவருவதற்கான அவசரமும் என்று இந்நூலைத் தொடர்ந்து நம்மால் இந்துத்துவ சக்திகளை சங்பரிவாரங்களின் செயல்களை மேலெடுத்துச் சென்று ஆய்வு செய்யமுடியும்.

பகுதி:5-ல் "ஆர்.எஸ்.எஸ். சின் முன்னணி அமைப்புகள்: பாஜக - விஎச்பி - பஜ்ரங்தள் என்ற திரிசூல அமைப்புகள்" என்ற தலைப்பின்கீழ், சங்பரிவார் வேலைத்திட்டங்கள் எப்படி முறைப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை விவரிக்கிறது. இம்மூன்று அமைப்புகளும் இந்திய சமூகச் சூழலை எப்படி பாபர் மசூதி இடிப்பை நோக்கி நகர்த்தின என்பதையும், அயோத்தியா பிரச்சனை என்பது எப்படி அவர்களது 'மாஸ்டர் டிஸ்கோர்ஸ்' *(Master Discourse)* ஆக மாற்றப்பட்டு, அதனை மையமாக வைத்து இந்த இயக்கங்கள் இயங்கியதையும், அதற்கு ஆதரவான முறையில் பாஜக தனது அரசியலை நகர்த்தியதையும் பேசுகிறது. குறிப்பாக மண்டல் பரிந்துரை அமலாக்கம் துவங்கி, இந்திரா காந்தி படுகொலை, ராஜிவ் காந்தி படுகொலை மற்றும் அயோத்தி ரத ஊர்வலம் என அடுத்தடுத்து காட்சிகள் இந்திய அரசியல் வானில் தோன்றியது அனைத்தும் இந்துத்துவ சக்திகளால் தங்களுக்கு சாதகமாக மாற்றப்பட்டன. எந்த சிந்தனை தர்க்கமும், அரசியல் அறமும் அற்ற முறையில் இந்துத்துவ திரிசூல அமைப்புகள் தங்களது இறுதி யுத்தம் என களம் இறங்கி, அத்தனை அரசியல் சூழலையும் ஒரு சதுரங்கக் காய்போல நகர்த்தி பாபர் மசூதி இடிப்புடன், தங்களது ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்துவதுவரை நகர்ந்தன. இந்திய அரசியல் சூழலில் காங்கிரஸ் என்கிற நூற்றாண்டு கண்ட தேசிய இயக்கத்திற்கு மாற்றாக பாஜக தன்னை நிலைநிறுத்தியது. காங்கிரஸ் எதிராக நின்ற இடதுசாரி கம்யுனிசம் என்பதை அகற்றி அந்த வெற்றிடத்தை பாஜக தன்னைக் கொண்டு நிறுவிக்கொண்டது என்பதே வரலாறு. இந்த வரலாற்றை தக்க அறிக்கைகள், சங் பரிவார்களின் பேச்சுகள் என தொகுத்து வழங்குகிறது இந்நூல். பாஜக வரலாற்றைக் கூறி அதன் வெற்றிப்பாதையாக அமைந்த அயோத்தியா நிகழ்வுவரை ஒரு நேர்மையான பத்திரிக்கையாளராக நூரானியால் இதில் தொகுக்கப்பட்டுள்ளது.

ராமஜென்ம பூமி என்பது உண்மையான பிரச்சனை அல்ல. இந்துத்துவாவை பாதுகாப்பதற்கும் போலிமதச்சார்பின்மையைத் தகர்ப்பதற்குமான மாபெரும் யுத்தம் இது. நேரு, காந்தி கோட்பாடுகளை உடைத்தெறிந்து இன்றைய அரசியல் அடிப்படையையே மாற்றி அமைப்பதுதான் ரதயாத்திரையின் நோக்கம் என்று அத்வானி குறிப்பிட்டார். (பக்.94) இப்படியான அவர்களின் வெளிப்படையான வகுப்புவாத, இந்திய அரசியலின் அடிநாதமான

மதச்சார்பின்மையைத் தகர்ப்பது என்ற வேலைத்திட்டமே அயோத்தியா பிரச்சனை. மற்றபடி பெரும்பான்மை காவலன் என்றும், இந்துமதத்தின் காப்புறுதி இயக்கமாகவும் பாவனை காட்டுவது அதிகாரத்தைக் கைப்பற்றவே. உண்மையில் பெரும்பான்மை இந்து மக்களை காப்பதோ, இந்த தேசத்தை காப்பதோ நோக்கம் அல்ல. பக். 103ல் பாராளுமன்றத்தில் ஜனசங்கம் துவங்கி பாஜகவரை 1952-99வரை வெற்றி பெற்றுவந்த புள்ளிவிபரம் ஒரு அட்டவணையாகத் தரப்பட்டுள்ளது. அந்தக் காலகட்டங்களில் காங்கிரஸ் மற்றும் இடதுசாரிகள் தங்களது செயல்பாடுகளை சுயவிமர்சனம் செய்துகொள்வது அவசியம். இந்திய நாஜிப்படையாக எப்படி பஜ்ரங்தள் அமைப்பு உருவானது என்பதை விவரித்துவிட்டு, அடுத்த பகுதியில் "பாபர் மசூதி இடிப்பு" குறித்து அவ்வியக்கங்கள் பேசிய மழுப்பல் வாதங்களையும், அதைத் திட்டமிட்ட வகையில் எப்படி இடித்தார்கள், அதன் திட்டம் எங்கு எப்படி உருவாக்கப்பட்டது என்பதை பேசுகிறது. பாஜகவின் இந்த அசுர வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது பாபர் மசூதி தகர்ப்பு என்றால், அதற்கான அரசு ஆதரவுச் சூழலை உருவாக்கியதில் முக்கிய பங்கு காங்கிரஸ் பிரதமர் பி.வி. நரசிம்மராவையே சாரும். நரசிம்மராவ் பதவியேற்ற 1 ஆண்டுகளுக்குள் சங் பரிவார் தனது குறிக்கோளை நிறைவேற்றியது" (பக்.105) அதன்பின் தன்னை நிலைநிறுத்த தேசிய ஜனநாயகக் கூட்டணியை உருவாக்கி அதிகாரப் பகிர்வை நிகழ்த்தத் துவங்கியது. பி.வி. நரசிம்மராவ் போன்றவர்கள் நேருவின் சோவியத் ஆதரவிற்கு மாற்றாக, காங்கிரஸிற்குள் அமெரிக்க ஆதரவாளராக இருந்தவர் என்பதையும் இத்தோடு இணைத்து நோக்கவேண்டும்.

இறுதிப் பகுதியில் நிகழ்காலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. கிறித்துவ எதிர்ப்பு, முஸ்லிம் எதிர்ப்பு, முன்னாள் ராணுவ அதிகாரிகள், அரசு அலுவலர்களை இயக்கத்திற்குள் உள்ளிழுத்து, ஆயுதப்பயிற்சி துவங்கி அரசின்வழியாக தனது திட்டங்களை நிறைவேற்றுவதற்கான அடிப்படைகளை அமைத்தல் ஆகியவை பற்றி சுருக்கமாக விவாதிக்கிறது. அதற்கான ஆதாரங்களையும் தொகுத்து வழங்குகிறார் நூரானி அவர்கள். முடிவுரையில் சங்பரிவார்களின் இந்துத்துவ வேலைத்திட்டத்தில், இந்திய அரசியல் சாசனத்தை நிராகரிப்பது, மனுதர்ம அடிப்படையிலான பிராமண வேத மத பொற்கால கனவுகளைக் கொண்ட சனாதன வருண தர்மத்தை நிலைநிறுத்துவது, தேசியக்கொடியின் மீதான மதிப்பற்ற தன்மை என அவர்களின் உள்ளார்ந்த வேலைதிட்டத்தையும், அவர்களது அமைப்புகள் முழுக்க வெறும் கருவிகள் என்பதையும் நுட்பமாக விளக்கிச் செல்கிறது. மக்கள் எங்களுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை அளிக்கும்போது, நாங்கள் கனவு காணும் இந்தியாவை உருவாக்குவோம் அதில் எந்த சந்தேகமும் இல்லை" என்று 2000செப்டம்பர் 9ல் நியுயார்க்கில் வாஜ்பேயி அளித்த உறுதிமொழியை பக். 165ல் சுட்டிக்காட்டி, அவர்களது எதிர்காலத் திட்டத்திற்கான அடிப்படைகளை உருவாக்கும் மறைவான வேலைத்திட்டத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறார். 1999ல் பெரும்பான்மை இல்லாத ஆட்சியிலேயே அவர்கள் இப்படிச் செய்தால், எதிர்காலத்தில் அவர்கள் எதையும் செய்ய அஞ்சமாட்டார்கள் என்றும் இந்தியாவிற்குள் ஒரு மிகப்பெரும் அபாயம் வளர்ந்து மக்களை தனது பல நூறு ஆக்டோபஸ் கரங்களால் இறுக்கி கசக்கி பிழியப்போகும் நிகழ்வை கூறி முடிகிறது இந்நூல். இந்த எச்சரிக்கை இன்று நிதர்சனமாகிவிட்டது.

பாபர் மசூதி தகர்ப்பில் அத்வானி ஏறவேண்டிய பிரதமர் பதவி வாஜபேயால் தட்டிப் பறிக்கப்பட்டது. கோத்ரா சம்பவமும், அதனால் உருவான இஸ்லாமியப் படுகொலைகளும் அடுத்து அத்வானிக்கு வர இருந்த பிரதமர் பதவி, அன்றைய குஜராத் முதல்வராக இருந்த நரேந்திர மோடியால் தட்டிப் பறிக்கப்பட்டது. காந்தி படுகொலை துவங்கி, பாபர் மசூதி தகர்ப்பு, குஜராத் படுகொலைகள் எனத் தொடர்ந்து இந்திய சமூகத்தின் அமைதியைக் குலைப்பது, அதன் மதச்சார்பின்மையை தகர்ப்பது, மதவெறி படுகொலைகள் வழியாக சிறுபான்மை மக்களுக்குப் பேரச்சத்தை விளைவிப்பது எனத் தொடர்கிறது.

2014ல் கூட்டணிக் கட்சிகளின் தயவில் ஆட்சிபீடம் ஏறிய பாஜக மோடி அரசு, முழு அரசு நிர்வாகத்தையும் இந்துத்துவர்களால் அல்லது தங்களுக்கு சாதகமானவர்களால் நிரப்பியது. இந்திரா காந்தி படுகொலைக்குப்பின் சீக்கியர்கள ஒடுக்கப்பட்டு, இனவெறியாக காங்கிரஸ் தனது நிறத்தை வெளிப்படுத்தியது. அதன்பின் பலமான கட்சியாக காங்கிரஸ் ராஜீவ் காந்தி தலைமையில் ஆட்சியில் அமர்ந்தது. ராஜீவ் ஆட்சியை குலைக்க ஊழல் என்ற ஆயுதத்தை எடுத்து, காங்கிரஸின் பலத்தை குலைத்து, பல எதிர்கட்சிகளை இணைத்து தேசிய ஜனநாயக கூட்டணியை அமைத்து பாஜக தனது பலத்தை மீட்டெடுத்தது. அடுத்த தேர்தலில் ராஜீவ் காந்தி படுகொலையால் நரசிம்மராவ் ஆட்சிபீடம் ஏறினார். இதுதான் பாஜக என்கிற கட்சியின் வளர்ச்சிக்கும், காங்கிரஸ் கட்சியின் வீழ்ச்சிக்குமான திருப்புமுனை. இங்கிருந்து பாஜக வளர்ச்சிமுகத்தை எட்டியது. ஆர்.எஸ்.எஸ். அமைப்பிற்கான அடிப்படைகளை உருவாக்கியவர் சித்பவன் பிராமணரான சாவர்க்கர். இந்த அமைப்பை அதாவது இந்துத்துவ இந்தியாவை உருவாக்க வேண்டும் என்று உருவாக்கியவர் தெலுங்கு தேசாஷ்தி ரிக்வேத பிராமணரான ஹெச்.பி ஹெட்கேவர். அவருக்குப்பின் சர்சங்சாலக் (காரியதரிசி) ஆனவர் மராத்திய கார்காத்த பிராமணரான கோல்வால்கர். மகாத்மா காந்தி படுகொலை, இந்திரா காந்தி படுகொலை, ராஜீவ் காந்தி படுகொலை இந்த மூன்று காந்திகளின் படுகொலைகள் யாரால் எந்த காரணம் பொருட்டு நிகழ்த்தப்பட்டிருந்தாலும், அதன் பலனை முழுவதுமாக அறுவடை செய்தது ஆர்.எஸ்.எஸ்.

இந்துத்துவா என்ற கருத்தியல் இன்று இந்திய அதிகார வர்க்கத்திற்கு ஏற்ப ஆட்சியில் அமர்த்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தியப் பெருமுதலாளிய வர்க்கம், உலக முதலாளியத்துடன் தனது உறவை பலப்படுத்தி, உலகின் மூலவளங்களைச் சுரண்டுவதற்கான பங்குதாரராக மாற இந்திய அதிகாரத்தை ஆட்சி பீடத்தை பயன்படுத்துவதற்கான ஒரு நல்வாய்ப்பாக மோடியின் அரசு அமைந்துள்ளது. மோடியின் மக்கள் செல்வாக்கிற்கு இந்துத்துவ கருத்தியலை வேர்க்கால் மட்டத்தில் கொண்டு சென்றுள்ள உண்மையான தொண்டர்படையுள்ள ஆர்.எஸ்.எஸ். பின்னணியில் அமர்ந்துகொண்டு தனது ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. அடிப்படையில் மூன்று காந்திகளின் மரணம், இந்திய அரசியலில் உருவாக்கிய வெற்றிடத்தை இந்துத்துவர்களைக் கொண்டு உலக முதலாளியமும், உள்ளூர் முதலாளியமும் நிரப்பி தனது வர்க்கநலனை பாதுகாத்துக் கொண்டுள்ளது. இன்றைய உலக தாராளமய முதலாளியத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்க்க உலகெங்கிலும் வலதுசாரி பாசிச ஆட்சிகளை உருவாக்கிக் கொண்டுள்ளது. அதற்குத் தேவை இன்று ஜனநாயக அரசுகள் அல்ல, மாறாக பாசிச அரசுகளே. அதன் ஒருவிளைவாக இங்கு உருவாக்கப்பட்டுள்ளதே இந்துத்துவ பாசிச அரசு. அதே நேரத்தில் நூறாண்டுகாலமாக காத்திருந்த இந்துத்துவ பிராமண மனுவாத வர்ணாசிரம ஆட்சிக்கான வேட்கையை நிறைவேற்றிக் கொள்ள சங்பரிவார் அமைப்புகளும் இந்த உலகமய முதலாளிய நெருக்கடியை பயன்படுத்துகின்றன. இந்நூல் பொருளியல் கண்ணோட்டத்தில் இப்பிரச்சனைகளை அணுகவில்லை என்றாலும், ஒரு பத்திரிக்கையாளராக, இந்த ஆட்சிமுறை உருவான வரலாற்றை சரியாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். கோல்வால்கர் துவங்கி அத்வானி வரையிலான வரலாறு இதில் பேசப்பட்டுள்ளது. பல தரவுகள் இன்றைய இடதுசாரி அரசியல் அணிகளுக்கு இந்நூலில் உள்ளது. கள அரசியலில் அவை இந்துத்துவ சக்திகளை எதிர்கொள்ளப் பயன்படும்.

இறுதியாக, இந்நூலைத் தொடர்ந்து ஏ.ஜி. நூரானி அவர்கள் இந்துத்துவ அமைப்புகள் குறித்தும் சங்பரிவார்கள் குறித்தும் பல நூல்களை எழுதியுள்ளார். பாரதி புத்தகாலயம் தொடர்ந்து அவரது நூல்களை தமிழில் கொண்டுவருவதற்கு பாராட்ட வேண்டும். இடதுசாரிகளின் வீழ்ச்சியால் பாசிசமயமாகிவரும் இன்றைய இந்திய அரசியலில் இதுபோன்ற நூல்கள் முக்கியமானவை என்பதால் விரிவாக இங்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்நூல் இடதுசாரிகள் இன்றைய அரசியலை புரிந்துகொள்ள ஒரு அடிப்படைப் பார்வையைத் தரக்கூடியதாக உள்ளது.

வார்ஸான் ஷைர்
– இரண்டு கவிதைகள்

தமிழில்: ரவிக்குமார்

உங்களோடு கொண்டுவந்தீர்கள் யுத்தத்தை
நீங்கள் அறியாமலேயே, அது இருக்கிறது
உங்கள் சருமத்தில், அவசரமாகத் திணிக்கப்பட்ட
சூட்கேஸ்களில், புகைப்படங்களில், அதன் வாசனை
கலந்திருக்கிறது உங்கள் கேசத்தில், நகங்களில்,
இருக்கக்கூடும் அது உங்கள் ரத்தத்தில்
சிலநேரம் நீங்கள் வந்தீர்கள் குடும்பத்தோடு
சிலநேரம் ஒன்றுமே இல்லாமல்,
உங்களின் நிழல்கூட
இல்லாமல்
புதிய மண்ணில் கால் பதித்தீர்கள்
கரகரப்பாய் பேசும்
ஒரு பேயைப்போல
மொடமொடத்த ஜீன்ஸும்
பரிதவிக்கும் புன்னகையும்
அணிந்து,
அந்த மண்ணோடு பொருந்திக்கொள்ளத் தயாராக,
கடுமையாக உழைக்கத் தயாராக,
யுத்தத்தை
ரத்தத்தை மறப்பதற்குத் தயாராக

யுத்தம் அமர்ந்திருக்கிறது
உங்கள் வரவேற்பறையின் மூலையில்,
உங்களோடு சேர்ந்து சிரிக்கிறது
டிவி நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது,
நிரப்புகிறது உங்கள் உரையாடலின்
இடைவெளிகளை, தொலைபேசியில் பேசும்போது
எழும் மௌனத்தை,
காரணங்களைத் தருகிறது
ஒரு சூழலிலிருந்து,
கூட்டங்களிலிருந்து, மனிதர்களிடமிருந்து,
நாடுகளிலிருந்து,
காதலிலிருந்து வெளியேறுவதற்கு;
யுத்தம் படுத்திருக்கிறது
உங்களுக்கும் உங்கள் காதலருக்கும் நடுவில்,
நிற்கிறது குளிக்கும்போது உங்களுக்குப் பின்னால்,
உங்கள் வாயைத் திறந்துபார்த்துவிட்டு பதறிப்
பின்வாங்குகிறார் பல் மருத்துவர்
அவர் யுத்தத்தை அங்கே பார்த்திருக்கக்கூடும்,
எவ்வளவு ரத்தம்.
நீங்கள் அறிவீர்கள் சமாதானத்தை,
நீண்ட யுத்தத்தில்
பிழைத்த எவரொருவரும் அறிவதுபோல,
புரிந்துகொள்கிறீர்கள் அதை
ஏனெனில் எல்லாவற்றிலும் கலந்திருக்கிறது
நிகழக்கூடிய யுத்தத்தின் நறுமணம், எத்தனை
எளிதாக ஒரு யுத்தம் வெடிக்கும்
என்பது உங்களுக்குத்
தெரியும், அமைதியாக ஒரு தருணம்,
அடுத்தது ரத்தம்.
யுத்தம் வண்ணமயமாக்குகிறது உங்கள் குரலை,
கதகதப்பூட்டுகிறது. நீங்கள் கொன்றவரா அல்லது
இழந்தவரா என்பதைத்தெரிந்துகொள்ள எந்த
ஆர்வமும் இல்லை. எவரும் கேட்கப்போவதில்லை,
சிலவேளை நீங்கள் இரண்டுமாகவும் இருக்கலாம்.
சமீபகாலத்தில் நீங்கள்
எவரையும் முத்தமிட்டதில்லை.
உங்களுக்கு எதை ருசித்தாலும்
ரத்தத்தின் சுவையே தெரிகிறது

●●●

எமது ஆண்கள் எங்களுக்குச் சொந்தமில்லை
ஒருநாள் பிற்பகலில் வீட்டைவிட்டுச் சென்றார் என்
அப்பா, அவர் எனக்குச் சொந்தமில்லை
சிறையிலிருக்கிறான் என் சகோதரன், அவன்
எனக்குச் சொந்தமில்லை.
எனது மாமன்கள் வீட்டுக்குத்
திரும்பிப்போனார்கள், தலையில் சுடப்பட்டு
கொல்லப்பட்டார்கள், அவர்கள் எனக்குச்
சொந்தமில்லை
எனது ஒன்றுவிட்ட சகோதரர்கள் மிகையாக
நடந்துகொண்டதற்காக அல்லது எதிர்பார்த்த
அளவு இல்லாமல்போனதற்காக தெருவில்வைத்து
குத்திக்கொல்லப்பட்டார்கள், அவர்கள் எனக்குச்
சொந்தமில்லை. நாங்கள் காதலிக்க
முயன்ற ஆண்கள்
சொன்னார்கள்: ' நாங்கள் ஏராளமான
இழப்புகளை சுமந்துகொண்டிருக்கிறோம், மிகவும்
கறுப்புத்தனத்தை அணிந்துகொண்டிருக்கிறோம்,
இங்கே மிகவும் சுமையாக இருக்கிறோம்,
நேசிப்பதற்குப் பொருத்தமின்றி மிக மிக
துயரத்திலிருக்கிறோம்'. பிறகு அவர்களும்
போய்விட்டார்கள், நாங்கள்
அவர்களுக்காக துக்கம்
அனுஷ்டிக்கிறோம்.
இதற்குத்தான் நாங்கள் இருக்கிறோமா?
செத்துப்போனவர்களை
பிரிந்துபோனவர்களை
போலீஸால் பிடித்துச்செல்லப்பட்டவர்களை
போதை மருந்துக்கு,
நோய்களுக்கு,
வேறு பெண்களுக்குப்
பலியானவர்களை
சமையலறையில் அமர்ந்தபடி, விரல்விட்டு
எண்ணிக்கொண்டிருப்பதற்கா இருக்கிறோம்?
இதில் எந்த அர்த்தமும் இல்லை
பாருங்கள் உங்கள் சருமத்தை,
அவளது வாயை, இந்த
உதடுகளை, அந்த கண்களை,
அடக் கடவுளே, அந்த
சிரிப்பைப் பாருங்கள்.
நம் வாழ்வில் அனுமதிக்கத்தக்க
ஒரே இருள் இரவில்
வருவதுமட்டும்தான்
அப்போதும்கூட நம்மிடம்
நிலவு இருக்கும்

* வார்ஸான் ஷைர் (Warsan Shire) கென்ய நாட்டில் பிறந்த சோமாலிய கவிஞர். தற்போது லண்டனில் வாழ்கிறார்.நிறவெறி, யுத்தம், புலம்பெயர் வாழ்வின் ரணங்கள் முதலானவற்றை பெண்ணிய பார்வையில் பேசுகின்றன இவரது கவிதைகள்

முன்னுரையும் பின்னுரையும்

சுஜா சுயம்பு

மனுஷ்யனு ஒரு ஆமுகம் என்ற பெயரில் சுபாஷ் சந்திரனால் மலையாள மொழியில் எழுதப்பட்ட நாவலின் மொழிபெயர்ப்பாகத் தமிழில் வெளியாகியுள்ள நாவல் மனிதனுக்கு ஒரு முன்னுரை (2019). இந்நாவலை மொழிபெயர்த்துத் தந்து தமிழுக்குப் பெரும்பங்களிப்பைச் செய்துள்ளார் நிர்மால்யா. சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள இந்நாவல் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் இந்தியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் *A preface to man* (2016) என்ற பெயரில் E.V.பாத்திமாவும் இந்தியில் லதா அவர்களும் இதனை மொழிபெயர்த்துள்ளனர். சாகித்திய அகாதெமி விருது (2014) உட்பட பல விருதுகளை அளித்து இந்நாவலுக்கு மேலும் சிறப்பு சேர்த்த அமைப்புகள் பல.

கேரளத்தின் எர்ணாகுளம் பகுதியின் சமூகப் பண்பாட்டு வரலாற்றுப் படிமத்தை எடுத்துக்காட்டும் இந்நாவல் அச்சமூகத்திற்குள் ஏற்பட்ட பலவகையான மாற்றங்களைப் பல நிலைகளில் உரையாடலுக்கு உட்படுத்தியுள்ளது. கடந்த நூற்றாண்டில் பிறந்தவர்களுக்கும் இந்த நூற்றாண்டில் வாழ்பவர்களுக்கும் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ள நாவல் கேரளத்தின் நாயர் சமூகத்தைச் சேர்ந்த அய்யாட்டும்பிள்ளிக் குடும்பத்தின் மூன்று தலைமுறைகளைப் பற்றிப் பேசுகிறது. எர்ணாகுளம் மாவட்டத்தின் தச்சனக்கரப் பகுதி நாவலின் களமாக உள்ளது. இந்நாவல் 1. அறம், 2. பொருள், 3. இன்பம், 4. வீடுபேறு என நான்கு பிரிவாக எழுதப்பட்டுள்ளது.

மனித மனம் படைப்புணர்வின் ஆழ்ந்த தேடலுக்கிடையே லௌகீக வாழ்க்கைக்காகப் போராடுகிறது. இறுதியில் அதில் தன்னிறைவும் அடையாமல் வருந்துகிறது. இப்படியான மனித மனதுக்கும் வாழ்க்கைக்குமான முரணில் தோற்றுப்போன படைப்பு மனம் பற்றியதாகக் கதை அமைகிறது.



சாகித்திய அகாதமி
விலை: 410

நாவலில் குறிப்பிடப்படும் அய்யாட்டும்பிள்ளிக் குடும்பத்தின் மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்தவனாகிய ஜிதேந்திரனின் இறப்போடு தொடரும் கதை, மனித வாழ்வின் சாதி, மதம், வரலாறு, காதல், உடல், உறவுகள் எனப் பல நினைவுகளையும் நிகழ்வுகளையும் ஊடறுத்துச் செல்கிறது.

ஒருவர் தனிநபராக எந்தச் சிறப்புக்கும் உரிமைக் கோர முடியாத போது அவர் தனது சாதிப் பெருமையுடன் களத்தில் பிரவேசிப்பார் (2019:32) அப்படிச் சாதிப்பெருமை நாறும் குரலுக்குச் சொந்தக்காரராகிய நாராயணப்பிள்ளை என்னும் நாராப்பிள்ளை ஈழவ சன்னியாசியான நாராயண சுவாமிகள் என்கிற நாணுசாமி 1928இல் உலக வாழ்க்கைய நீத்த புரட்டாசி மாதத்தில் குஞ்ஞி அம்மாவுக்குப் புடவை கொடுத்து அய்யாட்டும்பிள்ளிக்கு அழைத்து வருகிறார். ஆறு பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் குஞ்ஞி அம்மா விரல்விட்டு எண்ணும் மகிழ்ச்சியான தருணங்களை மட்டுமே வாழ்க்கையில் காண்கிறாள். கேட்ட மாத்திரத்தில் அதிர்வு அலையை உண்டாக்குகிற ஈழவ சன்னியாசியின் சிந்தனைகளைப் பெரிதாகச் சட்டை செய்யாத, படியில் பணம் அளக்கும் நாராப்பிள்ளை புலையனின் மகளாகிய காளிப் பெண்ணைக் காமக் கிழத்தியாக அனைவரும் அறிந்துகொள்ளும் மொழியில் சொல்வதானால் அவரின் உடல் தேவைக்குத் தீனிபோடும் ஆசை நாயகியாகக் கொண்டிருக்கிறார். அய்யாட்டும்பிள்ளி வீட்டின் நெல்லறையின் ஒரு பகுதியில் ஏற்படுத்தப்பட்ட சார்ப்பில் நாள் கழிக்கும் காளிப்பெண்ணுக்கு நாராப்பிள்ளையின் அடுக்களைக்குள் நுழைய அனுமதி இல்லை. இந்தத் தம்பதிகள் பெற்றெடுத்த ஆறு பிள்ளைகளைப் பற்றியும் இவர்களுள் இளைய மகளாகிய சின்னம்மாவின் இளைய மகனாகப் பிறந்த ஜிதேந்திரன் கதையின் நாயகனாகத் தொடர்கிறான்.

முழுவளர்ச்சியை எட்டுவதற்குள் இறந்துவிடும் ஒரே உயிரினம் மனிதன் என்கிற இந்த வாசகத்தோடு நாவல் தொடங்குகிறது. இந்த வாசகம்தான் அய்யாட்டும்பிள்ளிக் குடும்பத்தைச் சேர்ந்த ஜிதேந்திரனையும் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் ஆன்மேரியையும் இணைக்கிறது. உன்னதங்களைக் களைந்த ஒரு சராசரி வாழ்க்கை வாழும் சராசரி மனிதனாகிய ஜிதேந்திரன் ஆன்மேரிக்கு எழுதிய கடிதங்களின் சில உயிர்ப்பான வரிகளோடு நாவலின் ஒவ்வொரு பகுதியும் பயணத்தைத் தொடங்குகின்றன.

திருவிதாங்கூர் மகாராஜாவின் உத்தரவுப்படி இரும்புக்கூட்டில் அடைபட்டு மரத்தில் கட்டித் தொடங்கவிடப்பட்டு உயிர்விட்ட அய்யாட்டும்பிள்ளிக் குடும்பத்தைத் தொடங்கிவைக்கும் அய்யாப்பிள்ளையின் காலம் தொடங்கி ஜிதேந்திரன் வரை தீண்டாமையின் தூரம் கடைபிடிக்கப் படுகிறது. ஆனால் அதன் கரங்கள் வலுவிழந்து பிடி இலகுவாகத் தளர்வதையும் விலகுவதையும் நாவலில் அழகாகக் காட்சிப்படுத்துகிறார் சந்திரன். சான்றாக, ஆலுங்கல் பள்ளியில் சின்னம்மாவைச் சேர்க்கும் போது அதே பெயரில் முந்தைய நாள் ஒரு கிறிஸ்தவப் பெண் சேர்ந்தது பற்றித் தெரிவிக்கும்போது ஓஹோ, அப்படின்னா அவளோட அப்பன்கிட்ட அந்தக் கொழந்தை பேரைச் சீக்கிரமா மாத்தச் சொல்லு. *(2019:143)* சாதிய அதிகாரத்தின் ஆழத்தைக் காட்டும் தொனியில் கனைக்கிறார் நாராப்பிள்ளை. பிள்ளைகளுக்குப் பெயர்வைப்பது பற்றிய, கொழந்தைங்க பெறந்ததும் அவங்க பேருக்குப் பின்னால நாயர்ன்னும் பிள்ளைன்னும் வால் வைக்க வேண்டாம். எதிர்காலத்துல அப்படி வால் இருக்கற பெயருக்கு நாகரிகம் இல்லாம போயிடும்னு நெனைக்கிறேன். *(2019:108)* என்ற கதையாடல், இது மாதிரி கண்ணுலபடற ஈழவச்சியை அவன் கல்யாணம் பண்ணினா ••• என்று வெடித்துச் சிதறும் நாராபிள்ளையை, அப்படின்னா நம்ம சார்ப்புல தங்கியிருக்கற திருட்டுப் புலையச்சியை நான் என்ன பண்ணட்டும்? *(2019:124)* என்று குஞ்ஞி அம்மா கேட்கும் உறையவைக்கும் கேள்வியும் சவரக்காரன் ஆண்டியின் மகன் கிருஷ்ணன் ஆர்ட்டிஸ்ட் ஆவதும் அவன் நாயர் சமூகத்தைச் சேர்ந்த கொச்சுப்பரசுவின் ஆங்கிலத்தைத் திருத்துவதுமாகப் பலவற்றைக் கூறமுடியும்.

அய்யாப்பிள்ளையின் மரண வதையும் ஓலங்களும், ஜம்பர் அணிந்த சலவைக்காரி, டாக்டரின் பத்மினி கார், கரிங்கோட்டு மரத்தின் இலையைப் போட்டு கொதிக்க வைத்த தண்ணீர் கரையான்களுக்கு மருந்தாவது, புளிப்பு குடிக்கிற சடங்கு, மார்த்தாண்ட வர்மா பாலம் கட்டப்படுவது, கேரளத்தின் விடுதலையிலும் வரலாற்றிலும் களமாடிய போராளிகளை ஆங்காங்கே அடையாளம் காட்டுவது, கோயில் நுழைவுப் போராட்டம் - உத்தரவு கிடைத்தும் நடைமுறைக்கு வராதது, நாராயண குருவின் - ஒரு சாதி ஒரு மதம் ஒரு தெய்வம், சட்டம்பி நாயர், அய்யன்காளி, எனக் காலத்தைக் கண்முன் கொண்டுவந்துவிடுகின்றது நாவல்.

பெரியாரில் நீந்தி விளையாடி நாராப்பிள்ளையிடம் அடிவாங்கித் திருப்பித் தாக்கிய கோவிந்தன்; சமத்துவத்தை வெளிப்படையாகவே எதிர்க்கும் நாராப்பிள்ளைக்குத் மகள்கள் தங்கம்மா, சின்னம்மா மூலமாக இரண்டு கம்யூனிஸ்டு மருமகன்கள் அமைவது எனக் குற்றச்சாட்டுகள் வெகுமதியாகும் சில நிகழ்வுகளும் நாவலுக்குள் உள்ளன. அச்சு உள்ளிட்ட புதிய ஊடகப் பயனாக்கம் அய்யாட்டும்பிள்ளிக் குழந்தைகளுக்கு ஏற்படுத்தித் தரும் புதிய தாலாட்டு கேட்கும் வாய்ப்பு, மாத்ருபூமி செய்தித் தாளைக் கண்களால் நக்கித் துடைக்கும் தங்கம்மாவைப் போன்ற பல பெண்களைக் காலம் உருவாக்குவது, வாசிப்புப் பழக்கம் மூலமாக வரலாற்று அலைகள் நாவலுக்குள் செல்வாக்கு செலுத்துவது எனப் படைப்போடு பயணிக்கும் வாசகனுக்குள் தேங்கிவிடக்கூடிய செய்திகளும் சித்திரங்களும் நூற்றுக்கணக்காக இந்நாவலுக்குள் உள்ளன.

*1972*இல் ஜிதேந்திரன் பிறப்பு குறித்த பகுதியில், காலம் ஒரு நான்கு கால் விலங்கைப் போலப் பின்னங்கால்களை நினைவுகளிலும் முன்னங்கால்களை எதிர்பார்ப்புகளிலும் ஊன்றித் தச்சனக்கரயை வெறித்துப் பார்த்து வாலாட்டிக் கொண்டிருந்தது. *(2019:168)* என அமையும் வரிகள் காலத்தின் இயல்பை அழகான கற்பனைக்குள் அடக்கும் வரிகள். சாதிப் பெருமையும் ஒப்பிட முடியாத அறிவின்மையும் இணைத்துக் கட்டப்பட்ட நம்பூதிரி இல்லத்தின் மதிலைத் தகர்த்து வெளியில் வந்த இளைய நம்பூதிரி வாசுதேவன் இவர்களில் முக்கிய செயல்வீரன்••• இல்லத்தின் இளைய வாரிசு கோயிலில் நுழையாமல் பூணூல் அணியாமல் நாயர்களிடமிருந்து பன்னிரெண்டு அடியும் ஈழவர்களிடமிருந்து முப்பத்தாறு அடியும் புலையர்களிடமிருந்து அறுபது அடி தூரமும் விலகி நிற்காமல், தச்சனக்கர மக்களுடன் நெருங்கிப் பழகுவதை••• *(2019:171)* என

ஈகிள்ஸ் கிளப்/ அருணோதயா (சிவப்பு உதயம்) ரீடிங் குரூப் உருவாக்கிய கல்வி என்ற ஆயுதம் தீண்டாமையின் சுவடுகளை அழிக்கத் தொடங்குவதைக் கோடிகாட்டல், பேரன் தாத்தாவுக்குக் கதை சொல்வது, முதலான நிழலாடும் பகுதிகளும் நிறைந்துள்ளன.

நாவலின் முதல் பக்கத்தில் எங்கேயோ போடப்பட்ட முடிச்சு 245ஆம் பக்கத்தில் தான் அவிழ்க்கப்படுகிறது. ஆம், ஜிதேந்திரன் எழுதிய வரிகள்தான் நாவல் பாகங்களின் தொடக்கமாக அமைபவை என்பது மூன்றாம் பாகத்தின் இரண்டாம் பகுதியில் தான் தெரியவருகிறது. அங்கும், யாருக்கு எழுதுகிறான் என்பது புலப்படவில்லை அடுத்தடுத்த பகுதிகளில் அவை விளக்கம் பெறுகின்றன. முன்னுரையையோ நூலாசிரியரின் குறிப்பையோ படித்துவிட்டுப் படிக்கும் புனைவுகள் கதை கேட்டபிறகு பார்க்கும் திரைப்படத்தைப் போன்று ருசிப்பதில்லை. நூலின் பிற்பகுதியில் இடம்பெறும் மனிதனுக்கு ஒரு பின்னிணைப்பு பகுதியின் வாசிப்பிற்கு பிறகு நாவலைப் வாசிக்கத் தொடங்கும் வாசகனும் அப்படியான ஒரு மனநிலையைப் பெறக்கூடும். எனவே, படைப்பினை அதன் முழுமையை இரசித்து, அதனோடு பயணிக்க விரும்புவோர் இத்தகைய தவறைச் செய்யார் என்றே எண்ணுகிறேன்.

வீடுகட்டுவதற்காக வெட்டப்பட்ட பாக்குமரங்களின் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்கும் குழந்தைகள் (2019:280), மரணத்தை நோக்கி எறியப்பட்டபோதிலும் வாடாமல் அவற்றின் பூக்கள் முகம் திருப்பி நாராப்பிள்ளையின் பேரக்குழந்தைகளை உற்றுப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டிருந்தன. (நந்தியாவட்டை)(2019:281-282) , சின்னம்மாவுக்கு ஆத்திரம் பொங்கியது. ஊதாநிற மை மருந்தை பஞ்சில் நனைத்து கால்பாதங்களிலும் விரல் இடுக்குகளிலும் நான்குவேளை தேய்த்து சின்னம்மா சேற்றுப் புண்ணுக்கு எதிராக வேறொரு போரில் ஈடுபட்டிருந்தாள். அப்போதுதான் புட்டப் பகைவனுக்கு எதிராகக் குழந்தைகள் விரல் யுத்தம் நடத்திக்கொண்டிருந்தார்கள். (2019:315) முதலான இயற்கையான நிகழ்வைச் சொற்களால் அழகாக்கிய சந்திரனின் படைப்பாளுமையை, மொழிபெயர்ப்பிலும் இயல்பும் அழகும் கெடாமல் முழுமையடையச் செய்துள்ளார் மொழிபெயர்ப்பாளர். பதவி உயர்வு கிடைக்கும் போதெல்லாம் சுயம் தாழ்ந்து போவதாக உணரக்கூடிய ஒரேயொரு பதவி இருக்கிறது: வாழ்க்கை (2019:236) அப்படியான வாழ்க்கைய வாழும் மனித மனம் கடைசியாக நமது வாழ்க்கையின் அர்த்தம் தான் என்ன? என்ற வேதாந்தத்திலும் பகுத்தறிவு வாதத்திலும் விடைகாண முடியாத கேள்வியைத் தனக்குத் தானே கேட்கும். ஜிதேந்திரனும் அப்படித்தான்; அங்குதான் ஒட்டுமொத்த மனித சமூகத்தின் படிமமாக ஜிதேந்திரன் நிற்கிறான். இந்திரனை வென்றவன் தன்னையே வெல்லமுடியாதவனாகிப் போகிறான். மலையாள நாவல் என்பதை மொழிபெயர்ப்பு மறைத்தாலும் நாவலின் பண்பாட்டுப் பதிவுகள் அதனை நினைவூட்டிவிடுகின்றன. துவர்த்தை - என்பது போன்ற எளிமையாகக் கடந்து செல்லும் வார்த்தையாக மொழிபெயர்ப்பாளருக்குப் படும் வார்த்தைகள் வேற்று மொழியாளருக்குக் கைவராமல் நாவலுக்குள் மிதந்துகொண்டிருக்கின்ற. ஆனால் படைப்புக்குள் அதன் தொடர்ச்சியான பயன்பாட்டின் ஊடாகக் கண்டடைந்துவிடும் சொற்களான அவற்றை வாளா விட்டுவிடுதல் - மூலத்தின் அழகு கெடாமல் மொழிபெயர்ப்பது கடினமான பணி; அந்தக் கவித்துவ வரிகளை விவரிக்கும், நிறைக்கும் சொல்லைச் சரியான இடத்தில் முறையாகப் பெய்து உருவாக்கப்படும் படைப்பு ஆசிரியரின் உணர்வுகளை மொழிபெயர்ப்புப் படைப்பின் மொழியாளர்களும் உணரும்படியாக உருவாக்கியுள்ளார். நிர்மால்யா. மலையாளிகளின் உணவு முறைகள், நம்பிக்கைகள், சடங்குகள் எனப் பல பண்பாட்டுக் காரணிகளாலும் சுதேச மொழியாளர்களின் மனதுக்கு நெருக்கமான பிரதியாக உணரப்படும் தகுதியை இப்படைப்பு பெற்றுள்ளது.

எழுதிக் கிழிக்கப்படும் பிரதிகளுக்கிடையில் எழுதிக் குறைத்த பிரதியாக செதுக்கப்பட்ட சித்திரமாக மனிதனுக்கு ஒரு முன்னுரை நமது கைகளில். கடந்த இரு தசாப்தங்களில் மலையாளப் படைப்புலகில் வெளியான சிறந்த படைப்புகளில் ஒன்றாக இந்நாவல் குறிப்பிடப்படுவதற்கான முழுத் தகுதியையும் நாவல் கொண்டுள்ளது. கேரளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மலையாளிகளின் மனதிற்கு நெருக்கமான உரையாக அதன் சுவைகளையும் சுமைகளையும் நினைவுகூறும் படைப்போவியமாக நாவல் அமைவது உண்மை. நிறைவுரையைக் கொண்டிருந்தாலும் எந்த முடிவினையும் ஆசிரியர் தரவில்லை என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறியாக வேண்டும். வாசகர்களைப் பிரதிக்குள்ளே பயணிக்க விடுவதோடு விட்டுவிடாமல் அவர்களோடு வாதம் செய்து, உண்டு களித்து வருவதும் நாவலின் பலம்.

அன்று சோவியத், சீன கட்சிகளுக்கு அடுத்து ஐம்பது லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட மிக பெரிய கட்சி இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சி. ஐந்து லட்சம் கம்யூனிஸ்ட்களை படுகொலை செய்த கொந்தளிப்பானதும், துயரம் நிரம்பியதுமான பின்னணியில் பீஷ்மா, அம்பா, சல்வா ஆகியோர் அடங்கிய மஹாபாரதத் துணைக் கதை ஒன்றின் சாயலைக் கொண்ட நாவல். பாஷா இந்தோனேசியா, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் எழுதப்பட்ட நாவல்.



நாவல்

~~₹ 390/-~~

₹ 290/-

044 24332424

பாரதி புத்தகாலயம்

thamizhbooks.com

நினைத்த நூல்கள்... நினைத்த நேரத்தில்...

Puthiya Puthagam Pesuthu Monthly REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA Reg.No. TNTAM/2003/82612,
REGISTERED No. TN/CC(S)DN/01/2018-2020 Licensed to Post without Prepayment under
WPP No. TN/PMG(CCR)/WPP 684/19-20 Date of Publication 1 st week of every month.

பனகல் பார்க், தி.நகர், சென்னை - 600 017. தொ.பே. 044 - 2434 4115 / 4260 4567
பேக்ஸ்: 044 - 2434 3062 ஈமெயில்: inquiry@nalli.com வெப்சைட்: www.nalli.com

சென்னை ♦ அகமதாபாத் ♦ பெங்களூரு ♦ கோயம்புத்தூர் ♦ ஐதராபாத் ♦ காஞ்சிபுரம் ♦ கொச்சி ♦ கொல்கத்தா
மதுரை ♦ மும்பை ♦ புதுடெல்லி ♦ பாண்டிச்சேரி ♦ திருச்சி ♦ விஜயவாடா ♦ கனடா ♦ சிங்கப்பூர் ♦ USA